நீதிநெறி அரிச்சந்திர நாடகம்

35-ல் இருந்தே ஆரம்பமாகிறது.

பரதேசி வசனம்.

அப்பன் சகல சாஸ்திரமும் கொஞ்சங் கொஞ்சம்வரும்.

கட்டியக்காரன் வசனம்.

நல்லது தேவாரந் திருவாசகங்கள் வருமா.

பரதேசி வசனம்.

அப்பன் தாவாரம் பட்டகசாலை கூடம், இவைகளில் ஒரு வாரமும் வரும்.

கட்டியன் வசனம்.

சபாஷ் சபாஷ் நீங்களார் வோய்.

ஜோசியன் வசனம்.

பிரபு மகாராஜா அரண்மனைசோதிடன்காசினியோர்புகழும்மாசில்லாத ஜோசியத்தை வகுத்துரைக்கும் வல்லபன்.

கட்டியன் வசனம்.

சபாஷ் சபாஷ் இன்றுதான் நாம் கோரியகாரியம் நிறைவேறிற்று அதாவது நம்மைப்பரம்பரையாய் காப்பாற்றிவருகிறயெசமானுடைய சாதகம் நன்றாய் விரித்துரைக்கவேண்டும்.

சோதிடன் வசனம்.

இந்த சாதகத்தின்பலனை விரித்துரைக்கிறே

சோதிடன் விருத்தம்.

செனனலக்கினமிதுனந்தன்னிற்சந்திரன்
சிறப்புடனேகுருவுமிரண்டாமிடத்தில்
கனமிகுந்தகேதுவுமூன்றுமிடத்தில்
கதித்ததொருசனியுச்சமைந்தாம்வீட்டி
மன மகிழ்வாய்செவ்வாய்ராகொன்பாம்வீட்டி
வண்மையுடன்சுக்கிரனும்பத்தாவீட்டில்
இனமானபதினொன்றிற்புதனுஞ்சூரிய
னிருந்திடிலோராஜாங்கயோகமாமே.

சோதிடன் வசனம்.

பிரபு இந்தசாதகத்தினுடைய பெருமையை என்னுல சொல்லத்தரமன்று ஆகிலுந் தெரிந்தவரையிலுஞ் சொல்லுகி றேன் லெக்கினம் மிதுனம் அதில் சந்திரனிருக்கிருன் இரண்டில் குருஉச்சமாயிருக்கிருன் மூன்றில்கேதிருக்கிருன் அஞ்சில் சனி உச்சம்பெற்றிருக்கிருன் ஒன்பதில் செவ்வாயும் ராகும் சேர்ந்தி ருக்கிருன் பத்தாம்வீட்டில் சுக்கிரன் உச்சம் பெற்றிருக்கிருன் பதினொன்றில் சூரியனுச்சம் பெற்றும் அத்துடன் புதனுங் கூடி ஞன் நான் யென்னவிதமென்று பலனைச் சொல்லுவேன் இந்தச் சாதகன் ஏகசக்கிராதிபதியாயிருந்து இராச்சிய பரிபாலனஞ் செய்திருக்கவேண்டும்.

கட்டியக்காரன் வசனம்.

பலேசபாஷ் நீங்களெல்லாம் யார்வோய்.

பிச்சைக்காரர்கள் வசனம்.

சுவாமி நான் குரங்காட்டி சாமி நான் மணியாட்டி அத்த நான் மக்கத்து பக்கிரி சாமி நான் ராமதாசன் பிரபு நான் பு பாட்டி மகாராசனே நான் பொம்மயநாயக்கர்.

கட்டியக்காரன் வசனம்.

அடா பிச்சைக்காரநாய்களா சத்தம்போடாதிருங்க ண்டியதைக்கேளுங்கள் வேண்டிக்கொண்டுபோங்கள்.

அரிச்சந்திரன் தானஞ்செய்கிற பாகம்.

விருத்தம்.

மதியூகியெனக்குவாய்த்த மந்திரிவழுத்தக்கேளும்
பதிதனிலுள்ளவேழை பரதேசிஜோகியாவும்
விதிமுறைதானம்வாங்க விரைவில்வந்திங்குற்றார
அதிவேகமுடனேயென்பா லறைகுவீரறைகுவீரே.

அரிச்சந்திரன் வசனம்.

பிரதான் மந்திரி யேழைபரதேசி ஜோகிசங்கமர்கள் களும் வந்து விட்டார்களா.

மந்திரி வசனம்.

பிரபு யேழை பரதேசி ஜோகி சங்கமர்கள் நம்மாண்மனை ஆசாரவாசல் நிறைந்தும் கோட்டைவாசற்கடந்தும் வெகுஜனகள் வந்து காத்துக்கொண்டிருக்கிருர்கள் மகாராஜ்.

அரிச்சந்திரன் விருத்தம்.

செந்திருவடிவம்போன்ற செல்வமேயெனக்குவாய்த்த
சந்திரமதியேபெண்ணே சங்கமர்ஜோகியேழை
வந்திடும்பெரியோர்தங்கள் மனமிகமகிழ்ச்சிகூர
அந்தமாய்த்தானம்நம்மள் அஸ்தத்தாலளிப்போம்வாராய்.

இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

தானஞ்செய்குவோம் சந்திரமதியன்னமே.

அநுபல்லவி.

கானகமானிக ரானகண்ணேமிக
கன்னியர்நாடும் கலிகளோடும்
புண்ணியம்நீடும் பொருள்கைகூடும். (தா)

சரணங்கள்.

வேதமோதும் வேதியர்க்கும்
கீதமோதுங் கியாதிபர்க்கும்
வேதகுமாதவம் ஏதமில்லாதுசெய்
விற்பனர்க்கும் மேலவர்க்கும்
சற்குண மிகுத்தவர்க்குந். (தா)

ஜோகிபர தேசிகட்கும்
யோகியர்சன் னியாசிகட்கும்
தேகியென்றேகியே திரியுமாவறுமையோர்
சித்தமானந் திக்கவே
அஸ்தத்தாலே அவனிமேலே. (தா)

இராஜன் வசனம்.

எனதாசைநாயகி இங்கேவந்திருக்கும் யேழைகளுடைய மனதிஷ்டப்படி இங்கிருக்கும்பொருளை உன்கையினாலும் கண்மணி லோகிதன் கையினாலும் வேண்டியமட்டிலுங் கொடுங்கள் இதோ யென்கையினாலுங் கொடுக்கிறேன்.

இராஜன் வசனம்.

மந்திரி இங்கு வந்தவர்களில் தானம்பெற்றுக் கொள்ளாதவர்களிருந்தாலதைநினைவில் அவர்களுக்கு வேண்டும் பொருள்களைக் கொடுத்து அனுப்புவாயாக.

மந்திரி வசனம்.

தாங்களுத்தரவுபிரகாரம் யாவர்களுக்குங்கொடுத்து அனுப்பிவிட்டேன்

இராசன் வசனம்.

பிரதான் நாம் அந்தப்புறஞ்செல்கின்றோம் மற்ற காரியாதிகளில் ரொம்பவும் ஜாக்கிரதையா யிருக்கவேண்டியது.

பொது வசனம்.

இவ்விதம் அரிச்சந்திரமகாராசன் வந்தயேழைகளுக்கு வேண்டிய நிதிகளைத்தானம்செய்துவிட்டு அந்தப்புறம் சென்றபின் விஸ்வாமித்திரர் வருகிறவிதங் காண்குக.

விஸ்வாமித்திரர் வருகிறது.

விருத்தம்.

சீரியதருவினீழல் திகழுமிந்திரன்முன்சொன்ன
காரியமுடிக்கவேண்டி கபடத்தைமனதிலெண்ணி
பாரியமரங்களாட பதியுள்ளோர்நடுக்கங்கொள்ள
விரியத்துடனேவிஸ்வா மித்திரர்வருகின்றாரே.

இராகம்-பியாகு-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

கொட்டு.

விண்ணுலகைநீக்கியே விஸ்வாமித்திரமாமுனி
மண்ணுலகைநோக்கியே வந்தவன்வந்தனன். (வி)

விழியிற்பொறிகள் சிதறவே வேர்வைபெருகுமுதிரவே
வழியிற்கண்டோர்பதறவே வாய்விட்டாருங்கதறவே (வி)

சடைமுடிகளாடவே சபதங்கைக்கிக்கூடவே
அடைவுடனோடியே யரசன்சமுகந்தேடியே. (வி)

கையில்மிக்கதெண்டுமே கபடநெஞ்சிற்கொண்டுமே
வையகம்புகழ்ந்திட வசிஷ்டருமிகழ்ந்திட. (வி)

விஸ்வாமித்திரர் தரு.

இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

ஆரெனக்கெதிரி இந்த
ஆயிரத்தெட்டுஅண்டத்தில் மாய்கையாவற்றையுங்கற்றோர் (ஆ)

அநுபல்லவி.

காரணங்கடந்த பூரணம்நானே
கௌசிகனென்றால்மனங் கலங்குவார்தானே. (ஆ)

சரணங்கள்.

அந்தரசொர்க்கந்திருச்சங்கு கொடுத்தேன்
அன்பர்தமக்குரிய ஆன்பத்தைதடுத்தேன்
சந்ததமும்பாதத்தில் சார்ந்திருப்பேன்சுகத்தில்
சாமார்த்தியமுள்ளவரை யேமாற்றிவிடுவதில். (ஆ)

விஸ்வாமித்திரர் கட்டியன்பாற் சொல்லல்

விருத்தம்.

மானிலம்புகழயோத்தி மன்னவன்றனைக்காண
வானுலகத்தைவிட்டு மாதவவிஸ்வாமித்திரன்.
தானிங்குவந்தேனென்ற சங்கதிகெட்டியாயுன்
கோனிடம்சென்றுநீயுங் கூறுவாய்கூறுவாயே:

விஸ்வாமித்திரர் வசனம்.

அடா கட்டியம் உங்களரசனிடஞ்சென்று நான் வந்திருப்பதாக தெரியப்படுத்தி வருவாய் கட்டியம்.

கட்டியன் வசனம்.

நன்றாயிருக்கிறது யென்னிடம் இன்னேரம்வந்ததெல்லாம் நாலு ஐந்து அடிவாங்கிக்கொண்டு போச்சுது இதுநூறு இருநூறு வாங்கும்போலிருக்கிறது நல்லது அப்படியே சொல்லுகிறேன்.

விஸ்வாமித்திரர் வசனம்.

அடா துஷ்டப்பயலே யென்னவார்த்தை பேசுகிறாய் சபித்துப்போடுவேன்.

கட்டியன் வசனம்.

சுவாமி ரெம்ப பசியாயிருக்கிறேன் சமைக்கிறது சமைக்கிறீர்கள் காய்கறி ரெம்பவும் நயிசாயிருக்கவேண்டும் தலைவாழிலை விரிக்கவேண்டும் அப்பத்தான் நீர் சமைத்ததைச்சாப்பிடுவேன்.

விஸ்வாத்திரர் வசனம்.

அடா துஷ்டா யென்னவார்த்தை சொன்னாய் பெரியவாளுடைய கோபத்துக்கு பாத்திரவாதியாகாதே மூர்க்கா.

கட்டியன் வசனம்.

ஓ சுவாமியாரே சிறுகுழந்தைகளைப்பார்த்துப் பயமுறுத்தாதிங்கோ இதற்கெல்லாம் நான் பயப்படுவேனென்று நினைக்க வேண்டாம்.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

நல்லதுபயலேயென்முன் னாவெடுப்பாகரெம்ப
வல்லமைபேசவந்தாய் மட்டிபோலட்டியன்றி
தொல்லைநீயடையவேண்டாம் துஷடாவென்கோபத்தாலே
கல்லாகப்போவாயென்று கணத்தினிற்சபிப்பேன்கண்டாய்.

விஸ்வாமித்திரர் வசனம்.

ஏ துஷ்டா பெரியவாளென்று சற்றேனுமதியாமல் பேசினபடியால் அரைநிமிஷத்துக்குள் கல்லாக சபித்துப்போடுவேன்.

கட்டியன் வசனம்.

நீர் கல்லாய் சபித்தால் நான் மண்ணால் சபிப்பேன்.

விஸ்வாமித்திரன் விருத்தம்.

பொருந்திடேனினிமேற்கோபம் புத்திகெட்டவனேசெம்ப
மருத்துநீபேசிவீணில் வன்னரகடையவேண்டாந்
திருத்துமாயரசன்பக்கஞ் சென்றுநீயாதுரைத்த
கருத்தைநீசொல்லாவிட்டால் கழுதையாய்ச்சபிப்பேன்பாராய்.

விஸ்வாமித்திரன் வசனம்.

அடேகொடிய துஷ்டா யானிதுவரைக்கும் கோபங்களைப் பொறுத்தேன் இனித்தாளாது யான் சொன்ன வார்த்தைகளை அரசனிடஞ்சென்று கூறுவிடில் உன்னையான் கழுதையாகச்சபிப்பேன்.

கட்டியன் வசனம்.

சுவாமி தாங்களென்னைக் கழுதையாகச்சபிப்பானேன் நான் அட்டுப்பிடித்த கெட்ட துணிகளைச் சுமப்பானேன் தங்கள் கோபமும்வேண்டாம் என் பாவமும் வேண்டாம் இதோ அரசனிடம்சென்று தங்களுடைய வரவைத் தெரியப்படுத்துகிறேன் தங்களுடைய நாமதேயத்தை சொல்லுங்கள் சுவாமி.

விஸ்வாமித்திரர் வசனம்.

அடா துஷ்டா இன்னேரவரையிலும்யென்னை இன்னாரென்றுதெரிந்துக் கொள்ளாமல் வீண் சம்பிரதாயம் பேசினாய் நல்லதிருக்கட்டும் உன்னரசனிடம் தெய்வலோகமிருந்து காசிபராஜாவின்குமாரர் விஸ்வாமித்திர மகாரிஷி ஆசாரவாசலில் வந்திருப்பதாகத் தெரியப்படுத்துவாய் கட்டியம்.

கட்டியன் வசனம்.

முனிநாதா நான்செய்த அபசாரங்களை மன்னிக்கவும் இதோ அரசனிடஞ்சென்று தாங்கள் சொல்லியதுபோல் தெரியப்படுத்துகிறேன்.

கட்டியன் இராஜனிடம் சொல்லும் வசனம்.

பிரபு ராஜமார்த்தாண்டா ராஜகோலாகலா யென திறைவனே தெய்வலோகமிருந்து காசிபராஜாவின குமாரர் விஸ்வாமித்திரமகாரிஷி நமது ஆசாரவாசலில் வந்திருக்கின்றார் சமுகந்தெரிவிக்கும்படியாய் ஆக்யாபிததார் பிரபு.

பரமபதி துணை.

அரசன் விஸ்வாமித்திரரைச் சேவிக்கிறபாகம்.

அரிச்சந்திரன் சந்திரமதியிடம் சொல்லல்.

விருத்தம்.

மங்கையர்க்கரசே மதிநயன்மாதே
மாதவந்தனி லெனக்குற்ற
தங்கமே யருமைச் சந்திரமதியே
சற்குணமிகுந்தவென்பாலா
சங்கரனருளோ தவமுனியிங்கு
நான்வரப்புண்ணியஞ் செய்தோம்
மங்களமாகச் சென்றவர்பாதம்
வணங்கியிங்கழைத்து நாம்வருவோம்.


இராகம்-கல்யாணி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மாமதியே வராய்ச்சந்திரமாமதியே
மாதவமேயுயர் மாமுனிநாதனை வணங்கிடுவோமினி (மா)

அநுபல்லவி.

தாமரைமலர்ப்பாதனே ஞான
சாஸ்வதநிஷ்டையோகனே மோன
தற்பரமாகியமெய்ப்பொருள் அற்புதசோதிநிகா்த்தருள்
தவமதிலேயுயர்வான கவுசிகரைப்பணிவோம்நாம் (மா)



சரணங்கள்.

ஜென்மவினைகள் — தீருமேமுன்னாள்
செய்திட்டபவம் — மாறுமேயின்னாள்
தேன்மொழியாகியரஞ்சித — மான்விழியேகுணமிஞ்சிய
திருவேமலரினுகந்த — மருவேமனதிலிசைந்த (மா)

நான்செய்திடும் — நற்றவமோ நீமுன்
தான்செய்திடுந் — தவமோநானறியேன்
நாடியேயொருபொருட்டாக — கூடியபழவினைபோக
தேடியேவந்தவர்பாதம் — ஓடியேபணிவதுநீதம் (மா)

இராஜன் வசனம்.

பிராணசகி யென்பிதாவுக்கு அந்தரசொர்க்கங்கொடுத்தருளிய காதிபராசாவின் புத்திரசிகாமணியாகிய விஸ்வாமித்திர மகாரிஷியானவர்தெய்வலோகமிருந்து நமது அரண்மனை யாசாரவாசலில் வந்திருக்கிறாராம் அவரைக்கண்டு தெரிசிக்கவருவா யென்கண்மணி.

சந்திரமதி வசனம்.

பிராணேசா நாம்செய்த தவமேதவம் இந்தட்சணமேசென்று தெரிசிக்கவேண்டும் நாதா.

அரிச்சந்திரன் விருத்தம்

முன்னவர்கள்செய்த பெருந்தவமோவேத
முறைதவறுதரசுபுரி விபவோவிந்த
நன்னகரஞ்செய்தபெரு நலமோவென்றன்
நாட்டவர்களியற்றியதோர் தருமந்தானோ
கன்னியெந்தன்மனைவி சந்திரமதியாலுற்ற
கற்பினாலும்பெருமையதோ கடவுள்போல
என்னகத்திலெழுந்தருளி யிருக்கவியும்
எய்தியதுயான்செய்த புண்ணியமாமே.

—— (*) ——

இராகம்-தோடி-தாளம்-சாப்பு.

பல்லவி.

மாதவமுனியே யையா — மாதவமுனியே கோடி
வந்தனந்தந்தே — னுகந்தெனையாளுவீர் (மா)

அநுபல்லவி.

நாதமேனமலர்ப் பாதனேவெரு
நீதேனேபிரைக் காதியென்னையா. (மா)

சரணங்கள்.

பூதமைந்துபொறி யுள்ளடக்கியே
புண்ணியனேமனப் பூரகம்நோக்கியே
நாதவிந்தைச்சுழி முனையிற்றூக்கியே
ஞானயோகநிலை மௌனவடிவான. (மா)

தண்டுகமண்டல முங்கரங்கொண்ட
தானம்புகழ்கின்ற மோனமேயண்ட
பிண்டத்திலும்அன்பு தொண்டரிடத்திலும்
பேதமறநின்ற வேதவேதாந்தமெய். (மா)

அரிச்சந்திரன் வசனம்.

முனிநாதா அடியேன்செய்த தவத்தினால் உலகத்தில்யெளிதிற் காணக்கூடாத பாதாரவிந்தத்தைக் காணப்பெற்றேன்.

முனிபுங்கவர் வசனம்.

அரிச்சந்திரபூபதி தீர்க்காயுஸ்பெற்று மகாராஜனாயிருக்கக்கடவாய்.

சந்திரமதி விஸ்வாமித்திரரைத் தோத்திரஞ்செய்தல்.

விருத்தம்.

அருந்தவங்கள்நெடுங்கால மியற்றினாலும்
யாகமொருபலகோடி புரிந்திட்டாலும்
நருநதிகள்புகுந்துபல நிழைத்திட்டாலும்
நாடியரன்றலங்கள்சென்று பணிந்திட்டாலும்
திருந்தவெதிர்கிட்டாத முனிவரேறே
சிறியேங்களொருபொருளா யெண்ணிப்பாதம்
வருந்தவெளிவந்ததெங்கள் முந்திச்செய்த
மாதவமேயென்றடியில் வணங்கினளே.

இராகம்-காப்பி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

மாதவமுனிநாதா வந்தனமலர்ப்பாதா
வேதாகமம்புகழு மெய்த்தவப்பிரைக்கியாதா. (மா)

ஆதவன்முன்பனிபோல் அடியாரைச்சூழ்ந்தவினை
பாதகந்தீர்த்தருள் பரம்பொருளேநீர்துணை. (மா)

அன்பாயென்மாமனுக்கு அந்தரசொர்க்கமீய்ந்த
இன்பக்கடலேநாங்க ளிருக்குமிடமாராய்ந்த. (மா)

பந்தபாசங்கடந்த பரமேபாஞ்சுடரே
சந்ததமுமெங்களைத் தற்காத்தருள்செய்வீரே. (மா)

முத்தியளிக்குஞ்ஞான வித்தாமுளைத்தசோதி
பத்தியுடனேயானும் பணிந்தேன்பாதுகாத்தருள். (மா)

சந்திரமதி வசனம்.

தவசிரேஷ்டம் பொருந்திய முனிநாதா அடியாள்கோடிவந்தனஞ் செய்கிறேன்.

முனிவர் வசனம்.

மதிதயன் தபோபலத்தினு லுதித்த சந்திரமதி தீர்க்காயுள் சதா வாழ்க வாழ்க.

லோகிதாசன் விருத்தம்.

மண்ணிருவளியரியாய் விண்ணுமாகி
மதிகதிராய்நவக்கிரக வடிவுமாகி
பெண்ணிர்மெய்கலந்துநின்ற சிவனைநோக்கிப்
பெருந்தவஞ்செய்தருள்டைந்த பெரியோயெங்கள்
புண்ணியம்போல்வந்ததென்றன் முன்னோர்செய்த
புவிசெய்தகுடிகள்செய்த நலமோவேத
கண்ணியனேயென்பாட்டன் விபத்தைப்போக்கிக்
காத்தவனேயென்றடியிற் போற்றினனே.

நீதிநெறி அரிச்சந்திர நாடகம்

இராகம்-பியாகு—தாளம்-ஆதி.

பல்லவி.

சரணஞ்சரணந்தவமுனியே யையா தவமுனியே
தமியேனைக்காத்தருள்ததியே நானுந்தன் (சர)

அநுபல்லவி.

திரணமல்லவோஅ பர் தீவினைநீக்கும்
தேவாதிதேவாவுனது திருக்கண்ணால்நோக்கும்
கரணம்போன்றவுந்தன் கழலிணைவாய்க்கும்
கருணைதந்தருளவே பெருமையைத்தாக்கும் (சர)

சரணங்கள்.

மெய்யில்விபூதி விளங்கியசோதி
வேதம்புகழுகின்ற விமலன்போலாதி
ஐயனேயுமதன்பர்க் கருளும்பிரைக்யாதி
அடியேனுய்யவே அனுக்கிரகஞ்செய்நீதி (சர)

ஆரணமார்க்கத் தாகமநேசி
ஆராதாரமுச்சுழி யிருகலைவாசி
பூரணத்திலடக்கிப் புறப்படுந்தேசி
போக்குவரதறிந்து நோக்குஞ்சன்யாசி (சர)

லோகிதாசன் வசனம்.

தவசிரேஷ்டரே அடியேனை ரட்சிக்கும்பொருட்டுவந்தனம் செய்கிறேன்.

முனியீஸ்பரர் வசனம்.

லோகிதாசா நீ மகாராஜனாக யிருக்கவரந்தந்தேன்.

அரிச்சந்திரன் விருத்தம்

மாதவமே யிவ்வுருவாய் வந்தஞான
வள்ளலே மறைபுகழுங் கருணைவாழ்வே
பாதமிகவருந்தவென்னைப் பொருட்டாயெண்ணிப்
பாரிலன்பாய் நடந்துவந்த போதேஐயா
ஆதவனைக் கண்டபனி யாகப்பாவம்
அணுகாம லோட்டினதுன் னருளினாலே
நாதனே யென்பேரில் கிருபைசெய்து
நன்மணிமன் டபந்தனக்கு வருவீர்சாமி

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-சாப்பு,

கண்ணிகள்.

அன்னைபோலெழுந்து வாரும்
அடியேன்வசிக்கும் அரண்மனைபாரும்
விண்ணுலகைவிட்டு நாதா
வேகமாயென்னைவேண்டி நீதா
மண்மிசைநடந்த பாதா
வாரும்-பொன்னைத்தாரும்-அருள்தாரும்-கனிகூரும்படி. (அ)

சாயமேபரம்பொருளே பிரகாசா
தொண்டர்க்குநலம் அதிகநேசா
கைலாசுதர்மநேதன் கருணைவாழ்வே
காரணபரிபூரண தேவே
ஞயிலைகவாரும மயிலைவாச தவ
உத்தமனே-சித்தமிசை-மெத்தமகிழ்-சத்தியென (அ)

ஆசாரவாசர் நடந்தோம்
ஐயனைவெகு தூரநடந்தோம்
மாசற்றசித்திர சாலைபக்கி
வந்தநோமேசபா மண்டபம்நோக்கி
பாசவினையைக் கடந்தசோதி
பக்குவனே-நற்கபடி-உக்கிரமனே-இக்கணத்தில் (அ)

இராஜன் வசனம்.

முனிநாதா இதோ யிருக்கிற ரத்தின சிம்மாதனத்தில்வீற்றிருங்கள் பிரபு.

முனிவர் வசனம்.

மகாராஜனே உன்னைப்போலொத்த சக்கிரவர்த்திகளிருக்கக்கூடிய சிம்மாதனத்தில் தவயோகிகள் இருக்கத்தகுமாதகாது யென்னுடைய புலித்தோலாசனத்தில் வீற்றிருக்கிறேன்.

அரிச்சந்திரன் விருத்தம்.

முன்னைப்போர்செய்ததன்றி முயன்றருவாகியுந்தன்
றன்னையொப்பாகவந்த தகுதியோதருமந்தானோ
தன்னிலத்தழைக்கவந்த ஞாயமோநான்முன்முன்னம்
வென்னமாதவஞ்செய்தேனிங்குவந்ததைச்சொல்வீரே.

அரசன் வசனம்.

முனிநாதா அடியேனையொருபொருட்டாயெண்ணி இவ்விடத்திற் கெழுந்தருளியதை இன்னதென்று திருவுளம் பற்றவேணுஞ் சுவாமி.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

வானவர்மாதவர்தமக்கோ ரிடையூறுண்டேல்
மணிகொழிக்கும் பார்க்கடலுறைமேன்மேவுங்
கோனகருங்குலவரைகட் குயர்வாராகி
குலவுவெள்ளியங்கிரியுங் குறைவிலாத
வானகருமணிமாட வயோத்தியென்று
மானகருமல்லாது புகழ்வேறுண்டோ
வூனுலவுங்கதிர்வடிவேற் கரனேநீதிக்
கோர்வரைபோலுதித்திலங்கு மரசரேறே.

விஸ்வாமித்திரர் வசனம்.

கேளும் பூபதியே யான் முதலான தவசிகளுக்கெல்லாமே தாவது துன்பம்நேரிடும்பட்சத்தில் கைலாசபதி வைகுண்டவாசி சத்தியலோகாதிபதி சுவர்க்காதிபதி வளம்பொருந்திய கோசலை நாட்டுக்கதிபதியாகிய நீயுமன்றிவேறிடங்களுக்குச்சென்று சொல்லிக்கொள்ள மனம் நாணும் மகாராஜனே.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

கற்பகக்காவிந்திரனே முதலாயுள்ள
கண்ணிமையாத்தேவரொடு முனிவர்யாரும்
நற்பயன்பெற்றிருப்பதற்கு மாக்கராலேர்
நடுங்கியுயிர்விடுப்பதற்கோர் யாகமொன்று
அற்புதமாய்ச்செயவெண்ணி யாய்ந்துநோக்கி
அடைந்தனம் வேறொன்றுமில்லையிவ்விடத்தில்
விற்பனனேயரிச்சந்திரா சமயங்கண்டாய்
விள்ளுவதென்னீதிமொழி விளம்புவாயே.

விஸ்வாமித்திரன் வசனம்.

மகாராஜனே தேவர்களுக்கும்யென்போலொத்த முனியீஸ்பரர்களுக்கும் யிடுக்கஞ் செய்யக்கூடிய அரக்கர்களை நாசஞ்செய்வதற்காக ஓர்யாகஞ் செய்வதற்கு ஆலோசித்திருக்கிறேன் அதற்காக கொஞ்சந் திரவியத்துக்காக வந்தேன்.

அரிச்சந்திரன் விருத்தம்.

அரியமேதாமவேள்விசெய்ய வரும்பொருள்வேணுமென்று
விரியமாயென்பால்வந்த பெற்றயென்பாக்யமாகும்
கரியவனவனுமொவ்வாக் கௌசிகமுனியேவேண்டும்
பொருள்தனையிவளவென்று புகலுவீர்புகலுவீரே.

வசனம்.

முனிநாதா வேள்விக்காக வெவ்வளவு பொருள் வேண்டும் தெரியச்சொல்வீர் சுவாமி.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

புவனமெல்லாயுங்காக்கும் பூமனேசொல்லக்கேளாய்
கவனமாம்யானைமீது காலையங்கொருவனேறி
கவண்கரமேந்தரத்தினக் கல்லொன்றவைத்தெறிந்தால்
எவ்வளவுதூரம்போமோ வவளவுபொருளீவாயே.

விஸ்வாமித்திரர் வசனம்.

மகாராஜனே மதகரிமீதிலொருவனேறி கவணெறிந்ததூரம் பசும்பொன்கொடுத்தால் என்வேள்விமுடியும் அரசனே.

ராஜன்சொல் தரு.

இராகம்-யமுனகல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

அருந்தவமாமுனியே வேள்விக்கிச்செம்பொன்
தாமேன் இதுமேவபாரந் தாரேன் (அ)

அநுபல்லவி.

அருந்தவமாமுனியே ஐயாவுமதுபாதம்
வருந்தயென்னைபொருட்டால் வந்தீரேசெம்பொன்
தாமேன் இதுமேவபாரந் தாரேன். (அ)

சரணங்கள்.

ஆனையின்மீதிலானை பற்றியங்கவன்கையால்
தானெறிந்திடுமுயரம் வேள்விக்குச்செம்பொன்
தானெறிந்திடுமுயரம் வேள்விக்கிச்செம்பொன்
தாரேன் இதும்வாபாரந் தாரேன். (அ)

நான்பெற்றபாக்கியமே நாதாவுன்சிலாக்கியமே
தானிங்குவந்தீர்தவம் போல்வேள்விக்குப்பொன்
தானிங்குவந்தீர்தவம் போல்வேள்விக்குப்பொன்
தாரேன் இதுவோபாரந் தாரேன். (அ)

அரிச்சந்திரன் விருத்தம்.

மாதவனுரைத்தமாற்ற மன்னவன்கேட்டுமிக்கப்
போதகங்கொணர்கவென்றான் கொணர்ந்தபொன்னறைதிறந்தே
வேதமாமுனியைநோக்கி வேள்விசெய்திடத்தமக்குப்
போதவேபொருள் தந்தேன் கொண்டேசெனப்போற்றினனே.

அரிச்சந்திரன் வசனம்.

அருந்தவ மாமுனியே தங்களுடைய வேள்விக்குத் தக்கதிர வியம் அளித்தேன் யெடுத்துத் தங்களுடைய ஆச்சிரமஞ்செல்ல வேண்டியது சுவாமி.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

சூரியகுலத்தில்வந்தமேதோன்றலேபொருளைப்பெற்றேன்
காரியமுடிக்கும்போதுகைக்கொள்வேனந்நாள்மட்டும்
நேரியனுடையபசோவேநின்னிடத்திருக்கவேண்டும்
கோரியபடிநான்செய்யக் குறித்தனனருள்செய்வாயே.

விஸ்வாமித்திரர் வசனம்

மகாராஜனே நீயன்புடனளித்த திரவியங்கள்யாவும்பெற்று க்கொண்டேன் யான் வேள்விக்கி முகூர்த்தம்வைத்துவரும்வரை யிலும் யென்னுடைய திரவியமாக உன்னிடமிருக்கவேண்டியது மகாராஜனே.

அரிச்சந்திரன் விருத்தம்.

தானமதாகப்பொன்னைத் தவத்தவர்க்களித்தேனத்தை
மானமிலாதுபின்னர் வாங்குவதழகோநீதி
யீனமதாகுஞ்செல்லத் தியலருங்கீர்த்திகுன்றும்
ஞானமாதவனேயென்ன நடுங்கிநின்றுரைசெய்தானே.

முனிநாதா தங்களுக்கு தானமளித்த பொன்னை யான்மறு படியும் வாங்குவது நீதியல்ல தங்களுடையபொருளாகப்பாவித் துவைத்திருந்தபோதிலும் சிலவு நேரிடும்பட்சத்தி லெடுத்துச்சி லவு செய்து போடும்படி நேரிடும் தாங்கள் வந்து கேட்குஞ்சமை யத்தில் பொருளில்லாவிடில் யென்செய்வேன் ஆகையாலெடுத் துச் செல்லவேண்டியது நாதா.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

நன்றாகன்றரசேயினை நடுநிலையாகுப்பொன்னை [ன்
சென்றுகொண்டெங்கன்வைத்துசிர்தூக்கிவேள்விசெய்வே
அன்றுநான்வாசஞ்செய்யு மடர்வனமதனிற்சிவன்
கொன்றுவாழரக்கர்துன்பங் கூடாதுன்வசத்தில்வையே.

விஸ்வாமித்திரர் வசனம்.

மகாராஜனே நீர் சொல்லுவது ஞாயம் யான் வசிப்பதோ வனாந்திரம் அங்குற்றவர்களோ அரக்கர்கள் யானிந்தப்பொருளை பாதுகாக்க வென்னால்முடியாது யான்வேண்டும்போது பெற்றுக் கொள்ளுகிறேன் அரசே.

அரிச்சந்திரன் விருத்தம்.

அருந்தவமுனிவன்கூற வரசனும்நல்லதென்றுன்
பெருஞ்சடைமுனிவரோடு பேர்பெருகோசிகர்க்கு
சாமைமதியற்றலோடுந் தவமுனிவோர்களோடும்
கரிமுகிற்றவழுஞ்சோலை கானகத்தேகினனே

பொது வசனம்.

இவ்விதமாக விஸ்வாமித்திரமகாரிஷியானவர் திரவியமுழுவதும் அரிச்சந்திரனிடம் ஒப்பிவித்து தனது ஆச்சிரமத்துக்கு சென்றபின் மிருகங்களை சிருஷ்டித்து அயோத்திநாடழிக்கும்படி செய்தவிதம் காண்குக.

விஸ்வாமித்திரர் விருத்தம்

இந்திரசபையில்வாய்வீ ணியற்றியசபதந்தன்னைத்
தந்திரத்தாலேசெய்ய தக்கதோதக்கதென்றுல்
தொந்தரவிழுத்துக்கொண்டோஞ் சொன்னிலைநிறுத்தல்வேண்டு
மந்திரமுதலாயுள்ள வகைகளுக்ககப்படானே.

விஸ்வாமித்திரர் விருத்தம்

வானவர்முனிவர்முன்னம் வகுத்துரைத்திட்டவார்த்தைக்
கினமதாகும்பல்லோ ரேசவாரிதற்கென்செய்வேன்
வானவன்சத்தியத்தை மனத்தினிற்கொள்ளான்சற்றும்
ஞானநன்னெறியைத்தப்பா னென்றுளநாடிநோக்கான்.

விஸ்வாமித்திரர் வசனம்.

இந்திரன் சபையில் வீறுகைச்சபதமியற்றி வந்தோம் அரிச்சந்திரன் பொய்சொல்லுகிறுனே யென்னமோதெரியவில்லை ஆகிலும் யென்னலியன்றவரையிலும் வேண்டிய ஞாயங்களைச் செய்து அரிச்சந்திரன் வாயால் பொய் சொல்லும்படி செய்யாவிட்டால் நான் விஸ்வாமித்திரனு.

—(-)-(*)-(-)—

விஸ்வாமித்திரர் பறவைகள் மிருகங்கள் முதலானவைகளைச் சிருஷ்டித்தல்.

விருத்தம்.

நோக்கினன்நோக்காமுன்ன நொடிக்குள்ளேவிலங்கின்கூட்ட
மாக்கினவைகளெல்லா மருந்தவமுனிவன்றன்னை
நோக்கலுஞ்சணத்திற்சென்று றுழைந்திந்நாட்டுள்ளதெல்லா
மாக்குவீர்பாழாயென்ன வகலிடம்பரந்ததன்றே

முனிவர் விருத்தம்.

யானையோர்கோடிகோடி மசுவமோர்கோடிப்புள்ளி
மானினங்கோடிகாட்டு மாட்டினங்கோடிசெந்நா
யேனமோகோடிபட்சி யெண்ணில்கோடிகளுஞ்சென்று
கானகமுழுதும்நின்று கடிந்தனபயிரையெல்லாம்

இராகம்-கல்யாணி-தளாம்-ஆதி.

பல்லவி நோட்டு.

மாதவமுனி மாய்கையினுல்
வனத்தில்விலங்கின மிருத்ததுவே (மா)

அநுபல்லவி.

ஆதாளிகொண்டு வெகு
அடாப்படாத் திடமுடனே(மா)

சரணங்கள்.

வாதையடைந்திடவுயிர்கள் தேசமிகுந்திடபயிர்கள்
வாட்டுவோநாமென கொட்டடனேயனேகம்
வளைத்திடவுயிபிழைத்திடர்பயிரிழைத்திடமனங்களைத்திட(மா)

கரிபுலிகள்நரியெலிகள் கரடிபன்றிகளைமான்மரைமுயல்கள்
கண்டவிடமூண்டுதிடங் காடுகள்நாடுகள்மேடுகள்பொடிபடவே
கதித்தகோபயுதித்ததக பதித்திடமுடியாமலநேகவகை (ம)

காடைகவுதாரிகுயில் கருடன்வலியன்கிளிபுறாமயில்கள்
காகம்பெருந்தாரகமெங்குங் கதிரைச்சிதறப்பதறிகொய்திடவே
கற்பனைசற்பனையுற்பவித்தது அற்புதமாயநேகம்(மா)

விஸ்வாமித்திரர் வசனம்.

மிருகஜாதிகளை பட்சிஜாதிகளை விஷஜெந்துக்களே நீங்கள்யாவர்களும் வளம்பொருந்திய கோசலநாட்டைச் சூழ்ந்த இடங்களில் ஸ்தாபித்திருக்கும் திருக்குளங்கள் செந்நெல்கள் கன்னல்கள் சோலைகள் ஆடுமாடுகள் முதலானவஸ்துக்களைச் சின்னாபின்னப்படுத்தியழித்துவரும்படி இதோ வரங்கொடுத்தேன் சென்றுவாருங்கள்.

விலங்கினங்கள் வசனம்.

தங்களுடைய உத்தரவின்படி இதோ சென்று அழித்துவிடுகிறோம்.

பொது வசனம்.

இந்தப்பிரகாரம் மிருகங்கள் கோசலநாட்டைச் சேர்ந்த இடங்களிற் சென்று சகல வஸ்துக்களையு மழிப்பதைக் குடிகள் பார்த்து அடிவயிற்றில் கையை வைத்துக்கொண்டு அழுதகண்ணுஞ் சிந்தையுமா யரிச்சந்திரன் சமுகம்வருகிற விதங்காண்க.

குடிகள் விருத்தம்.

கண்டனர்விலங்கின்கூட்டங் கலங்கினர்துன்பம்நெஞ்சிற்
கொண்டனர்கெடுகால குறுகினபாவம்போல
மண்டினமிருகமெல்லாம் வான்பருகொடுமைபாவுங்
இண்டினவிதற்கென்செய்வோ மென்றுளங்கெலிகொண்டாரே.

ஷெ விருத்தம்.

கூடினார்குடிகளெல்லாம் கோவென்றுசத்தத்தோடும்
நாடினார்சம்பாதம் நவையரைக்கலங்கியோடி
வாடினாரிதற்கென்செய்வோம் வல்லபாலுரைப்போமென்றுங்
கோடினார்வாயல்முன்னின் றழுதனரோலமிட்டே.



உ

பரமபதிதுணை.

குடிகள் அரசனிடம்முறையிடுகிறபாகம்

குடிகள்வருகிற விருத்தம்.

தம்புரெட்டி செம்புரெட்டி சதாசிவப்பெரியரெட்டி
வம்புரெட்டி கொண்டரெட்டி வடுகர்வேளாளர்கூடி
அம்புலியயோத்திநாட்டை யழித்திடுமிருகத்தாலே
கும்பலாயரசன்முன்னே குடிகளுந்தோன்றினாரே.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்—சாப்பு.

பல்லவி.

குடிகள்வந்தாரே-பயிரிடும் குடிகள்வந்தாரே. (குடி)

அநுபல்லவி.

அடிவயிறிரி விடிவிழுந்தாற்போல்
ஆவென்றலறிக் காவலனைக்கோரி.(குடி)

சரணங்கள்.

நெடியநாவாய்ச் செய்திட்டபயிரை
நெட்டேஞ்செய்யுந் துஷடவுயிரை
பொடிபடச்செய்யா விட்டால்வேறிடும்
போவோமென்றெண்ணியே தாவந்தம்நண்ணியே(குடி)

சாலையுமலர்ச் சோலையும்வெகு
தருக்களைக்கரி நெருக்கமாகவே
ஆலைக்கரும்பாய் வேலைத்துரும்பாய்
அடித்துவொடித்து பிடித்திழுப்பதால்(குடி)

காட்டைவிடுத்து நாட்டையடுத்து
ஆட்டையும்பெரு மாட்டைக்கெடுத்து
கேட்டையாகவே கூட்டவிலங்கு
செய்யுதேகோரங்க ளையோவென்றிதோ(குடி)

குடிகள் வசனம்.

ஆரையா ஆசாரவாசலிலிருக்கிறது மகாராஜாயிடங் கண்டுபேசவேண்டிய திருக்கிறது உத்திரவு கொடுத்தால் உள்ளே போகுறோமையா.

கட்டியக்காரன் வசனம்

நீங்களார்வோய் இங்கேவந்தகாரண மென்ன.

குடிகள் வசனம்.

மகாராஜாவைக்கண்டு பேசவேண்டிய சங்கதியைச்சமுகந் தெரியப்படுத்தினல் தங்களால் தீர்க்கப்போகிறீர்களா.

கட்டியக்காரன் வசனம்.

யென்னகாணும் நான்கேட்கிறதற்குச் சரியானமுகாந்திரம் சொல்லாமல் தடித்தனமாயுளருகிறீர்கள் நல்லதிருக்கட்டும்.

குடிகள் வசனம்.

ஐயா கட்டியக்காரசுவாமி யெங்களைத் தெரியாதா யான்மருதநிலத்தலைவன் யென்பேர் சுப்புரெட்டி யென்தம்பிபெயர் மப்புரெட்டி.

கட்டியக்காரன் வசனம்.

நல்லதிருக்கட்டும் நீங்களார்வோய்.

குடிகள் வசனம்.

ஐயா நாங்கள் கடற்கரை நெய்த நிலத்தலைவன் யென்பேர் கந்தசாமிப்பரவன் அல்லவா தங்கள் காதில் போட்டு யிருக்கிற முத்தானது நான் கொடுத்த முத்தல்லவா.

கட்டியக்காரன் வசனம்.

சபாஷ் இன்னம் கியாபகம் வைத்திருக்கிறீரு இருக்கட்டும் நீங்களார் வோய்.

குடிகள் வசனம்.

சுவாமி யென்னைத்தெரியாதா நான்குறிஞ்சி நிலத்தலைவன் யென்பேர் முத்துக்காப்பிலி நல்லையன் யென் தம்பிபேர் முத்தணன் யென் மருமகன்பேர் சின்னையா இவன் மாமன் பேர் பொன்னுசாமி இவன் அண்ணன்பேர் அய்யக்கன்யேன் இன்னந்தெரியலையா தங்கள் கலியாணத்துக்கு குடங்குடமாய்தேன் விட்டேனே சுவாமி.

கட்டியக்காரன் வசனம்.

பலே செட்டி இது எந்தகாலமாச்சுது காணும் இன்னம் நினைத்துக்கொண்டிருக்கிறீர் நல்லது நீங்களார்வோய்.

குடிகள் வசனம்.

ஐயா நான் முல்லை நிலத்தலைவன் நந்தகோபனுக்குச்சொந்தப்பேரன் பென்பேர் அய்யக்கன் யென்னை யிதுவரைக்குந்தெரியாதா.

கட்டியக்காரன் வசனம்.

பலே நமக்கு கருங்கிடாயொன்று கொடுத்தீரே நீர்தானா நல்லது நீங்களார்வோய்.

குடிகள் வசனம்.

சுவாமி நான் பாலை நிலத்தலைவன் யென்னையிதுவரையிலும் தாங்கள் பார்த்ததில்லையா.

கட்டியக்காரன் வசனம்.

ஆகா உம்மைப் பார்த்து ரெம்ப நாளாயிற்று நல்லது இப்போது உங்களுக்கு என்னசெய்யவேணும் சொல்லும் ஓய்.

குடிகள் வசனம்.

மகாராஜாவிடம் போகவேண்டும் அவ்விடம் போகலாமாவென்று தெரிந்து சொல்லவேணும்.

கட்டியக்காரன் வசனம்.

நல்லது நீங்களெல்லாரும் இவடத்திலிருங்கள் நான்மகாராஜாவிடம் தெரியப்படுத்திக்கொண்டுவருகிறேன்.

குடிகள் வசனம்.

நல்லது தங்களுத்தரவுபோல் இவ்விடத்திலிருக்கின்றோம்.

கட்டியக்காரன் மகாராஜாவிடம் போய்

சொல்லுகிற வசனம்.

பிரபு வந்தனம் நமதாளுகைக்குட்பட்ட தேசங்களிலிருந்துகுடிகள் துக்க சாகரத்தில் மூழ்கினவராக நமது ஆசாரவாசலில் வந்திருக்கின்றார்கள் தங்களிடந் தெரியப்படுத்திக்கொள்ள வந்தேன்.

அரிச்சந்திரன் வசனம்.

சேவகா யாதொரு தடையன்னியில் அவர்களையிங்குவரும்படி செய்.

கட்டியன் வசனம்.

பிரபு அப்படியே வரும்படி செய்கிறேன்.

ஷெ வசனம்.

குடிகளே உங்கள் விஷயத்தைப்பற்றி மகாராஜாவிடத்தில் தெரியப்படித்தினதில் தடையின்றி வரும்படி உத்திரவாயிற்று ஆகையால் சமுகத்தில் செல்லுங்கள்.

இதோ சொல்லுகிறோம்.

இராஜனிடம் குடிகள் சொல்லுதல்.

விருத்தம்.

ஐயனேபோற்றியெங்க ளண்ணலேயரசேபோற்றி
மெய்தவஞ்துநாளும் விரதங்கைக்கொண்டாய்போற்றி
துய்யனேயுலகையாளுஞ் சுந்தராபோற்றிபோற்றி
செய்யதாமரைநிகர்த்த திருவடிக்கமலம்போற்றி.

குடிகள் வசனம்.

பிரபு வந்தனஞ்செய்கிறோம் அரசே.

இராஜன் விருத்தம்.

மருதமுமுல்லைநெய்தல் வளம்மிகுங்குறிஞ்சிபாலை
பெருகுமைந்தாம்நிலத்திற் பெருநிலவாழ்வையெய்தி
அருமையாய்க்கைக்கொண்டோங்குமுயிர்விலாக்குடித்தனஞ்
மருவியகுடிகாள்நீங்கள் வரக்கண்டுமகிழ்ந்திட்டேனே [செய்

இராஜன் வசனம்.

மருதம் முல்லை நெய்தல் குறிஞ்சி பாலையென்று சொல்லும்படியான நிலங்களில்வசிக்குங் குடிகளே எப்போதும் நீங்கள் இராஜசபைக்கு வந்தால்யென்மனமானது சந்தோஷமடையும் இப்போதுநீங்கள் முகவாட்டமாய் வந்திருப்பதுயென்ன ஆச்சரியம்.

குடிகள் விருத்தம்.

யெங்களாலிந்தநாட்டி லிருந்திடமுடியாதையா
யெங்கேயாகிலுஞ்சென்றன்பா யினிப்பிழைத்திடுங்களென்று
மங்களமாயோர்சேதி யுரைத்துவீரானுமின்று
சங்கடந்தீர்ந்ததென்று கானடந்திடுவோம்சுவாமி.

குடிகள் வசனம்.

மகாராஜா தங்களுடைய ஆளுகைக்குட்பட்ட நாடுகளிலி துவரை நாங்களிருந்து பிழைத்ததுபோதும் இனிஇவ்விடத்தில் வாசஞ்செய்ய யெங்களால் முடியாது ஆகையால் நீங்களெங்கே யாவதுசென்று பிழைத்துக்கொள்ளுங்களென்று உத்தரவாகி னுல் இப்பொழுதே வேறுதேசஞ்சென்றுபிழைக்கப்போகிறேம் பிரபு.

அரிச்சந்திரன் விருத்தம்.

கருணமும்மாரிபெய்யாத் தாழ்வுண்டோவலதுவேறோர்
அரசரால்பயந்தானுண்டோ வமைச்சரால்பொல்லாங்குண்டோ
தருமுறைபகுதிநீங்கள் தருகின்றவருத்தமுண்டோ
உருகியிங்கென்பால்வந்த துரைசெய்தால்பயந்தீர்ப்பேனே.

யெனதருமையான குடிகளே யான் தன்னுயிர்போல் மன்னுயிரையுங் காக்கக்கூடியவனெனத் தெரிந்தும்இப்போக்கொத தவசனமுரைப்பது காலாகாலங்களில் மழைபெய்யாத தாழ்வுண்டா அல்லது மற்றரசர்களால் பயங்காமுண்டா அல்லது மந்திரிகளாலே கெடுதிஉன்டோ அல்லது ஆறிலொருகடமைசெலுத்துவதினுல் வருத்தமுண்டோ யெனிவ்வளவு வருத்தத்தோடுங் கூடிப்பிறதேசம் போரதாகச்சொன்னீர்கள்.

குடிகள் வசனம்.

தங்களால் ஒருகுறைவுமில்லை மற்ற அரசர்களால் பயங்கரமுமில்லை மந்திரிகளாற் கெடுதியில்லை தங்களுக்குச் செலுத்துகிறபகுதியினுலும் வருத்தமில்லை நாங்களென்ன விதமாய்ச் சொல்லப்போகுறேம் யெங்களுடைய வருத்தங்களை மகாராஜா

இராஜன் வசனம்.

நான் சொல்லிவந்த காரணங்களின் யாதொன்றும்பயங்கரமில்லையென்று சொல்லிவிட்டீர்கள் பின் யெந்தவிஷயங்களால் உங்களுக்கு வருத்தம்நேரிட்டது சொல்லுங் குடியானவர்களே.

குடிகள் விருத்தம்.

சூரியகுலத்தில்வந்த வேந்தாவன்றலேசொல்லக்கேளாய்
பாரினிலிடமாவில்லை பன்றிமாபுல்வாய்நந்தி
சீரியகரடிசிங்கம் சிங்களப்பட்சிசெந்நாய்
சாரியாய்ப்பயிர்களெல்லாந் தானழித்திடுதின்றே.

ஷ்டி விருத்தம்.

அரிகளோவனந்தம் மரவுகளனந்தம்
யாளியோவனந்த மேலுயர்ந்த
கரிகளோவனந்தங் கவரிமாவனந்தங்
கரடிகளனந்தமாஞ் செந்நாய்
நரிகளோவனந்தம் நாய்களோவனந்தம்
நல்லணிநாடுக ளனந்தம்
மரிகளோவனந்தம் வதைக்கிறதெம்முயிரை
வந்துகாத்தருளி னிச்சகிக்கோம்.

குடிகள் வசனம்.

பிரபு இந்தப்பிரகாரம் பலவிதமான ஜெந்துக்கள் யெங்களை யிம்சிக்கும்பட்சத்தில் நாங்கள்யெவ்விதஞ்சகிப்போம் சகிக்கமுடியாது பெரியமகாராஜாகாலத்தில் வருடத்துக்கொரு தபால் வேட்டையாடுகிற வழக்கமென்று யெங்கள்பிதா சொல்லியிருக்கிறார்கள் அந்த வழக்கந்தங்களிடத்தில் இல்லாததினால் இப்பேர்ப்பட்டகெடுதிக்குள்ளாகினோம் யென்னசெய்வோம் பிரபு.

அரிச்சந்திரன் விருத்தம்.

திங்களைமுடிமேல்வைத்த சிவனருளிதுவோநான்செய்
பங்கமிலாதபூசா பலனிதுதானோநீங்கள்
சங்கடப்படவுவேண்டாம் தரும்பொருளிரண்டாண்டுக்கு
மெங்களுக்கியவேண்டாம் யிதமுடனிருந்திடீரே.

அருமையான குடிகளே வறுமையடைந்தோமென்றவருத்தம் வேண்டாம் இதுமுதல் இரண்டுவருஷத்துக்கு பகுதிகட்ட வேண்டாம நீங்கள்யாதொருபயங்கரமின்றிநாட்டில்வசிக்கலாம்

குடிகள் வசனம்.

பிரபு என்னவார்த்தைசொல்லுகிறீர்கள் நாங்கள் இரண்டு வருஷத்துக்குப் பகுதியைத்தள்ளவேண்டுமென்று வந்தவர்களல்ல நாங்கள் செய்தபயிர்களும் ஆடுமாடுகளும்சேதமாகிறதென்று தெரியப்படுத்த வந்தோமே தவிர வேறல்ல அப்பால் உங்கள் சித்தம்.

இராஜன் விருத்தம்.

அஞ்சாமலிருங்கள்நீங்க ளதஞ்செயுமிருகக்கூட்டம்
பஞ்சாகபறக்கவானே பாணத்தாற்றுணித்துக்கொல்வேன்
மஞ்சாறும்பொழில்சூழுங்கள் வளர்நகர்க்கேகலாகும்
எஞ்சாமல்வேட்டையாட வித்தோவரத்துணிந்திட்டேனே

இராஜன் வசனம்.

குடிகளே இனிமேற்கிஞ்சிற்றேனுங் கவலையடையவேண்டியதில்லை இதோ நான் வேட்டைமார்க்கஞ் சென்று உங்களுக்கிடையூறுசெய்த கொடியமிருகங்களை வதைத்துத்தீங்கில்லாமல் செய்து வைக்கிறேன் பயங்கரம் வேண்டாம் சந்தோஷமாக உங்களிருப்பிடஞ்செல்லுங்கள் குடிகளே.

குடிகள் வசனம்.

மகாராஜா தங்களுத்தரவுப்பிரகாரம் நடக்குரோம் யெங்களிருப்பிடஞ் செல்கின்றோம்.

இராசன் மந்திரியிடஞ்சொல்லும்

விருத்தம்.

தேசநற்குடிகளெல்லாஞ் சென்றமேலரசனுஞ்சிம்
மாசனத்திருந்துமிக்க வமைச்சரையழைத்துநாட்டில்
மோசம்வந்துற்றதென்ன மொழிந்தனரதற்கோர்நல்ல
யோசனையியம்பல்வேண்டு முலகத்தைக்காக்கல்வேண்டும்.

இராசன் வசனம்.

சத்தியகீர்த்திநான் அரசாட்சிசெய்வதில் என்னநீதிவழுவினேன் நாட்டிலுள்ள குடிகள்வந்து முறையிட்டதைதெரிந்தாயா இதற்கென்ன யோசனை செய்யலாம் இதற்குத் தக்க யோசனை சொல்லு மந்திரி.

மந்திரிசொல் விருத்தம்.

இரவிகுலந்தனிலுதித்த மன்னர்மன்னர்
எத்தனையோமிவந்தரிந்தப் புவியையாண்டார்
பரவியாநந்மேயமதி லிந்நாள் மட்டும்
பரிபலமென்பதுங்கிடையா தாகையாலே
கரவிதியாற்செய்தவினையோ மோசமான
காரியம்லந்தெய்தியது குடிகட்கின்னல்
விரவியதைமேவேடர்படை யோடுஞ்சென்று
வேட்டைபுரிந்தகற்றுவது தருமமாமே.

மந்திரி வசனம்.

பிரபு இதைப்பற்றி கிஞ்சிற்றேனுங்கவலையடையவேண்டிய தில்லைநாம் இதுவரை வேட்டை யாடாதிருந்ததினால் குடிகளுக் குதுன்பம்நேரிட்டது அத்துன்பத்தை நீக்கும்பொருட்டு அதி சீக்கிரத்தில் வேட்டைமார்க்கஞ்சென்று கொடிய மிருகங்களை வதைத்துகுடிகளுடைய இம்சையைத்தீர்க்கவேண்டியதவசியம்

இராஜன் வசனம்.

சத்தியகீர்த்தி நாம் வேட்டையாடவேண்டியதால் குறிஞ்சி நிலத்திலுள்ள வேடர்களை சகல ஆயுதத்துடன்வரும்படி திட்ட ஞ்செய்மந்திரி.

மந்திரி வசனம்.

அப்படியே அழைத்துவரும்படி திட்டஞ்செய்கிறேன்.

மந்திரி சேவகன்பால் சொல்கிற

வசனம்.

சேவகா மகாராஜா வேட்டைக்கி ஆயத்தமாயிருக்கிறபடி யால்நமது நாட்டிலுள்ள வேடர் வில்லியர்களை ஆயுதத்துடன் தருவிப்பாய் சேவகா.

சேவகன் வசனம்.

பிரபு அப்படிவேசென்று வேடர் வில்லியர்களுக்கு தெரிய ப்படுத்தியதில் அவரவர்கள் ஆயுதசகிதமாய் இதோ வருகிறார் கள்.

வனவேடர்கள் வருகிற

விருத்தம்.

காவலனழைத்தபோதே கடுகியேகாட்டில்மெத்த
சேவகஞ்செய்யும்வேடர் சீக்கிரமெழுந்திருந்து
தாவியநாய்கள்வாள்வேல் சக்கரம்யீட்டிகொண்டு
கூவியேகொக்கரித்து கோஷ்டமாய்வருகின்றாரே.

இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

வேட்டைக்காரர்-அனேகர்வந்தாரே-வெகு
விநோதமாகவே (வே)

அநுபல்லவி.

நாட்டையழிக்குஞ் சேட்டைமிருகம்
நடுங்கியுயிர்விட் டொடுங்கிடச்செய்யும்(வே)

சரணங்கள்.

சல்லடங்கச்சையிட்டு நுதலினில்
சாந்துதிலத மிட்டு
வல்லியங்கட்டாரி வலைகளைவாங்கி
வில்லம்புதோளினில் வேகமுடன்தாங்கி (வே)

பத்திபத்தியாக நாய்கள்
சுத்தியே தானேக
கத்திசமுதாடு நத்தியேவேலோடு
சித்திரவதைசெய்யும் சுத்தவீரரென்று. (வே)

வேடர்கள் வசனம்.

மகாராஜா வந்தனம் குறிஞ்சிநிலத்திலிருந்து வேடர்களாய வரும் சகல ஆயுதத்துடன் வந்திருக்கிறோமையா சுவாமி.

இராஜன் வசனம்.

வாருங்கள்வேடுவர்களே நாம் வேட்டையாடச்செல்கின்ற படியால் நீங்கள் கானகத்திற்கு இப்பவேசென்று நான்குதிசையிலும் வலைகளைநாட்டி ரெம்பவும் உஜாராயிருக்க வேண்டியது.

வேடர்கள் வசனம்.

பிரபு தங்களுத்தரவுபோல்செல்கின்ருேம் வேட்டையாடுகிறவிஷயத்தில் நாங்கள் வனதேவதையை வேண்டிக்கொள்கிற வழக்கம் அதற்குமகாராஜா கொஞ்சம்பொருள்வேண்டும் பிரபு.

இராஜன் வசனம்.

வேடர்காள் பொக்கிஷசாலைக்கிச்சென்றுஉங்களுக்குவேண்டியபொருளைப் பெற்றுக்கொண்டு சுவாமிபிரார்த்தனையைமுடித்துக்கொண்டு அதிசீக்கிரம் கானகஞ் செல்லவேண்டியது

வேடர்கள் வசனம்.

மகாராஜா உத்தரவுபிரகாரம் செல்கின்ருேம் பிரபு.

பொது வசனம்.

இவ்விதமாக வேடர்கள் பொக்கிஷசாலைக்கிப்போய் வேண்டுந் திரவியங்களைவாங்கி சாமிக்கிவேண்டுஞ் சாமான்களை தயார் செய்து மேளதாளத்துடன் சாமியைக்கும்பிட்டு கானகத்துக்குச்சென்றபின் அரசன் வேட்டைக்கி புறப்படுகிறதற்கு சந்திரமதியிடம்சொல்லுகிற விதங்காண்க.

—(-)-(*)-'-)—

இராஜன் சந்திரமதியிடம் சொல்லுகிற

விருத்தம்.

மதிதயன்மகளேசந்திர மதியென்றன்மணியேகண்ணே
பதியபாற்கடலில்வந்த வமுதமேபுகலக்கேளாய்
சதிசெயுமிருகவேட்டை தனக்குநான்சென்றுவாரேன்
பதிதனில்மைந்தனேடும் பைங்கிளியிருந்திடாயே.

இராகம்-காபி-தாளம்-ஆதி

பல்லவி.

மாதேபோய்வாரேன் வனவேட்டைக்கே(மா)

அநுபல்லவி.

நீதுவந்ததென்றுகுடி ஓதுவதினலேயிதோ(மா)

சந்திரமதிசொல் தரு.

பல்லவி.

மன்னர்மன்னவரே கூடவருவேனன்.(ம)

அநுபல்லவி.

பொன்னகரயோத்தியாளுஞ் சொன்னமொழிதவறாத.(ம)

இராஜன்சொல் தரு.

குடிகளிடும்பயிருகளை கொடியவிலங்கழிப்பதினல்.(மா)

சந்திரமதிசொல் தரு.

தாஷ்டீகரேகூட்டமிருங் காட்டில்மிருகவேட்டைபார்க்க.(ம)

இராஜன்சொல் தரு.

கொஞ்சுங்கிளிரஞ்சிதமே யென்சொல்தவறாதேயினி. (மா)

சந்திரமதிசொல் தரு.

மாலையிட்டநாள்முதலாய் மாதுமைப்பிறிந்தறியேன்(ம)

இராஜன்சொல் தரு.

கருமிகுந்தசோலைகளை மிருகம்வந்தழிப்பதாலே.(மா)

சந்திரமதிசொல் தரு.

சுந்தரஞ்சேர்மைந்தனேடு சந்தோஷமாயிந்தவேளை (ம)

இராஜன்சொல் தரு.

தற்கஞ்செய்யவேண்டா வினி நிற்கொணதுகற்பினுயர்.(ம)

சந்திரமதிசொல் தரு.

ஆசைமிகும்நேசமுள்ள ராஜனையிக்காசினியில்.(ம)

இராஜன்சொல் தரு.

கரிபுலியோடரிநரிகள் திரியும்வனந்தெரிகுவாயென்.(ம)

சந்திரமதிசொல் தரு.

அருமைமன்னனீரிருக்க ஒருகுறைவும்வருவதில்லை.(ம)

இராஜன்சொல் தரு.

சாதுயிந்தவாதுசெய்த தேதுயெந்தன்கோதகுழல்.(மா)

சந்திரமதிசொல் தரு.

ஆரணியந்தன்னிற்களைப் பாகினுபசாரம்செய்ய.(ம

சந்திரமதி விருத்தம்.

எத்திசையோரும்போற்று மேந்தலேவேட்டையாட
பத்தினியாளைவிட்டு படர்வனஞ்செல்வேனென்ன
சித்தத்திலிருத்திச்சொன்னீர் சேரலதனித்திருக்கேன்
உத்தமாயானுங்கூட வருவனென்றுரைசெய்தாளே.

இராகம்-தேசிகம்-கமாஸ்-தாளம்-ஆதி.

சந்திரமதி சொல்லுகிற

பல்லவி.

மன்னாயெனைக்கூட்டிப்போவீர் ஆசை
மைந்தனொடுமெந்தனையுஞ் சிந்தைமகிழ்ந்தன்புடனே (ம)

அநுபல்லவி.

கன்னமாபுரியில்வந்து யென்னைமணம்புரிந்து
இன்னாள்வரையுமது இணைபிரிந்திலேனையோ (ம)

இராஜன் சொல்லுகிற

பல்லவி.

மாதேயென்பின் வரலாகாதேயான்
வனத்தில்வேட்டைகளாடி க்ஷணத்தில்வருவேனேடி (ம)

அநுபல்லவி.

வாதுசெய்யுமிருகம் வனத்திலுண்டுவதிகம்
தீதுவருங்கேளெனது தேன்மொழிமான்விழிபட (மா)

சந்திரமதி சொல்லுகிற

சரணங்கள்.

மதுரம்பெருகிமேயாடும் வரிக்குயிலிசைபாடும்
அதிகசிறப்புடைய ஆரண்யத்தைபார்க்கவென்றன் (மா)

இராஜன் சொல்லுகிற

சரணங்கள்.

கணவன்வேட்டைக்குப்போக கன்னியர்பின்னாலேக
குணமுண்டோவையகத்தில் குற்றம்வரும்நற்றவத்தின் (மா)

சந்திரமதி தரு.

ஐயோயிப்படிவர்மம் செய்யலாகுமோகர்மம்
மையுநெனதுமனம் வெய்யவன்குலத்திலுற்ற (ம)

இராஜன் தரு.

சரிபுலிபன்றிசிங்கம் கரடிசெந்நாய்கள்சங்கம்
திரியும்வனமாகையால் சித்தம்நோகுமெத்தவுமென் (மா)

அரிச்சந்திரன் வசனம்.

பிராணசகி யான்சொல்வதைக்கேள் யான் குடிகளடைகிற கஷ்டத்தை நிவர்த்தி செய்யும்பொருட்டு வேட்டையாடச் செல்கிறேன் இச்சமயத்தில் நீயுங்கூட வருகிறேனென்று சொல்கிறது சரியல்ல வனத்திற்கொடியஜெந்துக்கள் வசிக்கக்கூடிய இடமாகையால் நீ வருவது ஞாயமா.

சந்திரமதி வசனம்.

பிராணேசா யென்விஷயத்தைப்பற்றி யிவ்வளவுபிடிவாதம் செய்வதேது யான்வன சிங்காரத்தையும் தாங்கள் வேட்டையாடுகிற உல்லாசத்தையும்பார்க்க ஆவலுற்றவளே தவிர வேறல்ல தங்களுக்கு பிரியமில்லாதபட்சத்தில் யானிருந்துவிடுகிறேன்.

அரிச்சந்திரன் வசனம்.

கண்மணி யான்சொல்லிய வசனத்தைப்பற்றிமனதில்கவலை வைக்கவேண்டாம் உன் மனபாகங்களையறியவேணுமென்று சொன்னேனே தவிர உன்னைப்பிரிந்து அரைக்ஷணமாவது தனித்திருப்பேனோ அதுவிஷயம் உனக்குத் தெரியாதா அருந்ததியொவ்வாமருந்திலுமினிய மங்கையே உன் மனதுக் கிசைந்தவண்ணம் வேட்டைக்குச்சென்றுவருவோம் வா பெண்ணே.

அரிச்சந்திரன் மந்திரியிடம்சொல்லுகிற

வசனம்.

பிரதான் நாம்வேட்டைக்கிப்புறப்படவேண்டியதாகையால் ரதகஜதுரகபதாதிகளெல்லாந்தயார்செய்தும்சந்திரமதிக்குத்தந்தபல்லக்கைச்சிங்காரித்தும் நமக்குபஞ்சகல்யாணி குதிரையைச் சிவிகைவைத்து தயாராகக் கொண்டுவரும்படியாய் திட்டஞ்செய்.

மந்திரி வசனம்.

அப்படியே திட்டஞ்செய்கின்றேன் பிரபு.

மந்திரி சேவகன்பாற்சொல்

வசனம்.

சேவகா மகாராஜாசொல்லியபடி ரதகஜதுரக பதாதிகளும் நமது தங்கபல்லக்கைச்சிங்காரித்து பஞ்சகல்யாணிகுதிரையைச் சீனிவைத்து அதிசீக்கிரம்கொண்டுவா சேவகா.

சேவகன் வசனம்.

பிரபு இதோஎல்லாங் கொண்டுவந்துவிட்டேன்.

இராஜா

வேட்டையாடுகிறயாகம்.

இராஜன் விருத்தம்.

பூங்கொம்பனைய சந்திரமதியுமைந்தன்
  போந்துசிவிகையிலேறிச் செல்லமானுர்
தாங்கவிருமருங்குஞ்சா மரைகள்போட
  தாதியர்கள்புடைசூழப் பேரியார்ப்ப
ஓங்கியபல்லியமுழங்க வமைச்சரோடும்
  உயர்வேடர்படைமிடைய வரசர்மோத
தீங்குசெயுங்கொடியவன் மிருகங்கொல்லத்
  திறப்பட்டானரிச்சந்திரன் புறப்பட்டானே.


இராகம்-கல்யாணி-சாப்பு-தாளம்.

பல்லவி.

வேட்டையாடச் செல்லுவோம்வாரீர்
வீரர்களேரணசூரர்களேவெகுஆரவாரத்துடன்பார்வனம்நோக்கி

அநுபல்லவி.

நாட்டில்பயிரை வாட்டுமுயிரை [படி
நலித்திடவில்லைவளைத்திடப்பயிர் தழைத்திடக்குடிபிழைத்திடும்



சரணங்கள்.

சந்திரவட்டக்குடைபிடிக்கவே யெக்காளமூதி
தக்கபடியாய் முரசடிக்கவே
சுந்தரமங்கையர் சதிர்நடிக்கவே
சோபனங்கள் வெகு வாகப்படிக்கவே
தந்திபரிவெகு பந்திபந்தியாக
நானோநடந்துமாநகர்கடந்து கானகந்தொடர்ந்துசேனை கள்டர்ந்து

அமைச்சர்கள்பிரதானிகுழவே குடிகட்குரிய
அவஸ்தைநீக்கிச் சுகமாய்வாழவே
நிமைப்பொழுதில் விலங்கினமாளவே
நேரிலெதிர்ப்பட்ட மன்னர்கள்தாழவே
சமையஞ்சமையஞ் சமையமிதுவே

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

வேட்டையாடவாரீர் வீரசூரரேநீர். வே

அநுபல்லவி.

காட்டிலகந்செய்யுங் கூட்டமிருகத்தை வே

சரணங்கள்.

வரிபுலியானைத் திரியுஞ்செம்மானை
துரிதமாய்ச்சென்று துலைப்போநாமின்று வே

நாட்டினில்பயிரை நலிபச்செய்யுயிரை
தாட்டிகமாய்ச்சென்று சங்கரிப்போமின்று வே

பீரங்கிதுப்பாக்கி பாரக்காரர்தூக்கி
வாரும்வனம்நோக்கி வல்லமையால்தாக்கி வே

கத்திபாலாயிட்டி அஸ்திரந்தோள்மாட்டி
பத்திபத்தியாக சுத்திவருமேக வே

சிங்கம்பன்றியாலே யெங்கினுமென்மேலே
பங்கமில்லாக்குடி யிங்குரைத்தபடி வே

இராகம்-கல்யாணி-தாளம்-யேகம்.

பல்லவி நோட்டு.

வாரும் வாரும் வீரரே வன வேட்டையாடுவோம் சூரரே. வா

அநுபல்லவி.

கோரரூபமுடன் ஆரவாரஞ்செய்துகுடிகள்பயிரைக்கெடுத்திடும்
கொடியமிருகம்பொடிபடவரைநொடியிற்பகழிதனைத்தொடவா

சரணங்கள்.

கண்டற்கோடாலி அஸ்திரதோமரம்
பிண்டிபாலம் யீட்டிசக்கரம்
கத்தியுடனேவேலுலக்கை சூலங்கொண்டு
சுத்தியசேனை படைத்தலைவரோடு வா

அட்டகாசத்துடன் திட்டமதாகவே
கேடயம்முசிண்டி வல்லயம்பீரங்கி
மேருங்கட்டாரி துப்பாக்கியால்
கெட்டமிருகத்தி னட்டனைதீரவே வா

இராஜன் வசனம்.

மந்திரி வேடர்கள்கட்டியிருக்கிற வலைக்குள் விலங்கினங்கள்திரள்திரளாய் திரிகிறதைப் பார்த்தனையா நல்லதிருக்கட்டும் யானிந்த வேடர்களுடன் சென்று பல திக்கிலும் மிருகங்களினுடைய ஆரவாரம் ஒடுங்கும்படி வேட்டையாடுகிறேன் நீர் ஒரு டேரா அமைத்து அதில் சந்திரமதியும் கண்மணியாகிய லோகிதாசனையும் அதிலிருக்கும்படி திட்டம்செய்யும்.

மந்திரி வசனம்.

பிரபு தங்களுடைய உத்திரவுபோல் செய்கிறேன்.

இராஜன் விருத்தம்.

கொண்டலென்றுங் கண்வளரு மசோகுபுன்னை
குருந்துசந்து காரல்சூழ் சோலையின்கண்
மண்டலமன் னவன்புகுந்து எனத்தைப்பாச
வலையதனல் வேடர்படை யோடுஞ்சுற்றிக்

கொன்றிடிக்கிங்கர் முரசந்தவண்டைபேரி
ஆமுறாவெடிவாள் சுரிகைகுலமீட்டி
தண்டெடுத்தம்வெல்லயம் பகழியோடுஞ்
சாடினன்னாவேட்டை யாடினனே.

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

வேட்டையாடினோவா நாமிப்போதே அண்டம
வெடிக்கவிலங்கினுயிர் றாடிக்கும்படிக்கியிதோ (வே)

அநுபல்லவி.

ஆட்டையும்காட்டில்மிருந்த மாட்டையுக்கின்றுகொழுத்த
அரிபுலியைக்கொலைத்து வரிவில்லையும்வளைத்து (வே)

சரணங்கள்.

காட்டெருமைக்கூட்டம்நரி காடியாளிகள்கரி
கதறிஉதறிச்சிந்தை மிகப்பதறி
கேட்டையிமுக்தாமெனவே திட்டம்பிடித்தவுயிரை
திட்டியஅரக்கனைத்தில் வாட்டியெனறிஉசகாட்டி (வே)

வம்பாய்க்கிழங்குகளை கொம்பால்கிண்டியேதின்றே
மட்டடங்காபன்றிகளின் பெட்டடங்கியே
தும்பமில்லாதலைந்து அம்புபட்டதானுலைந்து
சடைத்துநெஞ்சளிற்கல னடைத்தாருளும்படியாய் (வே)

கலையுமுயலுமா மனையுங்குலைபதறி
கவ்விபபுல்லுட [illegible]
துலைபாய்விலங்கினங்கள் [illegible]
துரத்தித்துரத்திப்பத்தி [illegible] (வே)

மரமுஞ்செடியடர்ந்த மலையுந்துகைமிருந்த
வனமெங்குத்தலைபற்றி படிரெனவே
திரமாய்சரம்விடுத்த உரங்கண்டாதிசேடனும்
தியங்கிமயங்கிவெகு பயங்கரமடைந்திட (வே)

இராஜன் வசனம்.

வேடர்காள் கொடியமிலங்கிளங்களை அழிஞ்செய்துவிட்டேன் இனியெந்தஇடங்களில்மிருகஜாதிகளிருக்கிறது பார்த்துசொல்லுங்கள்.

வேடர்கள் வசனம்.

பிரபு இக்கொடியகாட்டில் ஓர் சிங்கமானது கெர்ச்சித்துக் கொண்டிருக்கிறது அதைப்பார்த்தால் ஆச்சரியமென்றுசொல்வோம் இதுகாலபரியந்தம் இப்படிக்கொத்தமிருகத்தைப்பார்த்ததேயில்லை பிரபு.

அரசன் சிங்கவேட்டை யாடுதல்

விருத்தம்.

கூட்டமதைக்கண்டவொரு சிங்கஞ்சீறி
கொண்டெதிர்ந்துவாலசுழற்றியுறுமிவீங்கி
ஆட்டமுடன் கெர்ச்சிக்கொண்டிருக்கக்கண்ட
அரசன்மிகுவேகமுடன் புலியிற்பாய்ந்து
கூட்டமிட்டவேடர்களை யிருக்கக்கண்டு
குவலயத்திற்கொடியபுலிதனைக் கொல்வேனென்று
வாட்டமின்றியுடைவாளைக் கரத்தில்வாங்கி
வெட்டினானிருதுண்டாய் விட்டிஞனே.

இராகம்-கல்யாணி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

சிங்கமேயுன்னைபங்கம் செய்குவேன்பாராய்
சீறிப்பதாபம் மீறியவேகம்
வனத்துடனிந்த வனந்தனிலவந்து
திடமாஅடங்கப்பகிர் விடுவேன்கெடுவாதுஷ்டா. (சி)

பம்மல்செய்தாய்செம்மலென்று பார்த்திடாமலே
பதுங்கிடும்பாது ஒதுங்குவதேது
பார்க்குமுன்கோபம் மூர்க்கமாகூறுய்
பரிவாசத்தெசர்பார்க்க அறியாமேபாவருந்திதே. (சி)

ஆச்சமன்றிகெர்ச்சனை கொள்ளலாகுமோயியும்
அடுத்தாயென்முன்பாவி விடுத்தாயோஉனதாவி
அரண்டாய்மனங்கலக்கமி யுருண்டாயேமிகக்கூவி
அருகினில்வாடாவேடா மருவலரெந்தனுக்கிடா. (சி)

இராஜன் வசனம்.

வேடர்காள் வெகு ஆக்கிரகங்கொண்டு வந்த சிங்கமானது ஓர்பகழியினால் உயிர்நீங்கினதை பார்த்தீர்களா இனியெந்தவிடத்தில் விலங்கினங்கள் பெருத்தமாயிருக்கிறது பார்த்துச் சொல்லுங்கள்.

வேடர்கள் வசனம்.

மகாராஜா நவனீதமலைச்சார்பிலிருக்கப்பட்ட நருங்கிறைந்த சோலைகளை கரிகள்திரள் திரளாய்க் கூடி ஒடித்தும் கொம்புகளா லிடித்தும் ரெம்பவும் நிர்த்தூளிசெய்கிறது பிரபு.

இராஜன் யானைவேட்டையாடுதல்

விருத்தம்.

அரிதானசோலைகளை பொடித்துரெம்ப
அனியாயஞ்செய்துவிட்டீர் அட்டதுஷ்ட
கரிகளேயென்றிரானி யோசியாமல்
கைவிரசுகாட்டிவிட்டீர் காலசேற்கை
மரியாதையுங்களுக்குப் பார்க்கலாமா
மன்னன்திரவின்னதிர வாய்விட்டேங்க
துரிதமுடன் வில்வளைத்து நாணையேற்றி
தொடுத்திட்டேன்சரமாரி விடுத்திட்டேனே.

இராகம்-கல்யாணி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

மதகரியேயுனதுயிரை வாட்டுவேன்பாராய்
அனந்தைச்சினந்தோடழித்தானுன்னை கனத்திலேநேராய் (ம)

அதஞ்செய்திடும்வீரனு னென்றறிந்ததில்லையா
அடித்துமரத்தையொடித்துப்பிடித்து யிழுக்கவல்லையா (ம)

அடர்ந்தசோலைபடர்ந்தசாலைப யழித்துவிட்டாயே
அடமோயார்செய்திடமோவுந்த னறிவுகெட்டாயே (ம)

கடந்துபோகமுடியாதென்றன் கணையைப்பூட்டினேன்
கதறவுன்மனம்பதறக்காலன் பதியைக்காட்டினேன் (ம)

இராசன் வசனம்.

வேடர்களே இதோ திரள் திரளாய் நின்ற மிருகஜாதிகளை தும்சம்செய்து விட்டேன் இனியெந்தவிடத்தில் மிருகஜாதிகளிருக்கின்றது பாருங்கள் வேடர்களே.

வேடர்கள் வசனம்.

சுவாமி இதோ புதர்க்காட்டுக்குள் புலிகள் திரள் திரளாய் இருந்து கெர்ச்சித்துக்கொண்டிருக்கிறது.

இராசன் வசனம்.

நல்லது அந்தப்புலிகளை அரை நிமிஷத்தில் தென்றிசைகாட்டில் ஓட்டுகிறேன் நீங்கள் காட்டைக்கலைத்து விரட்டி வலையை வீசுங்கள்.

வேடர்கள் வசனம்.

மகாராஜா இதோ காட்டைக்கலைத்து விரட்டிவிட்டோம்.

ராஜன்புலிவேட்டை யாடுதல்

விருத்தம்.

காட்டிலேமரியாதையாக வந்தன்
 காலத்தைப்போக்கிடாம கபடமாக
நாட்டிலுள்ள ஆட்டையுமாட்டையுமே தின்று
 நாசமிகச்செய்துவிட்டாய் நமனைப்போல
சேட்டைபடித்திட்டவரிம் புலியேயுன்னை
 சீக்கிரத்திலுயிர்விடுக்கச் செய்வேனென்று
தாட்டிகமதாகவா ளுருவிக்கையால்
 சதைத்திட்டான்பதைபதைக்க வதைத்திட்டானே.

இராகம்-பைரவி-தாளம்-சாப்பு

பல்லவி.

புலியேவீணில் புதரில்பதுங்குறுயிந்தப்
புனமதிலுனதுயிர்சொல்ல கணைவிடுவேன்வல்ல (புலி)

அநுபல்லவி.

வலுமைமிகுந்த வீரனெனென்று
மதித்திடாதென்னே டெதிர்த்திட்டாய்துஷ்ட (புலி)

சரணங்கள்.

காலைப்பின்வாங்கி கபடந்தாங்கி
கண்கள்சிவந்து கர்ச்சித்தோங்கி
வாலைச்சுழற்றி மனதைமிரட்டி

மகிழ்ச்சியாக வாய்விட்டழுதிட்டு
வருகிறுபென்முன்னிலை நெருவமுடன்மென்மேலிலை
தருகாமலெலண்மேலே யுருவழியாயென்னுலை (4)

மாயமோசம்பிர தாயமோவிந்த
வனத்தினில்வெகு சினத்துடன்வந்த
ஞாயமோ இது வுபாயமோவென்னே
நாடினைக்குற்றந் தேடினைய்
நான்விடுவேனோஉன்னைத் தான்விடுவேனோவென்னைக்
கோவென்றறிந்துகொள்ளாமலேனினிமாள்கிறுப்துஷ்ட ()

போங்காலங்கண்டு ஆங்காரங்கொண்டு
புறப்பட்டாய் மனத்திறப்பட்டாய்
தாங்காதென்கோபம் நீங்காதென்சாபம்
சதைப்பேனுவ்றன்னை வதைப்பேனேபாவம்
தட்டழிந்திடவோர்பாணம் விட்டேனதுதீர்மானம்
பட்டதுபாருனதாவி விட்டாயேமிகக்கூவி. (4)

இராஜன் வசனம்.

அடா வேடர்களே ரொம்பவுங் கொச்சித்த வரிப்புலிகளே அதஞ்செய்துவிட்டேன் இவடத்திலாவது வேறேயெந்தவிடங்களிலாவது மிருகங்களினுடைய ஆரவாரங் கேட்கின்றதா பார்த்துச்சொல்லுங்கள்.

வேடர்கள் விருத்தம்.

மன்னவர்க்கரசே நீதி மருவினோயென்றன்வாயால்
யென்னவென்றுரைப்பேனையா இவ்வனந்தனில்தம்சேனை
சின்னபின்னங்களாகத் திசைதிசைபடியோய்ப்பந்தி
அன்னீதஞ்செய்யக்கண்டு அலறிநானோடிவந்தேன்.

வேடர்கள் வசனம்.

மகாராஜா என்னவென்று யென்வாயினுற் சொல்லப்போகின்றேன் பருவதம்போலொரு பன்றியானதுவந்து நமதுசேனைகளைச் சின்னாபின்னப்படுத்தி கோரக்கொம்பினுற் குத்தி வெகு அனீதஞ்செய்வதைக்கண்டு பயந்து தங்களுக்குத்தெரிவிக்க தப்பிபித்து ஓடிவந்தேன் அரசே.

இராஜன் விருத்தம்.

தலைவேடாவுன்றனெஞ்சக் கவலையங்கலங்கவேண்டாம்
மலைபதறிப்போமலைப்பன்றி வந்தென்முன்னெதிர்த்திட்டாலும்
சிலையதாலெய்தேநான்பன்றைக் கிட்டியேயபகைக்குலைத்தில்
தொலைத்திடுவேனயந்தை சருக்கினில்காட்டவாராய்.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ரூபகம்.

பல்லவி.

எங்கேகாட்டடா வந்தபன்றி யெங்கேகாட்டடா

அநுபல்லவி.

யெங்கேநீசொன்ன யேனமிதுவோடா
இப்போதெய்தோட்டுவேன் தப்பாமலோட்டுவேன் (எ)

சரணங்கள்.

தாலம்பெரிதானவனைக்கண்டுத் தோன்றினதாமிதுதான்
காலமெதிர்பல்லோ காட்டினில்தங்கதும்
என்னிடையாத்தைக் கொண்டிடத்தங்கதும் (எ)

கோரரூபமாய்ச்சேனைமேல் கொடுரகோபமாய்
திரமுள்ளபடை திகைத்துவாடிட
தேகம்நடுங்கியுள் சிந்தைகள்வாடின (எ)

தூவசதாயுரேனிதோ சரந்தனை தூவீரன்
அறுவறுவாக வதைத்தொலைக்கிறேன்
அப்பாலிப்புறத்தி லண்டாதரைக்கிறேன். (எ)

இராஜன் பன்றிவேட்டையாடுதல்.

வசனம்.

வேடர்களே அந்த பன்றியானது பெய்யிடத்தில் கண்டீர்கள் யென்பானத்தால் துணிக்கிறேன் அதிசீக்கிரஞ் சொல்லுங்கள்.

வேடர்கள் வசனம்.

மகாராஜா இதோவருகுது பாருங்கள் இந்தபன்றிதான் எங்களுக்கு வெகு பயங்கரமாகயிருக்கிறது.

இராஜன் விருத்தம்.

கொடியவனம்வேடர்வந்து சொல்லக்கேட்ட
கோமானுஞ்சினந்திக கோபமீறி
நெடியசிலைதனைவளைந்து பகழிகோர்த்து
நிமிடமதிலெண்டிசைகள் யாவுந்தூர்த்தான்
படிநடுங்கவரைகுலுங்க நின்றபன்றிப்
பக்கத்தில்வந்ததின் வலத்தைநோக்கி
இடிமிகந்தோர்பாணமதை யெடுத்துப்போக்கி
இடித்திட்டான்கோலவகை முடித்திட்டானே.

இராகம்-காம்போதி-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

பருவதநகர்ந்தாப்போல் கெருவந்தடேனபன்றி
வருவதைப்பாருங்கள் வேடரேகையில்
வாங்குங்கட்டாரியை வீரரே
கருவருத்திடுமுக்கிர காவலனுமென்று
காணாததுவென்ன காரணம்பன்றி (கா)

ஆனைபரிரதங்கள் சேனைவெருளங்க
ளானதைத்தாறு யாருக்கியேதுயிர்ந்த
அடவியிலென்றன்னை நோக்கியே
ஏனமேவருகிறாய் பாக்விடுவேனுவன்னை
எய்திடுவேனொரு பாணத்தாலிதோ
எய்திடுவேனொரு பாணத்தாலுன்னை (எ)

அட்டகாசஞ்செய்து கிட்டநெருங்கியே
துஷ்டமிருகமெய்தா கூவியே ஓடி
விட்டதப்புறத்தில் மேவியே
பட்டபகல்தீபமாய் விட்டதின்சேதி
பாரடாகானக வேடரே சுற்றி
பாரடாகானக வேடரே எங்கும் (பா)



அரிச்சந்திரன் வசனம்.

வேடர்களே கோரரூபமாய்வந்த பன்றியானது ஓர்பாணம் பட்டவுடனே அபயமென்ற சத்தத்துடன் மறைந்துவிட்டது பார்த்தீர்களா நல்லதிருக்கட்டும் கற்பனையாகத்தெரிகிறது நான் மேரோவுக்குச் செல்கிறேன் நீங்களெல்லாம் ரொம்பவுஞ் சாக்கிரதையாக அவாளவாள் இருக்கக்கூடிய ஸ்தானங்களில் உஷாராயிருக்க வேண்டியது.

உ

பரமபதி துணை.

லோகிதன் மானைக்கண்டு

சந்திரமதியிடம் பிடித்துத்தரும்படி சொல்கிறது.

விருத்தம்.

அன்னையேபாருமிந்த அடவியிலுருமிக்க
பொன்னொளிவாகத்தோற்றும் புதுமைசேர்மானின்ரூபம்
என்னவென்றுரைப்பேனம்மா இட்சணமிந்தமானை
என்னிடம்பிடித்துயிய யியம்புமென்றந்தையர்க்கே.

இராகம்-கமாஸ்-தாளம்-சாப்பு.

பல்லவி.

அடடாயிந்த மானைப்பாரம்மா பொன
தன்னையேமின்னொளி தன்னைநிகர்த்திடும். (அ)

அநுபல்லவி.

சுடரோசெங்கதி ரோநவமணியோ
சோதிப்பிரகாசமதாய் தோற்றுதுபாரையோ
அடருமிக்கொடி படருங்கானிலே
அழகாகவேகமுல்நோகவேசுழல்போலவேவிளையாடுது (அ)

சரணங்கள்.

சும்மாவந்தென்முன்னே துள்ளிவிளையாடி
சோலையிலென்மனஞ் சோகமிகநாடி
செம்மானென்றன் செயலைக்கவருதே
சிறியேனதைவிளையாடவே பிரியமுடன்மனம்நாடுதே (அ)

லோகிதாசன் வசனம்.

அம்மா பார்த்தீர்களா இந்தமான் வெகு அதற்புதமாகத் தோற்றுகிறது இதை விளையாடுவதற்கு யெவ்விதத்திலாவது யென் பிதாவிடஞ் சொல்லி பிடித்துத்தரும்படி செய்யவேண்டியது.

சந்திரமதி வசனம்.

அடா பாலகா இதுதானுபெரிது உன் பிதாவிடஞ்சொல்லி இப்பவே பிடித்துத்தரும்படி சொல்லுகிறேன்.

சந்திரமதி இராஜனிடம் சொல்லுகிற

விருத்தம்.

சுந்தராமகிழ்ச்சியோங்குஞ் சுவாமியென்பிராணநாதா
மைந்தனோர்மானைக்கண்டு வருந்தியென்னம்மாயென்றன்
தந்தையினிடத்திற்சொல்லி தாம்பிடித்தருளுமென்றான்
செந்திருமார்பா அத்தைச் சீக்கிரம்பிடித்தீவீரே.

—(-,-(*)-(-)—

இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

பிள்ளைவிளையாடவே புள்ளிமானொன்று-தாங்கள்
பிடித்துகொடியிலின்றோ கொடுப்பீர்மன்னா (பி)

அநுபல்லவி.

வள்ளலேசொற்றவரு மன்னவர்க்குச்சிம்மேறே
மானிலம்புகழும் பிரைக்காதிபரே
வானில்மின்னைப்பழிக்குந் தானேமிகச்சொலிக்கும்
மானைக்கண்டு வருந்துரான்பாலனும் (பி)

தாண்டிக்குதித்து விளையாடித்திரியுமெள்ள
தங்கனிறம்போலவே யங்கமுள்ள
தாரணியிலிதற்கிணை சாற்றவுங்கூடாது
சாமிபுகழ்மிகுந்த நேமிமன்னா (பி)

அம்புபடாமலதை தெம்பாய்பிடித்துத்தாரும்
ஐயோத்திநகருக்கு நாம்கொண்டேக
ஆச்சரியமுள்ளவெகு மாட்சிமைதங்கிய
ஆசைமகனுக்கிதோ நேசமுடன். (பி)

சந்திரமதி வசனம்.

பிராணேசா இதனருகாமையில் அற்புதமாகிய ஓர்மானான துவர அதைலோகிதன்கண்டு அந்தமான் தனக்குவிளையாடவேணும் யென் தந்தையிடஞ்சொல்லி பிடித்துத்தரவேணுமென்று ரெம்பவருந்திக் கேட்டுக்கொண்டான் ஆகையால் அந்தமானைக் கட்டாயமாய்பிடித்துலோகிதாசனுக்குகொடுக்கவேண்டுமென்று.

இராஜன் வசனம்.

பிராணசகி இவ்விடத்தில் அநேகமாய் மான் கூட்டங்கள் யிருக்கிறது அதில்வெகு அற்புதமாக ஒருமானைப் பார்த்தோமென்று சொல்லவந்தாய் நல்லதிருக்கட்டும் அதைக் காண்பித்தால் பிடித்துத்தருகிறேன்

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

எந்தமானது வந்தமானிப்போது (எ).

அநுபல்லவி.

சந்திரமாமுகத் தையலேயுன்கண்ணால்
சுந்தரமிகுந்த சோலைதனைக்கண்ட (எ)

சரணங்கள்.

பிள்ளைவிளையாடப் பிரியமாய்வேண்டி
கிள்ளைமொழிவாயால் கேட்கின்றாயிப்போதே (எ)

நிற்குதேமிருந்து நின்மனதுகந்து
அற்புதந்துடனே யன்னமேநீகண்ட (எ)

இராஜன் வசனம்.

இந்தமான்கூட்டத்தில் உன்கண்ணுல்பார்த்து உனக்குவேணுமென்ற மானை காண்பித்தால் இதோ பிடித்துத் தருகிறேன் பிராணசகி.

சந்திரமதி விருத்தம்.

மன்னவாயருமையான மகனுடனடியாள்பார்த்த
பொன்னிறம்பான்றமானும் போகிறததுவோபாரும்
என்னவென்றுரைப்பன்மான்பின் னேகியேயுயிர்போகாமல்
நன்னயமுடன்பிடித்துநாயகாகொடுப்பீர்சுவாமி.

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

மன்னுஅதோபோகுது பாருஞ்சோதி
வடிவமாகவே அடியாள்கண்டமான்(மன்)

அநுபல்லவி.

செங்கெல்கண்ணமிருந் திடுமையோத்தி
சீமையாளும்வெகு நேமந்தவரு்த(மன்)

சரணங்கள்.

மின்னலேயிதற் கிணைசொல்லப்போமோ
வேறேமானினந்தை மனம்நாடுமோ
சொர்னவடிவம் போலேமிருந்த
சுந்தரத்தைபாரும் சிந்தைகளிகூறும்(மன்)

பார்த்திருந்தாலும் பசியடங்குமே
பாலனுக்குவெகு மகிழ்ச்சிபொங்குமே
நேர்த்தியாக வயோத்திக்குக் கொண்டேக
நேசமுடன்லொரி தாசன்கண்டமானும்(மன்)

அட்டியன்றிபிடித் தென்கையில்தாரும்
ஆசைக்கிசைந்தரா ஜேந்திராநீயும்
திட்டமாகக்கலை தொட்டிடாமலதை
சித்தம்வைத்துப்பிடித் துத்தமனேதாரும்(மன்)

சந்திரமதி வசனம்.

பிராணேசா பாலகனும் யானும் பார்த்த அற்புதமானனது இதோபோகிறது அதன்பேரில் பாணந்தொடாமல்பிடித்து குழந்தைக்கி கொடுக்கவேணும் பிராணேசா.

அரிச்சந்திரன் வசனம்.

பிராணசகி இந்தமானை இதோ பிடித்துத்தருகிறேன்.

இராஜன்சொல்லுகிற தரு.

இராகம்-காப்பி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

மானேயதி வேகமாகத்தானே நீயேனோடுராய்த்
தானேநீயே னோடுராய் புதரானதைநீதேடுராய் (மா)

கானகமெல்லாந்திரிந்து யேனலைந்துவாடுராய்
யேனலைந்துவாடுராய்நீ தானலைந்துவோடுராய் (மா)

ஆசைமகனனதேவ தாசனுன்னைநாடுரான்
தாசனுன்னைநாடுரான்வெகு நேசமாயுன்னைதேடுரான் (மா)

கதித்துமெள்ளக் குதித்துயென்னை
மதித்திடாமல் செல்குராய் (மா)

மதித்திடாமல் செல்குராய்
அந்தவிதமெனக்குச் சொல்லுவாய் (மா)

இராஜன் வசனம்.

என்ன ஆச்சரியம் இந்த மானனதை பின்தொடர்ந்து வந்தும் கண்ணுக்குத்தோற்றமல் மறைந்துவிட்டது இதை யோசிக்கும் வேளையில் கற்பனையாயிருக்கிறது பிராண சகியானவள் கட்டாயமாக யிந்தமான் வேணுமென்று விரும்பினள் இச்சங்கதியைச் சொல்லும்பட்சத்தில் யென்னவருத்தமடைகின்றுளோ யென் செய்வேன்.

இராஜன் விருத்தம்.

கற்கப்பூங்கொம்பரசிக் கண்ணேமின்னே
களங்கமிலாமதிவதன வமிர்தச்சொல்லி
விற்பனிசெங்குமுதகிர் வாயினாலே
மெல்லியர்திலகமேநின் விருப்பம்போலே
பொற்பகநின்றிலங்கியுன்னை மயக்குமிந்தப்
பொன்மானையிக்கணத்திற் றருவேனென்று
அற்புதமாய்ப்பின்றுடர்ந்தா னேடக்கண்டே
னதுமலைறந்தவிதமதனை யறியேனானே.

இராஜன் சொல்கிற தரு.

இராகம்-கமாஸ்-தாளம்-ஏகம்.

பல்லவி.

வேண்டாம்வேண்டாமிந்தமான் கேளடிசும்மா (வே)

அநுபல்லவி.

நீண்டகொடுவனத்தில் நிரைத்தவலையைமீறி
தாண்டியேயோடுதன்னமே கேளடிசும்மா(வே)

சரணங்கள்.

கற்பனையாயுதித்த அற்புதமானிதல்லோ
சற்பனையாகுமையையோ கேளடிசும்மா(வே)

வில்வளைத்தோர்கணை விடுவேனேயாமாகில்
கொல்லாமல்போய்விடுமோ அதிலென்சாரம் (வே)

அரிச்சந்திரன் வசனம்.

பிராணசகி யென்றாற் கூடியவரையிலும் அந்தமான் பின்றொடர்ந்ததினால் வெகுதூரஞ்சென்று யென்கண்ணுக்குப்புலப்படாமல் மறைந்துவிட்டது அதைக் கருதுவதில் யென்ன பிரயோஜனம் அதுவிஷயமாய் நீ வியாகூலப்படவேண்டாம் உனக்குவேண்டிய மான் வேடர்களால் பிடித்துத்தரும்படி செய்கிறேன் கண்மணி.

சந்திரமதி வசனம்.

பிராணேசா அது விஷயமாக சற்றேனும் வியாகூல மில்லை குழந்தைதேவதாசனுக்காக விருப்பமுற்றேன் மன்னு.

அரிச்சந்திரன் வசனம்.

கண்மணி ஆதியில் என்னிடத்தில் வனசிங்காரம்பார்க்கவே ணுமென்று பிரியமாக சொன்னுயல்லவா இதோ சென்று அநேகம் பெரியவாள் தவஞ்செய்யக்கூடிய சோலை சிங்காரம்பார்த்து வருவோம்வா கண்மணி.

சந்திரமதி வசனம்

பிராணேசா அப்படியே வனசிங்காரம் பார்க்கச் செல்லுவோம்.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

சிங்காரப்பூங்காவில் நாம்சென்றுகளிகூர
மங்களமாய்ப்பார்க்க எந்தன்மானேவாடி (சி)

மன்னர்மன்னர்புகழும் மதிதயனருள்மணியே
என்னசெய்வேனிவ்வனத்தி னியல்பையொருவிதமாய் (சி)

தேங்குபலாமாவின் கனிதேன்கசிந்துருகி
பாங்குடனிறைந்துறைந்த பண்புதனைப்பாராய் (சி)

வண்டுகிதங்கூட மருதங்கிளிகள்பாட
கண்டுகுயில்தொனிசெய்யுங் காரணத்தைப்பாராய் (சி)

பூமலர்பந்திபந்தியாக பூத்திருப்பதுஜோராய்
தாமரைக்குளத்திலன்னந் தான்விளையாடுதுபார் (சி)

மாமயிலாட யடவன்னம்நடமாட
சாமரப்போலிளந்தென்றல் தானேசுகங்கூட (சி)

அரிச்சந்திரன் வசனம்.

பெண்ணே இந்த வனசிங்காரங்களைப் பார்த்தாயா வெகு ஆச்சரியம் இன்னமொருவனமிருக்கிறது அதினுடைய விந்தையையும் காண்பிக்கிறேன் சந்திரமதி.

சந்திரமதி வசனம்.

பிராணேசா தாங்களுத்தரவுபோலந்த வனச்சிங்காரத்தையும்பார்க்க வருகிறேன்.

இராகம்-தேசிகம்-கமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

வெகுஜோக்கையிந்தவனம்பார் மயிலே (வெகு)

அநுபல்லவி.

மருத்துவம்பாரடி மனங்களிகூரடி
செகத்தினிலிதற் கிணையான்கண்டதில்லை (வெ)

சரணங்கள்.

அல்லிசெந்தாமரை அழகியமந்தாரை
மல்லிகைமுல்லையிரு வாச்சிமிகுந்த (வெ)

மாவும்பலாவுங்கொய்யா வானுலகத்தைமெய்யா
தாவுமுன்னதநறுந் தருக்கள் நிறைந்த (வெ)

மதிதயன்மாதே வனத்திலிப்போதே
அதிசயஞ்சொல்லஆதி சேடனுலாமோ (வெ)

கொடிமுந்திரிமாதளை கொழுமிச்சையுடன்தாழை
படினத்துடனிருக்கும் பக்குவம்பார்மிக்க (வெ)

அரிச்சந்திரன் வசனம்.

பிராணசகி இந்தவனத்தினுடைய விந்தைகளைப் பார்த்தாயா அற்புதமான கனிகளைக் கொடுக்கக்கூடிய விருட்சசாதிகள் நிறைந்த சிங்காரத்தை யென்னசொல்வேன் மாதே.

பிராணேசா இந்தவற்புதங்களை யான் பார்க்கவேணுமென்றபேட்சையுடன் இவிடம் வருவதற்கு அரண்மனையில் தங்களுடனே தர்க்கஞ்செய்தேன்அடியாளுடைய நோக்கம்போல்அழைத்து வந்தீர்கள் மிகுந்த கண்காட்சிகளைக் கண்டு ஆனந்தங் கொண்டேன் பிராணேசா.

அரிச்சந்திரன் வசனம்.

கண்மணி சூரிய னஸ்தமான மாகிவிட்டபடியால் நாம் டேராவுக்குச் செல்லுவோம் வா கண்மணி.

சந்திரமதி வசனம்.

பிராணேசா அப்படியே செல்வோம் வாருங்கள்.

இராஜன் மந்திரியிடம் சொல்லுகிற

வசனம்.


மந்திரி யான்ஜெபதபங்களைமுடித்து நித்திரைசெய்துகொள்ளப்போகிறேன் நீர் நமது சேனுசைன்யங்களுக்கு எம்படுத்தியபடித்தாங்களைக்கொடுத்து அவாளவாள் இருக்கக்கூடியஸ்தானங்களில் ரெம்பவும் உஷாராயிருக்கும்படி திட்டஞ்செய்து பாராக்காரர்களை டேராவைச்சுற்றி காவலிருக்கும்படி செய்யவேணுமந்திரி.

மந்திரி வசனம்.

பிரபு தங்களுத்தரவுபோல் நடத்துகிறேன்.

பொது வசனம்.

இராஜன் இவ்விதமாக மந்திரி பிரதானிகளுக்கு திட்டஞ்செய்து தனக்கேற்பட்ட பூசைவிதிகளை முடித்து சந்திரமதிமடிமீது சயனித்து நித்திரைசெய்தவிதங் காண்குக.



இராஜா
நித்திரை செய்கிறபாகம்.

இராஜன் விருத்தம்.

என்னருந் தவத்தால்வந்த வின்பமே மயிலேமானே
சொன்னமே வேட்டையாடிச் சோபமேலிட்டதாலே
அன்னமேகுயிலேயுந்த னழகுறு மடியின்மீது
நன்னயமுடனே நித்திரை நானிதோ செய்குவேனே.

சந்திரமதிசொல் தரு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-சாப்பு.

பல்லவி.

நித்திரை செய்தாரே யெத்திசைபுகழுஞ் சத்திய குணாநீதன்
நீதன்மலர்ப்பாதன்வெகு நேசனரிச்சந்திர ராஜராஜேந்திரன்.

அநுபல்லவி.

பத்தினியாள்மடி மீதிற்றிருச்சங்கு
பாலன்குணசீலன்வெகு கோலாகலராஜாதிபன் (நி)

சரணங்கள்.

சிங்காரமாகிய பூங்காவனத்திலே
தெற்பக்குளத்தோரம் சப்ரமஞ்சத்திலே
மங்களமாகிய பூமலர்மெத்தையில்
வாடிவனவேட்டை யாடியசோபத்தால். (நி)

மாங்குயில்பூங்கரு வண்டுகீதம்பாட
வஞ்சியர் சாமரைபோட
தேங்குமலர்த்தென்றல் பாங்குடன்வீசவும்
சித்தந்தன்னிலே-மகிழ்வை-வைத்தன்புடனேசுகமாய். (நி)

சந்திரமதி விருத்தம்.

காண்டவனந் தனிற்புகுந்து வேட்டையாடிக்
களைப்பாயென் மடியதனிற் றுயின்றேவேந்தே
ஆண்டவனே வாரணங்கள் யாவுங்கூவி
அலறுகின்ற தாகாயத் திலங்கிநின்ற

நீண்டமதி யுடுக்கணங்க ளெல்லாந்தங்கள்
நிலைதவறி யொளிமாறி நின்றதேமார்த்
தாண்டனுங்கிட் டிசையில்வருஞ் சமயமாச்சே
தழைந்திடாய் நித்திரைவிட் டெழுந்திடாயே.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

மன்னவாவின்னமும் நித்திரையோசாமி
மையிருள்படிந்தெங்ங வானின்மீன்மறைந்ததே (ம)
பொன்னகரயோத்தி நன்னகர்தனையாளும்
புரவலயிருகப கரவிலட்சணபுய (ம)
சேவலுங்கூவுதே செவ்வானமாகுதே
தென்றல்மாறியேபனி கொண்டனும்வீசுதே (ம)
பறவைகள்சிறகடித் திரைதேடச்செல்லுதே
பார்த்திபகிழ்த்திசை பானுதையமாகுதே (ம)

சந்திரமதி வசனம்.

பிராணேசாமெயது இவ்வளவுநேரமாக நித்திரைசெய்கிறீர்கள் சூரியன்கிழ்திசையி லுதையமாகிற சமையமுமாச்சுது எழுந்திருக்கவேண்டியது.

இராகம்-முகாரி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

மாசற்றரோஜாமலர் வாசனைதானே ராஜசேகரா-காவில்
மகிழ்ந்துநித்திரைரெம்பவிருந்துநீர்செய்குறீர் ராஜசேகரா
மானைத்துரத்திப்பின்தானேசென்றீரேயென் ராஜசேகரா-அந்த
மயக்கமோநித்திரைநியக்கமாய்செய்குறீர் ராஜசேகரா
தண்டாமரைவாவிகண்டதினாலோவென் ராஜசேகரா-வெகு
சந்தோஷமாய்நித்திரைசுந்தராசெய்குறீர் ராஜசேகரா
சேனைகளைக்கூடிமாநகரைநோக்கி ராஜசேகரா-நாம்
சேருவோஞ்சொபத்தைதிருமெனதாசை ராஜசேகரா

மந்திரிபிரதானிவந்திடுவார்களென் ராஜசேகரா-எந்தன்
மன்னவாநித்திரை யின்னமுஞ்செய்குறீர் ராஜசேகரா

சந்திரமதி வசனம்.

பிராணேசா மந்திரிப்பிரதானிகள் வருகிற சமயமாயிற்றே தாங்கள் இன்னமும் நித்திரை செய்குறீர்களே யெழுந்திருக்க வேணும்

பொது விருத்தம்.

குடிகள்படு மிம்சைதனைத் தீர்க்கவேண்டி
கொற்றவனும் வனத்தில்வந்து வேட்டையாடி
கடியவிலங் கத்தனையுங் கொன்று கோபங்
கதித்ததினல் கார்குழலாள் சந்திரமாது
மடியிலன்பாய் படுத்துநித்திரை செய்யும்போது
மனஞ்சிதறி மெய்பதறி வாய்விட்டேங்கி
இடியோசை கேட்டசர்ப்பம் போலேமன்ன
னேங்கியே பரதவித்து யெழுந்திட்டானே.

இராகம்-பியாகு-தாளம்-ரூபகம்.

பல்லவி.

நித்திரைநீங்கினர் மன்னன் நித்திரைநீங்கினன்
நித்திரைநீங்கினன் மன்னனிதோ (நி)

அநுபல்லவி.

பத்தினிசுந்திர மதிமடிவிட்டு
பதிமனதுமிகத் திடுக்கிட்டு
சுத்திலும்பார்த்து மன்னன்
சுத்திலும்பார்த்து சோதனையேநோமாதவாவென்று (நி)

சரணங்கள்.

மந்திரிபிர தானிகள்கண்டு
மயங்கும்படியாய் பிரமைகொண்டு
சந்திரசேகரா வென்று
சந்திரசேகராவென்று தயங்கிமயங்கிபயங்கரத்துடன் (நி)

கஞ்சமலரின் வதனம்வாடி
கவலையாலுடல் மிகவுமாடி
என்செய்வேனென்றுமன்னன்யென்செய்வேனென்று
யேங்கிக்கவலை யோங்கிமிகுத்தநீங்குற்றதென்று (நி)

௨

பரமபதிதுணை.

இராஜன் கனவுகண்ட

பாகம்.

சந்திரமதி வசனம்.

பிராணரட்சகா அடியாள்யடிமீது வெகுநேரமாகநித்திரை செய்தவர்கள் இப்படித் திடுக்கிட்டெழுந்து தேகங்களெல்லாம் பதறவேண்டிய காரணம்யாது அடியாளுக்குத் தெரியும்படி சொல்லவேண்டியது பிராணேசா.

அரிச்சந்திரன் விருத்தம்.

சந்திரமதியான்றாங்குந் தருணத்திற்கனவுகண்டேன்
மந்திரமுனிவனென்றன் மணிமுடியுதைக்கக்கண்டேன்
சொந்தநன்னகரந்தோற்று துலங்குநற்காசிசேர்ந்து
வந்தபின்முன்போலாக மணிமுடிதரிக்கக்கண்டேன்.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

எப்படிவருமோ அறியேன் கண்ட
சொற்பனத்தினதிசயங் கற்பினிலுயர்ந்தமாதே (எப்)

அநுபல்லவி.

சப்ரமஞ்சத்திலுன்மேல் சயனித்திருக்கும்போது
செப்பொண்ணாதகனவாலே சிந்தைநொந்துநானெழுந்தேன் (எ)

சரணங்கள்.

மாசிலாமகுடத்தை மாமுனியுதைக்கவும்
தேசஞ்செல்வம்யாவையும்நான் தெத்தஞ்செய்யவுங்கண்டேனே

கடனால்வருந்திமனங் காசிநகரிற்சென்று
மடமயிலேயுன்னையு மகனையும்விற்கக்கண்டேன் (எப்)

புலையனுக்கடிமைநான் புகுந்துமயானங்காக்க
விலைகொண்டவேதியர்க்கு வேலைசெய்யவுங்கண்டேன் (எப்)

வனத்தினில்விஷத்தால் மைந்தனுமிறக்க
மனத்துணிவாலுன்றனை வாளால்வெட்டவுங்கண்டேன் (எப்)

துக்கசாகரந்தன்னில் சொக்கியிருந்தேன்மிக்க
முக்கண்ணன்விடைமேல்வந்து முடிபுனைந்திடக்கண்டேன் (எப்)

தீர்ந்ததுன்பதுயர் திருநகரையோத்தி
சேர்ந்துமேநீயரசு செய்வாரென்றுரைத்தாரீசன் (எப்)

இராஜன் வசனம்.

எனதாசைநாயகி உன்மடியின்மீது யான்நித்திரைசெய்யுங் காலத்தில் விபரீதமாகிய சொற்பனங்கண்டேன் அதாவது ஒரு முனிவர்வந்து யெனதுமகுடம் கீழேவிழும்படி உதைக்கவும் இராச்சியமிழந்து நிராயுதனாய்க் காசிப்பட்டணஞ்சென்று உன்னையுங்குழந்தையையும் வேதியர்க்கு விலைசெய்தும் யான்பஞ்சமனுக்கு அடிமையாகி செய்பத்தகாதொழில்களைச்செய்தும் மயானங்காத்தும் லோகிதாசன் காட்டில் அரவுகடித்து இறந்தது போலும் உன்னையான் வாளால்வெட்ட யெத்தனித்தது போலவும் திருமூர்த்திகளால் முன்போல் மகுடந்தரித்து அயோத்தியாபுரியை அரசாட்சிசெய்ததுபோலும் கனவுகண்டு யென்மனந் திகிலடைந்து யெழுந்தேன் கண்மணி யென்னபலனைக் கொடுக்கின்றதோ யென்செய்வேன்.

சந்திரமதி விருத்தம்.

விதியினால்வருவதெல்லாம் வேந்தனே யனுபவிப்போம்
மதியினால்வாழ்வதுண்டோ மண்டலவாழ்வுபொய்யே
வதிஷ்டரையுளத்திலெண்ணி வணங்கினால்துன்பம்யாவுங்
கதிரவன்றன்னைக்கண்ட கடும்பனியென்னப்போமே.

சந்திரமதிசொல்கிறதரு

இராகம்—நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

மனம்வருந்தாதீரென்றன்
மன்னவாநன்னீதாமா-மலர்ப்பாதா (மனம்)

அநுபல்லவி.

கனவுகண்டோ மென்று
கலங்குவதேது இப்போது (மனம்)

சரணங்கள்.

அரசுபதியிழந்து அடியாள்தனைப்பிரிந்து
பரதேசியானாலும் பரமனருளேநாடுய்தேடும் (மனம்)

மகனரவாலிறந்து மயானத்தில்நீரிருந்து
மிகவருந்தினாலுமின்மெய்தவறலாமோநீதுவேதம் (மனம்)

சத்தியம்பெரிதல்லாது தரணிவாழ்வோபெரிது
எத்திசைபுகழ்மிகுந்த எனதாசைநாயகாவிவேகா (மனம்)

சந்திரமதி வசனம்.

சகல ஆகமநீதிகளையெல்லாம் நன்றாய் அறிந்தும் இப்பேர்ப்பட்ட சொற்பனங் கண்டோமென்கிற விசனத்தை யடைந்தால் ஆவதொன்றுமில்லை நமதுசெல்வங்கள் யாவற்றையுமிழந்துநாம் பரதேசியாக மறுதேசஞ் சென்றாலும் அருமையான மகனுடன் யென்னையும் அந்தணர்க்கு விற்றாலும் தாங்கள் பஞ்சமனுக்கு அடிமையாகும்படி நேரிட்டாலும் தைரியத்தை விடாதிருக்க வேண்டியது பிராணரட்சகா.

இராஜன் மந்திரியிடம்சொல்லுகிற விருத்தம்.

என்னருமைமந்திரியே சொல்லக்கேளா
யெனதுதந்தை சுவர்க்கபத மடைந்தபின்னர்
அன்னமெனப்பெண்களைந்து பெற்றேனத்தி
லருந்தவர்க்கோர்பெண்ணளித்தே னதிலோர்நங்கை
பின்னிடந்தாள்கண்ணிழந்தோர் பெண்ணுஞ்சென்றாள்
பெருவனத்திற்பசிமிகுத்தோர் மங்கைபோனாள்
என்னகத்திலொருத்தியிருந் துறுதிதந்தா
ளிதன்பயனையாராய்ந்தேற் கிதஞ்சொல்வாயே.

இராஜன் வசனம.

பிரதான் நாம் நித்திரைசெய்யும்போதுகண்ட விபரீதசொற்பனத்தை கேட்பாயாக எனதுபிதா சுவர்க்கமடைந்ததின்பின் ஐந்துஸ்திரீகளை பெற்றேன் அதிலொருபெண்ணை தவசிரேஷ்டருக்குக்கொடுத்தேன் அவளுடனேபின்னொருத்தியுங் கூடிப்போய்விட்டாள் ஒருபெண் பசியுடனே வனத்திற்சென்றாள் ஒருபெண்கண்ணிழந்தாள் ஒருபெண்மாத்திரம் பென்னை பிரதிதினமும்நீங்காதிருந்து யிகபரசாதனமுந்தந்தாள் ஆகையாலிந்தகனவின்பலனையின்னதுதானென்று யென்மனது திருப்தியாகும்படி சொல்லவேண்டுமெந்திரி.

மந்திரி விருத்தம்.

அருந்தவனேகோசிகனு மவர்க்குத்தந்த
அன்னமவள்சௌபாக்கிய திருவுமாகும்
பொருந்தப்பின்சென்றவள் சந்தானமாகும்
பொறியிழந்தா ளரசமங்கையாகும்விண்ணோர்
விரிந்தவனந்தனிற்பசியாற் புகுந்தாளில்ல
மேவியநற்றிருமாதாம் விலகாதுன்பால்
இருந்தவளேதைரியமா துணர்ந்துகொள்வா
யிடையூறுற்றாலுநந்தம் புடைநில்லாதே.

மந்திரி வசனம்.

அரசே தாங்கள் கண்டகனவானது தவமுனிவ ரென்பது கௌசிகன் அவருக்கு பூர்ணமாகக்கொடுத்தபெண் நமது நாடு பின்னொருபெண்கூடப்போனது நமது செல்வமுழுவதும் பசிப்பிணியோடும் கண்ணிழந்துசென்றவர்கள் தங்களைவிட்டு நீங்காதிருந்தபெண் சத்தியம்அதைவிடாமல் வைத்திருந்ததினால் இகபரசாதனமும்பெற்று மகுடாபிஷேகந் தரித்துக்கொண்டீர் இந்தசொற்பனத்தை யென்னவென்று சொல்லலாம் பிரபு ஒன்றுக்குமஞ்சவேண்டாம் யெப்பொழுதும் வரும்விதி வந்தேதீரும்.

அரிச்சந்திரன் வசனம்.

பிரதான் மந்திரி இந்த சொற்பனத்தினுடைய ஞாயம்இன்னதுதானென்று முன்னமே அறிந்து சந்திரமதியிடம் சொல்லி

விட்டேன் பின்பும் அதுதானென்று தெரியும்பொருட்டு உன்னிடம் கேட்டதில் நீயும் அதுவேகருத்தாகச் சொல்லிவிட்டாய் நல்லது வரும்விதி வந்துதானே தீரும்.

அரிச்சந்திரன் விருத்தம்.

வள்ளலாம்வசிஷ்டர்பாத மனதினிற்கொண்டோமல்லால்
கள்ளமென் பதுவோவில்லைக் கனவிந்தவிதங்காண்பானேன்
எள்ளளவேனும்நீதி யிழுந்ததுமில்லையேபெண்ணே
உள்ளளவொன்றுங்குன்று தொண்ணகர்க்கேகுவோமே.

சந்திரமதி விருத்தம்.

மன்னவாமனதிற்சற்று வருத்தம்வைத்திடவேவேண்டாம்
அன்னவாகனந்திமேலுறு மயன்விதிதவிழ்க்கொண்ணுது
பன்னகாபரணம்பூண்ட பரமனைமனதிலெண்ணி
நன்னயமிகுமயோத்தி நகர்தனக்கேகுவோமே.

இராகம்-காப்பி-தாளம்-ஆதி.

பல்லவி.

மானகரயோத்தி சேர்வோம்
மன்னர்மன்னவா வாரும் (மா)

அநுபல்லவி.

கானகந்தனில்வெகு நேரமதாகவே
காலங்கழித்தோமிந்த ஞாலம்புகழவந்த
தீனதயாளா நிரவொய்யாரா
திருமகளுறைபு மார்பாநேர்பா (மா)

சரணங்கள்.

கடகரிவேங்கை சிங்கமும்பன்றி
கரடிகடுவாயாளி களைந்கவென்றீர்
துடர்வனந்தனில்வெகு சோபங்களானீர்
துரையேநெறிமுறை தவறுமன்னு (மா)

ஆனையுடனேபரி ரதங்கள்முன்னடக்க
ஆரண்யந்தனைவிட்டு க்ஷணத்தினில்கடக்க
சேனைதனக்குதிட்டஞ் செய்வீரென்சாமி
செந்நெல்கன்னல்மிகுத்துப் பொன்னகரைநிகர்த்த (மா)

பாங்குடனேதென்றல் வீசுதுபாரும்
பார்த்திபரேயுமது மனங்களிகூரும்
மாங்குயில்பூங்கரு வண்டினம்பாடும்
வசந்தகாலம்நமக்கு இசைந்ததின்னேரம்(மா)

சந்திரமதி வசனம்.

பிராணேசா இனி வருந்துவதில் யென்னபிரயோஜனம்வரும்விதிதவருது ஆகையால் நமது சேனைகளைக்கூட்டி அயோத்திமாநகரம் சேர்வோம்வருவீர் யென்பிராணநாதா.

பொது வசனம்.

இவ்விதம் அரிச்சந்திரன் அயோத்திமாநகரம் செல்லுவதற்கு எத்தனித்திருக்கும் சமயம் அரிச்சந்திரன் பாணத்தாலடிபட்ட மாயப்பன்றியானது விஸ்வாமித்திரரிடம் முறையிட்டவிதங் காண்குக.

விஸ்வாமித்திரரிடம் பன்றிமுறையிடுகிறவிதம்.

விருத்தம்.

ஐயனேயபயமென்னை யனுக்கிரகஞ்செய்தமேதவா
மெய்யனேயபயமென்தன் மெய்யெலாம்நொந்தேனையா
செய்யும்வாறேதுங்காணேன் திரளரிச்சந்திரன்விட்ட
கையம்பிணலேபட்டு கலங்குறேன்ருவிசுவாமி.

பன்றி வசனம்.

அபயம் அபயம் முனிநாதா தேவரீருத்தரவுப்படியேயான் அரிச்சந்திரன் சேனைகளிடஞ்சென்று என்னுல்கூடியவரை சின்னுபின்னப்படுத்தினேன் அதையறிந்து அரிச்சந்திரன் ஒருபாணத்தால் காயம் உண்டாகும்படி அடித்துத் துரத்திவிட்டானேயா சுவாமி.

விஸ்வாமித்திரர் வசனம்.

ஆ ஆ பாணத்தினுல் வருத்தப்பட்டு வந்த பன்றியே அந்த அரிச்சந்திரனுடைய பலமும்செல்வமும் பாணத்தினுடைய செருக்கும் அறிகிறேன் உன்னுடையவேதனை தீர்த்துவிட்டேன் உனதிருப்பிடம் செல்வாயாக.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

வந்தபன்றியுரையதனை முனிவன்கேட்டு
வடவைபனலெனக்கொதித்துப் புழுங்கச்சால
சிந்தைவிழியிரண்டினிலும் புகைகள்மண்டச்
சிரித்துஞ்றுபெருமூச்சு விட்டுநோக்கான்
அந்தவழியோர்நொடியில் ஆம்பல்முல்லை
யசோகுகாந்தள் மரைமுருக்கு நீலமின்னல்
வந்திலங்கவுருமமைந்து பாணப்பெண்கள்
வாழ்த்தினர்மாதவனை யேத்தினரே.

பாணப்பெண்கள் வசனம்.

ஓமுனிநாதா யெங்களைச் சிருஷ்டித்த காரணமென்ன திருவுளம்பற்றினல் அந்தப்படிசெய்கிறோம்.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

வரிவிழிமின்னர்தம்மை மாமுனியருகில்வைத்து
சரிகமபதனியென்று மேழிசைசெவியிற்சாற்றி
பரதபாண்டிதமுஞ்சால பயிர்ச்சியுந்தசுக்கும்நோக்கும்
சுரதவித்தைகளின்போக்குஞ் சூட்டினன்காட்டினனே.

விஸ்வாமித்திரர் வசனம்.

என்தவத்திலுதித்த யென்னருமையான ஜெகமோகினிப் பெண்களே உங்களுக்கு பரதசாஸ்திர முதலாகிய வித்தியாவினேதங்கள்வரும்படியாய் வரப்பிரசாதந்தந்தேன் ஆனதால் நான்கொண்டகருத்தை முடிக்கவேண்டியது உங்களைப்பொறுத்த கடமை அதாவது.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

அன்னமென்னடையினரீ ரயோத்திமாநகரமேவும்
மன்னவனிடத்திற்சென்று மயலுறப்பாடியேத்தி
யன்னவன்குடையைக்கேளு மதையவன்மறுக்குமாயின்
கன்னல்வேள் காமந்திர்க்க கருதியீதடைந்துவாரீர்.

விஸ்வாமித்திரர் வசனம்.

என் தவப்புத்திரிகளே அரிச்சந்திரன் இவ்வனத்தில் தடாகக்கரையில் சேனைதளத்துடனிருக்கின்றான் அவனிடத்திற்சென்று உங்களுக்குத்தெரிந்த பரதசாஸ்திர சங்கீதசாகித்தியத்திலுல்நடித்து அவன்மனது சந்தோஷமாகும்படிசெய்து உங்களைச்சேரும்படிசெய்யுங்கள் அதற்கவனிணங்காவிடில் அவன்ராஜரீகத்துக்குரிய பூச்சக்ரக் குடையைக் கேளுங்கள் அதுவுங்கொடாவிடில் அஷ்டதிசைகளிலுள்ள துஷ்டர்களைச்செயித்த வெற்றிமாலையைக் கேளுங்கள் அதுவுங்கொடாவிடில் மெய்தவறிப் பொய்யுரைக்கும்படியான சாமர்த்தியங்களைச் செய்துவரவேண்டியது செல்லுங்கள்.

பாணப்பெண்கள் விருத்தம்.

மாதவமுனிவர்க்கெல்லாம் வள்ளலேநும்பாற்கற்ற
யேதமில்கீதம்பாட வின்பத்தாலுருக்கியந்தக்
கோதிலாகுணத்தோன்செங்கைக்குடையினைவாங்கிவாறோ
மீதிலையென்றாற்கல்விக் கிணக்குவோமெனச்சென்றாரே.

பாணப்பெண்கள் வசனம்.

எங்கள் தந்தையாகிய முனிநாதா தங்களுடைய கருத்துப்போல அவ்வரசனிடஞ் சென்று எங்களுக்குத்தெரிந்த சாமர்த்தியத்தால் தாங்கள்சொன்ன காரியங்களில் ஒன்றையாவது சித்தியாக்கிக்கொண்டு வருகிறோம் முனிநாதா.

பொது வசனம்.

இவ்விதமாகப் பாணப்பெண்கள் முனிவரிடம் விடைபெற்றுக்கொண்டு அரிச்சந்திரனிடம் வந்து நடனமாடுகிற விதங் காண்க.

உ

பரமபதி துணை.

பாணப்பெண்கள்

வருகிற பாகம்.

பாணப்பெண்கள் விருத்தம்.

கட்டமுகமைந்தநேசக் கன்னியரிருவர்தாமும்
மட்டவிழ்கூந்தல்சந்திர மதியொடுமென்னன்வைகும்
கட்டமாமரமுந்தீய்ந்து கழிந்தபைங்கூழுமுன்னாள்
பட்டவெள்ளென்புமோங்கப் பாடினார்நாடினாரே.

இராகம்-சாவேரி-தாளம்-ஆதி.

பல்லவி.

மாமுனிசதியாலே காமாஞ்சிதம்போலே
மாமோகினிவந்தாளே வனந்திலிதோ (மா)

அநுபல்லவி.

தாமதமன்றிக்கையில் தம்பூரணைத்துமெய்யில்
தங்கப்பணிதிக ளானதுகுலுங்கவே
மங்களார்முத்து மாலைதுலங்கவே
பங்கயன்மனமானது கலங்கவே
சங்கீததொனியான திலங்கவே. (மா)

சரணங்கள்.

தந்திரத்தைக்குறித்து சரசஞ்செய்யப்பூரித்து
மந்திகத்தைத்தரித்து மவுனமாயுச்சரித்து
பானுவதையம்போலாக வானுலகப்பெண்ணாக
பாதச்சிலம்பு கலீர்க்கலீரென
சோதித்திருநுதல் பளீர்பளீரென
மாதர்க்கரசிக ளாமெனப்பேசவே
வாச்வனும்ரிஷி கேசன்கூசவே (மா)



பாணப்பெண்கள் விருத்தம்.

சிந்தையில்மகிழ்ச்சியாகச் சிறப்புடனயோத்தியாளும்
சுந்தராவுன்றன்பாதம் தொழுதடிபணிந்தோம்நாங்கள்
பந்தபாசத்தில்மிக்க பரதநாட்டியங்கள்செய்வோம்
விந்தையாய்பார்த்திப்போது வெகுமதிசெய்குவீரே.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-சாப்பு.

பல்லவி.

மன்னுகோடிவந்தனந்தந்தோம் மாநிலம்புகழ்.(ம)

அநுபல்லவி.

உன்னடியிணையைத்தேடி யோடிவந்தோம்நாங்கள்கூடி
பொன்னகரயோத்தியாளும் பூமாவெகுநேமாவிந்தோ. (ம)

சரணங்கள்.

சுந்தரமிகுநேசனே சுகிர்தகுணபிரகாசனே
சந்ததமும்புகழுந் தானுயர்பானுகுல(ம)
மாராவெகுதீராஅதி வீராகெதிபாராள்நிதி
ஆராலுந்தன்கீர்த்திசொல்ல லாகுமுயர்வாகுமிந்தோ.(ம)
ஆதிசிவபரம்பொருளே யனுதினமுமறவாமலே
நீதியுடனரசுசெய்யும் நீதாமலர்பாதாவிந்தோ (ம)

பாணப்பெண்கள் வசனம்.

பிரபு இதோவந்தனம் செய்கின்றோம்.

இராஜன் விருத்தம்.

அண்டர்மங்கையரோவிப்போ தயன்றெளிந்தமைந்துவிட்ட
தொண்டல்மங்கையரோநாகர் சோதையர்தாமோவிந்த
மண்டலந்தன்னிற்காணேன் மாதர்காளுமதூர்பேரும்
விண்டெமக்காதியந்தம் விளம்புவீர்விளம்புவீரே.

இராஜன் வசனம்.

ஆகோ யென்ன ஆச்சரியம் பெண்களே நீங்கள் தெய்வ லோகமா அல்லதுநாகலோகமா விந்தப்பூமண்டலத்தில் உங்களைப்போல சிறந்தவர்களை இதுவரையிலும் யான்பார்த்ததில்லை நான்முகனும் இப்படி படைத்திருக்கின்றுனு நலலது உங்களுடைய ஊரென்ன உங்கள் நாமதேயமென்ன இங்குநாடிவந்த கருத்தென்ன விபரமாக வெனக்குச் சொல்வீர்கள்.

பாணப்பெண்கள் விருத்தம்.

வேந்தனேநாங்கள் விஸ்வா மித்திரர்வனத்தில்வாழும்
மாந்தர்களிகழுநீச மங்கையராகுங்கண்டாய்
வாய்ந்தசங்கீதம்பாடி வளர்மிடியதனைப்போக்கப்
போந்தனங்காமவல்லி பொன்னிவள்சரசவல்லி.

பாணப்பெண்கள் வசனம்.

மகாராஜனே நாங்களிருப்பது இமையகிரிசாரலில் விஸ்வாமித்திரர் தவஞ்செய்கின்ற வனத்தில் வாசஞ்செய்கின்ற பாணப்பெண்கள் எங்களுடைய ஜாதி நீசஜாதி யென்பேர் காமவல்லி இவள்பேர் சரசவல்லி யெங்களுக்குத்தெரிந்த ஆடல்பாடல்களைத்தங்களிடத்தில் நடித்து சன்மானம் பெற்றுக்கொண்டு போக வேண்டுமென வந்தோ மரசே.

இராஜன் வசனம்.

நல்லது பெண்களே உங்களுக்குத்தெரிந்த பரதசாஸ்திரங்களை நடித்துக்காட்டுங்கள் பார்ப்போம்.

பாணப்பெண்கள் விருத்தம்.

கொண்டல்குழல் காதுவள்ளை தனுசுநெற்றிக்
 கொவ்வையித ழாயுபல்வாய் முறுவன்முல்லை
கெண்டைவிழி மதிவதனங் குரண்டைமூக்குக்
 கிளிவசனச் சொல்லமிர்தம் வாழையின்கீழ்
தண்டுதுடை செண்டுகும்பம் வரால்கிரண்டைத்
 தாமரைகால் கரங்களிடை மின்னற்றேள்வேய்
கொண்டுயர்ந்த பொன்கொடிபோ லரசன்மெய்க்கக்
 கூடினுற் பரதவிக மாடினுரே.

இராஜன் விருத்தம்.

மாதர்காள் நீங்கள்பாடும் வரிசையை மதிக்கொண்ணுது
பூதலந்தன்னிற் காணும் பொன்னிதி காசுமாலை
யேதமிலாடைகாப்பு மெழிலணிப் பணிகள்யாவும்
வோதவே தந்தோம்வாங்கிப் போகுவீ ரேகுவீரே.

இராகம்-காப்பி-தாளம்-ஆதி.

பல்லவி.

சந்தோஷமிருந்தேனுங்கள் சங்கீதவிங்கிதங்கண்டு (சந்)

அநுபல்லவி.

செந்திருபோலந்தமுள்ள சந்திரவிம்பத்தையலரே (சந்)

சரணங்கள்.

சுரவரிசைத்திரமிருந்த பரதநடனங்கள்கண்டு (சந்)
மெட்டில்வீணைமட்டிலணை தட்டியிசையொட்டிப்பாடும் (சந்)
வானுலகமேனகைபோ லானவுங்கள்ஞானங்கண்டு (சந்)
விலையுயர்ந்தகலையும்பொன் னிலகுமணிபலவுந்தாரேன்.

அரிச்சந்திரன் வசனம்.

பெண்களே உங்கள் பரதநாட்டியத்தை யான் கண்ணுற்று ப்பார்க்க அதிக சந்தோஷமடைந்தேன். வேண்டிய சன்மானத் தைப்பெற்று உங்களாச்சிரமம் செல்லுங்கள் பெண்களே.

பாணப்பெண்கள் வசனம்.

மகாராஜனே யெங்களிடத்தில் அனேக பூஷணாதிகளிருக் கின்றது அதைக்கருதி நாங்கள் வரவில்லை தங்களுடைய இஷ்டம் எப்போது மிருக்கவேணுமென்று வந்தோமேதவிர வேறல்ல ஆகையால் எங்களுடைய கருத்தை நிறைவேற்ற வேண்டியது அரசே.

இராஜன் விருத்தம்.

மந்திரமாமுனிவனத்துள் வசிக்குநீவிர்
  மாதர்புத்தியீனமாயிவ் வார்த்தைசொன்னீர்
விந்தைநிகர்மனைவிசந்திர மதியாளென்பால்
  வீற்றிருக்கமறுமாதர் முகத்தைநோக்கேன்
நிந்தைவரும்முறைதவறேன் தொன்றுதொட்ட
  நீதிநெறிதனைப்பிசகி நடவேன்கண்டீர்
வந்தவழியேநடப்பீ ரமைச்சன்கண்டால்
  மாட்டுவான்சவுக்கதனு லோட்டுவானே.

பாணப்பெண்களுக்கும் இராஜனுக்குந்தர்க்கம்.

இராகம்-கமாஸ்-தாளம்-ரூபகம்.

பாணப்பெண்கள்சொல்

கண்ணிகள்.

மன்னவரே மருவவாரும்
மையல்மீறு தையையோகண்பாரும்
கன்னல்மாரன் கணையினுலே
கலங்குறோம்நின்று புலம்புறோமின்று (ம)

இராஜன்சொல் கண்ணிகள்.

என்னவார்த்தை சொன்னீர்நீங்கள்
ஏற்காதுதப்பித் தோடிப்போங்கள்
சின்னபின்ன மாகவுங்களை
சிட்சைசெய்குவேன் லச்சையில்லாமலே (எ)

பாணப்பெண்கள்சொல் கண்ணிகள்.

அருந்தவங்கள் புரிந்தோமெம்மை
பிணையவென்று நாங்களும்மை
பொருந்தாமலே வார்த்தைபேசி
போடியென்றிதோ மோடிசெய்குறீர் (ம)

இராஜன்சொல் கண்ணிகள்.

தாரமன்றிப்பின் தாரம்விரும்பும்
சண்டாளவனன்று கண்டாயோதிரும்பு
சாரமில்லாத: வார்த்தைசொன்னீர்
சவமேஅவமேபல மல்லபோடி (எ)

இராஜன் வசனம்.

அடி சண்டாளிகளா யென்னவார்த்தை பேசுகிறீர்கள் யான்கொடுத்த சன்மானங்களைப்பெற்று உங்களிருப்பிடஞ்செல்லாதபடி இப்பேர்க்கொத்த துன்மார்க்கமான வார்த்தைகளைச் சொல்லி வாதாடுகிறதுசரியல்ல யானிதுவரைக்கும் மாதர்களென்று மன்னித்தேன் என்முன்னில்லாது அப்புறம்செல்லுங்கள்.

பாணப்பெண்கள் வசனம்.

பிரபு யென்னவார்த்தை சொன்னீர்கள் தங்களுடைய சவுந்தரியத்தைக் கேள்விப்பட்டு தங்களைச்சேரவேணுமென்று தவம்புரிந்துவந்த யெங்களை யப்பால்போவீரெனச்சொல்வது தருமமாயேதோ யெங்கள்பேரில் கிருபைசெய்து நாங்கள்கொண்டிருக்கிற மையலைத்தீர்க்கவேண்டியது பிரபு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஏகம்.

பாணப்பெண்கள்சொல் கண்ணிகள்.

தேடியும்மைக்கூடிமோகந் தீர்க்கவேவந்தோம்
மன்னவாதீர்க்கவேவந்தோம் விரகந்தீர்க்கவேவந்தோம்
சினந்துபேசவேண்டாமெங்கள் சித்தமும்நொந்தோம்

அரசன்சொல் கண்ணிகள்.

வாதுசெய்வதேதுநீச மாதரேபோடி
அப்புறம்மாதரேபோடி நில்லாமல்மாதரேபோடி
வம்புசெய்தால்துன்பம்வரும் மார்க்கமாயோடி

பாணப்பெண்கள்சொல் கண்ணிகள்.

ஐயோமாரன்செய்யுங்கோர வவஸ்தைதீருமே
யெங்களவஸ்தைதீருமே மன்னவாவவஸ்தைதீருமே
அகமகிழ்ந்துசுகமாயெங்களை யணையவாருமே

இராஜன்சொல் கண்ணிகள்.

வாய்மதங்களாகவென்னை மதியாமல்பேசி
அடிதுஷ்டிமதியாமல்பேசி சண்டாளிகாள்மதியாமல்பேசி
மடியவோவந்தீரென்கையால் மார்க்கமாதோஷி

இராஜன் வசனம்.

கொடியசண்டாளிகளா நான்யெவ்வளவோ சன்மார்க்கமான வார்த்தைகளைச்சொல்லியும் அதைத்தவிழ்த்து நீங்கள் துன்மார்க்கமான வார்த்தைகளைச் சொல்வது சரியல்ல அப்புறஞ்செல்லுங்கள்.

பாணப்பெண்கள் வசனம்.

பிரபு இதுதானோ ஒருவார்த்தை நாங்கள் தங்களுக்கு யின்பமானவர்களில்லையா உலகத்தில்லாத வழக்கத்தை நாடுகிறீரோமா எங்களுக்கு யின்பந்தரவேண்டியகணவர் நீரேதவிர வேறல்ல ஆகையால் யெங்களை வெறுத்துப்பேசுவது ஞாயமல்ல அரசே.

—(-)-(*)-(-)—

இராகம்-பியாகு-தாளம்-ரூபகம்

பாணப்பெண்கள்சொல்

பல்லவி.

மோகமீறுதேமன்னு மோகமீறுதே
மோடிசெய்யலாகுமோகூடு மோகமீறுதே

அநுபல்லவி.

தாகமாயும்வைத் தேடியேவந்தோம்
தடைசொல்லுவதடைவோமன மிடையும்படிகடைவள்ளலே

இராஜன்சொல் பல்லவி.

கொடியபாதகிபோடி கொடியபாதகி
கோலமாய்வெகு சாலஞ்செய்குறாய்(கொ)

பிடிவாதஞ்செய்ய வேண்டாமென்னுடன்
பேயையறிவில்லாதநாயே போய்விடுவாய்நீ(கொ)

பாணப்பெண்கள்சொல் சரணங்கள்.

தர்மமாஉனக் கிதுவுஞ்சாமி
தயங்குறோமனம் மிகவுங்காமி
தனியாய்வந்திடுமாதை யனீதங்கள்செய்யத்தகாதே
வனிதையர்பாவம்போமா வினியென்னசெய்குவோநேமா(மோ)

இராஜன்சொல் சரணங்கள்.

சண்டாளிகொடும் பாவிகாள்நீங்கள்
தர்க்கம்பண்ணுறும லப்புறம்போங்கள்
தந்திரம்யாவுமறிந்தீர் இந்திரசாலமிகுந்தீர்
சந்திரமதியல்லால்வேறே பைந்தொடியென்தாய்மாரே(கொ)

இராஜன் வசனம்.

நீசப்பெண்களா யானிதுவரையிலும் சொல்லிவந்த வார்த்தைகளை கிஞ்சிற்றேனுங்கவனிக்காது இஷ்டம்போலப் பேசுகின்றீர்கள் யெனக்குக்கடவுளால் கிடைக்கப்பெற்ற சந்திரமதியல்லாது மற்றவர்களெல்லாந் தாய்மார்கள் இதைக்கவனியுங்கள் பெண்களே.

பாணப்பெண்கள்சொல்வசனம்.

அரசே நாங்களிதுவரை வேறேபுருடர்கள் முகத்தைப்பார்த்ததில்லை ஏனென்றாலோ யெங்களைப்பகவான்சிருட்டிக்குங்காலையில் தாங்கள்தான் கணவனென்று யெங்களுடைய லலாடத்திலெழுதியிருப்பதால் வேறேகணவர்களைநாடுகிறதற்குஇஷ்டமில்லையெப்படியாவதுயெங்களைக்கூடி சுகத்தையனுபவியும்அரசே.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

அரசன்சொல் கண்ணிகள்.

மாநிலத்திலுள்ளவரே மாதர்க்கெல்லாம்நானே
மைந்தனல்லோவவர்களுக்கு மைந்தனல்லோஅருமையான
மைந்தனல்லோ இந்தவார்த்தை வழுத்துகிறீர்தானே

பாணப்பெண்கள்சொல் கண்ணிகள்.

ஜாதியிரண்டொழியவேறே சங்கையுண்டோகூறும்
சங்கரனும்ஆதிசிவசங்கரனும் மங்கைபாகன்
சங்கரனும்கெங்கைதனைச் சடையில்வைத்தார்பாரும்

இராஜன்சொல் கண்ணிகள்.

ஆகமநூலாதிகளை யகந்தைசொல்வதேது
அமலன்முன்னாள்பகிரதனுக்காய்அமலன்முன்னாள்கெங்கைதனை
அமலன்முன்னாள்சென்னிமிசை யடக்கினரப்போது

பாணப்பெண்கள்சொல் கண்ணிகள்.

காதல்கொண்டமாதரின்பம் கருதுவதேநீதி
காவலனேகோபம்வேண்டாம் காவலனேஆவல்கொண்டோம்
காவலனேநானும்நீருங் கருதுமொரேஜாதி

Srinivasa Sathamabilla Book.

இராஜன்சொல் கண்ணிகள்.

ஜாதிவகைநீதிகளைச் சாற்றுவதேது
சத்தியமோநாள்கொண்டதோர் சத்தியமேயென்றென்றைக்கும்
சத்தியமேமுத்திவழு ஈத்தியறியாது

இராஜன் வசனம்.

நீசப்பெண்களா ஆகமநூல்களை யாராய்ந்தவர்கள்போல் சற்றேனும் பெண்களுக்குரிய நாணமின்றி பேசுவதில் என்னபிரயோசனம் சிவபெருமான் கங்கையைத் தரித்தானென்று சொன்னீர்களல்லவா அதாவது பகீரதனால்தருவித்த கெங்கையானது உலகத்தை யழித்துவிடுமென்று சிவபெருமான்சடாமகுடத்தில் தரித்துக்கொண்டாரே தவிர வேறேகெட்ட எண்ணமேது.

பாணப்பெண்கள்சொல் வசனம்.

அரசே இப்படிக்கி யெங்களை வெறுத்துப் பேசினால் நாங்களெப்படிஉய்வது மன்மதன்கணையால் நாங்களடைகிற கஷ்டத்தை இன்னவிதமென்று சொல்லமுடியாது ஆகையால் தயவுசெய்து எங்களுடைய எண்ணத்தை நிறைவேற்றவேண்டியது பிரபு.

இராகம்-பியாகு-தாளம்-சாப்பு.

பாணப்பெண்கள் சொல்

பல்லவி.

மன்னவாவின்னமுந் தயவில்லையா ஆசை
மன்னவாவின்னமுந் தயவில்லையா(மன்)

அநுபல்லவி.

கன்னல்வில்மதன்கணையினாலே கலங்குறோமனஞ்சாமியே
கல்லோதானுன்மனமன்று கல்லோதானுன்மனமின்னந்
கரையவில்லாத தேனையாதுரை(மன்)

இராஜன்சொல் பல்லவி.

கன்னியேயிந்தவார்த்தை சொல்லாதடிதுஷ்ட
கன்னியேயிந்தவார்த்தை சொல்லாதடிதுஷ்ட(கன்)

அன்னியஸ்திரீகள்யாவருமென தன்னையென்பதுசத்தியம்
அறியாயோடிபெண்களே தெரியாயோடிபெண்களேநீங்க
ளப்புறந்தனில் செல்லுவீர் துஷ்ட(கன்)

இராஜன் வசனம்.

அடிசண்டாளிகளா யான்உலகத்திலுள்ளமாதர்களில் என் தேவியன்றி மற்றவர்களுக்கு சேயனென்று சொல்லியும் ஞாய மில்லாது அடிக்கடியென்னைச் சேரவேணுமென்கிற வார்த்தை களை உச்சரிப்பதுசரியல்ல இனிமேல் இந்தவார்த்தை பேசுவீர்க ளாகில் தக்கதண்டனைக் குட்படுத்துவேன் அப்புறஞ்செல்வீர்.

பாணப்பெண்கள்

குடைகேட்கிறபாகம்.

பாணப்பெண்கள் விருத்தம்.

அங்கண்மாநிலத்தையாளு மாசனேசொல்லக்கேளா
யெங்களைச்சேரக்கூடா தென்றுநீரியம்பிவிட்டீர்
புங்கமாய்நும்பாலுற்ற பூச்சரக்குடையைமாறு
தெங்கள்பாலீந்தால்வாங்கி யேகுவோமேகுவோமே.

இராகம்-காப்பி-தாளம்-ஆதி.

பாணப்பெண்கள் சொல்கிற தரு.

கூடிடாவிடில் குடையாவதீயும்
கொற்றவாவும்மை நத்திவந்தோமெம்மை (கூ)

தேடியலைந்தே யோடியேவந்தோம்
வாடியேநொந்தோ மன்னவாயெங்களை (கூ)

இராஜன்சொல்கிற பல்லவி.

குடைதாவென் கேட்பதழகோடி
கோதையேநீசப் பேதையேபூச்சக்ர (கு)

அநுபல்லவி.

அடையின்றியே உடைச்சாதிப்பெண்கள்
கடல்சூழிந்த புடவியாளுமன்னன் (கு)

பாணப்பெண்கள்சொல் சரணங்கள்.

தாரமன்றிப்பின் மாரந்தனைவேண்டேன்
வேறேபொருள்கள் விரும்புந்தாரேனென்றீர் (கூ)

இராஜன்சொல் சரணங்கள்.

செய்யுங்காரியம் செய்யலர்குமன்றி
தையலேயிந்த தரணியாளுமன்னன் (கு)

பாணப்பெண்கள்சொல் சரணங்கள்.

ஏற்கையாசக ரெண்ணியபொருளை
மார்க்கமாயீந்தால் மன்னவர்க்கு (கூ)

பரம்பரையாய்ப் பார்முழுதுமாளும்
அரசர்க்குற்ற வடையாளமான (கு)

இராகம்—காம்போதி-தாளம்-ஆதி.

இராஜன் சொல்கிற

கண்ணிகள்.

ஈதெல்லாஞ்சொல்லுவ தழகல்லடி
ஜாதிபேதமுள்ள தையலரேநீங்கள்

பாணப்பெண்கள்சொல் கண்ணிகள்.

காவலாயிப்போது கோபங்கொள்வதேது
ஆவலாகக்கேட்டோம் அளியுநற்குடையை (கா)

இராசன்சொல் கண்ணிகள்.

தேசமாள்பவர்க்குச் சிறந்தநற்குடையை
மோசயாய்க்கேட்ட மூர்க்கையேநில்லாதீர்

பாணப்பெண்கள்சொல் கண் ிகள்.

கேட்டபொருளின்று கிடையாதுவென்று
தாஷ்டிகமாய்ச்சொல் தகுமோ ர்நல்ல (கா)

பாணப்பெண்கள் வசனம்.

மகாராஜனே யெங்களாடல் பாடல்களைக் காண்பித்தபின் னெங்களுடன் சேரமாட்டேனென்று மற்றபொருள் எதைக்கேட்டாலுந் தருகிறேனென்று வாக்களித்தபடி யாங்கள் கேட்ட பூச்சக்கரக்குடையை கொடுக்கவேண்டியது அரசே.

பாணப்பெண்கள்சொல் தரு.

இராகம்-பியாகு-தாளம்-சாப்பு.

பல்லவி.

காவலாகோபங்கொள்வதென் பாமா-சற்குணமிகுங்
காவலாகோபங்கொள்வதென் பாமா சற்குணமிகுங் (கா)

அநுபல்லவி.

ஆவலாயும்மைத்தேடியேயலைந்துவந்தோம்நாங்களோடியே
பூவுலகம்புகழ்ந்திடும் பூச்சக்ரகுடைதருகுவீர் (கா)

இராஜன்சொல் பல்லவி

மாதரேவாதுசெய்வது நீசமா-நீச
மாதரேவாதுசெய்வது நீதமாநீச (ம)

பூதலந்தன்னையாளுமன்னர்க்கு பொருந்தும்பூச்சக்ரகுடைதனை
சாதனையாகக்கேட்கிறீர் தண்டிப்பேனும்மைகண்டிப்பாய்நீச ()

பாணப்பெண்கள்சொல் சரணங்கள்.

மாரனேவொய்யாரனேமிகும் வர்சனேபிரகாசனே
கூறுதீர்தண்டிப்போமென்று கூறுதீர்தண்டிப்போமின்று
குடையைத்தருகுவீ ரடைவுடன் (கா)

இராஜன்சொல் சரணங்கள்.

பார்க்குளரசர்கட்கேற்குங்குடைதனைபாவியேநீங்கள்கேட்கிறீர்
பயமில்லாமல்நீங்களு மெய்கொள்ளாமல்நீங்களும்
பரியாசவார்த்தைகள் பேசுதீர்நீச (மா)

பாணப்பெண்கள்சொல் கந்தார்த்தம்.

ஆகமரன்னீதிகளை யறிந்திருந்தும்
அறமென்றுகேட்பவர்கட் களித்திடாத
பாகமதையுன்னிடத்தில் லறிந்தோமன்று
பாரிலுள்ளோரிதையறிந்தால்பழித்திடாரோ
சோகமேலாகுதினி சகிக்கொண்ணாது
சோதிக்கலாகாது சுகமாய்த்தானே
கோகனவதனவெம்மைக் கூடாவிட்டால்

பல்லவி.

குடையாவதளிராசனே யெங்கள்மனது
சடையாமலினி வாசனே.

தடைசொல்லலாகாது நடுவெள்ளமேயுமது
அடையாளத்தைக்கொடுத்து அனுப்புங்கோபம்விடுத்து
ஐயனேதாமதம்வேண்டா மெய்யனே
ஐயனேவெகு மெய்யனேயிந்த
வையகம்புகழுந் துய்யபூச்சக்கர (குடை)

இராஜன் கந்தார்த்தம்.

சண்டாளிகொடும்பாவி காமத்துரோகி
சற்குணமில்லாம லென்முன் தர்க்கமாக
மண்டாடிவாய்மதத்தால் தூசித்தென்னை
வலுவந்தஞ்செய்யவென்று வந்தாற்போலே
கண்டேனுனுங்களையுஞ் சும்மாவிட்டாற்
காசினியோர்வசையாகப் பேசுவார்கள்

பல்லவி.

கொண்டாட்டமாகவென்றன் குடைதானென்ற
கொலைகாரிபழிநாரியே புலைச்சாதி
கொடுநீலிவழிமாரியே
அலையாதவுன்வீரியம் நிலையாததோர்காரியம்
மலைகெல்லியெலிதன்னை வலையன்றிபிடித்திடும்
மார்க்கமாவுங்களுக்கிது வென்னமூர்க்கமா
மார்க்கமாவெகுமூர்க்கமா இந்த
பார்க்குள்விபரீதம் தீர்க்கம்பேசிய (கொலை)

பாமபதிஞணை.

மணமாலைகேட்கிற பாகம்.

பாணப்பெண்கள் சொல்லுகிற

விருத்தம்.

மார்க்கமில்லையென்றுரைத்த மன்னாகேளு
மங்கையர்களாசைகொண்டு வலியவந்தால்
திர்க்கமுடன்படுவதென வேதநூல்கள்
செப்பியதெலாமுணர்ந்து மறக்கலாமோ
பார்க்குளிந்தவனியாயம் பகர்வாருண்டோ
பரிசுபெறவந்தவர்க்கொன் றில்லையென்றால்
ஏர்க்காதெம்மையலினை யகற்றவேண்டு
மில்லையென்றால்மணமாலை யிடுவீரே.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

மறுவொன்றில்லாத வெற்றிமாலைதருவீர்

அநுபல்லவி.

வருமஞ்செய்யவேண்டாங்கோடி வன்னாசரணம் (ம)

சரணங்கள்.

சுந்தரவுல்லாசனே சோதிப்பிரகாசனே
சிந்தைமகிழ்ந் தருள்செய்யும்
சிந்தைமகிழ்ந்தருள்செய்யும் செம்மலேயெங்களைக்கூடி (ம)

ஆவலுமீறுதே காவலரேயிப்போதே
கோபங்கொள்ள வேண்டாம்-மன்னா
கோபங்கொள்ளவேண்டாம் எங்களைக்கூடியிப்போதே (ம)

மந்திரி விருத்தம்.

மானமிலையிர்சபாசுகெட்டி யுங்கள்போலும்
மாநிலத்திற்கண்டதில்லை வல்லிநீரே
கானவித்தைபாடியதோர் வியப்புக்காக
கனமொடுபலபணியு மீந்தோமதற்கை
யினமெனத்தள்ளிவிட்டீர் குடைபைக்கேட்டு
மில்லையென்றுவுங்களிட விஷ்டம்போலே
மானமில்லாவார்த்தைகளைப் பேசிப்பின்பு
மணமாலைகேட்பதுநன் மார்க்கந்தானே.

இராகம்-பியாகு-தாளம்-சாப்பு.

பல்லவி.

மூர்க்கையேயுங்கட்கிதுநல்ல மார்க்கமா-துஷ்ட
மூர்க்கையேயுங்கட்கிதுநல்ல மார்க்கமா-நீச(மூ)
ஆர்க்குஞ்சம்மதமாகுமாவுங்கட் காக்கினைவராதுபோகுமா
ஏற்காதபொருளைக் கேட்குறீர்
ஏற்காதபொருளைக்கேட்குறீர் ஏதடிபதிலோதடி-துஷ்ட(மூ)

பாணப்பெண்கள் சொல்கிற

பல்லவி.

ராஜனேவார்த்தை மாறுதல் மோசமே-மகா
ராஜனேவார்த்தை மாறுதல் மோசமே (ரா)

அநுபல்லவி.

ஆசையால்வந்தபெண்களை யணைந்தால்பவமென்றீரெங்களைக்
கூசாமல்வேறே பொருள்கேளும்
கூசாமல்வேறே பொருள்கேளும்
கொடுக்கிறேனென்றீ ரொடுக்கமாய்-மகா. (ரா)

இராஜன் சொல்கிற

சரணங்கள்.

எத்திசைபுகழுஞ்சத்தியமாகுணன்வெற்றிமாலையைக்கேட்குறீர்
புத்தியில்லாமலே நீங்கள்
புத்தியில்லாமலே நீங்கள்
கத்துவதிலென்ன சாரமோ துஷ்ட. (மூ)

பாணப்பெண்கள் சொல்கிற

சரணங்கள்.

பாதுகாத்திடுமெங்களைப் பாதகம்வரும்பெண்களே
வாதுசெய்யாதிர் ராஜனே
வாதுசெய்யாதிர் ராஜனே
மணமாலைதாருங் குணமுடன்கா. (ரா)

இராஜன் வசனம்.

கொடியபாவிகளாகிய உங்களுக்குத் தகுமென்றபொன்னை க்கேட்காதபடி தகாதபொருளைக் கேட்டு தர்க்கஞ்செய்வதினால் என்னபிரயோசனம் மிகக்கெடுதிகளடைவீர் அப்புறம்செல்லும்.

இராகம்-காம்போதி-தாளம்-ஏகம்.

இராஜன் சொல்கிற

கண்ணிகள்.

பவமேயுயிரிழுந்தசவமே யுங்களுக்கையோ
அவமானமில்லாத தேதடி-அதைக்
கவனமாயெனக் கோதடி
புவனத்திலுமைப்போலே பூவையர்களைக்காணேன்
போராடாமலோடிப் போவீரே-நீங்கள்
போராடாமலோடிப் போவீரே-என்முன்
போராடாமலோடிப் போவீரே

பாணப்பெண்கள்சொல் கண்ணிகள்

யாசகர்விரும்பிய மாசில்லாப்பொருள்களை
ராஜர்களளித்திட வேண்டுமே-யீயா
பாவம்வந்தும்மையே தீண்டுமே
ஆசையெனும்பெரும் பாசத்தினாலுன்றன்
அழகுள்ளமணமாலை தனைக்கேட்டோம்-மன்னா
அழகுள்ளமணமாலை தனைக்கேட்டோம்-உன்றன்
அழகுள்ளமணமாலை தனைக்கேட்டோம்

இராஜன்சொல்கிற

கண்ணிகள்.

யெத்திசையுஞ்செயித்த உத்தமசத்திரியன்
வெற்றிமாலைகேட்க மார்க்கமா-சற்றும்
புத்தியில்லாதுங்கள் மூர்க்கமா
நத்தியமோகத்தால் சுற்றிசுற்றியென்முன்
நாடாதீரோடிப்போம் நாய்களே-கிட்ட
நாடாதீரோடிப்போம் நாய்களே-இனி
நாடாதீரோடிப்போம் நாய்களே

பாணப்பெண்கள்சொல்கிற

கண்ணிகள்.

மணமுடித்திடுமன்றி குடைகொடுத்திடுமல்லால்
மாலையாவது தரவேணுமே-பின்
ளையென்றால்மனம் நாணுமே
குணமுடனெங்களைக் கூடிமருவினால்
குற்றமுண்டோசொல்லுங் கோமானே-யென்ன
குற்றமுண்டோசொல்லுங் கோமானே-இதிற்
குற்றமுண்டோசொல்லுங் கோமானே

இராஜன் சொல்கிற

கண்ணிகள்.

மாதர்களென்றதோர் நீதத்தினால்கொஞ்சம்
பாதுகார்த்தேனடி பர்தகிவெகு
சூதுகற்றபுலைச் சாதகி
வாதுசெய்துயெந்தன் மணமாலைகேட்டவுடன்
வாயைக்கிழித்திதோ போடுவேன்-உங்கள்
வாயைக்கிழித்திதோ போடுவே-னினி
வாயைக்கிழித்திதோ போடுவேன்

பாணப்பெண்கள் சொல்கிற

கண்ணிகள்.

யோகியானாலும் மோகித்துவந்தவர்
தாகந்தவிர்க்காமல் போவரோ-மகா
பாதகந்தனக்குள் ளாவரோ

தேகியென்றுவந்து தியங்குரோமபங்குரோம்
கினந்துபேசவேண்டாம் தேவரீர்-அய்யோ
கினந்துபேசவேண்டாம் தேவரீர்-ரெம்ப
கினந்துபேசவேண்டாம் தேவரீர்

பாணப்பெண்கள் சொல்கிற

வசனம்.

மகாராஜனே நாங்கள் மிகவும் உங்கள்பேரி ல்ஆவல்கொண் டு மோகந் தவிழ்க்கலாமென்றுவந்தோம் அதற்கிணங்காதிருந்து விட்டீர் நல்லது பூச்சக்ரக்குடையாவது கொடுமென்றோம் அதை யுந்தவிர்த்துவிட்டு மற்ற வஸ்துகளைக்கேட்டால் தருவேனென் றீர் எங்கள்கண்ணுக்கு ரம்மியமாகிய உமது வெற்றிமாலையைக் கேட்டோம் அதற்குந் தடைசொல்வது ஞாயமாக விருக்கிறதா ப்ரபு.

இராஜன் வசனம்.

அடி பாவிகளா என்னைச்சேரும் அல்லது பூச்சக்ரக்குடை யைத்தாரும் அதுகொடாவிட்டால் சத்துருக்களைச் செயித்துத் தரித்திராநின்ற வெற்றிமாலையைத்தாவெனக்கேட்பது தகுதியா மற்ற பொருள்களை விரும்பலாகாதா என்னசாதனை செய்கிறீர் கள் தர்க்கஞ்செய்யவேண்டாம் அப்புறஞ்செல்லுங்கள்.

பாணப்பெண்கள்சொல் கந்தார்த்தம்.

இராகம்-மோகனம்.

மகிதலத்தை யொருகுடைக்குள் ளடக்கியாளுந்
மன்னவனே யொருவசனம் வழுத்தக்கேளும்
யிகபரத்தில் தேகியென்று வந்தபேர்க்கு
யில்லையென்று சொன்னவரை யெங்குங்காணும்
அகமகிழ்ந்து யெங்களைநீர் சேரவேண்டும்
அல்லாது குடையவரிபு மட்டிசொன்னால்
நகமைபெரு மணமாலை தன்னையீந்து

பல்லவி.

சந்தோஷஞ்செய்யுமரசே யனதுஇனிப்
பின்தாங்காமலே விரசே
சுந்தராஇதோபாரம் வந்ததுவெகுமோகம்

சிந்தைநமயிற்று ஊரம்தந்திடும் வெகுதூரம்
செல்லுவோமுமதுநீ த்தியை யெங்குஞ்செல்லுவோம்
செல்லுவோப்பீர்த்தியைச் சொல்லுவோம்நேர்த்தியாய்
துல்லபம்செய்யவேண்டாம் வல்லபனேயெங்கள் (சர்)

இராஜன்சொல் கந்தார்த்தம்.

எட்டாதகொம்பிலுர்ற கனியைப்பார்த்து
யேங்கியிருந்திடு முடவனிச்சைபோல
கொட்டாவியிடுவதினு லென்னசாரங்
கோதையரேயுங்களுக்கு நீதமில்லை
தட்டாதிரென்வார்த்தை தன்னைநீங்கள்
தப்பிநின்றுஅப்புறத்தி லோடிடாமல்
மட்டடங்காதுஷ்டர்களை வென்றவெற்றி

பல்லவி.

மணமாலைகேட்கலாகுமா அறிவுகெட்ட
குணமேயிவ்வகை போகுமா
கணம்நிற்கக்கூடாது இணங்கிடேன்வருந்தாது
பணமென்றுல்பிணமெழும்பழமொழிபோலேகுறம்
பாடுகிருய்யென்னுடனே வாதாடுகிருய்
பாடுகிருய் வாதாடுகிருயென்னை
நாடுகிருய்வினை நாடுகிருய்-யென் (மண)

புலைப்பெண்கள் இராஜனை

பொய்சொல்லவேண்டுகிற பாகம்.

இராகம்-எதுகுலகாம்போதி-தாளம்-சாப்பு.

பல்லவி.

கோபம்வேண்டாஞ்சன்மானம் கொடுத்தேனென்றெருமொழி
கூறினல் போறுஞ்சாமி

அநுபல்லவி.

ஆபரணப்பொற்சிலை யழகுள்ளமணமாலை
அன்பாய்க்கொடுத்ததாக அண்ணலேயெண்ணுவோம் (கோ)

சரணங்கள்.

பொன்னகரைநிகர்த்த புனிதமிகுமயோத்தி
புரவலாவுமக்கிணை புவனத்திலுண்டோகேர்த்தி
மென்மேலுமுண்டா வேண்டினோம்வெகுகீர்த்தி
வேந்தனேகுணசாந்தனே மிகும்வீரசுந்தரப்பாரிவேந்திரா (கோ)

கொடுந்தீர்கேட்டதைமென்று கொற்றவாவெண்ணுவோம்
கோடிவந்தனமிகோ குறையாமல்பண்ணுவோம்
தடுக்காதளித்திரானல் சந்தோஷமாய்நண்ணுவோம்
தாருஞ்மதில் மொழிகூறுங்
கடைகண்ணால்பாரும் ஆவலைத்தீருமன்னவனே (கோ)

பாணப்பெண்கள்சொல் வசனம்.

பிரபுயெங்கள்பேரில்யேனிவ்வளவுவர்மம்சாதிக்கவேணும் தங்களுடைய வாயினல் நாங்கள்கேட்ட வஸ்துக்களை கொடுத்தேனென்று ஒருவசனம்சொன்னல் நாங்கள் பெற்றுக்கொண்டதாகப்பாவித்து பெங்களாச்சிரமம் செல்லுகிறோம் அரசே.

இராஜன் விருத்தம்

கெதியிலார்மிடியைப்போக்க கேட்பனகேட்பாரல்லால்
மதிநலம்குடைமைகேட்கு மாந்தர்களுண்டோவன்றி
விதிமுறைமாறிக்கூட மேவுவீரென்றீர்நீங்கள்
நிதிகொளவந்தீரல்லீர் நினைவிதுமோசஞ்செல்வீர்.

இராகம்-அடாணு-தாளம்-ரூபகம்.

பல்லவி.

வாதுசெய்வ தேதடியிப்போதுநீச
மாதர்களேயென்றன் சேதிதோணுமலே (வா)

அநுபல்லவி.

சாதுவென்று தெரிந்தும்பொய்யை
ஓதுமென்று வுரைத்தீரையோ (வா)

சரணங்கள்.

பாதுகாத்தேன் மாதரென்றுங்களைநான்
பரிபாசம்பேசித் திரியாதேசீச்சீ-பாது
தீது அறியாது பொய்யை
செப்புமென்றுசொன்னீர் தப்பிதமாகவே (வா)

சர்ப்பம்விடந் தன்னையளிப்பதல்லால்அமுர்தம்
தன்னைக்கொடுக்குமோ சண்டாளிகள்கொடும்
சொர்ப்பனத்தி லுங்கற்பனை
சொல்லொண்ணாதவெகு வல்லப்பனுனல்லவோ (வா)

அறுப்பேனுங்கள் நாவைப்பிடித்திழுத்துபா
ரட்டியில்லாமலே மட்டிகளேயிதோ-அரு
பொறுக்காதினிக் கோபம்ஓடி
போவீர்களப்புறங் கேவலமாயிந்த (வா)

அரிச்சந்திரன் வசனம்.

அடி துஷ்டிகளா கொஞ்சமேனும் அஞ்சாமல் யென்முன் னேநின்று உங்கள் மனதுக்கிசைந்தபடி மெய்தவறாத என்னை பொய்யுரைக்கும்படி சொன்ன உங்கள்நாவை என்னுடைய கட் கத்தியினுல் யிருதுண்டாக்குவேன் சீச்சீ அப்பால்செல்லுங்கள் மட்டிகளே.

இராகம்-ஆரபி-தாளம்-ஆதி.

பாணப்பெண்கள் சொல்

பல்லவி.

மன்னவாயிந்த வர்மம்செய்வதுமக்குத்தர்மமா-பொய்
வார்த்தைசொன்னுலுமது கீர்த்திகுறைந்திடுமோ (ம)

அநுபல்லவி.

பொன்னகரைநிகர்த்த நன்னயத்தில்மிகுத்த
புகழ்ச்சியுடனேநாளும் மகிழ்ச்சிதருமையோத்தி (ம)

இராஜன்சொல் பல்லவி.

போடிபோப்பயித்தியகாரி யுங்களுக்குபுத்தியிலையா-எவர்
போதனையோசோதனையோ வாதனைசெய்குறீர்மெத்த(போ)

அநுபல்லவி.

பாடிப்பாடிக்குத்தியும் பகரிலரிசியுண்டோ
கூடியவரைசொன்னேன் கோபந்தாளாதப்புறம் (போ)

பாணப்பெண்கள் சொல் சரணங்கள்.

அன்னீதம்செய்வதரசர்க்கடுக்கோ — அடுக்காதுஅய்யோநீறு
ஆருமேயறியாதவர்போல் — பேசுகிறீர்வாறுநீரோசாறு
யென்னசொல்லியு — மனமிரங்காததேது
ஏற்குமோகடல்சூழ்ந்த — பார்க்குமேலையேது
பன்னகமணிந்திடும் — பரமன்மார்க்கண்டனுக்காய்
பதினாறுவயதீந்தென்றாலும் — பதினாறென்றாரே(ம)

இராஜன்சொல் சரணங்கள்.

மதமோநீதிவிதமறியாமல் — பேசினாயேமட்டிப்பேயே-இனி
வாதுசெய்தாலழித்திடுவேன — னுன்தன்வாயையறிவாயே
சதுர்மறைபுகழ்ந்திடும் — தற்பரன்சேதி
தன்னையெடுத்துரைப் — பதறுகோணன்வீதி
பதந்தெரியாமலிந்த — விதம்பேசவந்தாயடி
பட்டியறிவில்லாத — மட்டியென்முன்னில்லாதே. (போ)

பாணப்பெண்கள்சொல் சரணங்கள்.

மிதங்கெணவந்தவர்க்கீயாத — கொடும்பாவிவெகுலோபி
சினந்துபேசலாகுமோ — எங்களைநீயுந்தாவிமிக்ககூவி
மோகித்துஉன்னுடனே — போகிக்கவந்தோம்
மூர்க்கஞ்செய்தாயேமாரன் — யேர்க்கையால்நொந்தோம்
தாகித்துவந்தவர்க்கு — தண்ணீர்கொடாதகொடும்
சண்டாளனுன்னைப்போலே — கண்டதில்லையிதுவரை (ம)

இராஜன்சொல் சரணங்கள்.

சவமேஇதுதகுமோ — தகாதவார்த்தைபேசியடிதோஷி
தர்க்கங்கள்செய்துநிற்கிறு — யென்முன்னாலேபேசிமனங்கூசி
அவமானமடைந்திட — அடுத்ததோகாலம்
அறியாமலேமிகுந்து — புரிகுறாய்ஜாலம்
கவனமதாகவிரு — பவமடைந்திடுங்கொலை
காரியமன்றியென் — னேரினில்நின்றுபேசாதே. (போ)

இராஜன்சொல் கந்தார்த்தம்.

நவகண்டமுழுதையுமோர்குடைக்குள்ளாளும்
ராஜனையுமக்கிதுவும் நன்மைதானோ
பவமென்றுசற்றேனும் பார்த்திடாமல்
பாவையரைக்கேவலமாய் வார்த்தைசொன்னீர்
அவமானந்தனையடைவீ ரெங்களாலே
அறிக்கையிட்டோம் வரும்பலனையறிந்துகொள்ளும்
மவுசாகயெங்களோநீர் பேசவேண்டாம்
மன்னூருபொய்கூறும் இல்லாவிடில்
வருமேசாபங்கள்பாரும்
சின்னபின்னமாய்கோரஞ் செய்யாதீர்வெகுநேரம்
நன்னயமாகச்சொன்னோம் பொன்னகரயோத்தியாளும்
ராஜனேகீர்த்தியிற் பிரகாசனே
ராஜனேபிரகாசனேவெகுநேசனேயென்னமோசம்வந்திடும்

பாணப்பெண்கள்சொல் கந்தார்த்தம்.

மட்டிகளே உங்களுக்குநாசகாலம்
வந்ததினாலென்றனைநீர் மதித்திடாது
கெட்டிகெட்டியிவ்வசன முரைத்தீரிந்த
கெருவமுங்கட்கேற்பட்ட தெதுவோசொல்வீர்
பட்டிகளே நீதியல்லவாதுயேது
பரியாசவார்த்தைகளைப் பகர்ந்தாயென்முன்
நட்டணைசெய்யாதீர் கெட்டுப்போவீர்துஷ்ட
நாயேஅப்புறம்போடி-அறிவில்லாத
பேயேவேகமாயோடி
நாயேஅப்புறம்போடி பேயேவேகமாயோடி
ஞாயமில்லாதசேதி நவிலலாகுமோநீதி
நாரிகளேஅஞ்சாத கொலைகாரிகளே
நாரிகளேகொலை காரிகளேவரும்
காரியமறியாய் வீரியங்குறியாய். (ஙா)

பாணப்பெண்கள் விருத்தம்.

வேந்தனென்றடைந்தோனும்பால் வேண்டியதீயேனென்றீர்
யீய்ந்திடாக்கள்வனேயென் றேக்கமுன்தெரிந்திருந்தாற்
போந்திவன்வருவதுண்டோ பொறையுளானிறையுளாநீ
யாய்ந்தனம்வள்ளற்றன்மை யாரினியும்மையொப்பார்.

இராஜன் வசனம்.

அடிகடைச்சாதிப்பெண்களே கொஞ்சமேனும் நெஞ்சமஞ்சாமல் பூச்சக்ரக்குடை மணமாலைகொடுத்ததாகச்சொல்லிவிடும் நாங்கள்செல்லுகிறோம் இதினாலென்ன கியாதிக்குறைவுவந்துவிடுமென் றுவிவகாரஞ்சொல்லவந்தீர்களாயான்கொடுக்கக்கூடிய சன்மானத்தைப் பெற்றுப்போக வந்தீர்களா கொடியபாவிகளா வென்முகத்தில்விழியாது அப்புறம்செல்லுங்கள்.

இராஜன்சொல்கிற தரு.

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

அடிபாவிபோடி அப்புறத்திலோடி
பிடிவாதம்பேசி மடியாதேயோசி (அ)

மெய்தவறுதென்னை பொய்யுரைக்கசொன்ன
நையலேயுன்னை தரிப்பேன்கைவாளால் (அ)

வெட்கமற்றபேயே வெறிகொண்டநாயே
கட்கத்தால்வதைப்பேன் கணத்தில்சிதைப்பேன் (அ)

சொன்னமொழிமாறேன் துற்குணரைச்சேரேன்
என்னைப்பொய்சொல்லென்று ஏனுரைத்தீரென்று (அ)

பாணப்பெண்கள் விருத்தம்.

கருதிநாம்வந்தகொற்ற கவிகையைவழங்கேனென்றீர்
பொருந்தியகாமவேட்கை போக்கவுங்கூடாதென்றீர்
விரும்பியதெல்லாம்வீணை விரிப்பதென்னவலமாச்சே
தந்திரமும்பாலில்லை தாத்திரிவள்ளல்நீரே.

பாணப்பெண்கள்சொல் வசனம்.

மகாராஜனே உம்மைப் பெரிதாகநினைந்து தக்கசன்மானம் பெற்றுக்கொண்டு போகலாமென்றுபெண்ணிவெகுதூரமிருந்துவந்தும் நாங்கள்கோரியவிஷயத்தில் ஒன்றுக்காவது இசைந்தீரில்லை அதை யோசிக்கும்பட்சத்தில் தேகியென வந்தவர்க்கு ஈயாதலோபியென்று தெரிந்துகொண்டோம் ஆகையால் உம்மைச் சக்கிரவர்த்தியென்று சொல்லுவதற்கு யென்னயோக்கியதையிருக்கிறது.

Shanmuga Sundaram Pillai Karaikudi

இராஜன் விருத்தம்.

வீரமாம் புலிபோற்சீறு மிகுவலி தூதரேயிக்
கார்நிறக் கூந்தனீசக் கன்னியரானோர் தம்மை
நேருமென் சமுகம்விட்டு நெடியதூ ரத்திலோட
தீரமாய் பிடித்துத்தள்ளிச் செருப்பினு லடித்திடீரே.

இராஜன் வசனம்.

சேவகா யிந்த பரம சண்டாளிகளை உன்கையி லிருக்கின்ற கெதையினுலடித்து பிடித்து அப்புறம் தள்ளுவாய் சேவகா.

சேவகன் வசனம்.

பிரபு தங்களுத்தரவுபோல் அந்த நீசஸ்திரீகளைத் தக்கபடி வாட்டி யோட்டி விடுகிறேன் பிரபு.

சேவகன் பாணப்பெண்களை அடித்து விரட்டுதல்

வசனம்.

அடி மதிகெட்டநாய்களாயென து சத்தியவேந்தனிடத்தில் வந்து புத்தியில்லாமல் மிகுந்து கத்துவதினுல்வந்த பிரயோஜன மென்னடி மகாராஜா கொடுக்கக்கூடிய சன்மானத்தைப் பெற்றுக்கொண்டு மரியாதையாய்ப் போகாமல் அகடவிகட சாமர்த்தியங்களைப்பேசி நீங்கள் வந்த சுகமிழந்து போகும்படி யென்கைசவிக்க சவுக்கினுலிதோ தீட்டினேன் இச்சமுகம்விட் டப்புறத்திலோடிப்போங்கள் நாய்களே.

பொது வசனம்

இந்தவிதமாக பாணப்பெண்கள் சேவகனிடத்தி லடிபட்டு விஸ்வாமித்திரரிடம் சென்றபின் அரிச்சந்திரன் அயோத்திமா நகரஞ்செல்கிற விதங்காண்க.

அரிச்சந்திரன் விருத்தம்.

சத்தியகீர்த்திபென்றன் சயனசொற்பனத்தின் போலே
புத்தியில்லாதநீசப் பூவையரிருவரென்னை
நத்தியேவாதுசெய்து நடந்ததையோசித்தாலென்
சித்தமும்வெவ்வேருகச் சிதறுதுயினியென்செய்வேன்.

மேற்படி விருத்தம்.

வரும்விதிவந்தெய்தாமல் மானிலந்தனிலேயார்க்கும்
தருகுமோமிகூமேனும் சத்தியகீர்த்திநாமும்
நருமிதும்வனத்தைவிட்டு நகரத்துக்ககேவண்டும்
மருவிலாச்சேனைக்கன்பாய் வழுத்துவீர்விபரந்தானே.

அரிச்சந்திரன் வசனம்.

மந்திரி யான்கண்ட சொர்ப்பனத்திற்கு அநுசரணையாகயிந்த ரிசமாதர்கள் என்னுடன் வாதுசெய்ததும் அவர்கள் கேட்கக்கூடாத பொருள்களை கேட்டதும் யோசிக்குங்கால் யென்னவிபரீதமாயிருக்கிறது இனி யோசிப்பதில் யென்ன பிரயோசனம் சிவபெருமானுடைய திருவருளெப்படியோ அப்படித்தான்முடியும் நல்ல திருக்கட்டும் நாம் அயோத்தி மாநகரஞ் செல்லவேண்டியதாகையால் சேனைசயினியங்களை புறப்படும்படி திட்டஞ்செய்யு மந்திரி.

மந்திரி சொல் கவி.

பேரிளமை யின்பம் பிணிமூப்பு சாக்காடு
ஆருங் கருவி லமைப்பு.

மேற்படி வசனம்.

என்ற பழமொழிப்படி முடியுமே தவிர நம்செயலாலொன்றும் நடக்கப்போகிறதில்லை இதோசேனைகளுக்கு ஆக்ஞாபித்து ஆனையின்மீது முரசேற்றி பட்டணஞ் சேருவதற்கு முரசறைவிக்கும்படி திட்டஞ்செய்துவிட்டேன் சகலமான சேனைகளுந்தயாராயிருக்கிறது தாங்கள் புறப்படவேண்டியதுதா னரசே.

உ

பரமபதி துணை.

இராஜன் அயோத்திக்குச் செல்கிற பாகம்.

இராஜன் சந்திரமதியிடம் சொல்லுகிற விருத்தம்

என்னிருகண்ணேபெண்ணே யின்பமாமயிலேமானே
கன்னமாபுரியையாளுங் காவலன்தவத்திலுற்ற
அன்னமேவனத்தில்நேர்ந்த வதிசயம்யாவுங்கண்டோம்
நன்னயமிகுமயோத்தி நகர்தனக்கேகவாராய்.



இராகம்-கமாஸ்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

அன்னமேயென்மின்னரசேவா அயோத்திசேர்வோம் (அ)

அநுபல்லவி.

கன்னியர்கட்கரசியே கற்பிலருந்ததியே
மன்னன்மதிநயன்பெற்ற வஞ்சியபரஞ்சிதமே. (அ)

சரணங்கள்.

காட்டில்வந்துவேட்டையாடி கண்மணியாளைத்தேடி
கற்பனையால்கண்டதொரு சொற்பனத்தால்மனம்வாடி
காட்டிகத்துடனிருக்கும் தருணம்விசமாதர்கூடி
தழுவிமுத்தந்தாருமென்று தானுனைத்தாரேனுகாலம் (அ)

வரும்விதிகள்தவறாது மானிடர்க்குப்புவிமீது
மயங்குவதாலேவெம்ற நயங்கிடைப்பதுமேது
திருமூர்த்திகளானாலும் கருமமில்லா விடாது
தேவியேயென்றுவனுற்ற செந்திருபோலந்தமுள்ள (அ)

மந்திரிபிரதானிகள் மற்றுமுள்ளசேனைசூழ
வனத்தைக்கடந்தயோத்தி மாநகரம்வந்தோமிக்க
சிந்தைமகிழ்ந்திப்போதே சந்திரமதியென்மாதே
சேருவோமந்தப்புரத்தில் சேயனொடுநேயமதாய்
அன்னமேயென்மின்னரசேவா அரண்மனைக்குள் (அ)

பொது வசனம்.

இவ்விதமாக அரிச்சந்திரமகாராஜன் அயோத்திமா நகரம் வந்தபின் பாணப்பெண்கள் விஸ்வாமித்திர முனிவரிடம் போய் முறையிடுகிற விதங்காண்குக.

விஸ்வாமித்திரரிடம்

பாணப்பெண்கள்

முறையிடுகிறபாகம்.

பாணப்பெண்கள் சொல்லுகிற

விருத்தம்.

மொழிப்படிநாங்க ளரிச்சந்திரமன்னன்
முகங்கண்டேயபிநயம்படித்தோம்
செழிப்புடன்கேட்டுக் கொடுத்ததைமறுத்தான்
திகழும்வெண்குடைதனைக்கேட்டோம்
பழித்ததைத்தடுத்தான் மோகந்தீரென்றோம்
பாதகன்தூதரைவிடுத்து
கழுத்தினைப்பிடித்துத் தள்ளியேயடித்தான்
கலங்கினோமென்செய்வோமையா.

இராகம்-தேசிகதோடி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

அருந்தவமாமுனியே யபயமபயமையா
வருந்தப்படியெங்களை மன்னனடித்தானையா (அ)

மருவன்றியேநடித்தோம் வண்மையாய்ச்சுரம்படித்தோம்
தருவேனோகுடையென்று சாத்திரனென்சவுக்காலின்று (அ)

கூடியணைந்துசுகங் கொற்றவனேதாருமென்றோம்
போடிபுலைச்சியென்று பொற்பிம்பிரனலடித்தான் (அ)

மையலைத்தீராவிடில் மணமாலைதாருமென்றோம்
ஐயனேசெதையினாலே யடித்துதுரத்திவிட்டான் (அ)

வல்லபாயெங்கள்கீதத்தால் மண்ணும்விண்ணுமருகுங்
கல்லுருகுங்கேட்டாலந்த கசடன்மனமுருகலை (அ)

தந்திரவிந்திரஜாலந் தக்கபடியாகச்செய்தோம்
மந்திரத்தால்மாங்காய்விழ மார்க்கமுண்டோவென்றுரைத்தான்



கூந்தலைப்பிடித்திழுத்து கொண்டவனைப்போலடித்து
சாந்தமிலாக்கொடும்பாவி தள்ளிவிட்டானப்புறத்தில் (அ)
கோசிகர்சபைத்திருந்த கோதையர்களென்றுரைத்தோம்
யோசியாமலெங்களையும் வீசினான்சவுக்கதினால் (அ)

பாணப்பெண்கள் வசனம்.

எங்களை அருமையாகச் சிருஷ்டித்தபிதாவே தங்களுத்தரவின்படி அரிச்சந்திரனிடத்தில் சென்று எங்களுக்குத்தெரிந்த பரதசுரத வித்தியாவினோதங்களாற்படித்தும்நடித்தும் அவனுக்குரிய பூர்ணசந்திரக்குடையைக் கேட்டோம் அதைத் தருவதில்லையென்றும் பிரபுவெங்களைச் சேரவேணுமென்று கேட்டோம் தன்றாரமன்றி பிறர்தாரம் விரும்புகிறதில்லையென்று சொல்லிவிட்டான் அப்பால் மணமாலையாவது கொடுமென்றுகேட்டோம் அதையுந் தருவதில்லையென்று யெங்களைச் சின்னபின்னமா யடித்துபிடித்துத் தள்ளிவிட்டான் யெங்கள் தேகமாதியந்தமும் புண்ணாப்போய்விட்டது யென்செய்வோ முனிநாதா.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

அனநடைமின்னார்சொல்லி அருந்தவமுனிவன்கேட்டு
கனலிருவிழியாற்சிந்தக் கடுகடுத்தூற்றுச்சீறி
மனநிலைகலக்கம்போக்கி மங்கையிர்மயங்கவேண்டாம்
இனியொருபகலதற்குள் ளே யென்செய்வோமதனைக்காண்பீர்.

விஸ்வாமித்திரர் தரு.

இராகம்-ஆரபி-தாளம்-ஆதி.

பல்லவி.

வருந்தாதீரென்னருந் தவத்திலுதித்தமக்களே அந்த
வஞ்சகனைப்பஞ்சமனுக் கஞ்சலிசெய்கிடச்செய்வேன் (வரு

அநுபல்லவி.

அருந்ததியைநிகர்த்த வவன்பெண்டுபிள்ளை
அந்தணர்க்கடிமையா தாக்கிப்பின்சள்ளை
பொருந்தபடிசெய்குவேன் பொறுங்கள்பொறுங்களிதோ
போரேனரசுபட்டந் தாரேன்வாங்கியினிமேல் (வரு)

சரணங்கள்.

அச்சமன்றியுங்களைப் பிடித்திழுப்பானு-அந்த
அரும்பாவியையானினிச் சும்மாவிடுவேனுமீறுவானு
வச்சைகெடுத்தவனே நாட்டைவிட்டோட்டுறேன்
நானிலத்தோரவனை நகைத்திடவாட்டுறேன்
பட்சமிருந்தஅவன் பாலனைக்காட்டில்
பாம்புகடித்திறக்க வீம்புசெய்கு றேன்மிக்க(வரு)

மக்களேயுங்களையவன்மணஞ் செய்தாலாச்சு இல்லாதேச்சு-மிக
வருமேவசிஷ்டனுரைத்த சபதமேலாச்சுமென்னபேச்சு
தக்கபடியவன்மேல் தண்டனை விதிக்கிறேன்
தடையன்றியவன்மனை மிடி தன்னையுதைக்கிறேன்
துக்கமடைந்துபிணம் சுடும்படிசெய்கிறேன்
தொல்லுலகிலென்னுடை வல்லபங்கள்தெரியாதா (வரு)

விசுவாமித்திரர் வசனம்.

என்னருந் தவந்திலுதித்த புத்திரிகளா! அந்தபரமசண்டா ளனிடத்திற்சென்று உங்களை மணமுடித்துக் கொள்ளும்படி செய்குறேன் அதற்கிணங்காவிடில் பென்னுல்கூடியவரை சின்ன பின்னப்படுத்துகிறேன் நீங்களுங்கூடவே வந்துபாருங்கள் இப் படியுமடிப்பானு பரமசண்டாளன்.

விஸ்வாமித்திரர் அயோத்திக்குவருகுதல்.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

பார்நடுங்கமதிநடுங்க வுடுக்களோடு
பரிதிவானவர்நடுங்க வண்டமாட
நீர்நடுங்கமகமேரு நிலைகுலுங்க
நிதிக்கிழவன் முதலாயவானத்துள்ள
பேர்குலுங்கநீண்டவிரு பகல்குலுங்க
பிறைசூடிமுதல்மூவர் காமுமஞ்ச
கார்நடுங்கக்கனல்விழியில் சிதறச்சீறி
கதித்திட்டான்கௌசிகனுங் கொதித்திட்டானே.

இராகம்-மோகனம்-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

ஆகாயத்திலுடுக்களுதிர ஆதிசேடன்மனமிகப்பதற
வேகமாகஅயோத்திநாடி விஸ்வாமித்திரர்தோன்றினர்

வரையும்பூமிமாமும்நடுங்க மானர்க்குரியபிண்டங்கலங்க
விரைவாயோடியரசனைநாடி விஸ்வாமித்திரர்தோன்றினர்

மெய்யினிலெங்கும்வேர்வையுதிர விழியிலனல்பொறிகள்சிதற
கையிற்றெண்டுகொண்டுவேகமாய்கௌசிகமாமுனிதோன்றினர்

சடைமுடியோடுமுன்னூலாட சந்திரசூரியருடல்மிகவாட
விடமதுபோலேசீறிமீறி விஸ்வாமித்திரர்தோன்றினர்

கொடியமாதரைக்கூட்டிக்கொற்றவனிடங்கொடுபோய்காட்டி
கடினமாகமணமுடித்திட கௌசிகமுனிதோன்றினர்

விஸ்வாமித்திரர் வசனம்.

அடா கட்டியம் உன்னரசனிடத்தில் சென்று விஸ்வாமித்திர மகாமுனிவர் வந்திருக்கிறதாகச் சொல்லி யிங்கு அழைத்துவா.

கட்டியன்-வசனம்.

முனிநாதா இராஜன்சமுகம் இதோதெரியப்படுத்திஅழைத்துவருகிறேன் முனிநாதா.

கட்டியன் அரசனிடம் சொல்லுகிற

வசனம்.

மகாராஜா விஸ்வாமித்திர முனிவரானவர் வெகு கோபத்துடன் வனத்தில் தங்களுடன்வாதுசெய்த மாதர்களிருவரையுங்கூட்டிக்கொண்டு சபாமண்டபம் வந்திருக்கிறதாகத் தெரியப்படுத்திக் கூட்டிக்கொண்டு வரச்சொன்னர் பிரபு.

இராஜன் வசனம்.

என தாசைநாயகி விஸ்வாமித்திர முனிவரானவர் அந்தநீசமாதர்களை அழைத்துக்கொண்டு வெகு கோபமாய் வந்திருக்கிறதாகச் சேவகன்வந்துசொன்னன் யென்னசங்கதி நேரிடுகிறதோ தெரியவில்லை சென்றுவருவோம் வாராய் கண்மணி.

சந்திரமதி வசனம்.

பிராணநாதா யென்ன பலன்வந்தாலும் அடைய வேண்டியது நம்மைப் பொறுத்த கடமையானதால் சென்று வருவோம் வாருங்கள்.

இராஜன்சொல் தரு.

இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

மாமுனீஸ்பரமீர — வந்தனந்தவ. (மா)

அநுபல்லவி.

தாமரைப்பாதமே — தருசதுர்வீதமே
தளராதோஷரகிதமே — நாதமேதவ (மா)

சரணங்கள்.

சாமிநின் பதமே — தஞ்சம்பாலிதமே
தமியார்களுக்குநீசதமே — நீசதமேதவ (மா)

தெண்டுகமண்ட — லங்கரங்கொண்ட
திருவேஜெகம்புகழண்ட — தெண்டஞ்செய்தவ. (மா)

மெய்யில்விபூதி — விளங்கிடுமாதி
விஸ்வேசலோகிகர்க்கியாதி — யேகனதவ. (மா)

ஐயாநீகெதியே — யருந்தவவெதியே
அருள்சேர்கருணையினிதியே — சோதியேதவ (மா)

இறைவனீரோடி — யெளியனைத்தேடி
யெழுந்துவரப்புண்ணியங்கோடி — நாடிச்செய்தேனே (மா)

நின்மலரூபா — நிராமயதீவா
நிறைசேரிருடியர்தீபா — ஆபத்பாந்தவ (மா)

திருச்சடையிலங்கும் — செவிக்குழைதுலங்கு
செகமீரேழுமேகலங்கும் — சிலம்கொள்தவ. (மா)

அரிச்சந்திரன் விருத்தம்.

தவத்தினிலுயர்ந்தவென்றன் தாணுவேவநின்ருள்போற்றி
பவத்தினியொளித்ததிவ்ய பண்பனேநின்ருள்போற்றி
இவரிருமாதரோடி யிணையிலாக்கோபங்கொண்டே
அவதியோடிங்குவந்த தடியேனுக்குரைப்பீர்போற்றி.

இராஜன் வசனம்.

தவசிரேஷ்டம் பொருந்திய முனிநாதா ஏது அடியேனைத் தேடி யிவ்வளவு பதட்டத்துடன் வனத்திலென்னுடன் வாது செய்த நீசமாதர்களைக் கூட்டிக்கொண்டு யிவிடம்வந்த காரியம் இன்னதென்று திருவுளம்பற்றவேணும் சுவாமி.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

வனத்தினையழித்தாயந்த வனத்துள்வாழ்மிருகங்கொன்ருய்
சினத்துனனுப்பிவைத்த யேனத்தைசிதைத்துவிட்டாய்
மனத்திசைபாடல்பாடென் மக்களைத்துரத்திவிட்டாய்
கனமிகும்பசுத்தோல்போர்த்துங்கடும்புலித்தொழிற்செய்தாயே.

விஸ்வாமித்திரர் வசனம்.

அடா பரமசண்டாளா சத்திரிய னுதிரத்திற்செனித்து சக்கரவர்த்தியென்ற நாமதேயத்தைப் படைத்து தன்னுயிர்போல் மன்னுயிரைக்காப்பதாக பிரசித்தஞ்செய்திருப்பதையோசித்தால் புலியானது பசுந்தோலைப்போர்த்திக்கொண்டு பசுக்கூட்டங்களைச் சர்வநாசஞ்செய்ததுபோல் நீமகா சற்குணவானென்று பேரைவகித்து இப்பேர்க்கொத்த அநீதஞ்செய்யத் தலைப்பட்டாயடா கொடியசண்டாளா வென்முகத்தில் விழியாதே அப்புறஞ்செல்.

அரிச்சந்திரன் விருத்தம்.

மங்கையர்தம்மையுன்றன் மக்களென்றறியேனென்றன்
செங்கையிற்குடையைக்கேட்டார் சேரவேவேணுமென்ருர்
பங்கம்வந்தெய்துமென்றேன் பழமொழிபகர்ந்தாரின்ருர்
யிங்குநில்லாதீர்நீவி ரேனகத்துரத்திவிட்டேன்.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ரூபகம்.

பல்லவி.

என்னசெய்தேன்கொடுமைக ளென்னசெய்தேன்முனிநாதா
என்னசெய்தேன்கோபங்கொண்டீ ரன்னீதங்களாயுமக்கு(என)

அநுபல்லவி.

உன்னடியிணையல்லாது உற்றதுணைவேறேயேது
பொன்புரிமுன்னாலவிர்ந்த புண்ணியரேநானுமக்கு(என)

சரணங்கள்.

வேட்டைநானாடினாய் மிருத்தசெடிகொடிவிருச்சம்
வெளியாகவோர்கணையான் விட்டேனனல்சொரிய
வித்தகரேயருந்தவவித்தகரே கிருபைசெய்வித்தகரே
வித்தகரேயுமக்கென்மேல் வித்தனைகோபங்கள்வர(என)

காவிலவிந்துசெய்த வேனமதையெய்ததுண்டு
கற்பனைபாய்வந்ததென்ன சொற்பனத்திலுந்தெரியேன்
காலமிதோமுன்னோர்செய்தகாலமிதோநான்செய்திடுங்காலமிதே
காலமிதோநானறியேன் ஞாலமதிலேயுமக்கு(என)

வனத்திலிக்காமாதர்வந்து வஞ்சகமதாய்மிகுந்து
மருவும்புவிக்குரக்குடை மணமாலைதாருமென்று
வாதுசெய்தார்வெகுவாக வாதுசெய்தார்
வாதுசெய்ததாலவரைத் தூதரடித்தாரல்லாது(என)

இராஜன் வசனம்.

முனிநாதா அரசர்களுக்குரித்தானது துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனமென்ற வாக்கியத்தின்பிரகாரம் குடிகளுடைய இம்சையைத் தீர்க்கும்பொருட்டு யான்வனத்திற்சென்று வேட்டையாடினதும் கொடியசெடிபுதர்களை அக்கினியாஸ்திரத்தா லெரித்ததும் அனேகமிருகங்களை வதைசெய்ததுந் தாங்களுடைய பன்றியென்ற கெரியாமலதை யலங்கோலஞ் செய்ததும் இக்காமாதர்க ளிருவரின்னை கேட்கத்தகாத பொருள்களைக்கேட்டு வாதுசெய்ததினால் தூதரிடஞ்சொல்லி அடித்துத் துரத்தினதும் வாஸ்தவம்வேறே தங்களுக்கென்ன இடையூறான அநீதங்களைச்செய்தேன் சுவாமி.

உ

பரமபதி துணை.

விஸ்வாமித்திரர் அரிச்சந்திரனைத்

திருமுடி யுதைக்கிற

பாகம்.

குருமுனிவர்சாபமதா லுனதுதந்தை
குறையிருந்தானீசவடி வோடும்வந்தான்
பெருமுனிவர்மனங்களிக்கத் தேவரஞ்சப்
பெரும்பதந்தந் தாமதனை மறந்துவிட்டாய்
இரவிகுலத்துதித்தவனீ யனீதஞ்செய்தா
லிருடிகளுக்குலகமதி லுதவியுண்டோ
பாவியவென்மக்கள் தனை படித்தாயென்று
பதைத்திட்டான்முடிசிதற உதைத்திட்டானே.

விஸ்வாமித்திரர் வசனம்.

அடா கொடிய பாதகா யென்போலொத்த தவசிகளுக்கும் தேகியெனவரும் ஏழைகளுக்கும் நீ ஆதாரமாயிருக்கவேண்டிய திருக்க யோகிகள் தவஞ்செய்யக் கூடியவனத்தையு மழித்து நான் சிருஷ்டித்தபன்றியையுஞ் சின்னபின்னப்படுத்தினாய் அதிருக்கட்டு மென்னருந்தவத்தா லுதித்தமாதர்களின் ஆடல்பாடல்களைக்கேட்டு அவர்களுக்குத் தக்க சன்மானஞ் செய்யாமலேண்டா அடித்து விரட்டினாய் கொடிய வஞ்சகா உனக்கும் ஒருமுடியாவிதோ உதைத்து கீழே தள்ளிவிட்டேன் நீ யென்செய்வாய் பாதகா.

அரிச்சந்திரன் விருத்தம்.

மவுனப்பிரகாசரூப வள்ளலேமுக்கணுதி
பவமறுத்தென்னையாட்கொள்ளும் பரப்பிரமமானநாதா
புவனத்தோர்நகைக்கவென்றன் பொன்முடிவிழவேசெய்தாய்
தவறென்னசெய்தேனுன்றன் சம்மதமிதுவோசுவாமி.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-சாப்பு.

பல்லவி.

ஈசனேஉமைநேசனே யென்னசெய்வேனினி ஜெகதீச (ச)



அநுபல்லவி.

மாசில்லாதசெம்பொன்மணி மகுடந்தனையிழந்தேன். (ஈ)

சரணங்கள்.

மானிலத்தோரேசவனை மானில
வந்தமேதுயர் தந்தமேஜெக (ஈ)

கொலைகளவு கட்காமம்பொய் கொலைகளவு
கோதுதிது யேதுஞ்செய் திலேன் (ஈ)

அறஞ்செய்யா திருந்தேனோ அறஞ்செய்
அந்தணர்நொந்திட நிந்தைசெய்தேனோ (ஈ)

கானில்கண்டசொற்பனம்போல் கானில்
கண்டேன்துயரங் கொண்டேனரகரா (ஈ)

அரிச்சந்திரன் வசனம்.

கைலாசபதே யானென்னகொடுங்கோலரசுபுரிந்தேன் உனதுநாமதேயத்தை கனவிலாவது மறந்ததுண்டா யெனக்கிப்போர்க்கொத்த செயலையளித்தாயே யென்செய்தேன்.

இராஜன் விருத்தம்.

குற்றமொன்றுஞ்செய்பவில்லை யடியேனேச்சுங்
கோனெறியிற்றவறவில்லை யாதிநேர்க்கி
நற்றவஞ்செய்யருந்தவனே முனிவர்க்கெல்லாம்
நாயகமேநவமணிகள் பதித்தவென்றன்
கொற்றமுடிதனினுதைத்தீ ரெனக்குச்சேதங்
கொஞ்சமுமேகிடையாது கமலபாதந்
துற்குறைநேர்ந்திருக்குமென்று: மனதுவாடி
துடிக்கிறேன்பதமிரண்டும் பிடிக்கிறேனே.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

பாதம்நோகாதாவேதநாதா பாதம்நோகாதாவேதநாதா (பா)

அநுபல்லவி.

ஏதையா!வென்மீதினுமக் கித்தனைகோபங்கள் (பா)

சரணங்கள்.

ஆரணவடிவே யருந்தவமுடிவே
பூரணமாய்நிறைந்தபொருளே வரமருளே. (பா)

சுழிமுனைவாசி சூட்சமதேசி
வழியையுணர்ந்தபரமேசி யன்பர்நேசி. (பா)

தர்மமோவெங்கள் சற்குருவுங்கள்
வர்மஞ்சகிக்கவசமோ நிசமாமோ. (பா)

இராஜன் வசனம்.

முனிநாதா அடியேனுடைய மணிமகுடம் பட்டு பாதாரவிந்தங்களெப்படி நோகின்றதோ வென்செய்வேன் தங்களுடைய கோபத்திற்கு பாத்திரனாக வென்னால்முடியுமா சாமி.

விஸ்வாமித்திரர் வசனம்.

அடா துஷ்டா வுன்னைப்பார்க்கும்போது மகாவிந்திர ஜாலத்தில் கைதேர்ந்தவனாகத்தெரிகிறது அதாவ தான்சிரசிற்றரித்திராநின்ற மணிமகுடமானது கீழேவிழுந்ததை யெடுக்காம லென்னுடைய பாதம்நோகு தென்று உபசாரஞ்செய்யவந்த தென்னடாதுரோகி யப்புறஞ்செல்.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஐயையோநானென்னசெய்வேன் அண்ணலேபாதம்நோகுமே()

அநுபல்லவி.

வையரவையணிந்திடும் பரமனருளிதுவோ
பரமனரு ளிதுவோ. (ஐ)

சரணங்கள்.

அற்புதநவமணிக்கல் லழுத்தியவேதனையால்
பொற்பாதஞ்சிவந்துநோக பொறுக்காதேஎன்னசெய்வேன்.
பொறுக்காதே யென்னசெய்வேன். (ஐ)

வையகம்புகழுந்தவ மாமுனிதயாநிதியே
துய்யவென்கிரீடம்பட்டுத் துடித்ததோபாதமிகத்
துடித்ததோ பாதமிக (ஐ)
இத்தனைகோபங்கள்வர வென்னபிழைசெய்தேனையா
சித்தனேதவமகிமை தேவாயோகாபாவமிதுவோ
தேவாயோகா பாவமிதுவோ (ஐ)

அரிச்சந்திரன் வசனம்.

ஏநாதா வென்பேரி லிவ்வளவு கொடுமைசாதிப்பது தருமமல்ல அடியேன் தெரியாதுசெய்த தீங்குகளை மன்னிக்க வேண்டியது.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

தவஞ்செய்வோர்க்குதவுமந்தத் தன்மையைநீக்கிநீதான்
பவமுறக்காட்டிலேகிப் பலமிருகத்தைக்கொன்றாய்
நவமுளசோலைவாழும் நல்லபன்றியைவதைத்தாய்
அவமதிப்பன்றோநீயு மடித்ததுவிவரைத்தானே.

விஸ்வாமித்திரர் வசனம்.

அடாதுரோகி யுன்னிடத்திலென்ன நீதி யிருக்கின்றது என்பாதாரவிந்தம் நொந்ததென்று ரொம்பவுஞ்சாலஞ்செய்கின்றாய் நீசெய்த வனீதங்களை ஒவ்வொன்றையும் நானினைக்கும்பட்சத்தில் உனக்குத்தக்கபடி சாபங்கொடுக்க வேண்டியது அதை மன்னித்தேன் நீயடித்துத்துரத்தின விந்தமாதர்களை நீவிவாகஞ் செய்துகொள்ளும் பட்சத்தில் மிகுந்த சுகமடைவா யெனது கோபமுந்தீரும்.

அரிச்சந்திரன் வசனம்.

ஏநாதா வென்றேவி சந்திரமதியைத்தவிர வேறேமாதர்களைத் தாயென்று மதித்திருக்கின்றே னப்படியிருக்க இப்போர்க்கொத்த வார்த்தைசொல்வது தருமமா சுவாமி.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

எத்தனைவிதமோசொல்லி யெனக்கிதம்பேசினாலும்
சித்தத்திற்பிறந்தகோபந் தீருமோசபித்திடாமல்
முத்தணிமுலையினாரை மோகந்தீர்த்தாளாவிட்டால்
பெற்றவுன்னத்தனைப்போல் பெரும்புலையாகச்செய்வேன்.

விஸ்வாமித்திரர் வசனம்.

அரிச்சந்திரா யான்சொல்லுவதைத் தட்டாதே இந்தமாதர்களிருவரையும் மணமுடித்துக்கொள்ளுமென்றுயாவல்லது என் சாபத்திற்கு பாத்திரவாதி யாகின்றையா.

அரிச்சந்திரன் விருத்தம்.

அன்னியமாதர்தம்மை யருங்கனவதிலுநாடேன்
என்னிருஜடத்தைவாளா லிரண்டிறச்செயினுநீசக்
கன்னியர்தம்மைக்கூடேன் கடிந்துநீரளிக்குஞ்சாப
மென்னவந்தாலுங்கொள்வே னினியுன்றன்கடாக்ஷஞ்சாமி.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

தாபதரெல்லாம்போற்றுந் தவமுனிநானேகண்டாய்
கோபமேகொண்டேனென்றன் கோதையர்கொண்டமோக
தாபத்தைத்தீராவிட்டால் சகலதேவருமேகாண
சாபத்தைக்கொடுப்பேன்பாராய் தடையின்றியுனக்குத்தானே.

அரிச்சந்திரன் விருந்தம்.

கூற்றதையழைத்துவென்ற னுயிர்தனைக்கொடுத்திட்டாலும்
மாற்றிடேனதுநன்றுகு மாதவமுனியேயுன்றன்
சீற்றத்தையாற்றிடாமற் செப்பிடுஞ்சாபமெல்லா
மேற்றனனதற்குசற்று மிரங்கலேகீர்த்திநன்றே.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

தந்தைதாயென்றுவென்னைச் சாற்றினுயரிச்சந்திராநீ
தந்திரஜாலக்காரன் சமர்த்தநீகெட்டிக்காரன்
முந்தவென்றவத்தால்வந்த மொய்குழலாளையின்று
சிந்தையில்மகிழ்ச்சியாக சேருவாய்சேருவாயே.

முனிவர் வசனம்.

அரிச்சந்திர மகாராஜனே யென்கோபத்தையுந் தணித்தேன் உனக்குநேரிடும் சாபத்தையு மறுத்தேன் யானுனது தந்தைக்கு அந்தரசொர்க்கங் கொடுத்தவனுனக்கு அனேகவரப்பிரசாதங்கொடுத் துன்னைக்காப்பாற்றுவேன் ஆகையா லென்மனங்குளிர வென்புத்திரிகளை விவாகம்செய்துக்கொள் தடைசொல்லாதே மகாராஜனே.

அரிச்சந்திரன் விருத்தம்.

காவல்வேண்டிடினுமீவேன் கண்ணைவேண்டிடினுமீவேன்
பூவைவேண்டிடினுமீவேன் பொருளைவேண்டிடினுமீவேன்
சீவன்வேண்டிடினுமீவேன் தேவர்கள்நகைக்கஙீச
பாவையர்தம்மைக்கூடி பவனுக்காளாகிகேனே.

இராஜன் வசனம்.

ஏ தவசிரேஷ்டா யென்னையாளவந்த குருநாதா நான்கொண்டிருக்கிற விரதமானது தன்தாரமன்றி பிறர்தாரம் விரும்புகிறதில்லை மெய்யன்றி பொய்யுரைப்பதில்லையென்ற தீர்மானம் அதற்கு பங்கமாக இந்த அநீதமான வாக்கியத்தை அடியேனுக்குப் போதிப்பது ஞாயமல்ல யெனது அரசாட்சியும் யெனக்குரிய செல்வத்தையும் யெனது ஆவியையும் தங்கள் சொல்லுக்கிணங்கி தத்தம்செய்தாலும் செய்வேனேதவிர இந்தப் பாதகங்களை கைகொள்ளமாட்டேனைதா.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

இப்பநீசொன்னவார்த்தைக் கிந்திரதேவர்சாட்சி
தப்பிதம்வருவதானால் சந்திரசூரியர்கள்சாட்சி
கொப்பினதேசமெல்லாங் கொற்றவன்தாரேனென்று
செப்பினதில்லையென்றாற் சிவனயன்மாலுஞ்சாட்சி.

விஸ்வாமித்திரர் வசனம்.

தேவர்களே முனிவர்களே தெரிந்துகொள்ளுங்கள் இந்த அரிச்சந்திரனனவன் அவனுக்குரிய செல்வ முதலானவைகளும் அரசாட்சியும் தத்தஞ்செய்கிறேனென்று சொன்னபடியால் நீங்களெல்லோருஞ் சாக்ஷி.

அரிச்சந்திரன் விருத்தம்.

உகமையாயுரைத்தசொல்லை யுறுதியாய்பற்றிக்கொண்டீர்
மகிமையையாவராலு மதித்திடமுடியாதையா
தகமையோவிஸ்வாமித்திர சாமியேயி தனைநீங்கள்
ஜெகமெலாமறியசாட்சி செப்பினீர்செப்பினீரே.

அரிச்சந்திரன் வசனம்.

முனிநாதா தாங்களித்த நீசமாதர்களை விவாகஞ் செய்து கொள்ளென்றுசொன்ன கட்டாயத்திற்காக அடியேன் உவமையாக ராச்சியத்தையும் ராஜரீகத்தையுங் கொடுப்பேனென்று சொன்னேன் அதற்காக தேவரீர் தேவர் மூவர்களையுஞ் சாட்சி வைத்ததினால் யென்மனமானது பேதலிக்கின்றது யென்செய்வேன் நாதா.

விஸ்வாமித்திரர் வசனம்.

அரிச்சந்திரா யென்னவார்த்தை யுரைக்கின்றாய் உவமானமாகச்சொல்வது வேறையா மனஉண்மையாகச் சொல்லவில்லையென்றால் விட்டுவிடு அரிச்சந்திரா அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம்.

அரிச்சந்திரன் விருத்தம்.

இல்லையென்றென்னால் வார்த்தை யியம்பவொண்ணாதுசாமி
வல்லபாவுமக்குரைத்த வாக்கதுபிசகிடாதென்
செல்வமுமரசுமுன்றன் சித்தம்போல்தருவேன்தேவா
நல்லபமாகநீங்கள் சுகமுடன்கைக்கொள்வீரே.

அரிச்சந்திரன் வசனம்.

பிரபு அடியேனுடைய வாயால்சொன்னதை இல்லையென்று ஒருக்காலத்திலுஞ் சொல்லேன் தங்கள் பிரியம்போல் யெனது செல்வங்களையும் அரசாட்சியையும் இதோ தத்தஞ்செய்கிறேன் பெற்றுக்கொள்ளுங்கள் நாதா.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

வளமிகுதிகிரியோச்சும் வள்ளனீயன்றியென்றன்
குலமுறைகாக்கவந்த கொற்றவனுருங்கண்டாய்
தவமுதலரசுசெல்வந் தருவேனென்றுரைத்தவண்ணம்
இலகிடவெள்ளுந்தண்ணீரிடுவுன்றன் றிறத்தைபார்ப்போம்.

விஸ்வாமித்திரர் வசனம்.

அரிச்சந்திரா இப்போது நீசொன்னஞாயம் உன் மனசாட்சிக்கு விரோதமன்றி உன்தேவியும் உன் குழந்தையும் நீயுமாக தாரைவார்த்துக்கொடு பார்ப்போம்.

அரிச்சந்திரன் விருத்தம்.

சந்திரமதியேபெண்ணே தருவனந்தன்னிற்கண்ட
விந்தையாங்கனவிற்றன்மை விபரீதமிதுவேயாருந்
தொந்தரவின்னமென்ன தொடருமோபார்ப்போமிந்த
மந்திரமுனிவன்சொன்ன வாக்குமேபாலளிப்போம்வாராய்.

இராஜன் வசனம்

கண்மணி நாம்வேட்டையாடச்சென்றிருந்தபோது கண்ட கனவானது கைமேற்பலித்துவிட்டது சிவபெருமானுடையதிருவருளின்னமெப்படி நடக்கின்றதோ அறியேன் யானுரைத்தபடி முனிநாதருக்கு நமதுசெல்வத்தையும் ராஜரீகத்தையுந் தத்தஞ் செய்யவேண்டிய திருப்பதா லவசியமுன்கருத்தை யியம்புவாய் பிராணசகி.

சந்திரமதி விருத்தம்.

மன்னனேபிராணநாதா மாமுனிதனக்குத்தாங்கள்
சொன்னதோர்மொழிக்குவேறே தோஷங்கள்வந்திடாமல்
செந்நெல்கள்வளமிருத்த தேசமோடரசுசெல்வம்
நன்னயமாகத்தாரை நாயகாவார்த்திடீரே.

இராகம்-முகாரி—தாளம்-சாப்பு.

பல்லவி.

தாரைவாருஞ்சாமிநாதா தடையேது
மனமிடையாது இனித் (தா)

அநுபல்லவி.

நீரைக்கரத்தினால் வாரிமுனிவர்க்கு
தீரத்துடனிந்தப் பாரதியத் (தா)

சரணங்கள்.

சேனையுடன்குணா வானேபலவிதம்
[illegible]நசபரசு[illegible]ன் செம்பொன்னினுஸ்பதம்
ஆனைபரிரத மாநகரற்புதம்
ஆண்மனையுஞ்சேர்த்துத் திரமுடனே (தா)

வேறேமொழிசொல்லக் கூடுமோவெனது
வேந்தனேகுண சாந்தனே
ஆரைவிடுஞ்சனி கோரம்மக்கினி
யாவதொன்றுமில்லைக் காவலனே (தா)

காயம்நிலையாது மாய்கையானசூது
கர்மவினையன்றி வர்மந்தொடராது
வாய்மைதவறவொண் ணாதுவெகுநீது
வாசனேபிராண நேசனே (தா)

சந்திரமதி வசனம்.

பிராணேசா தாங்கள் முனிவருக்குச்சொன்ன வார்த்தைக்கியாதொரு தவறுதலன்றி பரிபூரணச்சிந்தமாகத் தாரைவார்த்துவிடவேண்டியது பிராணேசா.

இராஜன் விருத்தம்.

ஆரைநாம்நோகப்போரோ மயன்விதிவசத்துக்கின்று
வேறேயொன்றியம்பலாமோ மெல்லியர்க்கரசியான
காரிகைப்பழிந்நகூந்தற் கண்மணிவிரைவாய்த்தானே
நீரைநீகொண்டுவாராய் நிமிஷத்திற்றாரைவார்ப்போம்.

இராகம்-ஆரபி-தாளம்-ஆதி.

பல்லவி.

தாரைவார்ப்போம் வாராய்பெண்ணே தாரை
சந்திரவதியென் கண்ணே (தா)

அநுபல்லவி.

ஆரைநொந்திடுவதினி யயன்விதிதவறுமோ
வேறேயொன்றுஞ் சொல்லொண்ணாது
வேறேயொன்றுஞ் சொல்லொண்ணாது
மிகவே மகிழ்ச்சியுடன் (தா)

சரணங்கள்.

வானவர்புகழுந்தவ மாமுனிதயாநிதிக்கு
மாநகரம் பூமிசேனை
மாநகரம் பூமிசேனை
மனம்வருந் தாமலின்று (தா)

சொற்படி தவறுமலே சோதனைக்குள்ளகப்பட்டோம்
கற்பினிலு யர்ந்தவென்றன்
கற்பினிலு யர்ந்தபெண்ணே
காதலிகுணு நீதியே (தா)

கெண்டிநீர் கொண்டுவாபெண்ணே
கிள்ளைமொழி யாளேகண்ணே
மண்டலத்தையாளவந்த மண்டலத்தையாளவந்த
மாதவ முனிவர்க்கின்று. (தா)

இராஜன் வசனம்.

பிராணசகி அரண்மனைக்குள் சென்று சொர்னக் கெண்டியில் தண்ணீர் கொண்டுவா தவமுனிவருடைய மன மகிழும்படி தாரை வார்ப்போம் பெண்ணே.

சந்திரமதி வசனம்.

பிராணேசா தங்களுத்தரவுபோல் கெண்டியில் தண்ணீர் கொண்டுவந்தேன் தாரை வாருங்கள்.

இராஜன் விருத்தம்.

பந்தபாசத்தைநீக்கிப் பரமசிவனடியைநோக்கி
சிந்தையையடக்கியோகஞ் செய்துநற்சித்திபெற்ற
சுந்தராவுனக்குவென்றன் றுரல்புவியரசுசெல்வம்
தந்தேநான்மகிழ்ச்சியாகத் தாரைநீரேற்றுக்கொள்வீர்.

இராகம்-பியாகு-தாளம்-சாப்பு.

பல்லவி.

தாரையேற்றிடும் தவமுனிநாதா
சற்குணமிகும் சாமிபொற்பாதா

அநுபல்லவி.

பாரையாளவே தீரமாய்வந்த
பண்ணவர்புகழ் அண்ணலேயென்றன். (தா)

சரணங்கள்.

ஆனைசேனை பரித்திரளோங்கும்
அரசுடன்செல்வ மறிவீரெப்பாங்கும்
ஞானகாரண மோனமனோதாங்கும்
நானளித்திட்டே னுதாரீர்வாங்கும். (தா)

ஆசைநாயகி சேயொடுவடியேன்
அன்புடனுவா லருளியபடியென்
தேசமுழுதுமின் சித்தத்தின்படியே
தீர்க்கமாயாவுங்கைக் கொள்ளுமிப்படி. (தா)

ஐயனேயுன்ற னகங்களிகூரும்
அடியாருப்பயே யனுக்கிரகந்தாரும்
தெய்வமேதிருக் கண்ணால்பாரும்
சிறியேன்மேற்கோப மன்னித்தாளீரும் (தா)

விஸ்வாமித்திரர் வசனம்.

அரிச்சந்திரா உனதுவார்த்தை பிசகாது யென்மனது திருப்தியடையும்பொருட்டு தாரை வார்த்தா யின்னமென் தாரைக்குள் சேராத பொருள்களுண்டானால் சொல்.

அரசன் விருத்தம்.

பார்தந்தேன் வாசிதந்தேன் பருவதநிகர்த்த கொம்மைத்
தேர்தந்தேன் காலாள்தந்தேன் றேசத்தை யாளத்தக்க
பேர்தந்தே னரசுதந்தேன் பெருஞ்செல்வ முதலாயுள்ள
சீர்தந்தேன் மகிழ்ச்சியாகச் சீமையை யாளுவீரே.

அரசன் வசனம்.

முனிநாதா வென்னாளுகைக் குட்பட்ட தேவாலயங்கள் தவிர மற்றதேசங்களும் ரதகஜதுரக பதாதிகளையு மற்றுமுண்டான செல்வங்களையும் யாதொரு குறைவன்றி தத்தஞ்செய்து விட்டேன் பிரபு.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

மாதவத்தாலேவந்த மன்னனேசொல்லக்கேளாய்
பூதலந்தன்னையாளப் புகுந்திடில்மகிமையில்லை
ஆதலாலதற்குத்தக்க வடையாளமாதுமைந்தன்
மாதங்கப்பணிகள்யாவும் வழங்குவாயரசரேறே.

மேற்படி வசனம்.

அரிச்சந்திரா நான்சகலமுந் தங்களுக்குக் கொடுத்தேன் இந்த ராச்சியத்தை யரசாட்சிசெய்யுமென்றது சரி அதற்குத்த குந்த பூஷணாதிகள் வேண்டுமல்லவா அதற்காக நீயு முன்றேவி குழந்தையணிந்திருக்கிற வாபரணங்கள் கழற்றியென் கையில் கொடுத்தென்னைச் சிம்மாசனத்திலிருத்தி செங்கோலுங் கணை யாழியுங்கொடுத்து உன்கையினாலெனக்கு மகுடாபிஷேகஞ்செ ய்து வையும் பிள்ளா யரிச்சந்திரா.

அரிச்சந்திரன் விருத்தம்.

படிதந்தேனரசோடு பவுசுந்தந்தேன்
பாய்பரிமாரதகஜங்களோடுந்தந்தேன்
கொடிதந்தேன்குடைதந்தே னுயிரையொத்த
குலமனைவிமகனணிந்த பணிகள்தந்தேன்
முடிதந்தேனாழியொடு மேவல்செய்யு
மொய்குழலார்தமைத்தந்தேன் முனியேயேற்கு
விடைதந்தேனென்றடியில் கரங்கள்கூப்பி
விழுந்திட்டான்மாமுனிவ னெழுந்திட்டானே.

மேற்படி வசனம்.

ஐயனே தங்களுடைய கிருபா நோக்கம்போல் மேற்கூறிய விபரப்படி சகலமுங் கொடுத்து விட்டேன் மகுடாபிஷேகமும் இதோ சூட்டுகிறேன் சுவாமி.

விஸ்வாமித்திரர் வசனம்.

அரிச்சந்திரா இன்று நல்லநாளாகையால் எனக்கு உன்கை யினால் மகுடாபிஷேகம் செய்வாய் சீக்கிரம்.

உ

பரமபதிதுணை.

விஸ்வாமித்திரர்க்கு

முடிசூட்டுகிறபாகம்.

இராஜன் விருத்தம்.

மடமடெனப்பேரிகைகள் முழக்கவாத்திய
மத்தளதா ளங்களிரு தித்திவீணை
ஜமஜமென பிட்டில்தப்பூர் வீணாசாரங்
தாம்தாம்நாம் தாமெனவே தான்வாசிக்க
குமுகுமென யாவர்களுங் கவிந்துசூழக்
கோவையிதழ் மாதர்வெண்சா மரமிரட்ட
கமகமெனு மயோத்திகர் தம்மையாளக்
கௌசிகரே முடிபுனைந்தேன் கைக்கொள்வீரே.

பல்லவி.

முடிபுனைந்தாரே-முனிநாதன்
முடிபுனைந்தாரே.

அநுபல்லவி.

நெடியகடல்சூழிந் நீணிலமுழுவதும்
படினத்துடனேயாள பார்மன்னர்புடைசூழ (மு)

கையில்செங்கோல்தாங்கிக் கணையாழிதனைவாங்கிச்
செந்தாமரைப்பாதன் திருமறைப்புகழ்நீதன்
சிங்காசனத்திருந்து சிந்தைமகிழ்ந்து
மங்களங்கள்படிக்க மாதர்சதிர்நடிக்க (மு)

அரிச்சந்திரன் வசனம்.

முனி சிரேஷ்டரே தங்களுக்கு மந்திரிபிரதானிகள் யேவல் கேட்கவும் அனேகமன்னர்கள் புடைசூழவும் இந்தச்சிம்மாசனத்திற்கு தாங்கள் பாத்திரவாதியாகும்படி யென்கையால் முடிபுனைந்தேன் இனி அடியேனால் நடக்கவேண்டிய காரியங்களுக்கு திருவுளம்பற்றி யருளவேணும் சுவாமி.

விஸ்வாமித்திரர் வசனம்.

மகாராஜனே நான் ரெம்ப ஆனந்தசாகரத்தில் மூழ்கினேன் இந்த அயோத்திமாநகரத்திற்கு எல்லை யிவ்வளவென்றும் அரண்மனைகள் இன்னின்னஸ்தானங்கள் இன்ன இடத்திலிருக்கிறதென்றும் உனதாளுகைக்குட்பட்ட ஐம்பத்தாறுதேசத்தின் நாமதேயமின்னதென்றும் தெரியப்படுத்தவும்.

இராஜன் விருத்தம்.

எழுநூற்றுக்காதவழி யகலநீளம்
ஏற்றநெட்டுக்காயிரங்கொத்தளங்கள்தோறும்
வழுவாதமுன்னூற்றி முப்பத்தாறு
வாசல்களுமணித்திரளுமாடகூடத்
தொழுமரசரிருபுறமுங் கவரிவீச
துந்துமிமேளமுழங்கித் தொனிகளார்ப்ப
அழகானவயோத்திமா நகரமென்று
அண்ணலேவிபரமதா யறிகுவீரே.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

கூறுகின்றேன்விபரங்கள்யாவும் கோசிகநாதா (கூ)

அநுபல்லவி.

வாருமுன்றன்மனமகிழ்ந்தே மானிலத்தையாளவந்த
ஆரணமார்க்கந்தெரிந்த வருந்தவமாமுனியே. (கூ)

சாணங்கள்.

வச்சிரத்துடனேபச்சை ரத்தினம்வைத்தழுத்திய
இச்சையுடனேயடி. மேயனிருக்குஞ்சிம்மாசனமிது (கூ)

பூசைசெய்யுமேடையிது பொக்கிஷச்சாலைகளது
ஆசைமினையாட்குகந்த அந்தப்புரமானதிது (கூ)

ரதகஜதுரகபதாதிக ளமர்ந்தசாலையது
சதுர்மறைபுராணசாஸ்திர சரஸ்வதிமாலிதுவையா (கூ)

ஆயுதசாலைகளிது அடியேன்விஞ்ஞைகற்குமிடம்
நேயமுடன்மற்றரசர் நின்பகுதிகட்டுமிடம் (கூ)

பந்துவிளையாடுமிடம் பாவையர்நடிக்குமிடம்
சிந்தைமகிழ்ந்திடஸ்நானஞ் செய்யும்தெற்பக்குளமிது (கூ)

எம்பிரானைபரம்பரையா யிறைவர்பணிந்துவந்த
அம்பிகைராஜயீஸ்பரி யாலயமிதுதானையா (கூ)

அரிச்சந்திரன் வசனம்

பிரபு அயோத்தியானது எழுநூற்றுக் காதவழி யகலநீளம் அதிலுள்ளடங்கிய யென்னரண்மனையாவது ஆயிரங்கொத்தள முள்ளது இதற்கேற்பட்டது முந்நூற்றி முப்பத்தாறு வாசலடங்கிய மாடமாளிகை கூடகோபுரங்கள் இன்னவை இன்னவையென்று தங்களுக்குத் தெரியும்பொருட்டுச் சொன்னேன் இனியென்னுடைய கைக்குட்பட்ட ஐம்பத்தி ஆறு தேசத்துடைய நாமதேயத்தைச்சொல்லி வருகிறேன் கேளுங்கள் பிரபு.

இராஜன் விருத்தம்.

அங்கம்வங்கங்கலிங்கம் குருகுந்தளம்
அருணமச்சம் விராடம்
அவந்திகருசங்கன்னடங் கூச்சரம்குடகு
ஆந்திரஞ் சூரசேனந்
தெங்கணங்கேகயங் கேரளம்பல்லவஞ்
சிந்துசீனஞ்சோனகந்
திராவிடம்துளுவம் புலிந்தம்யுகந்தரந்
தீர்க்குமிகு சோழம்யவனம்

கொங்கணம்ஒட்டியம் காஸ்மீரகன்னடங்
குறலிங்கம் பப்பாரங்
கோலஞ்சாலவம் போடமகதஞ்சகங்
கொல்லம் நேப்பாளமிடறம்
வங்காளஞ்சிங்களஞ் சவ்வீரசாளவஞ்
சாளவம் விதர்ப்பகாசம்
மலையாளங்காம்போசம் காந்தாரம்பாண்டியம்
மாராடம் பாஞ்சாலமே.

மேற்படி வசனம்.

முனிநாதா யென்னுடையதேசத்து நாமதேயங்களிதுதான் இதனையாளக்கூடிய அரசர்கள் தங்களுக்கு வருஷத்துக்கொரு தடவை திறைகொடுத்துவருவார்கள் இனிமேல் அடியேனால் நடக்கவேண்டிய காரியங்களை இன்னதென்று அருளிச் செய்ய வேண்டியது.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

கோமுதலெவரும்போற்று குரிசிலேசொல்லக்கேளாய்
மாமுனிக்கணங்களோடும் வந்துன்பால்வேள்விசெய்ய
நேமமாய்கேட்கவன்றே நீதந்தபொன்னையுன்பால்
நேமமாய்வைத்துவந்தோ மதற்குநீவகைசெய்வாயே.

மேற்படி வசனம்.

அரிச்சந்திரா பென்னயோசனை செய்துவிட்டாய் யான்மறந்துவிட்டாலும் நீசொல்லவேண்டியதிருக்க அதை மறைத்துவிட்டாய் அதாவது நானுன்னிடத்தில் முன் யாசகமாய் வாங்கிவைத்தபொருள் சீக்கிரத்தில் கொடடா கொடுத்துவிட்டு அப்பால் செல்லடா அரிச்சந்திரா.

இராஜன் விருத்தம்.

அருந்தவமுனியேயென்பா லளித்தநின்பொருளோடுள்ள
பொருந்தனமுன்னோர்வைத்த பொன்னறைபிறவுமானுன்
அரசொடுந்தாரைவார்த்தே னணிபலபொருளுமீந்தேன்
திரும்பருங்கொடுப்பதற்குச் செயலுண்டோகூறுவீரே.

மேற்படி வசனம்.

முனிநாதா யேது இவ்வளவு பதஷ்டம் தங்களுடையபொருளை யானபகரித்துக்கொள்ளவில்லை தாங்களமுத்திரைவைத்தபடிக்கு ராமலட்சுமணனென்ற களஞ்சியத்திலிருக்கின்றது தாங்களெடுத்துக் கொள்ளவேண்டியது பிரபு

விஸ்வாமித்திரர் விருத்தம்.

வாசத்தாரவணியுந்திண்டோள் மன்னனேயென்பாலிந்த
மோசங்கூறலாமோ முறைமாறிப்பேசலாமோ
ஆசைபோடெனக்குநீபோ ளரசினையளிக்கும்போது
பேசினீயறிந்ததுண்டா பிறகிதுமொழிதப்பாதே.

மேற்படி வசனம்.

கொடியவஞ்சகா யென்னவார்த்தை பேசுகின்றாய் எனக்கு ராச்சியத்தையுஞ் செல்வத்தையுந் தாரைவார்க்குங் காலத்தில் தேவாலயம் நீங்கலாகவென்று சொன்னாபே ராமலட்சுமணனென்றகளஞ்சியத்திலிருக்கிறது யெடுத்துக்கொள்ளென்று சொல்லவென்னயோக்கியதை யேற்பட்டிருக்கிறது சொல்லும்.

இராஜன் வசனம்.

பிரபு தங்களுக்கு அளித்தபொருளை நான் நீக்கிடுவதற்கு என்னசொந்தமிருக்கிறது சொந்தமில்லாததினால் அதைத்தங்கள்பொருளாகப்பாவித்து யெனக்குரியபொருளை மட்டுந் தாரைவார்த்தேன அதிலென்ன மோசமிருக்கிறது யென்னை யிப்படி சோதிக்கலாமா நாதா.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

அடைக்கலமாகவுன்பா லன்றுநான்வைத்தபொன்னை
கொடுத்திடவேண்டுமல்லால் குவலயத்தோர்க்கொவ்வாது
தடையதுசொல்லலாமா சத்தியவந்தனுநீ
திடத்துடன்கொடுத்தப்பாலே செல்லுவாய்செல்லுவாயே.

மேற்படி வசனம்.

அரிச்சந்திரா நீயெத்தனைபேர்களுடையபொருள்களை அபகரித்தவனோதெரியாது யாம்பிச்சையென்று உன்னிடத்தில் கேட்டுவாங்கினபொருளை உன்னமடைக்கலமாக வைத்துச்சென்றால் அதனையில்லையென்றுசொல்வதழகா ஆகையால் தடைசொல்லாதுகொடு இல்லாவிடில் இல்லையென்றாவதுசொல் அரிச்சந்திரா.

அரிச்சந்திரன் விருத்தம்.

காசிதன் தவத்தால்வந்த கௌசிகமுனியேயிந்தப்
பேதகமுரைக்கரானால் பேசலாம்வழக்குமுண்டோ
நீதனேயில்லையென்று நிகழ்த்திடேன் தவணைதந்தால்
ஓதியபொருளையந்தத் தவணையிலுதவுவேனே.

மேற்படி வசனம்.

பிரபு தங்களுடையபொருளை யில்லையென்று யென்னுவாற் சொல்லுவேனா யேதோ தவணைகொடுத்தால் அந்தத்தவணைக்குள் கொடுத்துவிடுகிறேன்றதா.

விஸ்வாமித்திரர் விருத்தம்

நாட்டினையிழந்துவுன்ற னுயகிளைந்தனோடுங்
காட்டினிலலையமோச காரநீதவணைதந்தால்
நீட்டுவாய்கம்பியந்த நிலையுன்பாலறியேன்கம்பால்
மாட்டுவேன்பொன்னைக்கொட்டி மறுமொழிபேசுவாயே.

மேற்படி வசனம்.

அடாபாதகா உனக்குத் தவணைகொடுக்க யென்னயோக்கியதையிருக்கிறது எவ்விடத்தில் சென்று கொடுக்கப்போராய் என்ராச்சியத்தில் நீகால்வைக்கக்கூடாது எவ்விதமாய்க்கொடுப்பாய்சொல்.

அரிச்சந்திரன் விருத்தம்.

வரமுனீஸ்வரனேயுன்றன் வாக்கினால்தவணைதந்தால்
பரவியகாசிசென்று பகர்ந்திடுந்தவணைக்குள்ளே
திரவியந்தாராவிட்டால் தேவியையகன்றுவேறு
பரதாரநயந்துநின்ற பாவினுனாவேன்கண்டாய்.

மேற்படி வசனம்.

பிரபு தங்களுடைய அரசாட்சிக்குட்பட்ட தேசங்களுக்குச்செல்லாமல் காசி நகரஞ்சென்று யெவ்விதத்திலாவது தங்கள் பொருளையான் சம்பாதித்துக்கொடுக்கிறேன் அதுவரைநாற்பத்தெட்டுநாள் வாயிதா கொடுக்கவேண்டியது முனிநாதா.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

நல்லதுபாரரிச்சந்திரா நாற்பத்தெட்டு
  நாளுனக்குத்தவணைதந்தே னதற்குள்ளாக
வல்லபொருள்யெனக்களிக்க வேண்டுஞ்சொன்னேன்
  மாறிப்பேசாமல் மார்க்கத்தோடு
செல்லுவாய்பின்கூடத் தூதனுகச்
  சிறுவனொருமறையவனை யனுப்பிவைப்பேன்
துல்லபமாய்நீகூட்டிச் சென்றுசெம்பொன்
  சொன்னபடியவனிடத்தி லீகுவாயே

விஸ்வாமித்திரர் வசனம்.

அரிச்சந்திரா உன்மனம்போல் நாற்பத்தெட்டுநாள்வாயிதா கொடுத்தேன் நீகாசிப்பட்டணஞ்சென்று எவ்விதகாரணத்திலாவது தவணை தவராமல் நம்முடைய பொன்னை நான் அனுப்பக்கூடிய தூதனாகிய நட்சேத்திரய்யனிடத்தில்கொடுத்தனுப்பவேண்டியது யென்றுாதன் சிறுவனாகையால் அவனுக்குவேண்டிய வஸ்துக்களைக் குறைவன்றிக்கொடுத்து பாதுகாக்கவேண்டியது.

அரிச்சந்திரன் வசனம்.

தேவரீர் அடியேன்பேரிற் கருணைகூர்ந்துகொடுத்த உத்தரவின்படி காசிநகரத்திற்சென்று நாற்பத்தெட்டுநாள் தவணையில் தாங்களனுப்புகிற நட்சத்திரய்யரிடம் திரவியத்தைக்கொடுத்துவிடுகிறேன் மேற்படி நட்சேத்திரபகவானை யென்னிடம் காண்பித்து யென்கூட அனுப்பவேண்டும் முனிநாதா.

விஸ்வாமித்திரர் வசனம்.

அரிச்சந்திரா உன்தேவி குழந்தையுடன் நீ சீக்கிரத்தில் அயோத்தியைக்கடந்து சரயுநதிக்கரையி லிருக்கவேண்டியது நட்சேத்திரய்யரை சீக்கிரத்தில்அவ்விடத்திற்கு அனுப்புகிறேன்.

அரிச்சந்திரன் வசனம்.

சுவாமி அடியேன் போய்வருகின்றேன் தங்கள் பாதாரவிந்தத்திற் கனேகவந்தனம்.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

வருவேனென் றுரைக்கவந்தாய் மறந்துவிட்டேன்
வழுத்துகிறே னொருவசன மதனைக்கேளுன்
னருமையுள்ள தேவிமைந்த னீயுமிப்போ
தணிந்திருக்கு மாடைதனை யட்டியன்றி
தருகுவா யுரிந்தவரை சூதனைத்திலென்கை
சற்குணனே யான்கொடுக்குங் காயாசத்தைப்
பெருமையா யுடுத்தியிந்த நகரைவிட்டுப்
பின்றிரும்பிப் பாராம லேகுவாயே.

மேற்படி வசனம்.

அரிச்சந்திரா நீமகாராஜனாகப் போய்விட்டுவரவேண்டியது தானொருகாரிய மறந்துவிட்டேனதாவது நீயுன் றேவி குழந்தை மூவர்களு மணிந்திருக்கக்கூடிய வஸ்திரங்களு மென் றானைக்குள்சேரவேண்டியது வனென்று னுன்வாக்கினால் யாவற்றையுங் கொடுத்துவிட்டேனென்றுசொல்லி யிப்போதாடையைக் கொடாமற்போவது சரியல்ல ஆனதாலாடையாவற்று மவிழ்த்தென்னிடங்கொடுத்து நான் கொடுக்ககூடிய காயாசத்தைத் தரித்துக்கொண்டு காவிலொட்டியிருக்கிறமண்ணைச் சுத்தமாகத்தட்டிவிட்டு பின்றிரும்பாமற் போகவேண்டியது.

அரிச்சந்திரன் விருத்தம்.

ஐயனேநீதியோங்கு மருந்தவமுனியேயென்றன்
வையகமரசுசெல்வ மகிழ்ச்சியாயீந்தேனெங்கள்
துய்யதோராடைகேட்டீர் சோதனையிதுவோநான்முன்
செய்திடும்பவமோசிந்தை தியங்குதென்செய்வேன்சுவாமி.

இராகம்-எதுகுலகாம்போதி-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

தர்மமோவுங்களுக்கிது தவமுனிநாதாசுவாமி
தர்மவினைதானோவெங்கள் கலையைக்கேட்டீர்தலைவிதியோ தர்

பதியளித்தேனரசளித்தேன் பகர்முழுதும்தானளித்தேன்
நிதிகொடுத்தேன்கரிபரிகள் நின்மனமகிழவீந்தேன் (தர்)

மணியிழைத்தமுடிகொடுத்தேன் மாசிலாதசெங்கோலீந்தேன்
பணிகொடுத்தேனையாவுன்றன் பாதமேகெதியென்றெண்ணி()

மந்திரபிரதானியீந்தேன் மற்றுமுள்ளசேனைதந்தேன்
சுந்தராவென்றனுடைய துகிலைக்கேட்டீர்சோதனையோ(தர்)

தஞ்சமற்றபாவியானேன் தாரணியோர்தானகைக்க
கஞ்சமலர்பாதாவெங்கள் கலையைக்கேட்பதழகோசுவாமி(தர்)

அரிச்சந்திரன் வசனம்.

சுவாமி சகலவஸ்துக்களையுங்கொடுத்து நிராயுதனுகினேன் கேவல மிந்தச்சண்டாளனுடுத்தியிருக்கிற துகிலைக்கேட்கும்படி தங்களுக்கு மனம்வந்த தடியேனுடைய காலவித்தியாசம்இதோ தந்துவிட்டேன் மூவர்களாடையையும் பிரபு.

விஸ்வாமித்திரன் வசனம்.

அரிச்சந்திரா இந்தக்காயாசத்தை மூவர்களுமணிந்துகொண்டு மகாராஜர்களாகப் போய்வாருங்கள் பொருள்விஷயத்தில் ரொம்பவுஞ் சாக்கிரதையாயிரு கூடவருமையரைக் காத்திருக்க வைக்காதே அரிச்சந்திரா.

அரிச்சந்திரன் விருத்தம்.

மருவிலாத்தவத்திலோங்கு மாமுனிநாதாநீங்க
ளருளியபடிக்குச்செம்பொ னந்தணரிடத்திலீவேன்
குருபராமனமகிழ்ந்து கொடுத்திடப்விடைபோல்யானும்
வருகிறேன்காசிசென்று மலரடிபோற்றினேனே.

மேற்படி வசனம்.

தங்களுத்தரவுபோல் தவணைப்படிக்கு கொடுத்தனுப்பிவைக்கிறேன் போய்வருகிறேன் முனிநாதா இதோவந்தனம்.

சந்திரமதி வசனம்.

சுவாமி அடியாள் வந்தனஞ்செய்கின்றேன் போய்வருகிறேன் நாதா.

விஸ்வாமித்திரர் வசனம்.

சந்திரமதி மகராசியாகப் போய்வா.

லோகிதாசன் வசனம்.

சுவாமி நமஸ்காரஞ் செய்கின்றேன் போய்வருகிறேன்.

விஸ்வாமித்திரர் வசனம்.

லோகிதாசா சிரஞ்சீவியாகப்போய் வரவேண்டியது.

இராஜன் அயோத்தியைவிட்டு புறப்படுகிற பாகம்.

இராஜன் விருத்தம்.

கங்கையும்பிறையுஞ்சூடிக் கடும்புலியாடைசாத்துஞ்
சங்கரா நினக்குவென்ன தாழ்வுசெய்தேனோவென்றன்
மங்களமானசெல்வ மாநிலமரசுந்தோற்று
பங்கமாய்க்காயாசத்தை பாவியானணிந்திட்டேனே.

இராகம்-காப்பி-தாளம்.

பல்லவி.

ஈசனே கைலாசவாசா. வென்னசெய்வேனடா (ஈ)

அநுபல்லவி.

மாசற்றஜோதிவடிவமேயாதியறைதேடியுங்காணுவள்ள வேலநீதி()

சரணங்கள்.

தேசமுடனரசு செப்பொன்முடியிமுந்தேன்
செல்வமிழந்தவென்றன் சித்தமுந்தளர்ந்தேன்

மோசமென்னசெய்தேன் முக்கண்ணின்வடிவே
முற்பவனத்தின்பயனோ தற்பரவடிவே (ஈ)

மன்னர்மந்திரிகுடிகள் வருந்திப்பின்னாக
வாவொடியேனுட மனப்வெகுவாக
பன்னகனாய்ப்பட்ட தேரைபோலாக
பரதவிக்கிறேன்வேறே கதியில்லைநோக (ஈ)

காயாசமணிந்தேன் சுடலைநெலிந்தேன்
காசினிபோர்களைசும் படிக்கியாளிருந்தேன்
மாயப்பிரபஞ்ச மயக்கத்தானெஞ்சம்
மாருமதுனகருள் தாருப்பின்றஞ்சம் (ஈ)

அரிச்சந்திரன் வசனம்.

கயிலாசபதி யென்னை இக்கோலத்துக்கு ஆளாக்கும்படி மனதுவந்து யான்செய்த பூசாபலனோ சதா உன்னை நினையாது இவ்வளவுகாலங் கழித்ததுண்டா யானும் என்தேவியும் அருமைக் குழந்தை தேவதாசனும் விலையுயர்ந்த வஸ்திரங்களை யணிந்திருந்ததும்போக இப்போது முனிவர்கொடுத்த காயாசத்தை அணியும்படியாய் லபித்ததே யென்செய்வேன் கருணாநிதியே.

மந்திரிபிரதானிகள் அரசனிடம்வந்து முறையிடுகிற

விருத்தம்.

எங்களையாண்டிருந்த விறைவனேயொருவிண்ணப்பம்
உங்களைப்பிரிந்தேயிங்கு வுயிர்வைத்துமிருக்கமாட்டோம்
சங்கடத்தோடேயிந்த தவமுனியிடத்திலேநாங்கள்
மங்களமாகவாழ்க மனமதுவருமோவேந்தே.

மேற்படி வசனம்.

பிரபு யெங்களைச் சேயனைப்போல பாதுகாக்க உம்மைப் பிரிந்து கொடியபாதகராகிய கோசிகரிடத்திலிருந்து நாங்கள் எப்படி சகிக்கப்போகின்றோம் தாங்கள்எக்கதியடைந்தீர்களோ அக்கெதிக்கி நாங்களும் பாத்திரவாதியாகையால் தங்களுடனே கூடவேவருகிறோம்.

இராஜன் விருத்தம்.

அழுவதைத்தவிர்மினென்ற னமைச்சரேயினிமேலாக
மழுவதைத்தரித்தவீசன் மலர்ப்பதமனதிலெண்ணி
பழுதிலாமுனிவருக்கு பண்புடன் வழக்கம்போலே
தொழுதுமேயேவல்செய்து சுகமுடனிருந்திடீரே.

மேற்படி வசனம்.

எனதருமையாகிய மந்திரி பிரதானிகளே நீங்கள் சகலசாஸ்திரங்களுந் தெரிந்தவர்களாகயிருந்தும் என் மன்னின்று வருந்துவதினால் என்மனங்களெல்லாம் வெவ்வேறாகிறது யானிருக்கிறதோ கேவலநிசையை அடைந்திருக்கிறேன் என்னுடன் வந்து என்னபிரயோஜனமடையப்போகின்றீர்கள் ஆகையால் என்னிடமிருந்ததுபோல முனிவருடைய சொற்படி நடந்து காலங்கழியுங்கள்.

மன்னர்மந்திரி-குடிகள்சொல்கிற

விருத்தம்.

ஐயனேயரசேயெங்க ளண்ணலேயுலகையாண்ட
துய்யனேயுமதுவாக்கின் சொற்படிபிசகுவோமோ
மெய்யனேதாங்கள்சென்றால் விரும்பியிவ்விடத்தில்நாங்கள்
உய்வமோவுங்கள்பின்னே யோடியேவருவோமே

மேற்படி வசனம்.

பிரபு தந்தைதாயில்லாத சேயனைப்போலே சிந்தையானது தளர்ந்து இங்கிருப்பதில் என்ன பிரயோசனம் தங்களுடனே நாங்களும் வருகிறோம் தடைசொல்லக்கூடாது அரசே.

இராஜன் விருத்தம்.

மன்னர்மந்திரியேயிந்த மாநகர்தன்னில்வாழும்
தின்னயந்தவறிடாத நேர்மைசேர்குடிகாள்நீங்கள்
என்னைவிட்டகலாதேங்கி யிருப்பதிலென்னசாரம்
சொன்னசொற்படியேயிங்கு சுகமுடனிருந்திடீரே.

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஏன்வருந்துகிறீர்நீங்கள் சான்றவிதிவசத்திற். (ஏ)

அநுபல்லவி.

மானுடன்மழுவேந்தி மறைபுகழுவேதாந்தி
கானில்வேடன்யெச்சனுண்டகார்த்தனருள் தவறுமோ (ஏ)

சரணங்கள்.

மன்னர்மந்திரிகுடியே மாமுனிவர்சொற்படியே
இன்னகர்தனிலேநீங்க ளிருந்துசுகமடைவீர். (ஏ)

வாழ்ந்தேன்சிலதுகாலம் மகிழ்ச்சயுடனிக்காலம்
தாழ்வுவந்ததானால்மனம் தளரலாகுமோசொல்வீர். (ஏ)

இருளுஞ்சிலதுகாலம் இந்துவுஞ்சிலது
வரும்விதிதனக்கஞ்சி மாட்டேனென்றால்விடுமோ. (ஏ)

இராஜன் வசனம்.

மன்னர் மந்திரிகள் குடிகளே நீங்கள் வருந்துவதில் என்ன பிரயோஜனம் அவரவர்செய்த கருமம் அவரவரே அநுபவிக்க வேண்டியது நீங்களும் என் கூடவருகிறோ மென்று சொல்வது ஞாயமல்ல இன்னகரத்தில் தானே விஸ்வாமித்திரருக்கு உதவியாகயிருங்கள் யான் சென்று வருகிறேன்.

இராஜன் விருத்தம்.

புத்தியிற்சிரேஷ்டமாகிப் புகழ்ச்சியாயெனக்குவாய்ந்த
சத்தியகீர்த்திகேளுந் தலைவிதிக்கினியென்செய்வோம்
சித்தநீகலங்கவேண்டாஞ் சிவனருளிதுவென்றெண்ணி
அத்தனுமுனிவர்க்கேவ லன்புடன்செய்துவாராய்.

மேற்படி வசனம்.

சத்தியகீர்த்தி கிஞ்சிற்றேனும் யானிக்கோலமடைந்ததைப் பற்றி கவலையடையாதே கானகத்திற்கண்ட சொற்பனமானது பலித்துவிட்டது யான் காசிநகரஞ்சென்று முனிவருடைய இம்சையைத் தீர்க்கும்பொருட்டுப்போகிறேன் நீகோசிகர்க்குதுணையாக இந்தராச்சியத்தில் குடிகளுக்கு யாதொரு இம்சையில்லாது பாதுகாத்துக்கொண்டு வரவேண்டியது மந்திரி.

சத்தியகீர்த்தி விருத்தம்.

உந்தனைப்பணிந்தகையால் லொருவரைப்பணியமாட்டேன்
எந்தனையிருக்கச்சொன்ன விறைவனேயுயிரைமாய்ப்பேன்
சொந்தமென் பெண்டுபிள்ளை சுற்றத்தைநினைக்கமாட்டேன்
இந்தநற்றுகிலைப்போக்கி யிதோகாவியணிந்திட்டேனே.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

என்னமாகப் பிரிந்திருப்பேன் என்
னேந்தலே யுடமைவிட்டு (என)

அநுபல்லவி.

அன்னை தந்தையைப்போலே யடியேனைப்புவிமேலே
நன்னயமாய்வளர்த்த நாதாமலர்ப்பாதா (என)

சரணங்கள்.

உடலுமுயிரும்போலே யுகந்திருந்தோமென்மேலே
சடம்விட்டுவுயிர்போன தன்மைபோலின்றனில் (என)

உந்தனைப்பணிந்தபின் றொருவரைப்பணியேன்
சிந்தைவருமாமுன்னோர் தீவினைபோட்பாவி (என)

மாதாவுடனருமை மைந்தனும்நின் பெருமை
பாதபண்ணில்நடக்க பாவியிக்குகூலி (என)

அரசுநீர்செய்புங்காலம் அடுத்திருக்குதிர்காலம்
பரதேசியாகநீங்கள் மறுதேசம்போனால் (என)

சத்தியகீர்த்தி வசனம்.

அரசே மற்றவர்களைப்போலவே யென்னையும்பாவித்து இவ்விடத்திலிரு நாங்கள் காசிநகரஞ் செல்லுகிறோமென்று சொல்கிறது தருமமா இதுவரைத் தங்களைவிட்டு அரைநிமிஷமேனும் பிரிந்திருந்ததுண்டா இல்லையே ஆகையால் தாங்கள் யென்னை பிள்ளையாகப் பாவித்து தங்களோடுகூட்டிச் செல்லவேண்டியது பிரபு.

அரிச்சந்திரன் விருத்தம்.

அன்புள்ளசத்தியகீர்த்தி யருந்தவமுனிவர்தன்பால்
இன்பமாய்ச்சென்றுசெங்கோ லியற்கையையவர்க்குறைத்து
நண்பனேயிருந்திடாமல் நானும்பின்வாரேனென்று
துன்பமீயடையவேண்டாஞ் சுகமுடனிருந்திடாயே.

இராகம்-எதுகுலகாம்போதி-தாளம்-சாப்பு.

பல்லவி.

அப்பாமந்திரி வருந்தாதே-அயன்
அமைந்தவிதி யெந்நாளுந் தவறாதே.

அநுபல்லவி.

தப்பிதமன்றியான் தாரணியையாண்டபலன்
தந்ததுதுயரமிருந்தது வென்றன். (அ)

சரணங்கள்.

வாழ்வைச்சதமென்று மகிழ்வாரோமாந்தர்மண்ணில்
மதியூகியிதைநன்றாய் மதிப்பீர்மனதிலெண்ணி
தாழ்வுவந்தெய்ததினால்நம் தைரியம்விடலாமோ
சாற்றுமாற்றுங்கூற்றை யுதைத்தோன்காப்பான். (அ)

அரிஹரப்பிர்மாதி யாரானும்வினைநீக்க
லாகுமாவருந்தாமல் போகுமாவதைநோக்க
தெரியாதவரைப்போலே சித்தம்நொந்துமண்மேலே
தியங்குறாய்மயங்குறாய் பயனுண்டோவதில்வேறே. (அ)

கவலையைமாற்றவே காதலிசேயோடின்று
கடன்றிரவகையன்றி காசிநகரிற்சென்று
தவறுதுநான்போரேன் சத்தியகீர்த்திநீயும்
தவமுனிவரிடத்தி லைசியமிருந்திடும். (அ)

இராஜன் வசனம்.

எனதருமையுள்ள மந்திரி நீ தியங்கி மயங்கிவருந்துவதினு லென் ஐம்புலாதிகளும்வெவ்வேருகின்றது.நாமென்னசெய்வோம் அரிஹரிப்பிரமாதியாலும் விணைப்பயனை தவிழ்க்க முடியாது ஆகையால்நாங்கள் காசிப்பட்டணஞ்செல்கிரும் உன் மனதைத்திடப்படுத்தி விஸ்வாமித்திரரிடமிருந்து சுகமடைவாய் சத்தியகீர்த்தி.

மந்திரி வசனம்.

பிரபு இனிமேலிந்தவார்த்தை சொல்வீர்களாகில் என்னுடைய ஜீவனைவைத்திருக்கேன் தாங்களடையக் கூடிய சுகதுக்கங்களை யானுமடைகின்றேன் ஆகையால்தடையின்றி யடியேனையுங் கூட்டிச் செல்லவேண்டிய தரசே.

இராஜன் வசனம்.

நல்லது மந்திரி யானடையக்கூடியகஷ்டத்தை தானுமடைகிறேனென்ருய் நானினி யென்னசொல்லப் போகின்றேன் உன் பிரியம்போல் கூடவருவாய் மந்திரி.



பரமபதி துணை.

அரிச்சந்திரன்

காசிமாநகரம்போகிற

பாகம்.

இராஜன் விருத்தம்.

கட்டழகமைந்தவென்றன் கன்னியேயிதுநாள்மட்டும்
மட்டிலாப்புவியையாண்டு மாமுனிக்கீந்தோம்நாமுந்
திட்டமாயிவிடம்விட்டுச் சீக்கிரமாகச்செல்ல
அட்டியேதினிமேற்காசிக் ககருவோம்வாராய்பெண்ணே.

இராகம்-காப்பி-தாளம்-ஆதி.

பல்லவி.

வாராய்பொன்னரசே காசி மாநகர்க்கே (வா)

அநுபல்லவி.

ஆரைநோவோம் வேறேயினி
கார்குழலே நீரமுடன் (வா)

சரணங்கள்.

மாசில்லாத கோசிகர்க்கு
பேசிய பொருள்கொடுக்க (வா)

தஞ்சமற்ற பஞ்சையானோம்
கொஞ்சுங்கிளி ரஞ்சிதமே (வா)

காலகதி யைநினைந்து
சீலமுள்ள பாலனுடன் (வா)

மாநகரத் தைக்கடந்தோம்
கானகந்த னைத்துடர்ந்தோம் (வா)

இராஜன் வசனம்.

கண்மணி அயோத்தி நகரைக்கடந்து அநேகதூரம் வந்துவிட்டோம் சரயுநதிசமீபந்தான் பிராணசகியேவேகமாகவருவாய்.

மேற்படி விருத்தம்.

ஆலமுண்டவனே யுன்ற னருளினோவரசதோற்று
காலத்தாற்கோலமாறிக் காசிமாநகரைக்கோரி
பாலனுஞ்சத்தியகீர்த்தி பத்தினியாளைக்கூட்டி
சாலவேபோறேனுன்றன் சம்மதமிதுவோவையா.

இராகம்-தேசிக-கமாஸ்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

சிவனேயுன்னருளினாலே சீமையரசுமிழந்து
சேயிழைமைந்தனைக்கூட்டித் தேசமுறிபோறேன்பாவஞ்
செய்தேனோ செய்தேனோ செய்தேனோ செய்தேனோ (சிவ)

என்னகுறைவுசெய்தே னீசாவுன்பணிவிடை
மன்னர்மந்திரிகுடிகள் வருந்தவிதியென்றனுக்காய்
வந்ததே வந்ததே வந்ததே வந்ததே (சிவ)

கைவிடலாகாதென்னைக் காவாயுனதுதஞ்சம்
வையகம்புகழுந்தவ மாமுனிகடனால்நெஞ்சம்
வாடுறேன் வாடுறேன் வாடுறேன் வாடுறேன் (சிவ)

சிங்காசனத்திருந்து செங்கோல்செலுத்துமென்னை
வெங்கானகம்நடக்க விட்டதென்னகாலகதி
விமலனே விமலனே விமலனே விமலனே (சிவ)

மாசில்லாதசெல்வத்தை மாமுனிவர்தனக்கீந்து
பூசுரர்புகழுங்காசிப் பொன்னகரந்தனக்கின்று
போறேனுன் போறேனுன் போறேனுன் போறேனுன் (சிவ)

இராஜன் வசனம்.

சத்தியகீர்த்தி நாமென்ன வர்த்தமான அரசாட்சிசெய்தோம் நமக்கிப்பேர்ப்பட்ட துன்பமெல்லாம்வந்ததே இந்தக்கானகத்தைக்கடந்து காசிதேசமெப்படிச் செல்லப்போகின்றோம்

இராகம்-கமாஸ்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

இந்தவிதிவந்திடலாமோ வென்றனுக்கு (இ)

அநுபல்லவி.

சந்திரசேகரா கிருபாகரா சாம்பசிவமனோகராவெனக்(இ)

சரணங்கள்.

புகழயோத்திநகரோடரசு புரிந்ததும்போச்சே
ஜெகமீதினில்மகாபாதகஞ்செய்தேனோ நையுதையைய்யோ(இ)

அந்தணர்தம்மைச்சிசுப்பசுவை அன்னைதந்தையை
பைந்தொடியைநைந்தகுடியை பதறகதறப்பங்கம்செய்தேனோ()

பிறர்பொருளைகவர்ந்தன்டோ பெரியவரையிகழ்ந்தண்டே
அறமதுசெய்யாதிருந்தேனோவடியேனையிந்தப்படிவருத்தவும்()

குருமொழிகள்தவறினேனோ கொடுங்கோலரசுபுரிந்திட்டேனோ
அருமாமறைபொருளையுன்னையகத்திலனுவும்நினைந்திலேயோ

பாலன்மனைவிமந்திரிபடும் பரிதாபத்தைப்பார்ப்பேனுகண்ணால்
கோலமுனிவன்சாலமோ கொடியவனத்திலடியேனடக்க(இ)

சரயுநதிக்கரையைசார்ந்தே தைரியங்கலங்கினதால்சோர்ந்தேன்
தருணமறிவாரோமுனிவர் தரகர்வருஞ்சமையமாச்சுதே ()

அரிச்சந்திரன் விருத்தம்.

ஆசைநாயகியேநம்ம ளரசுநற்பதியுந்தோற்று
வேஷமுமாறியிந்த விதிவசந்தனக்குள்ளாகி
மாசில்லாசரயுவென்னும் வளமிகும்நதிக்குவந்தோம்
கோசிகர்தூதரென்ன குணத்துடன்வருகின்றாரோ.

இராகம்-காப்பி-தாளம்-ஆதி.

பல்லவி.

சமையமிதுவே தரகர்வருகிற
சமையமிதுவே தரகர்வருகிற (ச)

அநுபல்லவி.

விமலவடிவே வேதமுடிவே
அமரர்பணியு மாதிநாதா (ச)

சரணங்கள்.

வையமிறந்தேன் மனைதுளர்ந்தேன்
ஐயோகடனால் மெய்வருந்துதே (ச)

கெதியொன்றிலேப்பொன் கிடைப்பதரிதேன்
விதியோதாகு வேதியர்வரும் (ச)

தயைசெய்வாரோ தண்டிப்பாரோ
பயமாகுதேயென் பாவையேபூவையே (ச)

அரிச்சந்திரன் வசனம்.

ஆசைநாயகி இதுதான் சரயுநதிக் கரையென்பது விஸ்வாமித்திர சுவாமிகள் நட்சேத்திரய்யரை கூடியசீக்கிரத்தி லனுப்புகிறதாகச் சொன்னபிரகாரம் இன்னம் வரக்காணோம் அவர்எப்பொர்க்கொத்த கோபியோ யென்னநிந்தனை செய்கின்றாரோ யென்செய்வோம் கண்மணி.

பொதுவசனம்.

இவ்விதமாக அரிச்சந்திரன் சரயுநதிக்கரையிலிருக்க விஸ்வாமித்திரர் சுக்கிரபகவானைத் தருவித்து அரிச்சந்திரனிடம் பொருள்வாங்கிவரும்படி சொல்லிவிடுகிற விதங்காண்குக.

விஸ்வாமித்திரர் வசனம்.

சுக்கிரபகவானே நமக்கும் வசிஷ்டனுக்குந் தேவலோகத்தில்நடந்தசங்கதி தெரிந்திருக்கும் யானொருசெய்யத்தகாத காரியத்தை எடுத்துக்கொண்டேன் அதை நிறைவேற்றும்படி இச்சமயம் உம்மைவேண்டினேன் யென் மனோகரப்படி வந்துசேர்ந்தீர் அரிச்சந்திரன் சரயுநதிக்கரையில்போய் தங்கியிருக்கின்றான் நீர் அவனிடத்திற்சென்று உமக்குத்தெரிந்த சாமபேத தானதண்டம்என்னும் சதுர்வித உபாயத்தினால் அவனை பொய்சொல்லும்படியான சாமார்த்தியஞ் செய்யவேண்டியது உம்மைப்பொறுத்த கடமை.

நட்சேத்திரன் வசனம்.

விஸ்வாமித்திர முனிவரே யெனக்குத்தெரிந்தவரையிலும் கச
க்கிப்பிரிந்து உம்முடைய கருத்தைப்போல் ஒருபொய்சொல்லு
ம்படி செய்யாவிட்டால் யானக்கியாகவாரு யென்னு...
மர்த்தியங்களெல்லாந் தங்களுக்குத் தெரியாதா.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

கனிதேடு வானரசன் பசித்தபோது
கடியியந்த வேளைதனி லன்னங்கேளு
தனியாட லனல்சூழ்ந்த காட்டிற்குள்ளே
நடக்கமுடி யாதென்று நாளைப்போக்கு
இனியமொழி பேசாதே துன்பமென்ப
தெவ்வளவு மளவுஞ்செய் ததுதியாக
தனியாகப் பொருள்கொடுத்தால் வாங்கியுன்றன்
தரகினைக்கே யில்லையென்றொருபொய்வேண்டே.

மேற்படி வசனம்.

சுக்கிரபகவானே அரிச்சந்திரனைச் சாப்பாடு கேட்கும்போ
து கனிவர்க்கந்தரவருவான் வேண்டாமென்று சோறுகேளும் வழியி
ல்நடக்கமுடியாதுவென்று தூக்கும்படி சொல்லும் யேட்டிக்கி
போட்டியே செய்துவா உன்பேர் நட்சேத்திரகனென்று சொல்
லியிருக்கிறேன் கேட்டால் இந்தப்படி சொல்லு நான் சொன்ன
தெல்லாம் கியாபகமிருக்கின்றதா சுக்கிரபகவானே.

சுக்சுரபகவான் விருத்தம்.

நிசத்திலனு வளவேனுந் தவறிடாத
நேர்பனையின் கண்டுவரைச் சனத்தில்மிக்க
கசக்கியுடல் தனைப்பிரித்து சாறுண்டாக்கி
கதறிவாய்விட்டேங்கக் கசையால்வாட்டி
தசைதகரும் படியடித்து சகிக்கொணாத
சஞ்சலத்தால் மனமிடைந்து தாங்கியேங்க
வசக்கிபொரு பொய்யுரைக்கச் செய்யாவிட்டால்
மண்ணும்வின்னு மென்பேரை மாற்றுவீரே.

மேற்படி வசனம்.

விஸ்வாமித்திரரே நீ ரொருபங்குசொன்னால் யானிரண்டுபங்கு செய்வேனென்றதெரியாதா யானுமறந்துவிடுவேன் இதோ சென்று அரிச்சந்திரனைப் பொய் சொல்லும்படி செய்து வருகிறேன் விஸ்வாமித்திரரே.

பொது வசனம்.

இவ்விதமாக நட்சேத்திரய்யர் விஸ்வாமித்திரரிடம் விடைபெற்றுக்கொண்டு சரயுநதிக்கரையில் அரிச்சந்திரன் முன்பாகவருகிற விதங்காண்குக.

நட்சேத்திரையர் வருகிற

விருத்தம்.

கொடியவன்புலிபோற்சீறி கொக்கரித்ததட்டிக்கிட்டி
கடிகையுமன்றூந்தாளுங் கயிறுடன்கையிற்கொண்டு
படிகிடுகிடெனப்பொங்கி பார்த்தவர்நடுக்கிட்டஞ்ச
கடுகியேநட்சேத்திரய்யன் காலன்போல்வந்திட்டானே.

இராகம்-கல்யாணி-தாளம்-சாப்பு

கண்ணிகள்.

நற்குணமில்லாதுற்குணமிகும் நட்சேத்திரனானே
ராஜஅரிச்சந்திரனைமனம் நடுங்கச்செய்வேனே. (நற்)

கற்பனை மிகுங்கௌசிகர்மனங் களிக்கப்பண்ணுவேன்
காட்டில்மன்னனைவாட்டிமிகுந்த டேட்டிசெய்குவேன். (நற்)

கரத்தில்கிட்டியுறத்திக்கட்டிக் கலங்கவடிக்கிறேன்
கடினமானதெண்டனையால் நொடிக்குள்முடிக்கிறேன் (நற்)

பசிக்குதென்றுசாதங்கேட்டு கஸ்திபடுத்துகிறேன்
பாரவனத்தில்வாகனங்கொண் டாடாவென்கிறேன். (நற்)

மெய்தவறிபொய்யுரைக்கும் படிக்கிவாட்டுறேன்
மிக்கசவுக்காலவன்மேல்வேர்வை கக்கமாட்டுறேன். (நற்)

நட்சேத்திரருக்குங் கட்டியனுக்கும் தர்க்கம்.

நட்சேத்திரன் வசனம்.

சந்திரா சந்திரா சந்திரா சந்திரா சந்திரா சந்திரா.

கட்டியக்காரன் வசனம்.

பொந்துரா பொந்துரா பொட்டைக்கண் படவா.

நட்சேத்திரன் வசனம்.

ஆகா யாரோ ஒரு மனிதனுடைய சத்தங் கேட்கின்றது பேச்சினுடைய உருப்படியும் அவனிருக்குந்திக்குந் தெரியவில்லை இன்னம் ஒருதரம் கூப்பிடுகிறேன் சந்திரா சந்திரா சந்திரா.

கட்டியக்காரன் வசனம்.

சந்திரனையுங்காணோம் மந்திரனையுங்காணோமடா படவா.

நட்சேத்திரன் வசனம்.

காட்டின் கம்பங்கொல்லை ஒட்டுகின்றானோ பார்க்கிறேன்.

கட்டியக்காரன் வசனம்.

ஆரையா மேலேவந்துவிழுகிறாய் குருட்டுந்தனமாக.

நட்சேத்திரன் வசனம்.

நீ யாரவன் இங்கே திருட்டுத்தனமாக.

கட்டியக்காரன் வசனம்.

என்னையா உங்களுக்குக் கண்தெரியாதோ.

நட்சேத்திரன் வசனம்

நேக்கு பிறப்பே ஒருகண் புஷ்பரேகை.

கட்டியக்காரன் வசனம்.

மற்றொருகண் சஷ்பரேகையோடா மூடா.

நட்சேத்திரன் வசனம்.

அப்படியல்லடா ஒருகண் புடலம்பூப்போலே யிருக்கும் ஒருகண் விரலாழ முள்ளேபோகும்.

கட்டியக்காரன் வசனம்.

சரி சரி யிரண்டொன்றும் பொட்டையென்று சொல்லக்கூடாதோ இதில் வேறே கெட்டிக்காரத்தனமோ.

நட்சேத்திரன் வசனம்.

அதிருக்கட்டும் சந்திரனைக்கண்டாயோ சொல்லும்.

கட்டியக்காரன் வசனம்

சந்திரன் ஆகாசத்திலிருக்கிறது பாருங்கள்.

நட்சேத்திரன் வசனம்.

அந்தச்சந்திரனை நான் கேட்கவில்லையடா.

கட்டியக்காரன் வசனம்.

ஒன்னுக்குப்போய் குனிந்துபார்த்தால் தெரியும்.

நட்சேத்திரன் வசனம்.

அடா துஷ்டா அசிங்கமான வார்த்தைபேசாதே ஜலத்துக்குள்தெரியும் சந்திரன் பிரதிபிம்பந்தானே அதை நான்கேட்கவில்லையே.

கட்டியக்காரன் வசனம்.

பின்னெதை ஐயா கேட்குறீங்கோ சொல்லும்.

நட்சேத்திரன் வசனம்.

அயோத்தியாளும் அரிச்சந்திரனைக் கண்டாயோசொல்லும்.

கட்டியக்காரன் வசனம்.

அவுங்களை நீங்களேனையா தேடுகிறீர்கள்.

நட்சேத்திரன் வசனம்.

அரிச்சந்திரனுக்கும் எனக்கும் பால்யசினேகிதம்.

கட்டியக்காரன் வசனம்.

என்னசாமி அவுங்களுக்குமுங்களுக்கும் வாலிலேயா சினேகிதம் எவ்வளவுநாளாக.

நட்சேத்திரன் வசனம்.

அல்லடா பால்யத்தில் பள்ளிக்கூடச்சினேகிதம் அவனரசன் நானேழைப்பிராமணன் நான்கிழக்கேசிரங்கம்போயிருந்தேன்.

கட்டியக்காரன் வசனம்.

என்னசாமி உளறுகிறாய் உன் அப்பனாணையில் சீரங்கம்கிழக்கேயா வடக்கேயா.

நட்சேத்திரன் வசனம்.

வாய்தவறி சொலலிவிட்டால் அதுகூடவா மோசம்.

கட்டியக்காரன் வசனம்.

ஜாக்கிரதையாய் சொல்லும் பார்ப்போம்.

நட்சேத்திரன் வசனம்.

ஸ்ரீரெங்கம் வடக்கேதான் ஸ்ரீரெங்கத்தில்ரங்கநாதசுவாமி தெரிசனம்பண்ணினேன் அங்கிருக்கும்பட்டாசாரிகள் தீர்த்தம் திருத்துழாய் திருப்பவுத்திரம் திருமாலை இவையெல்லாம் எனக்கு மரியாதை செய்தார்கள் அதை அரசனுக்குக் கொடுத்துக் கண்டால் சன்மானம் செய்வாரென்றுவந்தேன் அரிச்சந்திரனைக் கண்டாயா சொல்லு.

கட்டியக்காரன் வசனம்.

சாமி நான்தான் அரிச்சந்திரன் இதுவரையிலுந்தெரியாதா

நட்சேத்திரன் வசனம்.

நீதானா அரிச்சந்திரன் எழுந்திரு பார்க்கலாம்.

கட்டியக்காரன் வசனம்.

இதோபாருங்கள் எழுந்திருக்கிறேன்நானே அரிச்சந்திரன்.

நட்சேத்திரன் வசனம்.

நீ அரிச்சந்திரனென்றால் சந்தேகமாயிருக்கிறதே.

கட்டியக்காரன் வசனம்.

சந்தேகத்தில் கொஞ்சமாவது சம்சியம் இல்லை.

நட்சேத்திரன் வசனம்.

கையில் மட்டையடிக்கிற தடிபோல்வைத்துக்கொண்டிருக்கிறகாரணம் என்ன அதைத் தெரியச்சொல்லு.

கட்டியக்காரன் வசனம்.

அது ராஜாக்கள்பிடிக்கும் செங்கோல் இதுதெரியாதா.

நட்சேத்திரன் வசனம்.

தலையில் தட்டுக்கூடையை கவிழ்த்துக்கொண்டிருக்கிற காரணம்என்ன இது இராஜாக்களுக்கு கிடையாதே.

கட்டியக்காரன் வசனம்.

தலையில் தலைப்பாகை வைத்துக்கொண் டிருக்கிறேன்.

நட்சேத்திரன் வசனம்.

உடம்பு யிளைத்துப்போவானேன் யேதுகாரணம்.

கட்டியக்காரன் வசனம்.

வாய்க்கி விளங்காதெல்லாம் புசித்துவைக்கப் போர்போல் இளைத்துப்போனேன்.

நட்சேத்திரன் வசனம்.

ஆனால் பிரசாதம்கொடுக்கலாமா சொல்லு.

கட்டியக்காரன் வசனம்.

இருங்கசாமி தீர்த்தம் எப்படியிருக்கும்.

நட்சேத்திரன் வசனம்.

தீர்த்தத்தை வாயில் விட்டுக்கொண்டால் குளுகுளுவென் றிருக்கும்.

கட்டியக்காரன் வசனம்.

திருத்துழா யெப்படியிருக்கும்.

நட்சேத்திரன் வசனம்.

வாயில்போட்டால் கொஞ்சம் விறுவிறுப்பாயிருக்கும்.

கட்டியக்காரன் வசனம்

பவித்திரம் என்பது சூத்தில் பிறப்படுமே அதுதானே.

நட்சேத்திரன் வசனம்.

அல்லவடா பாவத்தைப் போக்கும்படியான மோதிரம் கையில்போட்டுக்கொள்ளத் தக்கது.

கட்டியக்காரன் வசனம்.

ஆனால் போடுங்கள் பார்க்கலாம்.

நட்சேத்திரன் வசனம்

எதார்த்தவாதி வெகுஜனவிரோதி என்பதுபோல் நான் நிஜம்சொல்லுகிறேன் இந்தப்பவுத்திரம் அரிச்சந்திரனுகயிருந்தால் அவனுக்குமோதிரம் ஆள் மாருட்டமாகயிருந்தால் தேள்போல் கடிக்கும்.

கட்டியக்காரன் வசனம்.

சாமியாரே மோதிரமாயிருந்தால் ஒன்றும்பண்ணமாட்டேன் வேறே எதையாவது கொண்டுவந்து விரலில்போட்டுவருத்தப்படுத்தினீரானல் உம்மை லேசாய்விடமாட்டேன் பத்திரம்.

நட்சேத்திரன் வசனம்.

எங்கே உன்கையை நீட்டுபோடுகிறேன்.

கட்டியக்காரன் வசனம்.

இதோ போடுங்கள் கையைநீட்டினேன் சாமி.

நட்சேத்திரன் வசனம்.

நன்றாய் இருக்கிக் கட்டக்கூடிய நாலுவிரலுக்கும் சேர்ந்த ஒரேமோதிரம் பார்த்தாயா நல்லாயிருக்கிறதா.

கட்டியக்காரன் வசனம்.

ஐயோ சாமியாரே உயிர்போகுது வாங்கையா நான் கட்டியக்காரன் முட்டாள்த்தனம் செய்துவிட்டேனே.

நட்சேத்திரன் வசனம்.

அடிமே லடியடித்தால் அம்மியும் நகரு மென்பதுபோல் உள்ளது வெளியில்வந்தது பார்த்தையா.

கட்டியக்காரன் வசனம்.

சாமியாரே உங்ககாலிலே புழுத்தபுழுவாய் போறேன் கிட்டியைவாங்குங்களய்யா சாண்மீன்.

நட்சேத்திரன் வசனம்.

வாடாபயலே இப்படி கையைநீட்டு வாங்கிப்போட்டேன்.

கட்டியக்காரன் வசனம்.

நீ நாசமாய்ப்போக என்னத்தையோ வளைத்துக்கிட்டு கையில்மாட்டி கையையெல்லாம் எரிச்சல் எடுத்துக்கிட்டது.

நட்சேத்திரன் வசனம்.

அது இருக்கட்டும் இப்பவாவது அரிச்சந்திரன் எங்கே போயிருக்கிறான் சொல்லு.

கட்டியக்காரன் வசனம்.

அப்படி என்னையிந்த பாடுபடுத்தினாலும் அய்ய மகாராஜாவை என்னபாடு படுத்தமாட்டாய சொல்லமாட்டேன் போ.

நட்சேத்திரன் வசனம்.

அடே கட்டியம் மகாராஜாவாயிருந்தால் தூரவிருந்து மரியாதையாய்ப் பேசுவேன்.

கட்டியக்காரன் வசனம்.

மகாராஜா சரயு நதிக்கரையில் இருக்கிறுங்கோ அங்கே போய் தூரவிருந்து கைகட்டி வாய்பொத்திக்கொண்டு மரியாதையாய்ப் பேசவேண்டும் முன்பின்பேசினல் கையில்இருக்கிறது பார் பத்திரம்.

நட்சேத்திரன் வசனம்.

அடாகட்டியம் நான்போய்வருகிறேன் சாக்கிரதையாயிரு.

நட்சேத்திரன் விருத்தம்.

சரயுநன்னதியில்நிற்குஞ் சந்திரனென்போனுரு
விரவிவிலென்றன்முன்னே வேந்தனேவருவாயானும்
திரமிகும்விஸ்வாமித்திர தேசிகானுப்பிவைத்த
தரகனென்பேருநட்சேத் திரய்யனென்றறியலாமே.

மேற்படி வசனம்.

ஆரடா இந்தச் சரயுநதிக்கரையில் மனைவிமைந்தனோடு வந்திருக்கக்கூடிய அரிச்சந்திரனென்பவன் யான் விஸ்வாமித்திரர் தூதன் என்பேர் நட்சததிரய்யன் சீக்கிரம் என்முன்பாக வருவாய்.

அரிச்சந்திரன் விருத்தம்.

கருணையின்கடலேயென்னைக் காக்கவந்திட்டநாதா
மருவிலாவேதசாஸ்திரம் வண்மையாய்க்கற்றநீங்கள்
வரும்வழிபார்த்தேன்தேவா வரக்கண்டுதுயரந்தீர்த்தேன்
குருவேநின்பாதமீதில் கோடிவந்தனஞ்செய்தேனே.

அரிச்சந்திரன் சொல்கிற

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

அவனிதனில்புகழ்தவரு வந்தணர்கோவே
அடிமையுன்றனடிசரண மருள்தாருந்தேவே (அ)

தவமுனிவர்வரவிடுத்த தரகரேசாமி
தஞ்சமுன்றன்கஞ்சப்பாதந் தர்க்காரும்நேமி (அ)

கருணை தாருமிது சமயம் கமலப்பாதனே
கலங்குதென் றன்மனது மிகக் கன்யர்தனே (அ)

புவனயோக சித்தர்யாவும் புகழுமாமுனி
பொருள்தனக்குத் தூதரான புண்யனேயினி (அ)

மனமகிழ்ந்தேவா விங்கு வரவெதிர்கொண்டு
வந்தனமிகத் தந்தேனுங்கள் மலரடிகண்டு (அ)

வாடிடும்பயிர்க்குமாரி வாய்த்ததுபோலே
வந்தீர்காசி நகரஞ்சேர்வோ மகிழ்ந்தினிமேலே (அ)

அரிச்சந்திரன் வசனம்.

மாசில்லாத பூசுரர்குலத்திலவதரித்த மகானுபாவா உங்கள் வரவை எதிர்பார்த்து ரெம்பவு மனமகிழ்ந்தேன் யென் வறுமைகள்யாவும் நீங்கினது பிரபு வந்தனஞ்செய்கின்றேன்.

நட்சேத்திரன் வசனம்.

அரிச்சந்திரா யென்னை வந்தனஞ் செய்வதினுல் என்னபிரயோஜனம் யானேவனைப்பிராமணன் உன்தெய்வமாகிய ஸ்ரீரங்கநாதனைச் சேவித்தால் இகபரசாதனமுண்டு யிருக்கட்டும் நீமகாராஜனுக இருக்கவேண்டியது நான்வந்து வெகுநேரமாயிற்று விஸ்வாமித்திரர் கொஞ்சந் திரவியங் கொடுக்கும்படி அனுப்பியிருக்கிறார் அதைப்பெற்றுக்கொண்டு அவரைக்காயளவு சீட்டு உன்கைப்பட சுகஸ்தலிகிதமாக எழுதிக்கொடுத்தால் நான்போய்விடுவேன் சல்திசெய்.

அரிச்சந்திரன் வசனம்.

பிரபு விஸ்வாமித்திரர்க்கு நான் திரவியங்கொடுக்கவேண்டுமேதவிர அவரெனக்கு கொடுக்கவேண்டியதில்லை சுவாமி யேனிப்படி எனைச் சோதிக்கவேண்டும்.

நட்சேத்திரன் வசனம்.

அரிச்சந்திரா விஸ்வாமித்திரருக்கு நீரா பொன்தரவேண்டும் அது யெவ்வளவுபொன் சொல்லும்.

அரிச்சந்திரன் வசனம்.

பிரபு வட்டப்பாரையின்மீது மதகரியை நிறுத்தி அதின் மேல் அங்காரமுள்ள புருஷனைநிறுத்தி அவன்கையில் வெள்ளிக்கவண்கொடுத்து மாணிக்கக்கல்லைவைத்து சுழட்டியெறிந்தால் எவ்வளவுயரம்போகுமோ அவ்வளவுயரம் பசும்பொன் கொடுக்கவேண்டும் சுவாமி.

நட்சேத்திரன் வசனம்.

அரிச்சந்திரா நல்லதிருக்கட்டும் நான்யேழைப்பிராமணன் தள்ளாதகாலம் பொன்னைக்கொடு யான் போகவேண்டும்.

அரிச்சந்திரன் வசனம்.

சுவாமி விஸ்வாமித்திர முனிவரிடத்தில் யான் நாற்பத்தெட்டுநாள் வாயிதாவில் தருவதாகச்சொல்லிவந்திருக்கிறேன் அந்தவாயிதாவில் தங்களிடத்தில் கொடுத்துவிடுகிறேன் காசிப்பட்டணஞ்செல்வோம் வாருங்கள்.

நட்சேத்திரன் விருத்தம்.

நீதனையரிச்சந்திராமுன் னில்லடாவென்னைப்பாரு
மாதவவிஸ்வாமித்திர மாமுனிபொருளைத்தானே
யீதவறுதேவாங்க விடத்தில்வந்தேனிப்போ
யேதில்லையென்றாற்போது மிட்சணமேகுவேனே.

மேற்படி வசனம்.

அரிச்சந்திரா உன்னை யெவ்விடத்திற் கண்டேனோ அவ்விடத்தில பணம்வாங்கும்படியாக நியமித்திருக்கின்றார் ஆகையால் இப்பவேகொடு அப்படியில்லாவிட்டால் இல்லையென்றாவதுசொல் அரிச்சந்திரா.

அரிச்சந்திரன் விருத்தம்.

வரமிகும்விஸ்வாமித்திர மாமுனிகடனையானே
தரவொருதடையுமில்லை சாமியான்கடனைத்தீர்க்கும்
வரையுனதேவலாளாய் வருகுவேனட்டியில்லை
மரணமவந்தாலுமில்லை யென்றுரைவழங்கிட்டேனே.

மேற்படி வசனம்.

பிரபு விஸ்வாமித்திருக்குச செல்லவேண்டிய பொருளை யானில்லையென்றென்வாயினாலொருக்காலத்திலுஞ்சொல்லேன் என்பால் கிருபைசெய்து காசிநகரஞ் செல்ல வெழுந்தருளவேணும்.

நட்சேத்திரன் விருத்தம்.

கல்லது அடடா ரொம்ப நாணயமாகப்பேசி
செல்லுவோங்காசிக்கென்று செப்புவதழகோநீயுந்
துல்லபமானசெம்பொன் சுருக்கினிற்கொடுக்காவிட்டால்
இல்லையென்றொருபொய்சொன்னு லிவிடம்விட்டேகுவேனே.

மேற்படி வசனம்.

அடா அரிச்சந்திரா என்னவார்த்தை பேசுகின்றாய் நீவைத்த ஆளா நானுன்னுடன் வருவதற்கு ஆனதால் யிப்பொழுதே பொருள்கொடுக்கவேண்டும் அப்படிக்கேதுமில்லாத பட்சத்தில் இல்லையென்று சொல்லிவிடு.

அரிச்சந்திரன் விருத்தம்.

கோவதைகணூறுகொலை செய்யிலொருவேதன்
வேதியரைநூறுகொலை செய்யிலொருமாதர்
மாதர்களைநூறுகொலை செய்யிலொருபாலர்
பாலர்களைநூறுகொலை செய்யிலொருபொய்யன்.

பிரபு நூறுபசுக்களை வதைத்தவன் ஒருவேதியரை வதைத்தவன் பலனடைவான் அப்படி நூறுவேதியர்களைக் கொலைசெய்தவன் ஒருமாதரைக்கொலைசெய்தவன் அறியாத சிசுவொன்றைக் கொலைசெய்த பாவத்தை யடைவான் அப்படி நூறுசிசுக்களை வதைசெய்தவன் ஒருபொய்சொன்ன பாவத்தை யடைவானென்று வேதநூற்கள் முறையிடுகிறது ஆகையால் அடியேன் பொய்சொல்லமாட்டேன் பிரபு.

நட்சேத்திரன் வசனம்.

அரிச்சந்திரா அவ்வளவு சத்தியவந்தனென்று நேக்குத் தெரியாது உன்னுடன்கூட வருவதற்கு நேக்குச் சம்மதமில்லை இதோ ஒருகோடு கிழித்திருக்கிறேன் இந்தக்கோட்டைவிட்டுக் கடக்கக்கூடாது பொருளைக்கொடுத்துவிட்டப்புறஞ்செல் அரிச்சந்திரா.

அரிச்சந்திரன் விருத்தம்.

நாட்டரசியற்றும்போது நல்குரவில்லையத்தால்
கேட்டிலையென்றன்கால கெதியினாற்கடனும்பட்டேன்
காட்டினிற்பொன்னைக்கேட்டு கண்டித்தாலார்கொடுப்பார்
கோட்டினில்மரிக்கவேண்டாங் கொடுக்கிறேன்காசிசேர்ந்தே.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

கோட்டிலென்னை நிறுத்தலாகுமா இந்தக் (கோ)

அநுபல்லவி.

தாட்டிகமுனிநாதர் சம்மதமிதோகாதா
காட்டிலெனதுமனம் வாட்டமுறவேசெய்து(கோ)

சரணங்கள்.

எள்ளளவுமனது கள்ளமறியேன்நீது
வள்ளலேநானுமது வாய்மைதவரொண்ணாது(கோ)

நீதிமுறையறிந்த வேதியரேநீரிந்த
வாதனைசெய்தாலேழை யேதுசெய்குவேனிந்த(கோ)

காசிநகரஞ்சென்று கோசிகமுனிக்கன்று
பேசியபடிருணம் பூசுரரேதருவேன்(கோ)

அரிச்சந்திரன் வசனம்.

தேவரீர் என்னை யிந்த அடவியில்நிறுத்தி கொடியதுன்பஞ் செய்தால் பொருள் வந்துவிடுமோசாமி அடியேன்பேரில் கிருபை செய்து காசிமா நகரஞ்செல்ல திருவருட் செய்யவேண்டியது பிரபு.

நட்சேத்திரன் வசனம்.

அரிச்சந்திரா வீண்வார்த்தைபேசுவதிற் பிரயோசனமில்லை பொருளைக் கொடுத்துவிடும்பிள்ளா யரிச்சந்திரா.

இராகம்-காம்போதி-தாளம்-சாப்பு.

பல்லவி.

தயவில்லையோமெய்யா சாமிசொல்லையா (தய)

அநுபல்லவி.

துபரஞ்செய்வதுமழகோ நீர்சொல்லையா (தய)

குறைவுகளென்னசெய்தேன் கோசிகமுனிநாதா
மறையவர்குலவிளக்கே வர்மமோவென்மேல் (க)

காட்டிலேவதின்றுசெம்பொன் நேட்டாவருமோதுன்பம்
தாட்டிகமேரேர்செய்குவீர் தர்மமோவென்மேல் (உ)

சொன்னகெடுவின்படி பொன்னைசெலுத்துவதில்
என்னதடையுன்னுடையனே என்மேலுனக்கு (௩)

அரிச்சந்திரன் வசனம்.

நட்சேத்திர புண்யவானே இந்தக் கோட்டை விட்டு நீங்க வேண்டியது வெயிலோ அகோரம் என்றால் பொறுக்கமுடியாது தயவு செய்யவேண்டும்.

நட்சேத்திரன் வசனம்.

அரிச்சந்திரா உன்மனம்போல் இந்த கோட்டைவிட்டு நீக்கிவிட்டேன் பணத்தைகொட்டு சுல்தி.

அரிச்சந்திரன் வசனம்.

சுவாமி கோட்டைவிட்டு நீக்கினவுடனே பொருளைக்கேட்டால் யென்ன செய்வேன் நான் சொன்ன வாயிதாவில் கொடுக்காவிடில் பாதாரத்தைவிரும்பின பாதகத்தை யடைகுவேன் நிந்தனை வேண்டாம் சுவாமி.

அரிச்சந்திரனை

அண்ணாந்தாள் பூட்டும்பிறயாகம்.

நட்சேத்திரன் விருத்தம்.

தந்திரவார்த்தையென்முன் சாற்றுவதழகோசெட்டி
இந்திரஜாலக்கார னெவ்பாதையுணர்ந்தேன்வாடா
எந்திரம்பாருமொற்றைக் காலினிலிருந்திவைத்தேன்
நிந்தைசொல்லாதேயப்பால் நீங்காமல்பொன்னைக்கொட்டே.

மேற்படி வசனம்.

அரிச்சந்திரா மயிலேமயிலே இறகுகொடென்றால்கொடாது இதோ ஒற்றைக்காலை தூக்கு ஒற்றைக்காலால் நில்லு: பணத்தைகொடுத்துவிட்டு மறுஜோலிபார் அரிச்சந்திரா.



அரிச்சந்திரன் விருத்தம்.

மறைந்திறம்பாதவாய்மை மன்னர்தங்குலத்தோனிதிக்
துறைதிறம்பாமலித்த தொல்லுலகாண்டவேந்தன்
கறைதிறம்பாதகண்டன் கருணையாலிந்நாளில்
மறைமுனிதூதனென்னை வருத்தம்பீர்படுத்தலாமோ.

இராகம்-கமாசு-தாளம்-ரூபகம்.

பல்லவி.

இத்தனைகோபமா இத்தனைகோபமா
ஏழைநான்ஏழைநான் ஏழைநான் (இ)

அநுபல்லவி.

ஒற்றைக்காலிலென்னை வைத்துநிறுத்துவதால்
சித்தங்கலங்குதையய்யோ ஐயய்யோஐயய்யோ (இ)

சரணங்கள்.

தாமதமின்றிக்காசி தன்னிற்சேர்த்தவுடனே
மாமுனிகடன்தீர்க்குறேன் தீர்க்குறேன்தீர்க்குறேன் (இ)

செய்தகொடுந்துன்பம் செய்தாலுமேழைநாங்கள்
ஐயாபொன்னிங்குவருமோ வருமோவருமோ (இ)

இராஜன் வசனம்.

பிரபு கோட்டில்நிறுத்தினது தாளாமல் தங்களைரெம்பவுங் கேட்டுக்கொண்டதற்காக இப்போது என்னை ஒற்றைக் காலில் நிற்கும்படி செய்தீர்கள் என்னால் சகிக்கமுடியவில்லை கிருபைகூர்ந்து இதைநீக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

நட்சேத்திரன் வசனம்.

அரிச்சந்திரா உன் வீண்வசனத்தைப்படிக்கிறுப் ரொக்கத்தைக்கொட்டிவிட்டால் உன்ஜோலிக்கு எவன்வருவன் நோக்குத்தெரியாதா கொட்டடா கொட்டு.

சந்திரமதி விருத்தம்.

முறையொடுபலநூல்கற்ற முதல்வனேயுங்கட்கென்ன
குறைவுகள்செய்தோமிந்தக் கொடுவனந்தனிலேயென்றன்
இறைவனை யொற்றைக்காலி லிருத்துவதழகோசாமி
மறையவாகோபம்வேண்டா மனமகிழ்ந்தெடுக்கசொல்வீர்.

மேற்படி வசனம்.

சாமி சகல சாஸ்திரங்களையு முணர்ந்த பிரபுகளாக இருந்தும் இப்பேர்க்கொத்த அனீதம் செய்வது தருமமா சுவாமி.

நட்சேத்திரன் வசனம்.

நீயாரடி நோக்கு யென்னதெரியும் ஆத்திரமிருந்தால் பணத்தைக்கொடுத்துவிடு பயித்தியக்காரி அப்புறஞ்செல்.

அரிச்சந்திரன் வசனம்.

பிரபுநேரமாகிறது காசிதேசம்செல்லவேணும் என்கால்கள் ரெம்பவும் நோகிறது ஒற்றைக்காலில் வைத்ததை நீக்கும்சாமி.

நட்சேத்திரன் வசனம்.

இதோ ஒற்றைக்காலில்வைத்ததை நீக்கினேன் பணத்தைக் கொடு லேசாய் உன்னை விடமாட்டேன்.

அரிச்சந்திரன் வசனம்.

பிரபு காசிப்பட்டணம் சென்றவுடன் கட்டாயம் பொருள் தருகிறேன் பிரபுபோவோம் வாருங்கள்.

நட்சேத்திரன்விருத்தம்.

விடுவிடுபயித்தியக்காரா வேந்தனேருணத்தைக்கையில்
கொடுகொடுகெட்டியாரிந்தை கூறநீவேண்டாமிந்த
கடுமையன் றுருந்தாநான் கழுத்தினில்பூட்டிவிட்டேன்
ஜடுதியிலெனக்குப்பொன்னை தகுயப்புரத்தில்போடா.

மேற்படி வசனம்.

அரிச்சந்திரா புத்தியில்லாமல் காசிகாசியென்றுபேசுகிறாய் இதோ உன்கழுத்தில் அன்றுநாள் பூட்டினேன் பொன்னைக் கொட்டடா கொட்டு.

அரிச்சந்திரன் விருத்தம்.

ஐயனே முனிவர் தூதா அடியனே யிந்த வண்ணஞ்
செய்யுவதழகோ வென்றன் சித்தத்திற் கேற்கைதானோ
மெய்யதுபகருகிக்க வேதனைசகிக்கமாட்டேன்
கைகுவித்திட்டேனன்றுந் தாளைநீகமற்றுவீரே.

அரிச்சந்திரன் சொல்கிற தரு.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஏழைகள் மீதிலுமக் — கித்தனைகோபமா
என்னபிழைசெய்தேன் — மறையோரேநான் (ஏ)

அநுபல்லவி.

காளமீசன் — கருணையிப்படியாச்சோ
கடனுமக்கில்லையென்று — சொன்னேனேசாமி
கடனுமக்கில்லையென்று — சொன்னேனே (ஏ)

சரணங்கள்.

அடைக்கலமாகவைத்தோர் — பொருளைப்பகரிந்து
அனியாயஞ்செய்தீரே — உபசரித்து
தடைக்குள்ளடங்கும்பாம்பை நடிகொண்டடித்ததென
தயங்கியலுதிப்போலே — மயங்கவிட்டிரிக்காலே (ஏ)

பொன்னாபரணமணி — புனைந்தகந்தரோக
புண்ணியமனையன்றுந்தாள் — பூட்டிமீர்வெகுவாக
சொன்னபடிக்கிமுனி — பொன்னையளிப்பேனினி
தொந்தரவுசெய்யாதீர் — சிந்தைவருந்தப்படி (ஏ)

மேற்படி வசனம்.

பிரபு நாங்கள் யேழையென்று நன்றாய்தெரிந்தும் இந்த கொடியவனைத்தனில் பொன்னைக்கேட்டு அண்ணாந்தாளைப்பூட்டி இஷ்டிரஞ்செய்வது சரிபாசாமி.

சந்திரமதி விருத்தம்.

அஞ்சமிலாதுநாய்கள் தயங்குவதென்னாய்ப்பார்த்து
கொஞ்சமாவதிரக்கங் கொள்ளாமலே போவிந்த
வஞ்சகஞ்செய்தாலென்றன் மன்னவன் சகிக்கமாட்டார்
அஞ்சலஞ்சலென்கின்சாமி யன்றுறுதியே செய்குவீரே.

இராகம்—காப்பி—தாளம்—ஆதி.

பல்லவி.

சாமிதயவுசெய்குவீர் சாமிதயவுசெய்குவீர் (சா)

அநுபல்லவி.

மாமுனிவர் ஆதமேர
சாமிதயவு செய்குவீர் (சா)

சரணங்கள்.

தஞ்சமில்லாமலெ நாங்கள்
தயங்குகிறும்சாமி யுங்கள்
கஞ்சமலர்ப்பாதம் நம்பினேங்காளும் (சா)

நாடிழந்து காடுவந்து
நாதனை கடனுக்கொத்து
வாடினோம்நாங்களும் வெகுவாக (சா)

வேதியர் குலக்கொழுந்தே
வேண்டினே னுமையிருந்தே
வாதனைசெய்யாதிரிங்கு பொன்வருமோ (சா)

தங்கள்சொல்லை மீறிடோம்
சத்தியங்கள் தவறிடோம்
எங்கள்மேலுமக் இந்தவாதுயேது (சா)

பணிந்தேனுன் வெகுவாக
பத்தாவின்மனது நோக
பணித்தஅன்னுந்தானே வாங்குமையா (சா)

மேற்படி வசனம்.

தேவரீர் நாங்கள்வந்திருக்கும் இயல்புமுற்றிலும் தெரிந்திருந்தும் இப்படிக்கி வாதிப்பது தர்மமல்ல பெண்பிராணேசன் கழுத்திலேபாட்டிருக்கும் அன்னுந்தானே வாங்கிவிட வேண்டியது சாமி.

நட்சேத்திரன் வசனம்.

சந்திரா உங்களாலே நமக்குரெம்ப நஷ்டமாயிருக்கின்றது யென்பணத்தை கொடுத்துவிட்டால் இதோ ஓடிப்போகிறேன் அப்படிக்கொடுக்காமல் நீயொருபக்கம் இவளொருபக்கம் சாமின்முழமினென்று வெருமெனவாதிக்காதே ஒக்கிபோடா போ.

அரிச்சந்திரன் விருத்தம்.

இப்படிக்கொடுமையாக வென்னைநீர் வருத்தஞ்செய்தால்
எப்படிசகிப்பேனையா வேறைநானுமக்குச்செய்த
தப்பிதமெதுவோகாணேன் தவணையிற்நமக்குச்செம்பொன்
செப்பியபடிக்குத்தாரேன் சித்தம்வைத்தெனைக்காப்பீரே.

இராகம்-உசேனி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஏதுவென்மே லிந்தவாது   சாமி
யிறையவனு மருளிதுவோ   மறையவரே
கிருபை   செய்வீர் (ஏ)

அநுபல்லவி.

சாதுவேயோக   முனிவரவிடுத்து
சாமிரென்னைத்   துயரப்படுத்த
சதிபோமிதியோவடியேன் விதியோமதியோகுறியேன்
தயங்குறேன்மனம்   வெகுவாக
மயங்குறேன்கந்தரம்   நோக (ஏ)

சரணங்கள்.

தன்னுயிர்போலே   மன்னுயிர்காக்குந்
தன்மையானது   தங்களுக்கேயேற்கும்
பன்னகத்தின்வாய்   பட்டதேரையாய்
பரதவிக்குறேன்   பார்தனிலையா
பாருந்திருந்துயரைக்   காருமடியாருயிரை
பழுவினைவிதுவோவாவையாகமுலினைபணிந்தேன்மெய்யா (ஏ)

தவணையிற்செம்பொன்   றருவேனுனை
தற்காத்தருளும்   புண்ணியவானே
அவமானஞ்செய்தா   லென்னசெய்குவேன்
அடியேனெவ்வண்ண   மாகவுய்குவேன்
ஐயாசெய்யாவர்மஞ்   செய்யாதினியுந்தர்மம்
அந்நாமானதோர்நாடு   வந்திடுவீர்காசிநாடு (ஏ)

மேற்படி வசனம்.

நட்சேத்திர புண்ணியவானே பொன்னையிவ்வண்ணமாக இம்சைசெய்வதினால் இவ்விடத்திற்பொன்கிடைக்குமா காசிநகரஞ் செல்லும்படி கிருபைசெய்து என்கழுத்திற் போட்டிருக்கிற அண்ணாக்காளை நீக்கும் சுவாமி.

நட்சேத்திரன் வசனம்.

அரிச்சந்திரா இதோ அண்ணாக்காளை நீக்கிவிட்டேன் பொன்னை சல்திகொடு வீண்வார்த்தை சொல்லக்கூடாது.

அரிச்சந்திரன் வசனம்.

பிரபு கொஞ்சங் கிருபைசெய்து காசிநகரஞ் செல்லுவோமெழுந்திருங்கள் சுவாமி தங்கள்மனம்போல் தவணைக்குள்பொன்னைக் கொடுப்பேன் நாதா.

நட்சேத்திரன் விருத்தம்.

பேசியதெல்லாங்கேட்டு பித்தனைப்போலேயும்
காசியிற்சென்றுசெம்பொன் காவலாதருவேனென்றாய்
மாசிலாமுனுசநய வசிஷ்டர்மேலாசைவைத்தேன்
தேசமாய்ப்பொன்னையிங்கு நிமிஷத்திற்றருகுவாயே.

மேற்படி வசனம்.

அரிச்சந்திரா நன்றாயிருக்கிறது உன்னுடைய வெட்டிவார்த்தைபேசாதே உன்குருவாகிய வசிஷ்டர்பேரிலாணைவைத்திருக்கிறேன் பொன்னைக்கொடுத்துவிட்டு மறுசொலி பாரடாபார்.

அரிச்சந்திரன் விருத்தம்.

அருமறையுணர்ந்த தா வையமேலமுனிக்குச்செம்பொன்
தருகிறதில்லையென்று நாக்கம்யால்செய்ததுண்டோ
வருமஞ்சாதித்தேதவென்னை வனத்தினின்மறுத்துச்சத்ய
குருவின்மேலாணைவைத்தீர் குற்றமென்செய்தேன்சாமி.

இராகம்-இந்துஸ்தானி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

தருமநெறியிதுவோ நாகரேநட்சேத்திரய்யர்
காகரேதவமுனிநாதரே தயாநிதியோகமுனிநாதரே

குருவின்மேலாணைவைத்தீர் கொடுமைகளென்னசெய்தேன்
கொடுமைசெய்தேனோமுனிநாதரே யடிமையானையாமுனிநாதா
வாதனைசெய்வதழகோ மறையோர்சிகாமணியே
மறையோரே யையரே முனிநாதரே முறைதானோநீதரேமுனிநாதரே
நீதிமுனிகடனையான் றிருணபமாய்த்தருமுன்னம்
நீதாவினோதாமுனிநாதரே போருதோபொற்பாதமுனிநாதரே

மேற்படி வசனம்.

நட்சேத்திரபுண்ணியவானே அடியேனைத் தாங்கள் என்ன ஆக்கினைசெய்தாலுந் தகும் எனது குலகுருவாகிய வசிஷ்டர்பேரில் ஆணைவைத்திருப்பது தருமமா சுவாமி.

நட்சேத்திரன் வசனம்.

அரிச்சந்திரா யென்னசாமார்த்தியங்கற்றாய் நான் எவ்வளவோ தாரதன்மையாகக் கேட்க காசிகாசி தோசி யென்ற வார்த்தையை உச்சரித்து என்னை ஏமாற்றிவிட யெத்தனித்திருக்கின்றாய் நான் லகுவில் விடேன் பொன் கொடுத்து அப்பால் செல்.

அரிச்சந்திரன் விருத்தம்.

மறையவரேயெனைவாளா லிருகூறாக்கி
வனத்திலுள்ளபேய்களுக்கு மகிழ்ச்சியாக
இரைகொடுத்துவிட்டாலுந் தோஷமில்லை
யென்குருமேலாணையென்றே யியம்பலாமா
குறைவேதுசெய்தேனோ வுங்களுக்குக்
கோபங்கொண்டீரெனது குருமேலாணை
விரைவாகநீங்கியென்னை யாள்கவென்று
விதித்திட்டேன்நின்பதத்தைத் துதித்திட்டேனே.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

ஐயரேயடியேனை யணுவணுவாய்கொய்வீரன்றி
மெய்யனங்குருமேலாணை விதிப்பதழகோசொல்லவேணும்
கைகுவித்தேனுமது கழலிணைப்பணிந்தேன்பாரும்
செய்யாநீரிக்கொடுமை தியங்குதெனதுயர்தீரும்

தவமுனிகடனையான் தாரதில்லையென்றேனேசாமி
அவமானஞ்செய்தாலுந்த னடியேனெப்படியுய்வேனேமி
சித்திரவதைகளென்னைச் செய்தாலுங்குற்றமில்லைதேவா
சத்தியகுருமேலானை தான்வைக்கலாமோநீக்கிக்காவா

அங்கமும்பதறுதே யாவியுஞ்சோறுதேஅய்யா
சங்கடந்தவிழ்த்தென்னைத் தாளைவேணும்நீர்மெய்யா
தவணையிற்பசுஞ்செம்பொன் தருவேனட்டியில்லாமல்தானே
புவனத்தோர்புகழ்ந்திடும் பூசுரரேபுண்ணியவானே

வனத்திலெலிணையிப்படி வருத்தப்படுத்தவேண்டாமைய்யா
யினத்தைப்பிரிந்தமான்போ லேங்குறேன்திருவருள்செய்வாய்

மேற்படி வசனம்.

பிரபு வென்னை கூர்மையுள்ள வாளாயுதத்தால் றவைறவையாய் அறுத்தபோதிலும் அடியேன் கிஞ்சிற்றேனும் கவலைப்படேன் என்குலகுருவின்மேல் தாங்களாணை வைத்ததினால் என் மனமானது நோகின்றது கிருபைசெய்து ஆணையை நீக்க வேண்டும் சாமி.

நட்சேத்திரன் விருத்தம்.

அடடாவென்முன்புநின்றே யழுகிறுயறிவேனுன்னை
விடடாதந்திரங்களாக வெகுவாகச்சொல்லவேண்டாம்
கொடடாவென்றெக்கமெல்லாங் கொடுத்திடமுடியாதென்றால்
நடடாவோர்பொய்யைச்சொல்லி நானிதோசெல்லுவேனே.

மேற்படி வசனம்.

அரிச்சந்திரா உன்னையறிவேன் ரொம்பசாலத்தொழில்கள் செய்வதினால் பிரயோசனமில்லை பொன்னைச் சீக்கிரத்தில்கொடுத்துவிட்டு அப்பால் செல்லடா கொடிய பாவி.

சந்திரமதி விருத்தம்.

ஏதுமோர்கெதியில்லாத வேழையென்றறிந்துமிந்த
வாதனைசெய்வதேது மறையவர்குலத்திலுற்ற
நாதனேமுனிவற்கன்று நவின்றதோர்தவணைக்குள்ளே
நீதமாய்பொன்னைத்தாரோம் நீக்குவீராணைஸ்வாமி.

சந்திரமதி சொல்தரு.
இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.
பல்லவி.

சாமிதயவுசெய்குவீர் தஞ்சம்வேறில்லை
சாமிதயவு செய்குவீர். (சா)

அநுபல்லவி.

பூமிபுகழும்ராஜ போஜனேயாதோஷம்வேண்டாம் (சா)

சரணங்கள்.

மாமுனிவர் தூதரே மறைபுகழும்நீதரே
தாமதமன்றிச்செம்பொன் தருவேன்தவணையிலுன்
தஞ்சம்கலங்குதெங்கள் நெஞ்சஞ்செய்யாதீர்
வெகுவஞ்ச மஞ்சலிசெய்தேன். (சா)

அரசுசெல்வமிழந்து அய்யோத்திநாடிழந்து
பரதேசிபோலநாங்கள் மறுதேசம்வந்தோம்நீங்கள்
பாரும்பிடிவாதத்தைத் தீரும்அடியார்களைக்காரும்
காசிநகரம்வாரும் சேருவோமினி. (சா)

முன்செய்தவினையாலே மோசம்வந்ததிக்காலே
யென்னசெய்வோமினிமேலே யேங்கியழுவதாலே
யேதுயெங்கள்மீதிலிவ்வாது செய்திடவுமொண்ணுது
பாதுகாத்திடுந்தீது சாதுவேஅய்யா (சா)

மேற்படி வசனம்

சாமி என்பிராணேசனே யிக்கோலம் செய்வதினுல் தங்களுக்குயென்னலாபம் தயவுசெய்து எங்கள் குருவின்மேல் வைத்த ஆணையைநீக்கும் காசிதேசம் செல்லுவோம் தயவுசெய்ய வேண்டியது நாதா.

நட்சேத்திரன் வசனம்.

அரிச்சந்திரா யேது உன்பெண்சாதியும் நீயு மெண்ணியிருக்கிற வெண்ணத்தை யோசித்தா லென்னை ஏமாற்றிவிடுவதாகத் தெரிகிறதுபொன்கொடுக்கிறுயா இல்லையா ஒருவசனஞ் சொல்.

அரிச்சந்திரன் விருத்தம்.

அடிக்கடிபொய்சொல்லென்றே யடிக்கிறீர்தாவித்தாவித்
துடிக்கிறீர்முனிவர்முன்னே சொன்னசொல்மாறமாட்டோம்

படியிடந்தாலுமண்டப் பரப்பிடிந்தாலும்பேரு
முடியிடந்தாலும்பொய்யை மொழிவனென்றனங்கொள்ளாதீர்.

மேற்படி வசனம்.

ஐயனே அடியேன் மீதில் சற்றேனும் மனமிரங்காதா அடி யேனிருக்கின்ற வேற்கைதெரியாதா கிருபை செய்து ஆணையை நீக்கும் காசிநகரைநோக்கிச்செல்லுவோம் நாதா.

அரிச்சந்திரா ரொம்ப வருந்துவதினால் உன் குருவின் மேல் வைத்த ஆணையை விலக்கிவிட்டேன் இனியாவது யெளிய பிரா மணன்பேரில் தயவுசெய்து காக்கவையாமல் சீக்கிரம் திரவியத் தைக்கொடு பார்ப்போம்

அரிச்சந்திரன் வசனம்.

பிரபு தாங்களறியாத யோசனை ஒன்றுமில்லை இந்தஆரணி யத்தில் யென்னசெய்குவோம் காசிநகரஞ்சென்று கொடுப்பதில் யெவ்வளவேனும் தடைசெய்யேன் நாதா வாருங்கள் செல்லு வோம்.

நெற்றியில் கல்வைக்கிறபாகம்.

நட்சேத்திரன் விருத்தம்.

படிக்குள்ளிந்திரஜாலப் பார்த்திபனியேகண்டாய்
மடிக்குளேபரங்கிக்காயை மறைக்குறுயறிவேனின்று
நடிக்குறுப்நெற்றிமீது நாட்டினேன்கல்லையிந்த (டா.
அடிக்குள்நில்லகலவேண்டா மரும்பொன்னைக்கொடுத்துப்போ

கட்டியக்காரன் வசனம்.

அரிச்சந்திரா யென்னவார்த்தை உரைக்கின்றனை சொன்ன தைச்சொல்லாமல் திரவியத்தைக்கொடுத்துவிட்டு அப்புறஞ்செ ல் உன்நெற்றியில் கல்லைவைத்திருக்கின்றேன் சீக்கிரத்தில் கொ டுப்பாய் சந்திரா.

அரிச்சந்திரன் விருத்தம்

யானைமேலேறியிந்த வம்புவியாண்டவென்னைப்
பூனைபோல்நின்றுதானும் புலம்பிடவிடுத்தாயீசா
மானவன்முனிவர்தூதர் வதைக்குறூர்கல்லைவைத்து
நானிதற்காளோவையா நம்பினேனெனைக்காவாயே.



மேற்படி சொல்தரு.

இராகம்-எதுகுலகாம்போதி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

ஈசாவுன்னடியிணையென்று மறவாமலேயிருந்து
யென்னபலனடைந்தேன் பன்னகாபரணயானுகந்து

கல்லோநின்மனமைபா கரையாததுவென்னகண்டேன்
கைவிடலாகாதென்னைக் காப்பதுகடனென்றுகண்டேன்

கவுசிகமுனிதூதர் கஷ்டப்படுத்துறார்காரும்
கையில்பொருளில்லாமல் கலங்குறேன்கெதியில்லையாரும்

நெற்றியில்கல்லைவைத்து நிந்தனைசெய்குறரையா
நிருணயணம்தவறினேன் சொன்னேனேமறுமொழிமெய்யா

பதியுமாயிழந்து பரதேசியாகினேன்பாரும்
பண்ணவர்புகழ்ந்திடும் பரமனேயெனக்குன்னருள்தாரும்

தேசுமெனவந்தோர்கள் சிந்தைநோகவும்செய்திட்டேனோ
செங்கோல்முறைதவறி தீங்குகள்செய்யத்துணிந்தனோ

மனைவிமைந்தனுமந்திரி மயங்குறேயென்னைப்பார்த்து
வாய்விட்டழுதுகொடும் வனத்தினிலேயோமுகம்வேர்த்து

மேற்படி வசனம்.

கைலாயபதி யின்னம் உன் மனதிரங்கலேயா யான் யென்ன அனர்தம்செய்தேன் இப்பேர்க்கொத்த கஷ்டதிசைக்காளாகவிட்டாயே நானென்னசெய்வே னிக்காட்டில் சிவமே.

சந்திரமதி விருத்தம்.

அந்தரமானகாட்டி லடிக்கொருதுன்பஞ்செய்து
தந்திடும்பொன்னையென்றல் தரகரேயென்னசெய்வோம்
சிந்தையும்வருந்துதென்றன் செம்மலைக்கொடியதான
நிந்தனைசெய்யவேண்டாம் நெற்றிக்கல்நீக்குவீரே.

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

மனதிரங்கலையாசாமி மாதவமாமுனி தூதரே சற்றேனும் (மன)

அநுபல்லவி.

சினத்துடனிந்த வனத்திலெங்களை
செய்யாதீரிக்கோர மையாகாசிதூரம் (மன)

சரணங்கள்.

நாட்டையிழந்து காட்டில்வந்து
நாதனேகட ஞமேலெமெலிந்து
வாட்டமாகினோ மனமிருந்து
வஞ்சங்களில்லை யஞ்சலிசெய்தேனின் (மன)

தவணையில்செம்பொன் தருவதிலட்டி
தானுண்டோபுண்ணிய வானேநீர்திட்டி
அவமானஞ்செய்வ தழகோவெங்கட்கு
ஆறுங்கெதியில்லைத் தீருமெங்கள்தொல்லை (மன)

மெய்தவறுவென் வேந்தனைரிந்த
வேதனைசெய்ய வேண்டாமிருந்தே
செய்யாதகோரங்கள் செய்குநீரேயிந்த
தீவினைகாணவோ பாவிநான்பிறந்தேன் (மன)

மேற்படி வசனம்.

சாமி நட்சேத்திரபுண்ணியவானேயென் பிராணேசனுடை யமெய்கலங்க இப்படி அடிக்கொரு துன்பஞ்செய்தால் நாங்கள் எவ்வண்ணஞ் சகிக்கப்போகின்றோம் தயவு செய்து நெற்றிக்கல் லை நீக்குங்களையனே.

அரிச்சந்திரன் விருத்தம்

சொல்லதுமாறியென்ன துரோகங்கள் செய்தேனிந்தக்
கல்லையென்நெற்றிமீதில் கர்த்தனேவைத்துவிட்டீர்
வல்லபாவுனக்குச்செம்பொன் வழுத்தியதவணைக்குள்ளே
துல்லபமாகத்தாரேன் துயரந்தீர்த்தெனையாள்வீரே.

மேற்படி தரு.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-சாப்பு.

பல்லவி.

நிந்தனைவேண்டாம் நெற்றிக்கல்லைநீக்கும். (நி)

அநுபல்லவி.

சந்தன்பாதகெதி யுற்றதுணை கதி
யென்றனையாளுவீ ரேனமுநானையா (நி)

சரணங்கள்.

சத்தியமொருக்காலுந் தவறேனுன்மென்மேலும்
கர்த்தனேயுன்றன் கடமைதவறேனையா. (நி)

விதியின்பயனோவென்றன் மேன்மைதவறிவந்தேன்
மதிவருந்தவகோரம் மறையவரேசெய்குறீர் (நி)

செய்யாதகொடுமைகள் செய்தமோவடிமைகள்
ஐயனேயென்றனை யாண்டருள்வருன்பாரம் (நி)

மேற்படி வசனம்.

பிரபு யென்னை யிவ்விடத்தில் கொடிய இம்சைசெய்து நிறுத்தினால் நானெப்படிக்காகிசென்று தவணையில் கடனைத்திர்ப்பேன்யென்வார்த்தை தவறாது நெற்றிக்கல்லே மேக்கும்படி திருவருள் செய்யும் நாதா.

நட்சேத்திரன் விருத்தம்

சலோத்துடுத்துரெம்ப வேங்கின்றழுவதாலே
ராசமேவருவதென்ன நற்பயனென்றுமில்லே
மோசம்செய்வாயென்று முக்கியந்தெரிந்துகொண்டேன
கோசிகமுனிவன்செம்பொன் கொடுத்தப்பால்விலகிப்போடா.

மேற்படி வசனம்.

அரிச்சந்திரா யென்னஜாலம் செய்குறு இதினாலென்னபிரயோஜனம் வரும் கடவுள் பணத்தைக் கொண்டுவந்து கொடப்பாரா ஜாலம்செய்யாமல் பணத்தைக்கொடுத்துவிட்டு அப்புறம் செல்லடா துரோகி.

அரிச்சந்திரன் விருத்தம்.

சாலம்யான்செய்யவில்லைத் தவமுனிதூதாசாமி
பாலகன்மனைவிமந்திரி படுகின்றதுயரைப்பாரும்
சிலநாட்காகிசென்று செலுத்துவேன்கடனையுன்றன்
காலினில்வீழ்க்தேனென்னைக் காப்பதுன்கடமைஐயா.

இராகம் காபி தாளம் சாப்பு.

பல்லவி.

தயவுசெய்குவீருன்றன் கஞ்சம்
தயங்குதையோ தமியே னெஞ்சம் (தய)

அநுபல்லவி.

கயமும்பன்றி கடுவாய் சூழும்
காட்டில்வாட்டி கோட்டிமீர் செய்குவீர் (தய)

சரணம்.

சத்தியந்தவறே னையா
சாமிநேமி தாமதங்கள் செய்யாதீர் (தய)
அந்தணர்குல விளக்கே
ஐய்யாமெய்யாசெய்யாதீ ரிக்கொடுமை (தய)
கலங்குதையோ வென்றன்மனம்
காரும்பாரும்தீருமித் துயரத்தை (தய)
கல்லைவைத்துத்தொல்லை செய்தீர்
கர்மம்வர்மந்தர்மமையா வென்மீதில் (தய)

மேற்படி வசனம்.

நட்சேத்திரபுண்ணியவானே யிந்தச்சண்டாளன்மீதில் யேன் தங்களுக்கிவ்வளவு கொடுமை நானென்னவதீதஞ் செய்தேன் தயவு செய்து நெற்றியில் வைத்த கல்லை நீக்கிவிடுங்கள் சாமி காசிமாநகரஞ் செல்லுவோம்.

நட்சேத்திரன் விருத்தம்.

அனியாயமானவிந்த வரவுவெங்கரிகள்சூழ்ந்த
தனியானவனத்திலுாடுந் தன்னுடும்வரவுமாட்டேன்
பனிமலர்க்கரங்கொண்டாரீ பாரிதோகிட்டிபோட்டேன்
இனிஒன்றுஞ்சொல்லவேண்டா மிக்கணம்ரொக்கங்கொட்டே.

மேற்படி வசனம்.

அரிச்சந்திரா உன்னைசாமான்யமாகநினைத்தால் என்பணம் போய்விடும் இதோ உன்னெற்றியில்வைத்த கல்லைநீக்கி உன்கை யில் கிட்டிபைக் கட்டினேன் ரொக்கத்தைக் கொடுத்துவிட்டு அப்பால் செல்லடா பாவி.

அரிச்சந்திரன் விருத்தம்.

சங்கரசிவனேயோக சதாசிவசம்போவெங்கள்
பொங்கரவணிந்தநாதா புராதனுகருணைசெய்வாய்
செங்கையிற்பிட்டிகட்டிச் சிவனைவதைத்திட்டாலும்
இங்கனங்காட்டிற்பொன்னை யார்கடன்கொடுப்பாரையோ.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஈசாவுனதருளோ பிக்கெதிக்குள்ளானேனையா
மாசற்றபரஞ்சோதியே குணநிதியே (ஈ)

பனிமலர்போன்றகரம் பற்றியெரியுதையோ
அனியாயமென்னசெய் தேனேவையா (ஈ)

கடுங்குதேவெருவாக காலகெதிநானேக
கொடுக்குதேதுயரமென்செய்வேன் கொடுமையாக (ஈ)

தூதர்செய்யுங்கொடுமை சகியேன்சகிக்கொண்ணுது
பாமேதிருக்கடைக்கண்பாரும் காரும் (ஈ)

சந்ததமுமுனது தாளிணைபணியாது
சிந்தையுடனிருந்தேனோ தேவாதிதேவா (ஈ)

மெய்யதுசிதறுதே மேனியும்சோருதே
தீபாவெரியுதையையோ செங்கரம்நொந்து (ஈ)

சத்தியந்தவறினேனோ சற்பனைகள்நினைந்தேனோ
அத்தியுரித்தநாதனே அருள்புரிவாய் (ஈ)

அரிச்சந்திரன் வசனம்.

கைலாசபதி யானென்ன அநீதமாக அரசாட்சி செய்துவந்தேன் என்மேன்மைகள்தவறிக் கடனுக்குள்ளாகி ஆரணியத்தில் தவமுனிவனாதரால் நான் அடையக்கூடிய கஷ்டத்தைமுற்றிலும் பார்த்து இன்னமுன் மனதிரங்காதது என்விதிவசமோ கருணைநிதி என்செய்வேன்.

சந்திரமதி விருத்தம்.

மெய்யானகவுசிகனர் வரவிடுத்த
வேதியரோயிரவிகுல வேந்தன்றன்னை
கையதனிற்கிட்டிகட்டி வதைக்கலாமோ
கடன்கொடுப்பதில்லையென்ற தோஷமுண்டோ
பொய்மொழியேதுக்குரைக்க வேண்டுங்காசி
போனவுடன்பொன்னுமக்குக் கொடுப்போமன்னன்
மெய்பதறவடிக்காநீர் கதறுகின்றார்
மெலியுதென்றனுயிர்சகிக்கேன் சாலமைபா.

இராகம்—பரசு—தாளம்—ஆதி.

பல்லவி.

கைகள்நோகுமேசாமி யென்றன்
கண்ணாளனைமனது புண்ணாய்ச்செய்வதழகோ (கை)

அநுபல்லவி.

ஐயாவேதியன்குல துய்யாவரசன்வார்த்தை
பொய்யாதனுவளவுஞ் செய்யாநீரிக்கொடுமை கை

சரணங்கள்.

தவமுனிவர்பொருளை தாரதில்லையென்றேமோ
அவனிமுழுதுஞ்சத்திய வரசுபுரிந்தமன்னன் கை

கொஞ்சமேனுமுமது நெஞ்சமிரங்காதேது
பஞ்சைகள்மேலிவ்வாது பண்ணுவதுந்தகாது கை

மேற்படி வசனம்.

சுவாமி என்பிராணேசனை இப்படி வருத்தமடையும்படிகரத்தில் கிட்டியைக்கட்டி தொந்தரவுசெய்தால் தங்களுக்கு பொன்வந்திடுமோ தயவுசெய்து கிட்டியைஅவிழ்த்துவிடுங்கள் நாதா.

நட்சேத்திரன் வசனம்.

போடிபோ நீயேன் யென்னுடன் போராடுகின்றாய் பொனனைக் கொடுத்துவிட்டால் உங்கள் பேச்சுக்கு எவன் வருவான் அதை யோசியாமல் அழுது ஜாலஞ்செய்தால் பொருளைவிட்டுப் போவேனோ பயித்தியக்காரி அப்பால் எட்டப்போ.

சந்திரமதி-விருத்தம்.

அந்தர்மாங்காடுதனில் நகரமுண்டோ
அமோஹனுங்கடன்கொடுப்பா ரொருவருண்டோ
விந்தைநிகர்புயவாசைக் கிட்டிகட்டி
வேதனைசெய்யாநீர் பொருள் விளையுண்டாமோ
நிந்தையுமக்கேதேனுஞ் செய்ததுண்டோ
நினதுபலிமேதேனு மறுத்ததுண்டோ
தந்தைதாய்குருதெய்வம் நீயேயாகுஞ்
சற்பனைசெய்தாலுமக்குப் பழுதுண்டாமே.

இராகம்-காம்போதி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

நீதியில்லையோமெய்யா நீர்சொல்லையா (நீ)

அநுபல்லவி.

வேதியர்குலவிளக்கே நீர்சொல்லையா (நீ)

சரணங்கள்.

தப்பிதஞ்செய்தமோ தங்கள்பொன்மறந்தமோ
இப்படிவையலாமோ விந்தயோசனைசெய்யலாமோ (நீ)

தர்மநெறியென்பது தங்கட்கேயுரியது
வர்மஞ்செய்வதுமேது மறையோரேநீரிப்போது (நீ)

தங்களையன்றியாருந் தஞ்சமில்லைகண்பாரும்
எங்களைச்சோதிப்ப தேற்குமோவிந்தப்பார்க்குள்ளேஐயா (நீ)

கல்லோவுமதுமனங் கரையாததென்னசினம்
வல்லபமுனிதூதர் வாதுசெய்வதுமேதுநாதா (நீ)

மேற்படி வசனம்.

நட்சேத்திர புண்ணியவானே உலகில் நாங்கள் தானு கடன் பட்டவர்கள் ஐயோ இப்படி வருத்தஞ் செய்வது தர்மமா என் பிராணேசன் கரங்கள்சிவந்து குருதிவிம்முதேயென்செய்வேன் கருணைவைத்து கிட்டியை வாங்குமையா சுவாமி.

நட்சேத்திரன் விருத்தம்.

போடிபோபயித்தியக்காரி புத்தியில்லாமலென்முன்
ஓடியேயெல்லாமறிந்து வுபத்திரஞ்செய்தாரிக்க
வாடிநின்றழுவதாலே வருகுமோவெனக்குச்செம்பொன்
தாடியேயில்லாவிட்டால் தவடையிலடிப்பேனோ.

மேற்படி வசனம்.

அடி நீயோ பெண்பிள்ளை யென்னோடுவாதுசெய்யாதே வருத்தமுனக்கிருக்கும்பட்சத்தில் பொன்னை சத்தியில் கொடுத்துவிட்டப்புறஞ்செல ஜாலமா செய்குறாய்.

சந்திரமதி விருத்தம்.

மட்டில்லாப்பெருந்தவஞ்செய் மாமுனிநாதரேநீர்
அட்டியில்லாமல்மன்ன னருந்துயராகக்கையிற்
கிட்டியைக்கட்டிகொட்டி கேட்குறீர்பொன்னைக்காட்டிக்
கொட்டியேகொடுப்பாருண்டோ கூறுமோர்வகையுண்டானால்.

இராகம்-தோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மன்னனையிந்தவருத்தம்செய்குறீர் மறையோரேசாமி (ம)

அநுபல்லவி.

யென்னகாலக் கொடுமையோ ஐயோ
எங்களுக்கிந்த வேஷமோராஜ (ம)

சரணங்கள்.

சொன்னமொழிகள் தவறினதுண்டோ
சோதிப்பதென்ன நீதிகள்கண்டோ
பொன்னக ரயோத்தியாண்ட
போசனைபிராண நேசனைராஜ (ம)

செங்கரந்தனில் குருதிசேரவே
செய்குறீரையோ துயரமீறவே
தங்கவொட்டாமல் கிட்டியைக்கட்டவும்
தர்மமோவென்ன வர்மமோராஜ (ம)

காசிநகரில் சேர்ந்தவுடனே
கவுசிகமுனிக் களிக்குங்கடனே
பேரியபடி கொடுப்பதிலென்ன
பேதார்செய்வமோ நீதமன்றியென் (ம)

மேற்படி வசனம்.

சுவாமி திருவுளமிரங்கி யென்பிராணேசர் படுகிற கஷ்டத்தை விலக்கவேண்டியது சகிப்பாரா சகிக்க முடியாதே ரொம்பவும் மெதுவானகாம் யென்னசெய்வார் நாதா.

நட்சேத்திரன் வசனம்.

எண்டி. வெருமனே யென்னவாதனை செய்குறுய் நோக்குயேன் இந்த ஆத்திரம் நேக்கில்லையா பொன்வாங்க வேண்டிய ஆத்திரம் நீ மெத்தப்படித்தவள் அப்பால்போடி இல்லாவிடில் ஒரு பொய் சொல்.

சந்திரமதி விருத்தம்.

பொய்யுரையோம்நாங்களென்றுவறிந்திடாமல்
பூசுரரேகோபத்தா லேயோமன்னன்
கைபதனில்கிட்டிகட்டி வருத்தம்செய்தால்
கானகத்தில்பொன்னிங்கு வருமாசாமி
மெய்தவறிவாடுகின்ற வேந்தைநோக்கி
வீணுகவாதனைகள் செய்யவேண்டாம்
ஐபனேயின்பதத்தி லடியாள்வீழ்ந்தேன்
அட்டியன்றிகிட்டியை நீகற்றுவீரே.

இராகம்-காப்பி-தாளம்-யேகம்.

கண்ணிகள்.

சதுர்மறையோரே தயவுசெய்குவீரே
பதுமமலர்க்கரங்கள் பாருமிதோசிவந்து
பரதவிக்குறுரென்பத்தா மனதுநொந்து (சது)

செங்கோல்பிடித்தகரம் சிதைக்கும்படிநீர்திரம்
சங்கடம்செய்யத்தகுந்ததோ சாமினுதா
சரணங்கள்செய்தேன் தயைசெய்குவீர்நாதா (சது)

நாடுநகரிழந்து ராஜரீகம்துறந்து
வாடுகிறோமிந்த வனந்தனிலேயோவந்து
வஞ்சகமில்லைக்கண்பாரும் மனதுகந்து. (சது)

மெய்யதுபதறுதே வேர்வைகள்சிதறுதே
கையைநீர்பாரும் கலங்குறுரென்றன்மன்னன்
கருணைவைத்தாளும்நின் கழலிணையைப்பணிந்தேன். (சது)

காசிநகரில்சென்று கோசிகமுனிக்கன்று
பேசியபடிருணம் தருகிறோம்பேதமில்லை
பேதலிக்குதேமனவாதனை தீருந்தொல்லை. (சது)

மேற்படி வசனம்.

சுவாமி சாஸ்திரசம்பன்னரே அடியாள்சொல்லுக்கு கல்லு ங்கரையும் தங்கள்மனங்கரையாத காரண மெங்களுடைய கால வித்தியாசந்தானே யென்பிராணேசர் படுகிற விம்சையைப் பார்த்து யென்மனம் வெவ்வேறுகின்றது கிருபைசெய்து கிட்டியை நீக்குஞ்சாமி.

நட்சேத்திரன் விருத்தம்.

மந்திரத்தாலேமாங்காய் மண்மிசைவிழுவதுண்டோ
யிந்திரஜாலம்செய்ய வேற்பட்டாயென்முன்னுக
நிந்தனைசெய்தேனென்று நீவெகுவாகக்கூவி
தந்திரஞ்செய்யவேண்டாம் தள்ளியப்புறத்தில்போடி.

மேற்படி வசனம்.

ரொம்ப ஜாலக்காரியென்று உன்னைத்தெரிந்தேன் நானேச தூர்வித உபாயத்தில் கைதேர்ந்தவன். இதிலென்ன பிரயோசனம் பொன்னைக்கொடுக்கவேண்டிய மார்க்கம் யெதோ அதைக்கவனி வெட்டிவார்த்தை பேசாதேபோடிபோ.

சந்திரமதி விருத்தம்.

தஞ்சமில்லாதுநாங்கள் தவிக்கின்றதெல்லாம்பார்த்து
கொஞ்சமுமனமிரங்காக் கொள்கையேதையாமிக்க
நெஞ்சமும்பதறியன்னை னிற்கின்றாதனைப்பாரும்
வஞ்சகம்செய்யவேண்டா மறையவாகிட்டிவாங்கும்.

மேற்படி தரு.

இராகம்-கல்யாணி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

கொஞ்சமேனும் நெஞ்சமிரங்காதா
குருவேசரணஞ்சரணம் வருணஞ்செய்யாநீர்கருணம். (கொ)

அநுபல்லவி.

வஞ்சகமில்லை மறையோரே அய்யா
வஞ்சகமில்லை மறையோரே அய்யா
வாதனைசெய்திடலாமோ பாதகமானதுபோமோ (கொ)

சரணங்கள்.

கானகத்திலார்பொருள் கொடுப்பவர்
கர்த்தனையெங்கள் துயர்தடுப்பவர்
காரணனேதெரியாதா கலங்குறேன்தாமரைப்பாதா
கார்த்திடவேனுமிப்போது காவலரேவெகுசாது. (கொ)

காத்தினில்கிட்டி உரத்திநீர்கட்டி
கலக்கச்செய்திட லாகுமோதிட்டி
கல்லோமின்மனம்பாரும் கரையாததுவென்னகூறும்
கழலினைபணிந்தேன்காரும்கலங்குறேன்கெதியிலைபாரும்(கொ)

கனலையில்செம்பொன் தருவோமையா
சங்கடம்செய்தால் தகுமோமெய்யா
சதுர்மறையோரேகாரும் பதுமமலர்க்கரம்பாரும்
தகுமோவிதுவெகுவாது சாமிநீர்செய்யத்தகாது (கொ)

மேற்படி வசனம்.

சுவாமி கிருபைசெய்து என்பிராணேசன் கரத்தில் கட்டியிருக்கும் கிட்டியை நீக்குங்கள் ரெம்பத்தயங்குகின்றார் வர்மம்செய்யவேண்டாம் பிரபு.

நட்சேத்திரன் வசனம்.

சீ பெண்டி. வெகுநேரம்மை வாதிக்கின்றாய் யானோ ஏழைப் பிராமணன் உங்கள் நோக்கம்போல்நடக்க நமக்குச் சாதுரியப்படாது பொன்னைக்கொடுத்தால் கிட்டிதன்னால் விடாதோ யேன் தெரியாது போடிபோ.

சந்திரமதிவிருத்தம்.

உல்லோயின் மனதுமிக்கக் கரையாதென்ன
காரணமோ வெங்கருடகாலந்தானோ
வல்லபஞ்சேர் முனிவிடுத்த தூதர்சாமி
வஞ்சகங்க ளொருவேறு மில்லைநாங்கள்
துல்லபமாய்ப் பொருள்கொடுப்போங் காசிசென்று
சோதிப்ப தழகோநீர் சொல்லுஞ்சாமி
தொல்லைதவிர்த் தெங்களைநீர் காக்கவென்று
துதித்திட்டேன் பதமிரண்டும் பிடித்திட்டேனே.

சந்திரமதிசொல்-தரு.

இராகம்-தன்யாசி-தாளம்- ஆதி.

பல்லவி.

மறையோரே சாமிமறையோரே ஐயாமறையோரே இந்த
வஞ்சகஞ்செய்தா லென்செய்குவோமினி

அநுபல்லவி.

முறைதவறியுமக்கு முன்பின்னடந்ததுண்டோ
இவையென்மே லிக்கொடுமை
யேற்குமோ பார்க்கு ளார்க்குந் தீர்க்குமோ (ம)

சரணங்கள்.

பஞ்சைபோலேநாங்கள் பரதவிக்கிறோம்மின்று
நெஞ்சிற்கிருபைசற்றும் நினையாமலேயோவின்று
நிந்தனைசெயகுநீர் சிந்தைகனேகவே
சுந்தரனேவெகு வந்தனஞ்செய்தேன் (ம)

ஐயோநானென்னசெய்வே னடியாளெப்படியுய்வேன்
மெய்பதறியேமன்னன் விழுகுறார்மண்ணிலென்ன
வேதனையோவைபன் சோதனையோவென்ன
பாதகஞ்செய்தமோ பூதலம்புகழும் (ம)

காடுகடந்துகாசி கண்டவுடன்சேருமுன்னம்
பாடுபடுத்தவேண்டாந் தீருமெங்களைக்
காருமுலகினில் வேறேகெதியில்லை (ம)

சந்திரமதி வசனம்.

நட்சேத்திரபுண்ணியவானே கிருபைசெய்து என்பிரானே சன் காத்திற்கட்டிய கிட்டியை வாங்குவீர் நாங்க ளென்னசெய்குவோ மிக்காட்டில் நாதா.

சந்திரமதி சொல் தரு.

இராகம்-காம்போதி-தாளம் ஆதி.

பல்லவி.

ஏனிந்தக்கொடுமை செய்குறீர் ஐயோ
எந்தன்மன்னன் சிந்தைநோக வந்தணர் குலவிளக்கே (ஏ)

அநுபல்லவி.

பாநுவின்குலத்துதித்துப் பார்முழுதுமாண்டவென்றன்
பத்தாவின்காத்திற்கிட்டி சித்தமிரங்காமற்கட்டி (ஏ)

சரணங்கள்.

ஆகமநூலாதிகளை யறிந்திருந்துமெங்களை
யநீதஞ்செய்தாலெவர்க்கு மடுக்காமோ
சோகமேவிட்டதேமன்னன் றேகம்நொந்துவாடுகின்றார்
சோதிக்கலாமோமனது பேதிக்கும்படியெங்களை (ஏ)
தவணையிற்பசும்பொன்னை யவசியந்தருமுன்னே
சஞ்சலப்படுத்தலாமோ சாமியெங்களை
அவமானஞ்செய்வதுங்கட் கடுக்கோவடுக்கோவையா
லுனையோமன்னவன்றிரு மெய்பதறும்படியாக (ஏ)
கானகத்திலேநிறுத்தி யேனோவெங்களைவருத்தி
கஷ்டஞ்செய்யலாமோதங்க ளிஷ்டம்போலவே
ஞானதவயோகநிலை மோனமுனிவர்விடுத்த
நாதனேபொற்பாதனேயிவ் வேதனைசகிப்பாருண்டோ(ஏ)

சந்திரமதி வசனம்.

நட்சேத்திர புண்ணியவானே யிது தருமசாஸ்திரத்திற்கடுக்காது தாங்களேன் அறியக்கூடாதா தயவுசெய்து நாங்கள்செய்த குற்றத்தைப்பொறுத்து என் பிரானேசன் கையிற் கட்டிய கிட்டியை யவிழ்க்கவேண்டியது சாமி.

நட்சேத்திரன் வசனம்.

அடி யென்னசொன்னாய் பயித்தியகாரி யுங்களப்பா வீட்டாளோ நான் நீங்கள்சொன்ன வார்த்தைகளைக் கேட்டுக்கொள்ள பணத்தைக் கொடுக்கவேண்டும் இல்லையென்றுவது சொல்லவேண்டும் அதுவென்ன சாலம்போடி.

சந்திரமதி விருத்தம்.

தற்பரவடிவேயோக சமரசநிலைபெற்றோங்கும்
அற்புதமானஜோதி யண்ணலேகயிலைநாதா
கற்பனையேதுங்காணேன் காட்டினில்மறையோர்செய்யுஞ்
சற்பனையெங்களாலே சகிக்கொண்ணாதினிக்காப்பீரே.

இராகம் கமாஸ் தாளம் ஆதி.

பல்லவி.

இந்தவிதிக்கென்னசெய்வே னீசாகைலாசவாசா (இ)

அநுபல்லவி.

எந்தமன்னரும்பணிய விந்நிலமரசுசெய்த
வென்றன்மன்னன்செங்கரத்தி லின்றுகிட்டிகட்டக்கண்டேன் ()

சரணங்கள்.

கோசிகமுனிவருக்குக் காசினிமுழுதுந்தந்து
குடும்படைக்கிளைஞர்மனம் வாடும்படியாகவந்து
பேசியகடனைத்தீர்க்கக் காசிநகர்சேருமுன்னே
ஆசைமன்னவனையிந்த வையரிடர்செய்குறாரே (இ)

எத்தனையோமுறையிட்டு மேற்காமலதனைவிட்டு
சித்தத்திற்குகந்தாற்போலே செய்குறார் துதரிக்காலே
பத்தாவுமிதோமிருந்து பாதவிக்குறார்நொந்து
உற்றதுணைவேறேயில்லை யோகாவிதென்னசள்ளை (இ)

மன்னவன்கரத்தில்கிட்டி வருத்தமுறவேகட்டி
சின்னபின்னமாகக்கொட்டி சிதைக்குறாரையோதிட்டி
யென்னசெய்வாரையோகூவி யெப்படித்தரிப்பாராவி
பன்னகமணிந்தசோதி பாருந்துயர்தீருமினி (இ

சந்திரமதி வசனம்.

கைலாசபதி யான்கூடியவரை இந்தத்தூதரிடத்தில் முறையிட்டும் சற்றேனும் கவனிக்காமலிருக்கின்றார் என்பிராணேசனே சகிக்கமுடியாமல் வாதனைப்படுகிறார் என்செய்வேன் தேவா.

நட்சேத்திரன் வசனம்.

அரிச்சந்திரா யேது உன்னுடன் போராடவேண்டியதாகயிருக்கின்றது எவ்வளவோநான்சொல்லியும் பணத்தைகொடுக்காமல் பெண்சாதியைஎவிவிட்டு அவள்கண்டபடி அவனேஇவனேயென்று உளறுகிறாள் நேக்கிதெல்லாம் கேட்க மனஞ் சகியாது பணத்தைக் கொடுக்கின்றையா இல்லையா சொல்.

அரிச்சந்திரன் வசனம்.

பிரபு எங்களுடைய தாரதன்மையெல்லாம் பார்த்தும் பிடிவாதம் செய்கிறீர்கள் அவள்என்னசெய்தாள் நான்படுகிற கஷ்டத்தைச் சகியாமல் தங்களிடத்தில் முறையிட்டாளே தவிர வேறல்ல கிருபைசெய்து கிட்டியை யவிழ்த்துவிடுங்கள் சாமி காசி செல்லுவோம்.

நட்சேத்திரன்வசனம்.

அடா அரிச்சந்திரா நன்று யிருக்கின்றது பணத்தை ஜாக்கிரதையாக கொடுத்துவிட்டு மறுஜோலி பாரடா இல்லாவிடில் ஒரு பொய் சொல்லடா.

அரிச்சந்திரன் விருத்தம்.

ஆசிலாமுனிவர்தூதா வையனேநட்சேத்திரையா
மேபசிடேன்பொய்தானென்றன் பிராணனேகழிந்திட்டாலும்
காசிமாநகரஞ்சேர்ந்துன் கடன்றனைக்தீர்ப்பேன்கண்டாய்
மாசிலாக்கரத்தின்கிட்டி வாங்குவீர்சகிக்கமாட்டேன்.

இராகம் காப்பி தாளம் ஆதி

பல்லவி.

ஐயரேகைநோகுதே ஐயரேகைநோகுதே (ஐ)

அநுபல்லவி.

வையகம்புகழுந்தவ மாமுனிதூதரான (ஐ)

சரணங்கள்.

காசிசென்றுவிசு வேசரைத்துதிசெய்து
கோசிகமுனிபொன்னைப் பேசியபடிதாரேன் (ஐ)

மெய்பதறவேவிட்டு வேகமுடனேகட்டி
செய்யாதகோரஞ்செய்தீர் தியங்குறேனையோபாரீர் (ஐ)

கொடியவனத்திற்பொன்னைக் கொடுவென்று கேட்டாலென்னை
அடியேனெப்படிச்சொல்லுவே னரிடத்தினிற்சொல்வேன் (ஐ)

வஞ்சமில்லைநாதா வர்மம்வேண்டாம்பொற்பாதா
தஞ்சமில்லாதபாவி தவிக்குறேனையோகூவி (ஐ)

அரிச்சந்திரன் விருத்தம்.

எந்தனைக்கிட்டிகட்டி யிப்படிமயங்கச்செய்து
தொந்தரவதிகஞ்செய்தால் சுவாமிநானென்னசெய்வேன்
அந்தமாய்க்காசிசென்று அவசியம்பொன்னைத்தாரேன்
இந்தமட்டுந்தான்போது மென்கையிற்கிட்டிவாங்கும்.

இராகம்—பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

வர்மம்செய்யலாகாதென்மேல் மாமறையோரேசாமி (வ)

அநுபல்லவி.

தர்மமுமக்குண்டு தளிப்பதெல்லாங்கண்டுஎன்றன்
கர்மவினைதானோவுன்றன் கருணையில்லாதுவிந்த (வ)

சரணங்கள்.

பேசியமொழிக்கொன்றும் பிசகேன்சாமிநானென்றும்
காசிநகரஞ்சென்றென்றன் கர்த்தனேநானன்றுசாமி
கோசிகமுனிவர்செம்பொன் நேசமாய்த்தாரேனிந்த (வ)

சங்கடப்படுத்தாதீர் தரகரேநட்சேத்திரையா
சாமியுன்றன்தஞ்சந் தயங்குதென்றனெஞ்சமையா
மாமுனிவர்தூதாவுன்றன் மனமிரங்காதாவிந்த (வ)

அரிச்சந்திரன் வசனம்.

நட்சேத்திரபுண்ணியவானே யான் எவ்வளவோ சொல்லியுங்கவனிக்காம லிப்பேர்க்கொத்த அனீதஞ்செய்தால் நானெப்படிச்சகிப்பேன் தயவுசெய்து கிட்டியைவாங்குஞ்சுவாமி.

மேற்படி தரு

இராகம்—நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

மறையவரேயென்னசெய்வேன் மறையவரே
வர்மஞ்செய்யலாமோ செய்யலாமோ
செய்யலாமோ வென்மேல் (ம)

அநுபல்லவி.

முறைதவறியுமக்கு முன்பின்னடந்ததுவுமுண்டோ
முனிகடனையருந்தவமுனிகடனை மோசஞ்செய்தேனோ
செய்தேனோ செய்தேனோ. ஐயா. (ம)

சரணங்கள்.

கைதனிலேகிட்டிகட்டி மெய்பதறச்செய்வதினால்
கலங்குதையோ வென்மனது கலங்குதையோ
காருமென்னைப் பாருமென்னைப்
பாருமென்னைப் பாருமையா. (ம)

கோசிகமுனிகடனைக் காசிநகர்சென்றவுடன்
கொடுத்திடுவே னவசியங் கொடுத்திடுவேன்
கோபஞ்செய்யவேண்டாஞ் செய்யவேண்டாம்
செய்யவேண்டா மையா. (ம)

மேற்படி வசனம்.

பிரபு இனியாவது கிட்டியை யவிழ்த்துவிடவேண்டும் கைரெம்பவுநோகின்றது வர்மஞ்செய்யவேண்டாந் தர்மமல்ல சாமி.

நட்சேத்திரன் வசனம்.

அரிச்சந்திரா வர்மமுமல்ல தர்மமுமல்ல பொருளைக்கொடுத்தாலொழியக் கிட்டியையவிழ்ப்பேனென்றுநினைக்கவேண்டாம் பொன்னைக் கொட்டடா கொட்டு.



உ

பரமபதிதுணை.

லோகிதாசனைக் கிட்டிகட்டுகிற பாகம்

லோகிதாசன்சொல் விருத்தம்.

மேதினிமுழுதுஞ்செங்கோல் மெய்வழாதாண்டமன்னன்
வேதனைச்சகிக்கமாட்டார் விரலெல்லாமிரத்தங்கண்டீர்
ஆதாவாரிக்காட்டி லடைக்கலமுன்றன்பாத
மாதவராசேகிட்டி வாங்கிரீர்கருணைசெய்வீர்.

இராகம்-முகாரி-தாளம்-ஆதி.

பல்லவி.

தந்தைக் கிட்டியைவாங்குஞ்
சாமிநாதா தயவுசெய்தேன். (தந்)

...பல்லவி.

சிந்தைமிகுந்து தியங்குறுர்நொந்து
அந்தணரேயுன்ற னடிபணிந்தேனென (தா)

சரணங்கள்.

தஞ்சமில்லையாருந் தயங்குவோரும்பாருஞ்
சங்கடந்தீருந் தர்மமானீர்கூறும்
வஞ்சகங்களில்லை வந்ததிந்ததொல்லை
யென்செய்வேமிக்காலை யேங்குறுர் மென்மேலே (தந்)

தேவரீரிவ்வாது செய்யவுந்தகாது
சிறியோர்கள்மீது சினங்கொள்வதேது
பூவுலகம்போற்றும் பூசுரரேயாற்றும்
கேவலஞ்செய்யாதிர் கிருபைசெய்தென்றன் (தந்)

லோகிதாசன் வசனம்.

சுவாமி என்பிதாவைக் கொடிய நிந்தனைசெய்வது தங்களுக்குந் தருமமா கிட்டியை வாங்குங்கள் சுவாமி.

நட்சேத்திரன் விருத்தம்.

மன்னவன்கரத்திற்கிட்டி மாட்டினதற்குநீயும்
உன்னிநின்றழுவதென்னே யுனக்கெதும்வலிதானுண்டோ
அன்னியுங்கதறுகின்றாள் கலங்குறுபதற்குமுந்தி
நின்னடாநீதான்பொன்னை யில்லையென்றுரைத்தாற்போறேன்.

நட்சேத்திரன் வசனம்.

அடா லோகிதாசா ஏன் வருந்துகிறு யிங்கேவா நீ நல்லகுணசாலி நோக்கு அப்பழம் அதிரசம் வடை முதலான பலகாரவர்க்கங்களெல்லாந் திருப்தியாய்த் தருகின்றேன் உன்னுடைய வாயினால் விஸ்வாமித்திரருக்கு நாங்கள் திரவியங் கொடுக்கவேண்டியதில்லையென்று ரகசியமாக வென்காதுக்குள் சொல்லிவிடடா குழந்தாய்..

லோகிதாசன் விருத்தம்.

வடவரைதா னகர்ந்தென்மேல் விழுந்திட்டாலு
மதிகதிர்கள் தெற்குவடக் குதித்திட்டாலுங்
கடலேழுங் கொதித்தெழுந்து பொங்கினாலுங்
கருமுகில்சூழ் திடியென்மேல் விழுந்திட்டாலும்
புடவியன லடர்ந்தென்னைத் தீய்த்திட்டாலும்
பொய்சொல்வே னென்றுளத்திலெண்ணவேண்டாந்
திடமலிநின் டோளரசர் துன்பந்தன்னைத்
தீர்த்திடா பெனறுமொழி யேற்றிடாயே.

மேற்படி வசனம்

சுவாமி யெ ன வார்த்தை சொன்னீர்கள் சந்திராள்சூரியாள் தெற்குவடக்கானாலும் கைலாச கொடுமுடி நகர்ந்தாலும் சத்தசாகாமுங் கொதித்தெழுந்தாலும் என் தாய்தந்தையர்வாயில் பொய்பிறந்தாலும் அடியேனுடைய வாயில் பொய்பிறக்குமென்றுகிஞ்சிற்றும் நினைக்கவேண்டாம் சுவாமி.

நட்சேத்திரன்—விருத்தம்.

நல்லதுவாடாபாலா நானிலமன்னன்கிட்ட
வல்லமேதார்கிட்டி தன்னை வாங்கினேனஞ்சாதென்முன்
நில்லடாவுனதுகையை நீட்டடாகிட்டிபோட்டேன்
சொல்லடாபொய்யைபொன்னைச் சொரியடாசமர்த்தைப்பார்ப்போம்.

மேற்படி வசனம்.

அடா குழந்தை நீயிவ்வளவு சத்தியவந்தனு உன் சாமார்த்தியமறிவேன் உன் தந்தையிடத்தில் கட்டியிருந்த கிட்டியை அவிழ்த்துவிட்டேன் உன்கையில் தனரேகை யிருக்கிறதா வென்று பார்க்கவேணும் கையைநீட்டடா கண்மணி.

லோகிதன் வசனம்,

சுவாமி இதோ கையை நீட்டினேன் பாருங்கள் நாதா,

நட்சேத்திரன் வசனம்.

வல்லாரைமுழி பிள்ளை நோக்கு அவ்வளவு சாமர்த்தியமா உனதுகரங்கள் துண்டித்துப் போகும்படி கிட்டி கட்டிவிட்டேன் பொன்னைக் கொட்டடா கொட்டு,

லோகிதன் விருத்தம்,

ஐயரேமுனிவர்தூதா வருளுன்பாலில்லையோவென்றன்
கைதனிற்கிட்டிபோடக் கருமமென்செய்தேனிந்த
வையகமிழந்துநாட்டில் வந்தபோதிந்தவேதை
செய்வதுஞாயமாவுன் திருவடிசரணமையா.

லோகிதன் சொல்-தரு,

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்,

கண்ணிகள்,

மறையவரே சிறுவன்மீது வர்மமோ சாமி
வருந்துமென்றன்றுயரைநீக்கும் வந்தனம்நேமி
முறைதவறிகாங்களேது முன்பின்னடந்தமோ
முனிவர்கடனையில்லையென்று மொழிந்ததுண்டுமோ
பஞ்சினில்மெது வாகியகரம் பற்றியெரியுதே
பரதவிக்கிறேன் தாங்கள்பாது காக்கவுரியதே

மதலைநானல்லோ மனமிரங்காத வாறேதையனே
வந்தனம்புரிந் தேன்கவலை மாற்றுமெய்யனே
கைகள்நோகுதென்னசெய்வேன் கருணைசெய்குவீர்
கட்டியதோர் கிட்டிவாங்கும் கலங்குதென்னுயிர்

லோகிதன் விருத்தம்.

காட்டினில்மறித்தென்றந்தை கைதனிற்கிட்டிகட்டி
கோட்டினில்பறித்தீரந்தக் கொடுமையைச்சகிக்கொண்ணுமல்
கேட்டினிதுரைகள்சொன்னேன் கேலியாபயலேயென்று
மாட்டினீரெனதுகையில் மக்களைப்பெறலையோனீர்,

மேற்படி விருத்தம்,

எந்தனைக்கிட்டிகட்டி யிடர்செய்நால்முனிவர்பொன்னை
யுந்தனக்களிப்பார்யாரோ வுணர்ந்துபார்நடுக்காடாமே
எந்தனைப்பெற்றதந்தை யீகுவார்காசிசேர்ந்தே
வந்தனந்தந்தேன்கிட்டி வாங்கியென்றன்பந்நீரே,

இராகம்-கல்யாணி-தாளம்-சாப்பு.

பல்லவி.

கையைப்பாருங்கள் சாமி கையைப்பாருங்கள் ரத்தங்
களகளவென்றொழுகிறதே யழகிதுவோவுங்களுக்கென் (கை)

அநுபல்லவி

ஐயரேதவமுனிவர்தூதா வடியன்மேலின்னமனமிரங்காதா
செய்யதாமரை நிகர்த்தபாதா
சித்தமகிழித்தருண முத்தமாநின் புத்திரனுன் (கை)

சரணம்.

பஞ்சினில்மெது வாகியகரம் பற்றியெரியுதையோவுன்பாரம்
தஞ்சம்வேறில்லைத் தங்களையன்றி
தருணமிதுவருமவேண்டாஞ்சிறுவன்மீதிற்கருணைசெய்வீர்(கை

குற்றந்தீர்த்தெனை யாளவேணுங்கோடிவந்தனஞ்செய்தேனுனும்
நற்றவமுனி விடுத்ததூதா
நாதனேபொற் பாதனேயென் வேதனைசகிக்குதில்லை (கை)

பால்குடித்தபல்விழுகவில்லையே பார்த்திரங்காததென்றன்ருல்
காலகெதியோ வென்றனக்கிந்த (லையே
காரணங்கள் வந்திடவு மாளையினி நொந்திடுவேன் (னை)

மேற்படி விருத்தம்.

அரியயன்றேடிக்காணு வமலனேவிமலவாழ்வே
திரிபுரதகனஞ்செய்த தேவதேவாதிதேவா
சிறியவன்மீதிலுன்றன் சித்தமுமிரங்காதேது
எரியுதேகாங்கள்நீயு மீசனேகடைக்கண்பாராய்.

இராகம்-சாமா-தாளம்-சாப்பு

கண்ணிகள்.

ஐயையோநானென்ன செய்குவேனிவ்விதிக்
கப்பனியும்வாசா கயிலாசநடராஜா
ஆதியே பரஞ்சோதியே பரஞ்சோதியே
பரஞ்சோதியே சோதியே சோதியே

அய்பர்க்கிரங்கியுன் னின்பங்கொடுத்தென்னை
யாளவந்தநாதா இன்னமும்வாதா அம்பிகைநாதா
ஐயனே மழுக்கையனே மழுக்கையனே
மழுக்கையனே கையனே கையனே

மெய்ப்பதறும்படி செய்குமுறையையோ
வேதியருமெந்தனை வெகுநிந்தனை யீசாவந்தனை
வேண்டினே னுன்னைவேண்டினே னுன்னைவேண்டினே
னுன்னைவேண்டினேன் வேண்டினேன் வேண்டினேன்

கிட்டியைக்கட்டிய கெட்டரத்தால்ரத்தங்
கட்டுதேபொருமி மிகவருமி நானேகருமி
கிருபைவை யுன்றன்கருணை செய்யுன்றன்கருணைசெய்
யுன்றன்கருணைசெய் கருணைசெய் கருணைசெய்

லோகிதன் வசனம்.

கைலாசபதி யான் சிறுவனென்றுபாராமல் என்கையில்வே தியர் கிட்டிகட்டியதை யென்னல் சகிக்கமுடியுதில்லை யிரத்த மானது கொப்புளித்து வடிகின்றது வேதனையுமாகிறது நீயே கதி யென்செய்வேன் கருணாநிதியே.

இராகம்—பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

ஐயையோநா — னென்னசெய்குவே
னையையோநா — னென்னசெய்குவேன். (ஐ)

அநுபல்லவி.

செய்யாதகோரங்கள்செய்து — சிந்தமிரங்காமல்லைநா
கையிலேயர்கிட்டிகட்டினார் — கையிலேயர்கிட்டிகட்டினார். (ஐ)

சரணங்கள்.

கொடுக்குதையோதுயரம் — கடுக்குதெனதுகரம்
விதியோவெனக்குவந்த — சதியோமுனியாலிந்த
கெதியாலென்மதிவாடுறேன் — கெதியாலென்மதிவாடுறேன். (ஐ)

லோகிதாசன் வசனம்.

பிதா என்கரங்கள் புண்ணாக நோகின்றது நான் யெவ்வள வோவருந்தியும்மறையவருக்குமனமிரங்கவில்லை என்செய்வேன்.

சந்திரமதிவிருத்தம்.

ஐயையோதவத்தால்பெற்ற வருங்குலக்குமரன்றன்னை
மெய்யெலாம்பதறக்கொட்டி வேதனைசெய்யவேண்டாங்
கைகளினுதிரஞ்சிந்த கலங்கினான்கிட்டிவாங்குஞ்
செய்யதாளடிமைபூண்டாற் றீங்குநீர்செய்யலாமோ.

இராகம்-உசேனி-தாளம்-சாப்பு.

பல்லவி.

மைந்தன்கைநோத்குமே — மைந்தன்கைநோகுமே
வாங்குவீர் — கிட்டிதன்னை. (மை)

அநுபல்லவி.

ஐந்துவயதுடைய — வறியாச்சிறுவன்விரல்
நைந்துகுருதிசோர — நானினியென்செய்வேன் (மை)

சரணங்கள்.

இத்தனைக்கோபம்வர — யென்னபிழைகள்செய்தோம்
மெய்த்தவமுனிதூதா — வேண்டாங்கொடுமையென். (மை)
காசியிற்சென்றவுடன் — கௌசிகமுனிசெம்பொன்
பூசுரரேதருவோம் — பொறுத்தருள்செய்வீரென். (மை)

கைநோகும்படிகிட்டி கர்த்தனேநீர்கட்டி
செய்குறீரையோகுற்றம் செய்தமோஐயையோ (மை)

இராகம்-கமாசு—தாளம்-சாப்பு.

பல்லவி.

ஐயையோசிறுபாலகன் சாமிநாதா. (ஐ)

அநுபல்லவி.

பையனென்றுபாராமல் கையில்கிட்டியைக்கட்டி
வையவடித்தால் செய்குவதென்னநாங்கள் (ஐ)

சரணங்கள்.

சிறுவன்கைகிட்டியைக் கிருபைசெய்தவிழ்த்திடும்
பருவமில்லையே நிருவதிக்கானென்பாலன். (ஐ)

கொஞ்சமேனுமுமது நெஞ்சமிரங்காதேது
பஞ்சையல்லவோ கெஞ்சுகிறேனென்செய்வேன் (ஐ)

சந்திரமதி விருத்தம்.

காலனையன் றுதைத்தசிவ னடியைநோக்கிக்
கடுந்தவசு புரிந்தரசுக் காகப்பெற்ற
பாலகனுஞ் சிறுகுழந்தை வயதேழுள்ளான்
பஞ்சிலிட்ட தீயதுபோற் றுடித்துநொந்தே
ஓலமிட்டுக் கதறுகிறு னடிபொறுக்கான்
உமதுசித்தங் கரையாக்கல் லிரும்போசாமி
காலபல னேவறியே னையாகிட்டிக்
கட்டவிழ்த்தென் மைந்தனையும் விட்டிடீரே.

இராகம்-தேசிகக்காம்போதி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

பாலனைகிட்டிவாங்கும் பரதவிக்கின்றான்கரமிகவீங்கும்

அநுபல்லவி.

ஓலமிட் டழுகிறானிதோ
உத்தமனேபெற்றவயிர் மெத்தவுமேபற்றுதையோ. (பா)

சரணங்கள்.

கருமவினையால் மேன்மையிழந்து
கானகம்வந்தோம் கடனுல்மெலிந்து
வர்மஞ்செய்ய வேண்டாஞ்சிறுவன்
வாதாடுவததழுசோமறை நீதாமுனிதூதாசிறு (பா)

கஞ்சமலர்க் காங்கள்சிவந்து
கசியுதையையோ குருதிமிகுந்து
பஞ்சைநாங்கள் கெஞ்சுகின்றோம்
பாருந்துயர்மீறுமலே காருங்கலிதிரும்படி (பா)

சந்திரமதி வசனம்

சுவாமி நட்சேத்திர புண்ணியவானே அறியாத குழந்தையின்பேரில் தங்களுடைய கோபத்தைச் சாதிப்பது அழகா தயவுசெய்து கிட்டியைவாங்குஞ் சுவாமி.

நட்சேத்திரன்-வசனம்.

போடிபோ பயித்தியக்காரி அறியாத குழந்தையின் மீது கிட்டி கட்டிவிட்டேனென்று வருத்தப்படுகிறுயே அப்படி ஆத்திரமிருக்கும்பட்சத்தில் திரவியத்தைக் கொடுத்துவிடு.

அரிச்சந்திரன்—விருத்தம்.

வரமிகுமுனிவர்விட்ட மறைபவரரசேபொன்னைத்
தரச்சொல்லிச்சிறுவன்றன்னைத் தக்கதாய்க்கிட்டிபோட்
இரக்கமெள்ளளவுநெஞ்சி லில்லையோகுமரனின்று (டீர்
பரக்கிறுன்கிட்டிவாங்கிப் பாதுகாத்தருளுமையா.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி

பல்லவி.

கரம்நோகுமே யென்ன செய்வான் (கர)

அநுபல்லவி.

பரதவிக்குறன் பாலன் பாருந்துயர்தீரும் (கர)

சரணங்கள்.

காமறியாமல்கோபஞ் சாதிக்கலாமோபாபம்
விரல்நைந்துருகிரத்த மீறுதேசோருதே (கா)

சதுர்மறையோரே தயவுசெய்வீரே
பதுமமலரையொத்த பாலனுக்குரிய (கா)

பிள்ளையைத்தாங்கள் பெற்றதுமிலையா
வள்ளலேயுமதடிக்கி வந்தனம்வந்தனம் (கா)

இராஜன் வசனம்.

சுவாமி சிறுவன்காத்தில் கிட்டிபோடுவதில் என்ன பிரயோசனங் காம்நோகுதென்று அலறுகிறான் கிட்டியை அவிழ்த்து விடவேண்டும் சுவாமி,

நட்சேத்திரன் வசனம்.

நல்லது அரிச்சந்திரா உன்மகன் கையிற் கட்டியிருந்த கிட்டியை அவிழ்த்துவிட்டேன் இனியாவது பொன்னைக் கொடடா அரிச்சந்திரா.

அரிச்சந்திரன்-விருத்தம்.

புடவிமுழு துந்தனியே யாண்டேனந்தப்
புவிமுழுதுந் தவமுனிவர்க் களித்துப்போந்தேன்
கடனதனைத் தீர்ப்பதற்கு வகையில்லாமற்
காசிபுகுந் தகற்றுவமென் றடைந்தேனெங்கும்
அடவிதனில்நகருண்டோ மனிதருண்டோ
அறியிரோதாய்க்கொழித்த சூனுமுண்டோ
இடர்செய்தால் மலடிமகப் பெறுவாளோசொல்
என்செய்வே னென்மனதைப் புண்செய்யாதே.

மேற்படி வசனம்.

சுவாமி காசிமாநகரஞ் சென்றவுடனே தங்களுக்குச் சேரவேண்டிய பொன்னைக்கொடுத்து அனுப்பி வைத்துவிட்டு மறு ஜோலி பார்க்கிறேன் பிரபு.

நட்சேத்திரன் வசனம்.

நல்லது அரிச்சந்திரா காசிபட்டணம் நடநட சீக்கிரம்.

இராஜன் விருத்தம்.

மங்கையென்மயிலேமானே மாசிவன்சனியினாலே
பங்கயன்சிரம்படுத்த பாவத்தாலேந்தபித்தன்
கங்கைசூழ்வாரணாசிக் கண்ணன்பாலடைந்துதீர்ந்த
மங்களஞ்சேருங்காசி மாநகர்க்கேகுவோமே.

மேற்படி வசனம்.

பிராணரட்சகி நமது ராஜலட்சணா செல்வத்தையிழந்தன மென்பதுளங்கொள்ளாதே யேனென்றால் விதிப்பயனை விலக்க ஒருவராலுமுடியாது சுத்தப்பரப்பிர்மமாய் விளங்கும் சாட்சாத்கார சிவபெருமானுங்கூட சனிபகவானுடைய கொடுமையினால் ஒருகாலத்தில் கமலாபதியான பிர்மாவின் சிரத்தைகொய்ய உடனே பிர்மஹத்தி என்னுந்தோஷம்பெற்ற சிவனார் பித்தனாகி உலகமெல்லா மிரந்துண்டு பிர்மஹத்தி விலகாமல் கங்காநதி சூழ்ந்த காசிமாநகரஞ்சேர்ந்து கண்ணபிரா னருளால் சிவபெருமானது பிர்மஹத்தி நீங்கி அத்தலத்தின்கண்ணே காசிவிஸ்வேசராகவெழுந்தருளியிருக்கின்றார் அப்பேர்க்கொத்த சிவபெருமானுக்குற்றசனிவிபத்து நீங்கிய ஸ்தலம் அப்பேர்க் கொத்த காசி நகரஞ் செல்வோமானால் நம்முடைய விபத்துகளெல்லாம் நீங்கிவிடும் போவோம் வாராய் பெண்ணே சந்திரமதி.

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

ரஞ்சிதமோநடந்துவாராய் ரஞ்சிதமோநடந்துவாராய் (நட)

அநுபல்லவி.

கொஞ்சுநற்கிளியே குளிர்ந்தநன்மொழியே
என்செய்வோம்வினைப்பய னெவர்க்கும்விடாது (நட)

சரணங்கள்.

வெயிலென்னகோரம் விசனித்தாள்சாரம்
கயம்நரிபுலியிந்தக் காட்டில்விஸ்தாரம் (நட)

மன்னர்மன்னர்புகழும் மதிநயன்மாதே
அன்னமேகொடிவிட மடர்ந்தவனங்களிது (நட)

கொடியிடைமானே கொம்பில்செந்தேனே
வடிவுள்ளம்மாதேமனம் வருந்தாமல்தானே (நட)

இராஜன் வசனம்.

கண்மணி கொடியஜெந்துக்கள் வசிக்கக்கூடிய வனமாகையால் நமக்கேற்பட்ட காலகெதிகளை நினைத்து பின் தங்காமல் என்னுடன் நடந்துவா.

சந்திரமதி-விருத்தம்.

கண்மணியானவென்றன் காவலா சொல்லக்கேளும்
மண்மிசைநடக்கவென்றா லாகுமோமகனுமின்று
கண்பிசைந்தழுகின்றான் கலங்குதென்னெஞ்சம்வெய்யோன்
தன்னொளிக்கனலைவீசச் சூடினிப்பொறுக்கமாட்டேன்.

இராகம்-கமாசு-தாளம்-ஆதி.

பல்லவி.

மன்னவா . யென்னசெய்குவேன் மனம்
மயங்குதேபொறுக்கக் கூடுதில்லையென்றனை. (ம)

அநுபல்லவி.

முன்னேசெய்தவினையோ முனிவன்செய்தமாய்கையோ
சின்னபின்னமாய்ப்பாதஞ் . சிவந்துகொப்புளிக்குதே. (ம)

சரணங்கள்.

அரசுபதியிழந்து அயோத்திநாடிழந்து
பரதேசியாகநாமும் பாரவனத்தில்வந்தோம் (ம)

நாரிபாகனருளோ நாமிக்கெதிக்குள்ளானோம்
நாதனேபொற்பாதனே யிவ்வேசனை சகிக்குதில்லை (ம).

பாலன்மனதுநொந்து பரதவித்தழுகுறான்
காலவினைப்பயனோ காந்துதென்தேகமெல்லாம் (ம)

சந்திரமதி வசனம்.

பிராணேசா யானென்னசெய்குவேன் சுடுமணலில் நடந்து பாதங்களெல்லாம் கொப்புளமாயிற்று யென்னமாய் நடக்கப் போகின்றேன் லோகிதனும் மயங்குகின்றான் இதோ கூடவே வருகின்றேன் நாதா.

லோகிதன் விருத்தம்.

ஐயையோவென்னகால மன்னைதந்தையரேநம்மன்
னையகாடுறந்துவிந்த வனந்தனில்வந்ததுன்பம்
தெய்யதாயெரிந்துபாதஞ் சிவந்துமேகுருதிசோர
னையுந்தமனதுநொந்து நானிந்தாநடந்துவாரேன்.

இராகம்-கமாஸ்-தாளம்-சாப்பு

பல்லவி.

ஐயோவெப்படிநடப்பேன் அடவிதனில் (ஐ)

அநுபல்லவி.

மெய்பதறுதேபையோ வெயிலின்கோரம் (ஐ

சரணங்கள்.

செடியுங்கொடியுங்கிறி தேகமெங்குஞ்சோரி
அடியிடறுதேசும்மா முடியாதினியென்னம்மா (ஐ)

என்னவிதியெனக்கு இட்டானையையோபிர்மன்
சின்னவயதல்லவோ அன்னைதந்தையரேநான் (ஐ)

காடுகடந்துகாசி நாடுசேர்வேனோதேசி
வாடுறேன்பசியாலே கூடுமோயினிமேலே (ஐ)

லோகிதன் வசனம்

அம்மா இந்த அடவியில் யானென்னமாய் நடந்துவரப் போகின்றேன் காலோ கொப்பளங்காணுகிறது இதோ மெது வாய் நடந்து வருகின்றேன்.

சந்திரமதிசொல்-தரு.

இராகம்-சாமா-தாளம்-ரூபகம்

கண்ணிகள்.

ஆசையுடன்பெற்ற தேவதாசாவென்றன்
அப்பனேநீநடந்து வாடா துடர்ந்து காடுகடந்து
அழுகாதே மண்ணில்விழுகாதே மண்ணில்விழுகாதே
மண்ணில்விழுகாதே விழுகாதே விழுகாதே
மெத்தப்பசியாலுன் சித்தங்கலங்கி
மெலிந்திடவும்விதியோ முனிசதியோ காலகெதியோ
வேதனை அயன்சோதனை அயன்சோதனை
அயன்சோதனை சோதனை சோதனை

பஞ்சணையைவிட்டுப் பாதம்நோகமண்ணில்
பற்றவுமறியாய் பாதைகுறியாய் நடந்தறியாய்
பாலகா இதுகாலமோ இதுகாலமோ
இதுகாலமோ காலமோ காலமோ
அதிசியஞ்செய்த சோதனைக்கிநாமள்
அழுதாலுந்திருமோ பழுதாகுமோ விணைமாறுமோ
ஐயனே யென்றன்மெய்யனே யென்றன்மெய்யனே
யென்றன்மெய்யனே மெய்யனே மெய்யனே

சந்திரமதி வசனம்.

அடா பாலகா நாம்வருந்துவதினால் யென்ன பிரயோசனம் இதோ கோமதையாற்றங்கரை சமீபமாயிருக்கின்றது அவ்விடம்போனவுடன் விளைப்பாறி பசியாறுவதற்குக் கனிவர்க்கங்கள் பறித்துத் தரச்சொல்கிறேன் கண்மணி மெதுவாகவா.

நட்சேத்திரன் விருத்தம்.

எனக்கினியுன்பின்னாலே யேகவுமுடியாதப்பா
மனக்குநோவன்னந்தந்தால் மன்னனேவருவேனின்று
தனக்குநேரில்லாவந்த தவமுனிபொன்னைக்கொட்டி
புனக்கிதமானவன்னஞ் செய்குவாயுறுதியிதே.

மேற்படி வசனம்.

அரிச்சந்திரா இதோ கோமதை யாற்றங்கரை வந்துவிட்டோம் இந்தவனத்தில் இளந்தென்றல் வீசுறெது யெனக்குபசியாகிவிட்டது இனி பசிபொறுத்திருப்பேனுனல் அருணைக்கயிறு அறுந்துபோகும் சாதங் கொண்டுவா.

அரிச்சந்திரன் வசனம்.

சுவாமி இந்த அத்துவான காவகத்தில் சாத மெங்கிருந்து வரும் இதோ கனி பலாதிகள் பறித்து வந்தேன் யெல்லோரும் போசிப்போம் சுவாமி.

நட்சேத்திரன் விருத்தம்.

வந்தனுலாகாதப்பா வெத்தனைநாளதாக
வந்துநானலேவேனுன்பின் மயக்கமேலாடிச்சோர்ந்து
நொந்தனனினிச்சகிக்கேன் ரொக்கந்தாகாசிபுக்கேன்
சிந்தையிலேநடக்கச் செயலில்லையென்னசெய்வேன்.

மேற்படி. வசனம்.

அரிச்சந்திரா நான் வூரிலிருந்து வரும்போது கொஞ்சம் போலே பெரும்பூசனிக்காயளவு சாதஞ்சாப்பிட்டுவந்தேன் யிப்போதுநேக்குப்பசி அருணாக்கயிறு அறுந்துபோகிற பாவனையாகத்தெரிகிறது ஆகையால் கொஞ்சஞ் சாதஞ் தருவித்துக்கொடு இல்லாவிட்டாற் பணத்தைக்கொடு அரிச்சந்திரா.

இராஜன் விருத்தம்.

காண்டகமலைகளெல்லாங் கடந்துமேவந்துவிட்டோம்
நீண்டதோர்சோலைகண்டோம் நிமிஷத்திற்காசிகாண்போம்
வேண்டியபதார்த்தத்தோடு விருப்பமாயமுதளிப்பேன்
ஆண்டவர்கிருபைசெய்து அடைவுடன்வருகுவீரே.

இராகம்-காம்போதி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

பன்னகாபரணன் தன்செயலோவிந்த
பாரவனந்தனில் மறையோரே
அன்னமென்றென்னைக்கேட்டீ ரடியேனாலாகுமோ
ஐயோவிதற்கென்செய்வேன் மறையோரே
அடருஞ்செடி கொடிகள் படருங்கானில்பிறவி
அந்தகன்சென்றிடு மதிபோலே
இடருமடிக்கோர்துன்பம் வருவதெல்லாமையையோ
என்னைத்தொடர்ந்தகால கெதியாலே
வாடுமிப்பாவிமுகங் கண்டுன்மனமிரங்கா
வர்மமேதையாசொல்லு மறையோரே
நாடுநகரமினிக் கண்டால்போஜனமையா
நானளித்திடலாகு மறையோரே
கொடுவிஷத்தையளிக்கும் விடவரவையமுர்தம்
கொடுவென்றால்கொடுக்குமோ வதுபோலே
கடுஞ்சுனையும்புதருங் கானலடிக்குமிந்த
காட்டில்சாதமேதையா மறையோரே.

அரிச்சந்திரன் வசனம்.

சுவாமி இந்தக் கொடியவனுந்திரத்தில் அடியேனைச் சாதம் வேண்டுமென்று கேட்டால் யெங்கிருந்து கொடுப்பேன் காசிபட்டணம் போனவுடன் சாதந்தருகிறேனையா சுவாமி.

நட்சேத்திரன் விருத்தம்

பன்னமேயரிச்சந்திராகான் வரும்பொழுதுண்டவன்னம்
பின்றுவழிநெடுக்கக்காடும் பெருமலையிடங்களெல்லாம்
உன்னியானலையச்செய்தா யோயினிவரவேமாட்டேன்
அன்னமிடவெனக்குவேண்டு மரும்பசிதீரத்தானே.

மேற்படி வசனம்.

அரிச்சந்திரா பசி அருகுதைக்கயிறு அறுந்துபோகிறபோது காசியாவது காசிபாவது சாதங்கொடடா கொடு.

அரிச்சந்திரன் விருத்தம்.

இந்தவிதிக்கென்னசெய்வேன் கயிலைமேவு
மிசாமுப்புரதகனு விமையோரேத்துங்
கொந்தவிழுங்கடுக்கையந்தார் சடையோய்கங்கை
குலவுமுடிப்பெருமானே முனிவர்தூதர்
வந்தவிக்காடதனி லன்னங்கேட்டு
வதைக்கின்றரிப்பழியு மேற்கலாமோ
சந்தவிதத்அம்மறக்கே னினியுன்றஞ்ச
மெத்தினேனுனதுபதம் போற்றினேனே.

இராகம் கமாஸ் தாளம் ஆதி.

பல்லவி.

ஆயிதென்னகொடுமை அன்னம்
அடவிதனிலேகேட்டால் கடவுளேயென்னசெய்வேன் (ஆ)

அநுபல்லவி.

தாய்தந்தையுங் குரு சாமியுநீயே
தமியனைகாத்திட வருவாயித்ததியே (ஆ)

சரணங்கள்.

நாகமுடன்மறையோர் சாதமென்றெனைக்கூவி
நயங்குமுர்மனமிக முரென்னசெய்வேன் (ஆ)

இல்லையென்றோர்மொழி பிறரவரைக்கூறிலேன்
பிசகேயருள்பர மேசனேயுனதருள் (ஆ)
மனதுமிகத்தயங்கி வாடிநேனையா
வந்துகாத்தருளென்னை மான்மழுதரித்தோனே (ஆ)

அரிச்சந்திரன் வசனம்

கயிலாசபதே கருணாநிதி யானென் செய்வேன் மறையவர் இவ்வனாந்திரத்தில் சாதங்கேட்கின்றாரே யெவ்விடம்போய் சாதந்தேடுவேன் நான் மறையவருக்கு சாதங்கொடுக்கவேண்டும் பிரபு.

பொது-வசனம்.

இவ்விதமாக அரிச்சந்திரன் பகவானைத் துதித்தவுடன் சிவபெருமானுடைய திருவருளால் தெய்வலோகத்தி லிருந்து மாதவர் சாதங்கொண்டுவருகிற விதங்காண்க.

மாதவர் விருத்தம்.

அக்கரையமைந்துநெஞ்சி லழுத்திியேமன்னனேற்ற
வக்கரவணிந்தவீர னருளினாலண்டர்க்கெட்டா
முக்கனிப்பிரசாதங்கள் மோதகமுதலாய்க்கொண்டு
மைக்கருங்காவிற்றேவ மாதவர்தான்வந்தேனே.

இராகம்-மோகனம்-தாளம்-ஏகம்.

பல்லவி.

மாசில்லாமணிமந்திர பூசிதனென்று
மாதவனிதோவந்தேனே சத்தியமன்னன்சமுகத்தில்நானே (மா)

அநுபல்லவி.

கோசிகமாமுனி மாய்கையில்நொந்து
கோமதையாற்றங் கரைதனில்வந்து
ஆசிவமேயென்று ஐயனைத்தேடி
ஆத்திரமுற்றவ னாடாவென்றோடி (மா)

சரணங்கள்.

அப்பளந்தோசை வடைபணிபாரம்
அதிரசமுருக்குத் தேங்குழலொருபாரம்
செப்பமுள்ளசர்க்கரைப் பொங்கல்சம்பாவுந்
தீர்க்கமாய்ப்புளியோதரை யேற்கையுடன்கொண்டு (மா)

மாதவர் வசனம்.

ஆரப்பா இந்த ஆரணியத்தில் பகவான் நாமதேயத்தைத் துதித்து சாதம்வேணுமென்று கேட்டவன்.

அரிச்சந்திரன் வசனம்.

சுவாமி அடியேன்தான் இந்த நட்சேத்திர பகவானுக்குச் சாதம்வேணுமென்று கடவுளைத்தோத்தரித்தேன் சுவாமி.

மாதவர் வசனம்.

இதோ சாதங்கொண்டு வந்திருக்கிறேன் வாங்கிக்கொள்ளு வாய்.

அரிச்சந்திரன் வசனம்.

சுவாமி இதோ நிற்கின்ற நட்சேத்திர பகவானிடம் கொடுங்கள்.

மாதவருக்கும் நட்சேத்திரய்யருக்கும் நடக்கும் சம்பாஷணை.

மா-ர். ஓ நட்சேத்திரய்யா.

ந-ன். ஆரடாநம்முடநாமதேயத்தைச்சொல்லிகூப்பிடுகிறவன்.

மா-ர். நான்தாண்டா தாயோழி பொட்டைக்கண்பயலே.

ந-ன். வாரும் அத்தான்.

மா-ர். வந்தேண்டா அம்மாஞ்சி.

ந-ன். என்னவாசனை கமகமவென்று ஜமாய்க்கிறது மூட்டை வனுவாயிருக்கிறது.

மா-ர். உனக்குச் சாதங்கொண்டுவந்திருக்கிறேன்.

ந-ன். என்னென்னவகைகள் வந்திருக்கிறது.

மா-ர். புளியோதரை எள்ளோதரை பச்சடி தாளிதம் வடை பாயாசம் போளி வந்திருக்கிறது.

ந-ன். மொத்தம் எவ்வளவு.

மா-ர். மொத்தம் ஐயாயிரத்திசொச்சம்பட்டை வந்திருக்கிறது.

ந-ன். அத்தான் அர்த்த ஆகாரமாச்சுது.

மா-ர். அம்மாஞ்சி வயிறு வெட்டுக்குழிபள்ளமா.

ந-ன். நான்கையால்வாங்கிச் சாப்பிடுவேன் தீர்த்தம்வந்திருக்கிறதா.

மா-ர். கெண்டியிறைய தீர்த்தமிருக்கிறது.

ந-ன். அத்தான் இலேபோட்டுப் பரிமாறு சாட்சி போஜனத்திற்கு பிராமணுள் அழைத்துக்கொண்டு வருகிறேன்.

மா-ர். அடேசப்பா உனக்குப் பாதிவயிற்றுக்கே போதாதென்றுசொன்னுயே சாட்சி பிராமணனுக்கு சாப்பா எங்கேயிருந்து போடுவாய்.

ந-ன். அத்தான் சாட்சிபோஜனமென்றால் தெரியாதா ஒருவனே எதிரில் வைத்துக்கொண்டு நான் சாப்பிடுவதே அல்லாமல் அவனுக்குச்சாதம் போடுவதில்லே.

மா-ர். ஒருவன் எதிரில் பார்த்துக் கொண்டிருந்தால் வயிற்றை வலியாதா.

ந-ன். வயிற்றையும் வலியாது முதுவையும் நோகாது.

மா-ர். பரிமாரியிருக்கிறேன் சாப்பிடுவா.

ந-ன். அத்தான் சீச்சீ பொங்கல் யார் பண்ணினர்.

மா-ர். தாராபடடி சக்கரவர்த்தி அய்யங்கார் பண்ணினர்.

ந-ன். அடடா காந்தலும்கருகலுமா யிருக்கிறதே.

மா-ர். அதுதான்பட்டை மூன்றுதுட்டு.

ந-ன். இந்தப்புளியோதரை யார்பண்ணினர்.

மா-ர். சரஸ்பதி லட்சுமணை அய்யர் பண்ணினர்.

ந-ன். உப்பு உறப்புப் புளிப்பு ஒன்றுமில்லேயே

மா-ர். புளிச்சக்கையைபோட்டுதான்பிரட்டிவைத்திருக்கும்.

ந-ன். இந்த ஊமத்தங்காய்துவையல் யார் பண்ணினர்

மா-ர். கந்தன் வீராயி பண்ணினுள்.

ந-ன். அடடா பிடிமயிர் நறைமயிராயிருக்கிறது.

மா-ர். பிடிங்கிப்போட்டிருப்பாள்.

ந-ன். இந்த அறைக்கீரை சமையல் யார் செய்தார்.

மா-ர். வெள்ளியங்கிரிக் கருப்பிசெய்தாள்.

ந-ன். உவர்மண்வாசனே வருகிறது.

மா-ர். அதையும் கறைத்துவிட்டிருப்பாள்

ந-ன். இந்தத்திருக்கண் அமுதுயார் செய்தார்.

மா-ர். சக்கிலியவீரி பண்ணினுள்.

ந-ன். அடடா வடக்கயிறு வாசனே வருகிறது.

மா-ர். எலும்புங் கிடைக்கும்.
ந-ன். இந்த வடை யார் தட்டினார்.
மா-ர். பட்டிப்பார்வதி தட்டினாள்.
ந-ன். தொன்னையார் வைத்தார்.
மா-ர். முத்துவையன் வைத்தான்.

நட்சேத்திரன்-வசனம்.

அரிச்சந்திரா நான் சாதம் சாப்பிடும் வரையிலும் இங்கே யாராவது வராதபடிக்கி பாதுகாத்துக்கொண்டிரும் பிள்ளாய்.

அரிச்சந்திரன்-வசனம்.

அப்படியே பாதுகாத்துக்கொள்கிறேன் சுவாமி.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

வந்தாரிதோபிச்சைக்காரரனேகர்கூடி காட்டில்
மன்னனிடத்தைத் தேடி. (வ)

அநுபல்லவி.

சிந்தைமிகத்தளர்ந்த பசிப்பிணியாலே
தேகமெல்லாநலிந்து துணியற்றதாலே
சந்தோஷமாகவன்னங் கொடுப்பாய்நீயின்று
தற்பரனுனக்கருள் தருகுவாரென்று. (வ)

சரணங்கள்.

கலிங்கதேசத்தில்நாங்க ளிருப்பது அய்யா
காசிதனக்கிவ்வழி நடக்கிறோமையா
உலிங்கப்பனிவன்பேரு புலிங்கப்பனய்யா
உணவுகொடுத்தால்கொஞ்சங்குறைமடையலாமென்று (வ)

பிச்சைக்காரர் வசனம்.

சரணஞ்சரணமையா சுவாமி எங்களுக்கு மிகுந்தபசியாயிருக்கிறது கொஞ்சஞ்சாதந்தரவேணுமையா சுவாமி.

நட்சேத்திரன் வசனம்.

இங்கேபாரடா வந்தவன்நேக்கே சாதம் பத்தாமல் விழித்துக்கொண்டிருக்கிறேன் போடாபோ.

பிச்சைக்காரர் வசனம்.

அப்படியானல் நாங்கள்போகிறோமையா சுவாமி.

கட்டியக்காரன் வசனம்.

சுவாமி மகாராஜாகுழந்தை லோகிதாசனுக்குக் கொஞ்சஞ் சாதங்கொடுங்கள் சுவாமி.

நட்சேத்திரன் வசனம்.

அடாகட்டியம் நல்லயோசனைசெய்தாய் நேக்கே சாதம்பற்றுமல் விழிக்கிறேன் லோகிதனுக்காவது சாதமாவது மீதியிருந்தால் பார்க்குறேன்.

பொது வசனம்.

இவ்விதமாக நட்சேத்திரன் சாப்பிட்டவுடனே அரிச்சந்திரனும் சந்திரமதியும் லோகிதாசனும் சத்தியகீர்த்தியும் கனிவர்க்கங்களைச்சாப்பிட்டபின் நட்சேத்திரன்சொல்கிறவிதங்காண்க.

நட்சேத்திரன் வசனம்.

அரிச்சந்திரா பொழுதும் அஸ்தமானமாய்விட்டது நேக்கு உண்டமயக்கந் தொண்டனுக்கு முண்டு மென்பதுபோல் நித்திரைவருகிறது யான்சயனித்துக்கொள்கிறேன் நீ பக்கத்திலிருக்க வேண்டும் கொடியஜெந்துக்களிறுடைய ஆரவாரம் என் காதில் விழாதபடி உன்தேவிவாக்கால் தாலாட்ட வேணும் உன்மகன் லோகிதாசன் யானடந்துவந்த அலுக்கைதீர யென்தேகங்களாதியந்தமும் நன்றாய்பிடிக்கும்படி செய்யவேணும் உன்மந்திரியை இதுவனாந்திர மாகையால் நம்மைச்சுற்றிப்பாரா விருக்கும்படி செய்யவேணும் யானே யேழைப்பிராமணன் பதனம் பதனம் சயனித்துக்கொள்கிறேன் அரிச்சந்திரா.

அரிச்சந்திரன்—விருத்தம்.

கரும்பினுமினியசொல்லி கருவுருந்தரளவல்லி
குரும்பைமென்முலையாய்வஞ்சிக் கொடியிடையாளே தூதர்
விரும்பியபடிநாம்செய்ய வேண்டுமுன்வாக்கதாலே
சுரும்புபோலினிவதாகச் சொல்லிதாலாட்டுவாயே.

மேற்படி வசனம்.

சந்திரமதி உன்வாக்கால் நட்சேத்திர புண்ணியவானுடைய மனதுதிருப்தியாகும்படி நன்றாய் காவுமலையுமுருகும்படி தாலாட்டல்வேண்டும் கண்மணி.

இராகம்-நீலாம்புரி-தாளம்-யேகம்.

கண்ணிகள்.

ராரிரரோராரிரரோ என்னையா ராரிரரோராமுரோ
ராரிரரோராரிரரோ ரராரோராரிரரோ.

சிராமவிகுலத்தின் செம்மலரிச்சந்திரனென்று
பாராமல்துன்பம்செய்த பண்பினரேகண்வளரீர்

அவசியமாய்ப்பொன்வாங்க அடியார்கள்பின்னுக
தவமுனிவர்தூதுவிட்ட தாகரேகண்வளரீர்

பாலனழுதாலும் பைங்கிளிகாணுந்தாலும்
காலனைப்போலேயடித்த கர்த்தனேகண்வளரீர்

பட்டபாடெல்லாம் பார்த்திருந்துகானகத்தில்
திட்டமாய்சோறுகேட்ட செல்வரேகண்வளரீர்

பொது வசனம்.

இவ்விதமாக நட்சேத்திரர் நித்திரையானவுடன் கட்டியக்காரன் தாகருடைய நித்திரைதெளியும் பொருட்டு தாலாட்டியெழுப்புகிற விதங்காண்க.

கட்டியக்காரன் தாலாட்டுதல்.

இராகம்-நீலாம்புரி-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

உருண்டைமுளியழகா நட்சேத்திரய்யா ஒருமுத்துப்பல்லழகா
வரண்டைபுபத்தழகா நட்சேத்திரய்யா மறையவரேநித்திரையா

கொரட்டைவிட்டவாயழகா கொடுவாய்முகத்தழகா
சுருட்டையயிரழகா நட்சேத்திரையா சும்பனேநித்திரையா

பார்த்திருக்கத்தின்று பசித்திருக்கயேப்பமிடும்
சோத்தாசையுற்ற நட்சேத்திரய்யா துரோகிமிகித்திரையா

வன்றாவீட்டில் நட்சேத்திரய்யா மாத்துக்களவாண்டு
கன்னத்தில்பூசைபெற்ற கட்டமுகாமிக்திரையா

அரக்கோணைச்சக்கிரத்தில் அன்னந்திருடியென்று
செருப்படிகள்பட்ட செல்வனேமித்திரையா

கட்டியக்காரன் வசனம்.

சுவாமி யெழுந்திருக்கவேணும் விடிந்துவிட்டது பிரபு.

நட்சேத்திரன் வசனம்.

அடடா சத்தம்போடுகிறவன் நான்நடந்துவந்த அலுப்புதீர்ந்தல்லோ யெழுந்திருப்பேன் இதோ அலுப்புத் தீர்ந்துவிட்டது தனியே யெழுந்திருந்தேனு இல்லையா.

அரிச்சந்திரன் வசனம்.

சுவாமி ஆதித்தன் உதயமாகிவிட்டது காசிநகரமோ இன்னம் வெகுதொலையாயிருக்கிறது இந்தக்குளிர்ந்தநேரத்தில் மெதுவாய் நடக்கலாம் வாருங்கள் சுவாமி.

நட்சேத்திரன் வசனம்.

அரிச்சந்திரா புறப்படு இதோ தயாராயிருக்கிறேன்.

அரிச்சந்திரன் விருத்தம்.

மான்விழியே அய்யோத்தி நகரைவிட்டு
வனத்தில்வெகு தொலைநடந்து வருத்தப்பட்டு
தேன்மொழியே கோமதையாற் றருகில்தங்கி
தேகபரிகாரமிகச் செய்தோம் வெய்யோன்
தீனதயா ளத்துடனே யுதித்துவிட்டான்
செல்லுவோங் காசிநகர் தன்னைநோக்கி
கானமயி லேகுயிலே யனமேயென்றன்
கன்னியரே துரிதமுடன் நடந்துவாராய்.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-சாப்பு.

பல்லவி.

வாவாவென்பெண்ணே சந்திர மதியே
மதியே மதியே மதியே (வா)

அநுபல்லவி.

பாவமோகமக்கிந்த பலங்கிடைக்கதுவென்று
மாவதனமேசந்திர மதியே மதியே மதியே மதியே (வா)

சரணங்கள்.

சுழற்காற்றடிக்குதே சுடுமணல்கொதிக்குதே
மழலைமொழியேசந்திர மதியே மதியே மதியே மதியே (வா)

தாகவிடாயாகுதே தைரியங்கள்சோருதே
மாகுலமிநிசந்திர மதியே மதியே மதியே மதியே (வா)

புன்னகுதையோபாதம் புல்லுங்கறுடுமேற்றி
மன்னால்கண்கூடுதே மதியே மதியே மதியே மதியே (வா)

அரிச்சந்திரன் வசனம்.

கண்மணி வெகுதொலைநடந்து பாலைவனம்வந்துவிட்டோம் வெயிலானது அகோரமாயிருக்கிறது யென்பின்னால் அதிசிக்கிரம் நடந்துவந்தால் பாலைவனங்கடந்து சோபந்தீர்த்துக்கொள்ளலாம் தாகவிடாயாகிறது அதிசிக்கிரம்வா சந்திரமதி.

லோகிதாசன் விருத்தம்.

கொடுக்கிறுல்செந்தேள்பூரான் கொட்டியவிஷந்தான்மீறி
கடுக்குதேதேகமெங்கும் கஷ்டத்துக்கினியென்செய்வேன்
வடுப்படாதிருக்கவேண்டி மந்திரமவிழ்தந்தந்து
இடுக்கத்தைத்தீர்க்கொண்ணுதோ வென்றனைப்பெற்றதாயே.

இராகம்-கமாஸ்-தாளம்-சாப்பு.

பல்லவி.

என்னசெய்குவேனம்மணி யிவ்வேதனைக்கி
னுதுசெய்குவே னுவினி (எ)

அநுபல்லவி.

முன்னால்செய்தவினையோ விந்நாள் தனிலவமாய்
முடிந்ததிக்கெதி முனிவர்செய்தசதி
முக்கண்ணனருளினி யெக்கெதியாகுதோ (எ)

சரணங்கள்.

செக்தேளரவை பூரான் செய்யானும்அட்டை
வந்தென்னைத்தாறுமாறாய்
நிந்தனையாகவே சிந்தைகள்நோகவே
நீட்டுதேவிஷத்தை வாட்டுதாஸ்பதத்தை
காட்டில்விஷச்செந்து கூட்டங்கூட்டமாய் (எ)

கஷ்டப்பட விட்டதே நமக்கிந்த
காலத்தில்வினைதொட்டதே
அஷ்டதிசையோர்வாழ்த்த இஷ்டரெந்தனைப்போற்ற
அகமகிழ்ந்தேனையோ சுகமிழந்தேன்பொய்யோ
மிகவேதனைப்பட ஜெகநாதன்கற்பனை (எ)

லோகிதன் வசனம்.

அம்மணி இந்தக் காட்டிலுள்ள விஷ செந்துக்களெல்லாம் யென்தேகத்தில்கொட்டி தேகமாதியந்தமும் புண்ணாய் நோகின்றது நானென்னசெய்வேன்.

இராகம்-அசாவேரி-தாளம்-சாப்பு.

பல்லவி.

மன்னவரே மைந்தன் அழுகிறானிதோ (ம)

அநுபல்லவி.

பொன்னவமணிக்கிரீடம் புனைந்தரசுபுரிந்த
புரவலனேபாலகன் பாதவிக்குமுன்பாரும் (ம

சரணம்.

கொட்டுந்தேள்பூரான்பல துஷ்டவிஷகடியால்
தட்டழிந்துடல்மன்ந் தயங்குறான்பாலகன் (ம)

அத்தனருளாலிந்த வவனிமுழுதுமாள
பெற்றபலனிதுவோ வித்துயரங்கள்கண்டோம் (

சந்திரமதி வசனம்.

பிராணேசா நமதருந்தவ சிரேஷ்டனாகிய லோகிதாசன்மீது கொடிய விஷச்செந்துக்கள் கொட்டிய வேதனை சகிக்காது வருந்துகிறானென்செய்வேனாதா.

அரிச்சந்திரன்வசனம்.

ஏ ஜெகதீசா உன் திருவருளல்லாமல் வேறே கெதியில்லையெனதுபுத்திரனே விஷத்தினால் வாதனை யடைகின்றான் அவ்விஷத்தைநீக்கிச் சுகத்தைக் கொடுக்கவேண்டியது நாதா உனது பஞ்சாட்சரத்தை யலிக்கேன்.

லோகிதாசன் வசனம்.

பிதா இப்பொழுது சவுக்கியமாய்விட்டது நடக்கமுடியவில்லை பாதங்களெல்லாம் நோகிறது.

அரிச்சந்திரன் விருத்தம்.

தண்மிகுமதலாயென்றன் றவத்தினிலுதித்தபாலா
கண்மணிநமக்குவந்த கஷ்டத்தைநினைந்திடாதே
பண்ணவர்புகழுங்காசிப் பரமனும்நம்மைகாப்பார்
மண்மிசைமெதுவதாக மைந்தனேநடந்துவாராய்.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

அப்பனேநடந்துவாடா ஒப்பிலாதரத்தினமே (அ)

அநுபல்லவி.

செப்பரியநற்றவமே தேடொண்ணாதகற்பகமே
இப்புவியையாளவந்த வென்றனிருகண்மணியே (அ)

சரணங்கள்.

கனியேயறுசுவையே கவலைதவிழ்த்தசேயே
முனிவர்செய்திடுஞ்சதிக் கினியென்செய்குவோம்விதி (அ)

அரும்பொருளேமணியே யழகுள்ளநற்பணியே
குருவசிஷ்டரையெண்ணி குணநிதியேநீமண்ணில் (அ)

பஞ்சணைமேலடிநோக பதறுவாய்வெகுவாக
கஞ்சமலர்ப்பாதம்ரெண்டுங் கல்லழுத்திடாமலின்று (அ)

அரிச்சந்திரன் வசனம்

பாலகா மனத்தைரியத்தை விடாதே யிதோ சமீபத்தில் சிங்காரமான சோலையொன்று தோற்றுகிறது அதில் வேண்டிய கனிவர்க்கங்கள் பறித்துத்தருகிறேன் கண்மணி.

நட்சேத்திரன் விருத்தம்.

மதகரிபிடியுஞ்சிங்க மருவியவரையுஞ்செந்தே
னுதவுநண்டலையுங்காவு முற்றதிற்புகுந்தும்புட்ப
பதங்கடீய்ந்திடக்கொடிய பாலையிற்புகுந்தவந்தே
னிதம்படாதினிடக்க வேறுவாகனமென்றீயே.

மேற்படி வசனம்

அரிச்சந்திரா இந்த வனங்களில் என்னால் நடக்கமுடியாது பெண்ணைக்கொடுத்துவிடென்றாலும் காசியிற்போய்த் தருகிறேனென்று சொல்லுகிறாய் சூடு பொறுக்க முடியுதில்லை காலும்நடக்கமுடியுதில்லை ஒருவாகனங் கொண்டுவந்தா லேறியாவது வருகிறேனென்னசொல்லுகிறாய்.

அரிச்சந்திரன் வசனம்.

சுவாமி யிதோ சிங்காரமான சோலைதெரிகிறது அவ்விடம் போனவுட னிருந்திளைப்பாறி மெதுவாய் நடந்துபோகலாம் இந்தஆரணியத்தில் வாகனமேது சுவாமி.

நட்சேத்திரன் வசனம்.


அரிச்சந்திரா இதோதெரிகிற சிங்காரச் சோலைவரையாவது ஒரு வாகனமில்லாமல் நடந்துவரமுடியாது.

அரிச்சந்திரன் விருத்தம்.

மைதவழ்வரையின்பாங்காய் வாகனவேண்டுமென்று
லையனேகொடுக்கவென்னா லாகுமோவாகாதையா
செய்யவள்வசிக்குமென்றன் றிண்டோளிமேலறிக்கொள்ளும்
ஒய்யெனவிந்தச்சோலைக் கொருநொடிதனிற்செல்வேனே.

மேற்படி வசனம்.

சுவாமி யிதோ வென்றோள் மீதி லேறிக்கொள்ளுங்க ளிதோ தெரிகிறசோலையிலொருநொடியிற்கொண்டுபோய் சேர்க்குறேன் தயைசெய்யுங்கள்.



நட்சேத்திரன் வசனம்.

அரிச்சந்திரா அப்படிச்செய்தால் நோக்கு ரெம்பப்புண்யம்.

நட்சேத்திரனைத் தூக்கிச்செல்கிற பாகம்.

அரிச்சந்திரன் விருத்தம்.

பூமகளென்றுநீங்காப் புயவலியாலேயிந்தப்
பூமகடன்னையாண்டேன் புனைமகுடத்தைப்பூண்டேன்
நாமவேலரசற்போற்ற நனியகவிரதமுற்றேன்
மாமுனிதூதர்க்கின்று வாகனமாகினேனே.

இராகம்-காப்பி தாளம்-ஆதி.

கண்ணிகள்.

மறையவர்க்கு வாகன மானே   னே
வாகனம்போ லானேனே   மனமிக நொந்தேனே
சோகமாகினே   னே (மறை)

கரிபரிதனிலேறி வாழ்ந்தே   னேயோ
கௌசிகற்கதையிந்தென்கடனுக்   மனந்தாழ்ந்தேன்
கானிலே   யிந்த (மறை)

பூச்சக்ரக்குடைக்குள் வீற்றிருந்த   பாவி
புலம்புகிறேன் கூவி   கலங்குதென தாவி
கொடுங்காவிலே   யிந்த (மறை)

வன்கொடுமையாகச் செய்தேனே   வீசா
சிசுவுடல்கொய்தேனே மறையோரைவைதேனே
மகாபாவஞ் செய்   தேனே (மறை)

அரிச்சந்திரன் வசனம்.

கைலாசபதி யானைம்பத்தாறு தேசத்திற் கதிபதியாயிருந்த பலன் கொடிய பாலைவனத்தில் மறையவருக்கு வாகனமாகும்படிவிதித்தா யென்செய்குவே னுதா.

சந்திரமதிவிருத்தம்.

மருவலரஞ்சவிஞ்சும் வரைப்புயமீதுபோதார்
திருமகளோடும்பூமி தேவிவாழிலமைமீங்கி
அருமுனிபதத்துக் கன்றுயின்முடியளித்தாய்
சுருதிமாமறையோன்றன்னைச் சுமக்கவுமாளானீரே.

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

பாரஞ்சுமக்கவிதிவசமோ பாரஞ்சமக்கவிதிவசமோ (பா)

அநுபல்லவி.

தார்புனையுந்திண்புய வீரசந்தராவிந்தப் (பா)

சரணங்கள்

காரணவிநியோ கௌசிகன்சதியோ
கோரமிருந்ததொரு ஆரண்யந்தனிலிந்தப் (பா)
கால்தடுமாறக் கண்கணீர்சோர
பாலவனத்திலனல் போலவெயில்மீறியிப் (பா)
அருங்கடனுமேலே யவதிமென்மேலே
கருகமலமதுமிகக் கலங்கமண்மேலிந்தப் (பா)
உடல்மிகப்பதற வுருகுமேவர்வைசிதற
மடமயிலொடுமகன் மங்கிரிகதறவிப் (பா)

சந்திரமதி வசனம்.

பிராணேசா நமக்கு மிப்பேர்க்கொத்த ஆபத்துவருமா தங்களை ஐம்பத்தைந்து தேசத்தரசர்களும்வந்து பணிந்துபோக இந்தக் கொடியவனத்தில் மறையவரைத் தூக்கிச் சுமக்கும்படி லபித்ததே யென்னகஷ்டம்.

அரிச்சந்திரன் வசனம்

பிராணசகி வந்ததெல்லாம் வருகட்டும் நாம்தானே யனுபவிக்கவேண்டும் இதற்காக வியாகூலப்படவேண்டாம் சந்திரமதி.

சந்திரமதி வசனம்.

சுவாமியென்பிராணேசன் பாரஞ்சுமக்கமாட்டாமல் கஷ்டப்படுகிறார் சற்றுமறைவேழியப்பங்கள்வாருங்கள் சுவாமி.

நட்சேத்திரன் வசனம்.

அரிச்சந்திரா நேக்கு இப்பயெவ்வளவு சுகமாயிருக்கிறது இதுவரை நீதூக்காமல்விட்டால் யென்னால்நடக்கமுடியாதுதான்இனி யெவ்வளவு தூரம் வேணுமானாலும் நடந்துவருகிறேன்

அரிச்சந்திரன் வசனம்.

பிரான சகிமறையவர் நடந்துவருகிறதாச் சொல்லுகிறார் இதோ சிங்காரச்சோலைதெரிகிறது அவ்விடஞ்சென்று இளைப்பாரலாம் நாயகி.

சந்திரமதி விருத்தம்

என்னுயிர்த்துணைவரான வேந்தலேயியம்பக்கேளும்
என்னமாய்நடப்பேன்பாத மெரியுதேசிவந்துகாசி
இன்னமெவ்வளவுதூர மிருக்குதோவறியேன்சிந்தை
சின்னபின்னங்களாகச் சிதறுதற்கினியென்செய்வேன்

மேற்படி வசனம்.

பிராணேசா பாதங்களெல்லாம் நோக்கின்றது காசிப்பட்டணம் இன்னமெவ்வளவுதூர மிருக்கின்றதோ சொல்லுங்கள்.

அரிச்சந்திரன் விருத்தம்.

வஞ்சியர்க்கரசேயென்றன் மனைவியேவருந்தவேண்டாம்
கொஞ்சநேரத்திலிந்தக் கொடியதோர்வனததைத்தாண்டி
கஞ்சமும்வருக்கைபுன்னை கற்பகதருக்கள் சூழ்ந்த
ரஞ்சிதச்சோலைக்காண்பாய் நண்ணுவோம்பெண்ணேவாராய்.

இராகம்-சங்காபரணம்-தாளம் ஆதி.

பல்லவி.

மானேயதிவேகமாய்வாராய் வருந்ாதேயென்(மா)

அநுபல்லவி.

கானமயிலேகுயிலே கண்ணேரிணைவேளயிலே
தேனேயதோபராயொரு சிங்காரவனந்தோற்றுது (மா)

சரணங்கள்.

கொடிபோலிடையாளேயென்றன் கோவையிதழாளேயுன்றன்
அடியானதுவருந்தாமலே யன்னமேயென்றன்முன்பாகவே (மா)



தவமாமுனிமாய்கையாலே தாணிதனில்நாமிக்காலே
அவதிப்படவந்ததே யாரிடத்திற்சொல்லுமேவாமினி (மா)

பாலைவனந்தனைக்கடந்து பாவையரோநாம்நடந்து
சோலைவனந்தவிர்ச்சென்று சோபந்தனைமாற்றவின்று (மா)

பாலனுடலாடுகிறான் பசியால்மனம்வாடுகிறான்
காலகெதிதானோகொடும் பாலவனம்வந்தோமினி (மா)

அரிச்சந்திரன் வசனம்.

கண்மணி இதோ சிங்காரச்சோலைதெரிகிறது அதில்சென்றுஇளைப்பாறுவோம் விரைவாய் நடந்துவாமயிலே.

நட்சேத்திரன் வசனம்.

சந்திரா இதுதானோ சிங்காரச்சோலை இதில் சற்றுநேரமிருந்து இளைப்பாறுவோம் சந்திரா.

பொது வசனம்.

இவ்விதமாகப் பாலைவனங்கடந்து சோலைவனம்வந்துசேர்ந்துமந்திரியால் கனிவர்க்கங் கொண்டுவரச்சொல்லி யாவரும் புசித்து தாகசாந்திசெய்து இளைப்பாறிகாசிமாநகரஞ் செல்லுவதற்கு பிரயாணமாகப் போகும்போது விஸ்வாமித்திரர் வேதாளத்தைச்சிருஷ்டித்து அரிச்சந்திரன் வகையறுப்பேர்களைக் கொன்றுவிடாமல்பயமுறுத்தும்படி யனுப்பினவிதங் காண்குக.

வேதாளம்வருகிறபாகம்.

வேதாளம் விருத்தம்.

சங்கமிகுமிவ்வனத்தின் பாங்கரோங்குந்
 தண்டலையினெடுங்காலங் காத்திருந்தே
னிங்கொருவரிதுவரையும் வரவுங்காணே
 னிவ்வனத்திலரக்கர்முத லெவரும்வாரார்
பொங்கியவெம் பசியாலேபுழுங்கிவாடிப்
 பொறிகலங்கிநிலைதளர்ந்த சமையந்தன்னிற்
புங்கவாநீரைவர்களும் போந்ததென்றன்
 புண்ணியமேயென்னெதிரே நண்ணினீரே.

இராகம்-கல்யாணி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஆரடாவென் வனத்திலே
அடிப்பேனுன்றனைச் சணத்திலே
வீரசூர தீரனென்று
வேதாளம்வந்து தோன்றினன் (ஆ)

கருத்தநிறமும் பெருத்தவுடலுங்
கையிற்றெண்டு கொண்டுமே
வருத்தப்படுத்த அரிச்சந்திரன்முன்
வனத்திலேவேதாளந் தோன்றினன் (ஆ)

அலைபோல்நாக்கு மலைபோல்மூக்கும்
அறட்டிகண்களை யுருட்டியே
குலைநடுங்கவே தலையையசைத்து
கொடியவேதாளந் தோன்றினன் (ஆ)

மாசில்லாத கோசிகன்செய்த
மாய்கையாலே பேயைப்போலே
வீசுவேன்தெண்டா னுன்னையென்று
வேதாளம்வந்து தோன்றினன் (ஆ)

அண்டமதிரப் பிண்டஞ்சிதற
ஆவித்தாவி கூவியே
சண்டனேக வண்டனைகச்
சணத்தில்வேதாளந் தோன்றினன் (ஆ)

வேதாளம் விருத்தம்.

ஆரடாபயல்காள்நீங்க ளச்சமில்லாமலென்றன்
தார்வனந்தனிலேவந்த தைரியமறிவேனூர்போ
கூறடாவிபரமாகக் கூடியக்ஷணத்திலிப்போ
பாரடாதெண்டால்வாட்டி பட்சணஞ்செய்குவேனே.

மேற்படி வசனம்.

ஆரடா யென்சிங்காரவனத்தில் யாதொரு யச்சமின்றி மனிசர் சஞ்சாரஞ் செய்கிறது பார்க்ஷணத்தில் தெண்டாலடித்துப்பொசித்துப்போடுகிறேன் இங்கேவாருங்கள் நீங்களார்.

அரிச்சந்திரன் விருத்தம்.

திட்டமாயயோத்தியாண்ட செம்மலென்றறிந்திடாமல்
மட்டிநீயென்னவார்த்தை வழுத்துறாய்வாளாலுன்னை
வெட்டியிர்த்தூளிசெய்வேன் விணிலேமாளவேண்டாம்
அட்டிநீசெய்திடாம லகலுவாயிவிடம்விட்டே.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

பூதமேவே தாளாநீயும் போடாவெகு தூரம்போறேம்
போதனை யோவுன் சாதனை யோவென்
வாதனை யறியாய் பேதைநீ குறியாய் புலையா பிழையாய். (பூ)

நாடிழந்து நகரிழந்து நாங்கள்போறேம் பரதேசி
ஞாயமோ தோஷி வாய்மதம்பேசி
நாடுறாய் வெட்டி போடுவேன் மட்டி நாயே பேயே. (பூ)

மாயமுனி சோதனைபால் வந்தோம்பெண்டு பிள்ளைமந்திரி
மறையவ ரோடுப் பிறையது சூடும்
இறைவனை நாடி யுருகிறேன் றேடி வந்தே னொந்தேன் (பூ)

தீராதருங் கடனாலே போறேமறு தேசங்காசி
திருநகர் சேர இருவிழி சோர
உருகுதென் னெஞ்சங் குருவடி தஞ்சந்திடமோ அடமாய் (பூ)

வையகம்புக ழயோத்தி மெய்யனரிச் சந்திரன்கீர்த்தி
வானுல கறியு மாநில மறியும்
எனறி யாய்நீ தானெதி ராமோ வாளால் மாள்வாய் (பூ)

நேரம்வெகு வாகுதடா நேர்மையறி யாயோமூடா
நிந்தனைச் சிச்சி நீயொரு பூச்சி
இந்திர ஜாலத் தந்திர மறிவேன் நேரு பாரு. (பூ)

அரிச்சந்திரன் வசனம்.

அடே வேதாளா நானிருப்ப தையோத்திமாநகரம் திரிச்சங்குவின்மைந்தன் என்பேர் அரிச்சந்திரன் இவளென்பத்தினி இச்சிறுவனென்குழந்தை யவரென்னுடைமந்திரி யிந்தப் புண்

வியவான் யான்கொடுக்கவேண்டியபொன்னைப் பெற்றுக்கொள் ளவந்த நட்சேத்திரையர் நாங்கள் விஸ்வாமித்திரருடைய கடனைத் தீர்ப்பதற்குக் காசிமாநகரஞ் செல்கின்றோம் நீ வீணில் தற்கஞ் செய்யவேண்டாம் அப்புறஞ்செல்.

வேதாள விருத்தம்.

பொருத்தேனுன் றலெனது கோபமெல்லாம்
புரவலனே யொருவசனம் புகலக்கேளு
வருத்தமெனக் கதிகமடாபசியினாலே
வாய்க்குருசி பொருளகப்படாமல்
கருத்துமிகத்தமொழி வந்தேனுன்பால்
கௌசிகனார்வரவிடுத்த தூதரான
பெருத்தமறை யவன்றனைநீ கொடுப்பாயாகில்
பிரியமாய்த்தின்றருசி யறிகுவேனே.

மேற்படி வசனம்.

அரிச்சந்திரா நல்லது உங்கள் மேபரிலிருந்த கோபத்தைமன்னித்தேன் யெனக்குப்பசிதீவரமாயிருக்கிறது அதிலும் நரமாமிசம்புசித்து வெகுநாளாயிற்று ஆகையால் உன்னுடன் கூடவந்திருக்குங்கொழுத்தபிராமணனைமட்டும் யென்கையில்கொடுத்துவிட்டு நீங்கள் நால்வர்களும் காசிக்குச்செல்லுங்கள் யென்பசியை நிறைவேற்றிக்கொள்கிறேன்.

நட்சேத்திரன் விருத்தம்.

இடரெலாந்தவிர்க்குஞ்செங்கோ லேந்தலேசொல்லக்கேளாய்
படர்வனைந்தன்னிற்பூதப் பசிக்கென்னைக்கேட்குதிப்போச்
சுடர்வடிவாளாலத்தைத் துண்டித்தான்முனிவர்க்கீயுங்
கடனையும்வேண்டேன்செல்வேன் காத்திடாரிறுதிதானே.

நட்சேத்திரன் விருத்தம்.

சந்திரா சந்திரா வென்னசெய்குவே னுங்களநல்வர்களையும் நீக்கிவிட்டு வென்னைமட்டுந் தின்கிறே தின்கிறே னென்கிறதே நா னென்னசெய்வே னித்தருண மிதைவெட்டிச் சம்மாரஞ் செய்யும்பட்சத்தி லுன்னையான்பொன்கேட்கவேயில்லை அப்படிக்கேட்டாலநேகபாவஞ்செய்த பயலேயென்றுசொல் லரிச்சந்திரா ஆம்பிடையாள் திரண்டுக் குச்சுக்குளிருக்கிற ளின்னம் குதுசா

ந்தி நடக்கவில்லை முனிவர்சொல்லுக்காகவு முனக்காகவும்வந்து விட்டேனுனே வேழைப்பிராமணன் உனக்குத் தெரியாதா நா னென்ன சொல்லுவேன் நீ பயப்படாதே நீ பாயைப்போடாதே பாயைப்போடாதே அரிச்சந்திரா.

அரிச்சந்திரன் விருத்தம்.

தாகரேயென்னவார்த்தை சாற்றினீர்தகுதியாமோ
வாமுனிகடனைவாங்க வந்தநீருமைப்பூதர்,
தரவெனைக்கேட்டால்யானுஞ் சம்மதிப்பேனோசொன்ன
வுரைதடுமாறேன்பூத மோடிடத்தீட்டுவேனே.

மேற்படி வசனம்.

சுவாமி அடியே னிருக்கும்போது கிஞ்சிற்றேனும் பயப்பட வேண்டியதில்லை க்ஷண நேரத்திற்குள்ளாக விந்த வேதாளத் தையென் கட்கத்திற்கிரைகொடுக்கிறேன் பாருங்கள்.

அரிச்சந்திரன் விருத்தம்.

துடுக்குடனென்னவார்த்தை சொல்லிவிட்டாய்கிர்மூடா
கொடுப்பனோதூதர்தம்மைக் கொன்றநீதின்னவென்றால்
வடுப்படாத்தீரனென்று வாய்மதம்பேசுமுன்னைத்
திடுக்கிடச்சணத்தில்வெட்டித் தென்றிசைக்கனுப்புவேனே.

இராகம்-கல்யாணி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஏண்டாவீணில்மாண்டுபோகிறாய் அடாவேதாளா. நீ (ஏ)

அநுபல்லவி.

வேண்டாமடாசொன்ன வார்த்தையைத்தட்டி
வீணிலிறந்துபோ காதே யுன்றன்
வீரமென்னிடஞ்செல்லாதே வருந்தீதே. (ஏ)

சரணங்கள்.

பாரரூபமுட னரவாரஞ்செய்து
கூருதடாகெர்வம் பாவி யிதோ
பதைத்தொடுங்குமுன் னாவி மிகக்கூவி. (ஏ)

தர்மநெறிமுறை யின்படிகூறினேன்
தானறிந்துகொள்ளு வாயே யப்பால்
தப்பிப்பிழைத்தோடு வாயே மட்டிப்பேயே. (ஏ)

சத்தியர்தன்னைத் தவறுவரிச்சந்திர
வுத்தமனுன்ராஜ சிங்கம் உன்போல்
சத்துருவைச்செய்வேன்பங்கம் அந்தரங்கம். (ஏ)

அரிச்சந்திரன் விருத்தம்.

அடாதுஷ்டாவினில் மாண்டுபோகாதே யப்புறஞ்செல்.

வேதாள வசனம்.

அடாபயலே நீதானோவென்னைக் கொல்லுகிறவன் இதோ ஐந்துபேரையுஞ்சேர்த்து விழுங்கிப்போடுகிறேன்

அரிச்சந்திரன் சொல்கிற தரு.

இராகம்-கமாஸ் - தாளம் - சாப்பு.

பல்லவி.

போடாஇயப்புறத்தினில் மூடா அடா
புலையா பிழையாய் மலையோ விலையே நிலையேதோடிப் (போ)

அநுபல்லவி.

போடாபோடாவென்று பொறுமையாய்மிக்க
போதனைசெய்தின்னம் வர்தனைசெய்கிறாய்
தாடாவுனதுயிர் சண்டன்பதிக்கிதோ
சாரும்படி யேகூறிடு வேன்மிஞ்சியே போராடாதே (போ)

சரணங்கள்.

ஆரமணிமகு டம்பலபூஷணம்
ஐம்பத்தாறுதேச . மாசசிம்மாதனம்
தீரன்முனிவர்க் களித்ததல்லாலென்றன்
திறமைத்தவறிடவில்லையுன்சிரமற்றுருளுமேதொல்லை.(போ)

அஷ்டமத்துச்சனி யுற்றதுடியால்
கஷ்டமுனக்குநே ரிட்டதடாதுரோகி
சட்டைபண்ணுமலே கிட்டநெருங்குறாய்
சண்டாளனேயுனைநாய்நரிகண்டேருசிகொண்டாடுமே ()

மேற்படி வசனம்.

அடா துஷ்டா! தருமசாஸ்திரத்திற்குப் பொதுவாக இது வரையுன்னைப்பாதுகாத்தேன் மரியாதையா யப்புறஞ்செல்.

வேதாளம் வசனம்.

அடே யற்பமனிதா யென்னுடைய பராக்கிரமம் சற்றுந் தெரியாது யென் சிங்காரவனத்தில் வந்ததுமன்றி அச்சமில்லாமல் யென்னைவதைப்பேனென்று சொல்லுகிறாய் இதோ க்ஷணத்தில் உன்னை யெடுத்து விழுங்கி விடுகிறேன்பார்.

அரிச்சந்திரன் விருத்தம்.

அந்தமாய்முனிக்கிச்செம்பொன் னளித்திடக்காசிசேர
வந்தனமிந்தக்காட்டில் மறித்திடர்செய்யலாமோ
எந்தனையுணராயானு மிதையரிச்சந்திரராஜன்
உந்தனைவதைப்பேன்கண்டா யொதுங்குவாய்பதுங்குவாயே.

இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

ஏதடாவேதாளா எதிராடுகிறாயென்னோடு (ஏ)

அநுபல்லவி.

நீதமறியாதகொலை பாதகனேநீதடைவாய். (ஏ)

சரணங்கள்.

மண்டலம்புகழயோத்தி மன்னவனென்றன்கீர்த்தி
வண்டாவறிந்திடாமல் தெண்டுகொண்டிருக்கவந்தாய். (ஏ)

துஷ்டரைக்கருவறுத்த சூரனென்றறிந்திடாமல்
கஷ்டதிசையாலேவெகு கட்டனைசெய்திட்டாய்துரோகி (ஏ)

பேயும்பிசாசுந்தேடி பிடிங்கியுன்றனைக்கூடி
வாயாரத்திங்கும்படி வதைப்பேன்சதைப்பேனிதே. (ஏ)

அரிச்சந்திரன் வசனம்.

அடேமூர்க்கா யான் அஷ்டதிசையிலுள்ள துஷ்டர்களை அதம்செய்த பகுதூர்செம்மலென்றறியாமல் யென்னுடன்வாதடுகின்றாய் இதோக்ஷணத்தில் உன்னுயிரை எமன்மதிக்கோட்டுகிறேன்.

வேதாளஞ்சொல் விருத்தம்.

நல்லதுவடடாமன்னா னாவெடுப்பாகப்பேசி
கொல்லுவேனுன்னையென் கொடியவஞ்சகனேயென்முன்
னில்லடாதெண்டாலுன்னை நிமிடத்திலடித்துக்கொல்வேன்
தொல்லையடையவேண்டாம் தூதனைதெத்தஞ்செய்யே.

மேற்படி வசனம்.

அடாமனிதா சிறுபூச்சிபோல் நின்றுகொண்டு வென்னுடன் தர்க்கஞ்செய்ய வுனக்கு அவ்வளவு சாமார்த்தியமா மரியாதையாகத் தூதனையெனக்கு தின்றதற்கு தெத்தஞ்செய்கிறாயா இல்லையா சொல்.

அரிச்சந்திரன் விருத்தம்.

ஆதவன்றன்குலத்துதித்தே னரசும்பூண்டேன்
அகிலமெல்லாமொருகுடைக்கு ளாண்டேனிந்த
மாதலத்தைமாமுனிவர்க் களித்தேன்சொன்ன
வார்த்தைபிசகாதவண்ணங் காசிக்கேகும்
போதடாவிதனில்மறித்துத் தரகர்தம்மைப்
புசிக்கவிடைகேட்டனை நீபுகழுண்டாமோ
பேதகம்வந்தெய்துமென வாளைதூக்கி
பேசினேனிரண்டுதுண்டாய் வீசினேனே.

இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

வெட்டினேன்கைவாளாலுன்றனை நானே
மிக்கவோத்தங்கள்வாயில் கக்கவேயுன்றனையின்று. (வெ)

அநுபல்லவி.

நட்டணையாகவேபேசி கெட்டலைந்தாயடாதோஷி
தொட்டதோவுனைச்சனியன் அட்டகாசஞ்செய்துவந்தாய். ()

அநுபல்லவி.

எத்தனையோசொல்லசொல்ல சித்தமிரங்காமல்நல்ல
சுத்தவீரனைப்போலவேபித்தனே யென்றெதிர்த்தாய். (வெ)

ஞாயமறியாதமூடா பேயேதொலைந்துபோடா
வாய்மதம்பேசிபேயினில் மடிந்தாய்முடிந்தாயிதோ. (வெ)

அரிச்சந்திரன் விருத்தம்.

சுவாமி நான் யெவ்வளவோ தர்மசாஸ்திரத்துக்குப் பொதுவாக நீதிமார்க்கங்களைச் சொல்லியுங்கேளாது யென்னோடெதிர்த்தவேதாளத்தை யிருகூறாக்கிவிட்டேன் நாம் காசிமாநகாஞ்செல்லுவோம் வாருங்கள் நாதா.

நட்சேத்திரன் விருத்தம்.

மடலவிழ்கமலச்செங்கை வள்ளலேபூதந்தன்னை
யிடாினையெனதுமுன்னே ரியற்றியதவமதாகும்
படர்வனந்தன்னில்வாரேன் பட்டதோர்துன்பம்போரும்
கடனுக்கோவகையைச்சொல்லிக் கடந்துநீசேருவாயே.

மேற்படிவசனம்.

அரிச்சந்திரா இதுவரை உன்னையேதோ யோக்கியனென்றுநினைத்திருந்தேன் நீ பருவதம்போல்வந்த வேதாளத்தை இருகூறாக்கினவன் யென்னை லகுவில்விடப்போகிறாயோ இல்லை ஆகையால் மரியாதையாய்ப் பொருளையிவ்விடத்திலெனக்குக்கொடுத் தனுப்பிவிட்டு மறுஜோலிபாரு இல்லாவிடில் ஒரு பொய்யாவது சொல்லிவிடு அரிச்சந்திரா.

இராஜன் விருத்தம்.

ஐயரேமுனிவர்தூதா வருங்கடன்பட்டாலென்றன்
மெய்யுரைதவறிப்பொய்யை விளம்புவேனென்றெண்ணாதே
மைதவழ்காசிதேசம வகையுடன்சென்றபின்பு
துய்யவேதியரேபொன்னைத் துரிதத்தல்தருகுவேனே.

மேற்படி வசனம்.

சுவாமி யென்மீது கோபிக்கவேண்டாம் என் கழுத்தறுத்தபோதிலும் பொய்சொல்லப் போகிறதில்லை காசிதேசம் போனவுடன் பொன்தருகிறேன் கூடவருகவேணும் சுவாமி.

நட்சேத்திரன் வசனம்

நல்லது அரிச்சந்திரா காசிதேசம் போனவுடன் பொன்கொடுக்கவேண்டும் இதோவருகிறேன்.

இராகம்-தேசிகதோடி—தாளம்-ரூபகம்

பல்லவி.

அன்னமேநடந்துவாரா யடவிதனில்மெதுவாய்

அநுபல்லவி.

பன்னகாபரணம்பூண்ட பரமனருளையெண்ணி

சரணங்கள்

சொற்படிதவறாமலே சோதனைக்குள்ளகப்பட்டோம்
கற்பிலுயர்ந்தவென்றன் காதலிகுணநிதியே (அ)

கல்லடர்ந்தவனந்தனைக் கடந்துவந்தோமேவினை
தொல்லிலகிலாரைவிடுஞ் சுந்தரமேயென்றனாசை (அ)

அடுத்தோங்காசிநகரை யருவையிளமயிலே
எடுத்தஜென்மமீடேற வீசனடியைப்பணிவோம். (அ)

இராஜன் வசனம்

பெண்ணே மயங்கவேண்டாம் காசிநகரம் இன்னம்கொஞ் சந்தூரமிருக்கின்றது என்னுடன் விரைவாய் நடந்துவரவேண் டியது.

பொது விருத்தம்.

மதிதயன்மகளுமன்னன் மைந்தனுமமைச்சன் றாதர்
விதிவசத்தாலேகாடு மேடுமாவனமுந்தாண்டி
யெதிகடன்தீர்க்கவெண்ணி யேகும்போதனையுஞ்சிறி
சதிசெயவந்தசங்கை சாற்றுவேனாற்றுவேனே.

பொது வசனம்.

இவ்விதமாக அரிச்சந்திரன்முதலானஐந்துபேர்களும் வரு கையில் விஸ்வாமித்திரனேவலால் அக்கினியாறுய்வழி மறுத்து க்கொண்ட விதங்காண்க

பரமபதிதுணே.

அக்கினியாறு வழிமறிக்கிற பாகம்.

விருத்தம்.

கொண்டல்சூழ்கொண்டலென்ன கொடும்புகையண்டமூட
மண்டநடுங்கமூங்கி வனமெலாம் வளைந்துசுற்றி
கொண்டெழிபொரியுஞ்சூழக் கொதிப்புடன்சடிலவோசை
விண்டவத்துள்ளோரேங்க வெங்கனல்தோன்றிற்றன்றே.

இராகம்-கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

மானேநாமென்னசெய்குவோ மெங்கும்
வடவாமுகாக்கினிபோற் வளைந்தெரியுதேபாராய்.(மா)

அநுபல்லவி.

கானகந்தனில்பட்ட கஷ்டம்போதாதேகிட்ட
வானுலகத்தைத்தாவி வருகுதேபுகையெங்கும். (மா)

சரணங்கள்.

தவமுனிவர்க்குரைத்த தவணைநாளாகுது
தரகாசெய்திடுங்கோரம் சகித்திடமுடியாது
கவலையினால்மனம் கலங்குதேஞனெனது
கற்புள்ளமாதே அக்கினியாறிதோ
சற்பனையாக மரிக்குதுபாரிதோ. (மா)

வனத்திலுள்ளவெகு ஜெந்துக்கள்மடிந்து
வருகுதேதுருநாற்றம் பாரிதோமிகுந்து
அனலின்சுவாலைவீசு தாகாயமுயர்ந்து
அன்னமேயென்னிரு கண்மணியாகிய
மின்னரசேவெகு அன்னீதமாகுதே. (மா)

யிப்படி யீசனம்மை சோதிக்கலாமா
இப்பாவமவரைப்பின் சேராதுபோமா
தப்பிதமென்ன செய்தோக் தயவிபில்நாமும்
தஞ்சமிலாதொரு பஞ்சைகளாகினோம்
ரஞ்சிதமிஞ்சிய வஞ்சியரேமட. (மா)

இராஜன் வசனம்.

பிரபு இந்த அக்கினியானது பெனக்கிடையூறாக வானுலகத்தைத்தாவி யெரிகின்றது இதைக்கடந்து எப்படிக் காசிசெல்கிறது நாதா.

நட்சேத்திரன் விருத்தம்

வானவர்துபரந்திர்க்கும் வள்ளலேநெருப்பாறிந்தக்
கானகமுழுதுஞ்சுற்றிக் கனிந்தனவழியுமில்லை
மானவனாசவம்ச வழிதனிற்பெயியொன்றிந்தால்
தானகன்றிடுமென்றெண்ணிச் சாற்றினேன் சாற்றினேனே.

மேற்படி வசனம்.

அரிச்சந்திரா நெருப்பானது நாலுகிக்கும் வளைந்துகொண்டது ஒருபக்கமும் வழியைக்காணோம் இது அகலவேறுமானால் இராஜவம்சத்திற் பிறந்தவர்களிலொருவர் இதனில் வீழ்ந்திறந்துபோனால் உடனே அமர்ந்துவிடுமாம்ச

அரிச்சந்திரன் விருத்தம்.

எத்தனைவேந்தர்முன்ன மிருந்தனரவர்களெல்லாம்
செத்தனரல்லால்மாயச் சிவனோடிருந்தாரில்லை
இத்தனைவருத்தமென்ன என்றுளங்கருதியேங்கி
முத்தனைப்போற்றிவன்னி முன்னர்வந்தெய்தினானே.

மேற்படி வசனம்.

பெண்ணே சந்திரமதியானிந்த அக்கினியிற் பிரவேசிக்கின்றேன் கண்மணி.

சந்திரமதி விருத்தம்.

நாயகனிறக்கவியா நங்கையர்க்கருமையென்று
நீயதையோராதென்னை நீங்கிநீருவேனென்றீர்
தாயகமானவென்றன் றனையனைக்காப்பாரில்லை
காயமோவனித்யமென்றே வன்னிமுன்சன்னிசென்றாள்.

மேற்படி வசனம்

பிராணேசா யானிருக்கும்பொழுது தாங்களக்கினியிற் பிரவேசிக்க வேண்டியதில்லை யான்பிரவேசிக்கின்றேன் தாங்கள் லோகிதாசனை வைத்துக்கொண்டு மாமுனிவர்கடனைத்தீரும் நாதா.

லோகிதன் விருத்தம்.

அன்னையென்னத்தநீயி ரனலிடைவீழ்வோமென்றால்
என்னையார்காப்பார்யானிங் கிருப்பதில் பயனுண்டாமோ
முன்னையசொல்மாறுமல் முனிகடன்தீர்த்து வாழ்வீர்
வன்னிநாயகர்க்கென்ஜீவன் வழங்குவேன் வழங்குவேனே.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

தந்தையேயுங்கள்மனஞ் சஞ்சலமாகுமா
தமியேனிருந்திடத் தான்விழப்போகுமா. (த)
மைந்தனிருக்கவுங்கள் மன்திற்கவலையேது
மாமுனிகடன்தீர்க்கா விடில்வருமையோதீது. (த)
செந்தணலிடைவீழ்ந்தென் ஜென்மவினை தீர்க்குறேன்
ஜெனித்தபலனுக்குங்கள் மனத்துயர்போக்குறேன். (த)
மாதாவுடனீர்காசி மாநகர்தனிற்சென்று
மாமுனிகடன்தீரும் வள்ளலேகிருத்தியென்று. (த)

லோகிதன் வசனம்

பிதா அடியேனிருக்கத் தாங்கள் விசனப்பட வேண்டியதில்லையான் இந்த அக்கினியாற்றில் மூழ்கி பிறகுத்துன்பத்தை மாற்றிக்கொள்கிறேன் தாங்கள் சத்தியத்துக்குப் பங்கமன்றி காசிமாநகரஞ்சென்று கோசிகமுனிவருடைய பொன்னையெவ்விதத்திலாவது கொடுக்கவேண்டிய பிதா..

சந்திரமதி விருத்தம்.

மங்கையுமச்சொற்கேட்டே மைந்தனைத்தழுவிமோந்து
செங்கைவேலரசன்பெற்ற செல்வமேவயதேழ்செல்லாத்
தங்கமேயறியுமுன்றன் றனக்கிந்தத்துணிவும்வந்த
தெங்கனமறப்பேனுன்னை யெப்படியிறக்கப்பார்ப்பேன்.

மேற்படி வசனம்.

கண்மணி அக்கினியில் நீயும் விழவேண்டாம் உன்தந்தையும் விழவேண்டாம் நானிதோ அக்கினிபகவானைத் துதித்து தீயை யாற்றி வருகின்றேன்.

சந்திரமதி விருத்தம்.

அற்புதங்கள் மிகுத்ததிருக் காசிநோக்கி
அடியார்கள்போவதற்கு யிடையூர்வந்தால்
தற்பரனேயுனதருளோ நாங்கள்செய்த
தவப்பயனோமுனிவர்செய்த சதியோகாணேன்
கற்பிலனுவளவேனுந் தவறிடாமல்
கணவர்மனம்போல்நடந்த துண்மையானல்
சற்பனையாய்க்கொதித்தெழுந்த வனலிப்போலே
தண்ணீர்போலாகவென்று துதித்திட்டேனே.

இராகம்-பியாகு-தாளம்-சாப்பு.

பல்லவி.

அக்கினியேயுன்றன் னருள்செய்துமெங்களை
அனுப்புவாய்விடைகொடுத் திதுதகியே. (அ)

அநுபல்லவி.

திக்குவேறில்லாமலே தேசமிழந்துபா
தேசிபோலலைந்திங்கு வந்தோமே
பக்கென்றெறிந்துகும்பி பதறுதேமனம்வெம்பி
பாதுகாத்தருள்செய்வாய் நீதமுடன்

சரணங்கள்.

அருந்தவமுனிகடன் வருந்தும்படிக்கெங்களை
அமைத்தானயன்விதியும் வருத்தானே
பெருந்தணலேயுன்றன் பெருமைபெவரறிவார்
பேதைவருந்துமன வாதனை தீர். (அ)

ஏதுபிழைகள்செய்தோ மிப்படிக்குன்மனது
இரங்காதேதையாசொல்லுங் காங்குவித்தேன்
மாதுமைநாதன்வாழும் நீதமுருந்தகாசி
மாநகர்சேரவே வழிகொடுப்பாய். (அ)

சந்திரமதி வசனம்.

அக்கினிபகவானே யானொருவசனஞ் சொல்கின்றேன்திருவுளத்தி லேற்றுக்கொள்ளவேண்டியது அதாவது என்னிடத்திலாவது யென்பத்தாவிடத்திலாவது பாதா ஈ துரோகம்பிறர்பொருளிச்சை பிறர்மனம் நோகச்செய்தல் பெரியோர்களை நிந்தித்தல்விருந்திழக்கிறது அதர்மம் வஞ்சனை சூதுசெய்கிறதாவது தேவதா பக்திமறக்கிறதாவது இதுகளில் யேதாவது நாங்கள் இத்துரோகங்களுக்குச் சம்பந்த மன்னியிலிருந்து உண்மையானால் உன்மனதுகந்து குளிர்ந்தசலம்போல் போகக்கடவது யிதோவந்தனஞ்செய்தேன்.

பொது வசனம்.

சந்திரமதி அக்கினிதேவனைப்பற்றித் துதித்தவுடன் அக்கினியானது குளிர்ந்தசலமாய்விட்டது உடனேஇவ்வைந்து பேர்களுங்காசிநகரஞ் செல்லும்போது விஸ்வாமித்திரர் மாய்கையால் மழையும் இடியும்வந்து வருஷிக்க ராஜன் முதலானவர்களெல்லாம்வருத்தப்படுகிற விதங்காண்க

அரிச்சந்திரன் விருத்தம்.

அருமையிலுயர்ந்தபெண்ணே யக்கினிகடந்துவந்தோம்
கருமேகங்கவிழ்ந்தேயிங்கு கலங்கிடமழையுந்தூவ
வருமையுமுயர்ந்தமின்னல் வாட்டிட்டாயிடியிடிக்க
சிறுமைநாம்படவோவீசன் செய்திட்டாரினியென்செய்வோம்.

இராகம்-காப்பி-தாளம்-ஆதி.

பல்லவி.

திருவருள்செய்வருணா திருவருள்செய்

அநுபல்லவி.

கருணாகரா கிருபாகராவுன். (தி)

சரணங்கள்.

சத்தமேகந்திரண்டு சாமளரூபத்தைக்கொண்டு
சித்தமிகமோகச் செய்யுதேயுன்றன் (தி)

இடியுமின்னலுமிறி இருண்டுபெய்யுதேமாரி
கொடியதுயரஞ் செய்யுதேயுன்றன் (தி)

கௌசிகர்தந்தகாவி கந்தைகள்நனைந்தாவி
அவதிப்படுகிறோம் கூவியுன்றன் (தி)

வாடையால்புடல்நடுங்கு மனதுமிகக்கலங்கி
காடதனில்வாடி நிற்குறோமுன்றன். (தி)

அரிச்சந்திரன் வசனம்.

பிரபு வருணபகவானே யானெந்தவிடத்தில் கால்வைத்தே னோஅந்தவிடங்களெல்லாம் வருஷிக்கவேண்டிய தவசியம் யான் காசிநகரஞ் செல்லும்வரை விடைகொடுக்கவேண்டும் பிரபு.

மேற்படி வசனம்.

கண்மணி நாமிந்தக்கானகத்தில் படக்கூடிய கஷ்டத்தை யுத்தேசித்து காசிமாநகரஞ்செல்ல வருணன் விடைகொடுத்திருக்குமா யிதுதான் சமையம் நம்முடைய கந்தைகளைப்பிழிந்து போர்த்திக்கொண்டு செல்லுவோம்வா பிராணசகி.

இராகம்-தோடி-தாளம்-சாப்பு.

பல்லவி.

என்னமாயமோமாதே என்னமாயமோ

அநுபல்லவி.

அன்னவாகனமீதேறும் அயன்சாபமோவறியேன். (எ)

சரணங்கள்.

காடுவிட்டுகாடடைந்தோம் நல்லபாம்புதேள்பூரான்
கோடுகோடென்றநம்மை கொத்தவந்துவுங்கோதே (எ)

காலகெதியாலேயந்தப் பாலைவனந்தன்னிற்சிக்கி
நீலகண்டன்சோதனையால் சேரிழையேதப்பிவந்தோம். (எ)

பூதமொன்றுநம்மைக்கண்டு பொறிகலங்கவாளைக்கொண்டு
வேதனைசெய்ததையென்று மெல்லியரேவந்தோம்நாமும். (எ)

எங்குமனல்பற்றினது மிடிமின்னல்மாரிபெய்தும்
பங்கமன்றிநாமெல்லோரும் பாவையரேவந்துசேர்ந்தோம். (ஒ)

அரிச்சந்திரன் விருத்தம்,

பனியுடனேநெருப்பதனைக்கடந்துகாட்டிற்
பைங்கொடியின் பற்றிடக்காட் டாறுதாண்டி
முனிவன்விடுந்துயரமெல்லாம் நன்மைக்கென்று
முகத்தெளிவாய்மன்னவனு மனந்தெளிந்து
கனிவுடனேகாசிநகர் தோற்றங்கண்டு
கண்ணுக்கிக்கரங்குவித்துக் கரும்பேநீதான்
இனியபரன்வாழ்நகரைத் தெரிசியென்று
இயம்பியிருவரும்பணிந்து யேத்துவாரே.

இராகம்-கானடா-தாளம்-சாப்பு.

பல்லவி.

பங்கையேகாசிமாநகரமிதோ தோணுதுபாரென்றன். (ம)

அநுபல்லவி.

மங்கையேபாரிதோ சுங்கத்தினுல்ஸ்தூளி
வைத்ததோர்கோபுரம் மங்குலத்தைத்தாவி
சங்கையில்லாமல் தெரிகின்றதேநன்றாய்
தையற்கரசியேபாரடி மெய்யற்புதம்வெகுசீரடி. (ம)

சரணங்கள்:

மாடமணிமேடை மாளிகையுந்திவ்ய
வானுலகும்புகுந்து தானேயுறவுய்ய
கூடலழகிய கொத்தளந்தோணுது
கொஞ்சுங்கிளிவரிகோகில மஞ்சுந்தொனியெனும்வாகுள. (ம)

சோதிநவமணிச் சாதிகள்பதிந்து
சூரியகாந்தத் தகடெங்கும்பொதிந்து
நீதியுடன்கொடிக் கம்பந்தெரிகிறது
நேசன்பரமேசனுமை வாசன்விசுவேசனருள். (ம)

சங்கொலிக்க முழங்கியகீதமும்
தையலரேமேள தாளத்தின்நாதமும்
பங்கமில்லாமலே யெய்குஞ்சப்திக்கிது
பாராய்களிகூருய்துயர்தீராய் யிதோசோரகவே. (ம)
கார்வந்துலாவுது பார்நல்லசோலையில்
கங்குலேப்பழிக்கு தெங்குநற்சாலைகள்
பாரிந்தக்காசிக்கி யீடெங்கும்பார்த்திடோம்
பழவினையாவையும்போக்கிடும் நலமதுவந்ததுவாய்த்திடும். (ம)

அரிச்சந்திரன் விருத்தம்.

மதிதயன்தவத்தால்வந்த மங்கையேவாராய்காசி
பதிதனையடுத்துவந்தோம் பணிமலர்ச்சோலைபாராய்
புதியதேன்மலர்கள்சிந்த பூவதுவருந்திவண்டு
சதியிசைபாடநின்று தோகைகள்நடிப்பைப்பாராய்

மேற்படி வசனம்.

இவ்விதமாக அரிச்சந்திரன் முதலானவர்களும் விச்சித்திரங்களைப்பார்த்துக்கொண்டு காசிப்பட்டணம்வந்து கங்கையில் ஸ்நானஞ்செய்கிற விதங்காண்க.

நகர் நீக்கியபடலம்.

முற்றிற்று.


உ

பரமபதி துணை.

காசிகாண்டம்.

இராஜன் விருத்தம்.

மங்கையேமகதேயென்றன் மந்திரிசொல்லக்கேளாய்
அங்குநாம்பட்டதுன்ப மவளவுந்தீரும்வண்ணம்
சங்கரனருளாற்றக்க பகீரதன்கொண்டுவந்த
கங்கையுமிதுதான்ஸ்நானங் களிப்புடன்செய்குவீரே



இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-சாப்பு.

பல்லவி.

சென்மசாபல்யங் நீரவேஸ்தானம்
செய்குவோம்வாராய் தேவியேநம்மள். (செ)

அநுபல்லவி.

அன்னமேபசுஞ் சொர்ணமேநாமும்
அனைவருமிதில் மனமகிழ்ச்சியாய். (செ)

சரணங்கள்.

கானிலடைந்த அஸ்வத்தைமாற
கன்மவினைகள் யாவுந்தீர
மோனமுனிவன் கடனைத்தீர்த்து
மொய்குழலேநாமுய்யவே செய்யுமதிமெய்யாகவே. (செ)

பகிரதன்தவத்தால் பரமனளித்த
பண்புள்ளகங்கை யிதனையடுத்த
அகிலத்தினுள்ள யாவராகிலும்
அன்பாகவேஸ்தானஞ்செய வின்பந்தருந்துன்பமில்லை.(செ

அரிச்சந்திரன் வசனம்.

பிராணசகி இந்தக்கங்காநதியானது பகீரதனால்வந்தது இதில்யாவர்களும் அன்புடனே ஸ்தானஞ்செய்வார்களாகில் அவர்களுக்குசென்ம சாபல்யமும்இகபரசாதனங்கிடைக்கும்ஆகையால் நமக்குரிய பிரணவமந்திரத்தை உச்சரித்து இதில் ஸ்நானஞ்செய்வோம் வாராய்கண்மணி.

பொது வசனம்.

இந்தபிரகாரம் அரிச்சந்திரன் முதலானவர்கள் கங்காநதியில் ஸ்தானஞ்செய்து செபதபங்களை முடித்து விஸ்வேசருடைய கோவிற்சென்று சுவாமி! தெரிசனை செய்கின்ற விதங்காண்க.

அரிச்சந்திரன் விருத்தம்.

இந்திரனுலகம்போல விலங்குமாநகரங்கண்டேன்
சந்திரனிரவிபோல தயங்குகோபுரங்கள்கண்டேன்
மந்திரமுனிவர்பாகம் வளக்குமண்டபங்கள்கண்டேன்
சுந்தனைப்பயின்றேன்றன்னை கண்டிடிற்பவங்கள்போமே.

இராகம்-தோடி-தாளம்-சாப்பு.

பல்லவி.

பார்பாரிதுவெகுசிறப்பு கோவிற்
பண்மையைக்கண்மணிப் பெண்ணரசேநன்றாய். (பா)

அநுபல்லவி.

காரணங்கடந்த பூரணவாஞ்சிவ
கலையிருசுழி முனையனுபவ
ஆரணமார்க்கம் புகழுஞ்சதாசிவ
அண்ணல்வாழுங்கோவி லுன்னிதத்தைக்கண்ணால். (பா)

சரணங்கள்

திருமதிலமைந் ததுவோஆதி
சேடனாற்சொல்லவு மொண்ணாதசேதி
மருவுருந்திருக் கோபுரஸ்தூவி
வான்மதியோடுற வாடுதுதாவி. (பா)

ஆயிரங்காலுள்ள மண்டபத்தைப்பாரு
அன்னமேநானென்ன சொல்வேனிந்தச்சிரு
ப்ராயித்தோடு மறைபடிக்கும்நேரு
பத்தினியேசுகஞ் சித்திக்குமாத்தினி. (பா)

சந்தியமைந்திருக் கின்றதோர்வேலை
நான்சொல்லக்கூடுமே நாயகிமென்மேலே
யிந்திரலோக மிதற்கொருக்காலே
ஏற்குமல்லாதது தோர்க்குந்தீர்க்கமுடன். (பா)



உ

பரமபதி துணை

காசிவிஸ்வநாதரைத்

தெரிசனம் செய்கிறபாகம்.

அரிச்சந்திரன் விருத்தம்.

பொங்கரவம் பூண்டபுரா தனேகங்கை
புனைந்தசடா முடிவரதா மழுமான்கொண்ட
செங்கானே மாலயனுந்தேடக்கிட்டாச்
சிற்பரதற் பரவடிவே யங்கயற்கண்
மங்கையொரு பங்கமர்ந்தகாசிவிஸ்வ
வநாதயனே கோசிகனார் கடனைத்தீர்க்க
இங்கடைந்தேனுடநகரிழந்துபோந்தே
யேத்தினேனதுபதம் போற்றினேனே.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

சிவமேயருள்செய்தவமேதேவி அம்பிகைமனோகராபர. (சி)

அநுபல்லவி.

பவமொழித்தென்னை யாளுந்தற்பரமே
பாம்பணியுஞ்சிவசங்கர சாம்பசதாசிவமங்கள. (சி)

சரணங்கள்.

வருந்தியுன்மலர்ப் பாதந்தேடியே
வந்தேன்கடனால்மிகவும் நொந்தேன்மனமுமாசே
திக்கற்றபாவிக் கோர்கெதியில்லையே
சித்தன்கௌசிகமாமுனி அத்தன்கடனதுதீரவே. (சி)

இராகம்-பியாகு-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

பிரணவசோதி ஓம் பிர்மமெய்யாதி
உரககங்கண வாதசங்கார வொளியேவெளியே யழிவில்லா
உமையவள்பாகா எயர் சமரசயோகா
உன்னருள்தருவாய்சா வென்னையாளும்விசுவேசா
சின்மயவடிவேயுன்றன் பொன்னடிதொழுதேனென்றன். (பி)

ஆலமுண்டோனே திரு நீலகண்டனே
பாலனையாளக் காலனையாளப் பண்டுசெய்தீரேதொண்டர்க்காய்
பாதுகாத்தவா வெகு சாதுவேசிவா
பரிபூரணனே திருவருள் தருவாய்கிருபாகரனே
திரிபுரமெரித்தவனாதி சிறியனைக்காத்தருள்நீதி (பி)

மண்ணும்விண்ணுமா யப்பு வாய்வுதேய்வுமாய்
பெண்ணுமாணுமாயெழுவகைத்தோற்ற பேதாபேதங்களானநீ
பிர்மகாரணா வெகு தர்மபூரணா
பிறைபொருமழுமான்கண்ட கறையதுமிகவுங்கொண்ட
மறைபுகழுங்குணநீதி யிறைவனேயென்னையாளாதி. (பி)

அரிச்சந்திரன் விருத்தம்.

வேடன்வாயெச்சலுண்டாய் விருந்துக்கோபிள்ளையுண்டாய்
ஆடரவதனைப்பூண்டா யணிவிடையேறிக்கொண்டாய்
நீடரும்புகழ்சேர்காசி நித்தனேவிஸ்வநாதா
வாடவுமடியேனுள்ளம் வருத்தந்தீர்த்தருள்வாய்சுவாமி.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

வேதத்தின்முடிவே நாதத்தின்வடிவே
விமலாகாசியில்வாழும் விஸ்வேசா
மேதினியிலன்பர் வாதனைதவிழ்த்திடும்
மெய்ப்பொருளே விசாலாட்சியின்னேசா.

மூவமொருருப மாகியநீதி
முக்கண்ணுவருள்செய்யும் பரஞ்சோதி
முத்தர்சித்தர்மவுன பத்தர்தினம்பணியும்
மூர்த்தியென்றுயர்தன்னைத் தீர்த்தருளே.

பதியிழந்துசெம்பொன் மணிமுடியிழந்தென்றன்
பவுசிழந்துமதிக நிதியிழந்து
பரதேசியாகவே பாலன்மனைவியுடன்
பாவியானிங்குவந்தேன் மிகவும்நொந்து.

அல்லும்பகலுமருந் தவமுனிகடனாலே
அங்கமிகவும்நொந்து வாடுகின்றேன்
அடியேன்றுயர்தவிழ்க்கும் படிநீகிருபைசெய்வாய்
அண்ணலே விண்ணவர்கள் தொழும்பொருளே.

அரிச்சந்திரன் வசனம்.

விஸ்வநாதா யென்துயர் யாவற்றையுமுன்னிடத்திற்றெரிவித்துக்கொண்டேன் யான் விஸ்வாமித்திருக்குக் கொடுக்க வேண்டிய கடன் தீரும்படிதிருவருள் புரியவேண்டியது நாதா.

சந்திரமதி தெரிசனஞ்செய்கிற.

விருத்தம்.

ஆலமுண்டவனேபோற்றி யமலனேவிமலாபோற்றி
காலனையுதைத்தாய்போற்றி கருணையின்கடலேபோற்றி
பாலனைக்காத்தாய்போற்றி பரப்பிரம்மவடிவேபோற்றி
சாலவேபணிந்தோமெங்கள் சங்கடந்தவிப்பாய்போற்றி.

இராகம்-யமுனாகல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

நின்மயதாண்டவனேநின்னருளிதோ தேவாவென்றெனைக்காவாயாதி

அநுபல்லவி.

அன்னைவிசாலாக்ஷி யம்மையின்பாகனே
பன்னகமணிந்தவனே பரமேசாவாசா. (நி)

சரணங்கள்.

கையிற்பொருளில்லாமல் கலங்கும்பாவியெங்கட்கு
மெய்யனேயருள்வாய் வேதனைதீர (நி)

நாடுநகரிழந்து ராஜரீகந்துறந்து
வாடுமோமுனிகடனால் வகையில்லாமல். (சி)

சந்திரமதி வசனம்.

விஸ்வேசா உன்னுடைய பாதாரகெதியென்று நம்பி வந்தோம் பெங்களுடைய இம்சையைத்தீர்த்து இகபரசாதனங் கொடுக்கும்படி பிரார்த்திக்கின்றேன்.

லோகிதன் தரிசனஞ்செய்கிற விருத்தம்.

எங்கினும் நிறைந்தாய்போற்றி யிறைவனேநின்றாள்போற்றி
கங்கையுந்திங்கள்கொன்றைக் கடுக்கையுமணிந்தாய்போற்றி
செங்கையில்மழுமானேந்துந் திருமறைமுடிவேபோற்றி
சங்கராவேழைபங்கா கமியனுக்கருள்செய்போற்றி.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

பல்லவி

அம்பாபாதியாயே யருள்புரிவாய்பரஞ்சோதியே

அநுபல்லவி

தம்பமில்லாதலைந்து வந்தோமே
தற்பரமேகற்பகமேயற்புதசிற்புதவெகுசொற்பிரகாசமாயமைந்த

சரணங்கள்.

மாதவமுனிகடனால் வருந்திவந்தோமிகநொந்தோம்
வருத்தந்தவிர்ப்பாயென்றுன்னடி யிணைப்பணிந்தோமனமகிழ்ந்தோம்
ஆதவன்முன்பனி .... போலதைநீக்கி (அ)

அன்பர்கள்படும்வெகு துன்பத்தைப்போக்கி
பாதுகாப்பதுன்றன் மீதினிற்பொருத்தகடன்
பரனேஹரனே கரங்குவித்தேனடியேன் (அ)

சத்தியநெறிமுறைதவறும ஓருவெடுத்தோமுனையடுத்தோம்
சகலசம்பத்தையுமுனிவர்க்குக் கொடுத்தோம் நகர்விடுத்தோம்
நித்தியநிர்மல நிலவணிசடையா (அ)

நின்னருள்புரிகுவாய் மான்மழுப்படையா
அத்தியுரித்தகையா முத்தியளிக்குமெய்யா
அமலாவிமலா சமரசனிலைபெற்ற. (அ)

லோகிதாசன் வசனம்.

விஸ்வநாதா யான் உன்னுடைய பாதாரவிந்தத்தை அன்புடன்பணிந்தேன் யெங்களுக்கு வந்தவிபத்தைநீக்கி யருள்செய்யக்கடவதுன்பாரமீசா.

சத்தியகீர்த்தி தரிசனஞ்செய்கிறது.

இராகம்-தோடி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

கையில்மான்மழுவேந்திய கருணாகராபரிபூரணா
தூயவெண்மதிசூடிய சுகவாரிதிவெகுபசுபதி
வையமேழளந்தோனும்வேதனும் மறையுந்தேடியபாதனே
ஐயனேதிருக்காசிமாநக ரண்ணலேவிஸ்வநாதனே

நந்திவாகனஆரனேசிவ நாரணியிடப்பாகனே
சந்திரசேகராசம்போசங்கரா சர்வஜீவதயாநிதி
இந்திரன்முதல்யாவருந்தொழு மிறைவனேயெனையாளுவாய்
சந்ததமுன்றன்தாளினைகெதி தமியனுக்கருள்புரிகுவாய்

மன்னவன்படுந்துயரைநீக்கிடு மதியோடுகங்கையணிந்தவா
உன்னடியிணையல்லாதுகெதி யுண்டுமோவினையண்டுமோ
பன்னகமணிந்திட்டதேக பரமனேயுக்கிரமனே
என்னையாளுவதுன்பரமென வேத்தினேனிதோபோற்றினேன்

மந்திரி வசனம்.

விஸ்வேசாயெனதிறைவன்படும் இம்சையைத்தீர்த்து எங்களை பாதுகாக்கவேண்டியது உன்னுடைய கடமை.

அரிச்சந்திரன் வசனம்.

பெண்ணே சந்திரமதிநாமெல்லோரும் விஸ்வநாதருடைய தெரிசனஞ் செய்துகொண்டோ மினிமேல் இன்னகரத்தின் சிறப்பைப் பார்த்துவருவோம் வாராய் கண்மணி.

அரிச்சந்திரன் விருத்தம்.

மதிதவழுமாடமுறு கொடிகள் விண்ணின்
மாநதியிற் படிந்தலவும் வன்மைபாராய்
எதிர்பழனக்கரையிலுயர் கழையுஞ்சென்றங்
கிந்தரற்குவெண்கவரி யிரட்டல்பாராய்
விதிமறையோர்புரியாக தூமஞ்சென்று
விண்மேடனே கலந்தமழை வீசல்பாராய்
அதிவிதசுந்தரமானர் களைந்தமாலை
யணியணியாய் வீதிதொறு மிலங்கல்பாராய்.

இராகம்-முகாரி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

மங்கையேபாரென்ன விநோதம் கண்மணியிந்த
வானகரமைந்த வற்புதம்
மாசில்லாக்கயிலைநிகர் பூசுரார்புகழும்நகர்
வாசன்காசியீசன்விசு வேசன்வாழுமகிமையோ. (ம)

திங்களுறவாடுது பாராய் கோபுரம்வெகு
சிங்காரமாய்த்தோணுது நேராய்
சித்திரத்திறைற்பதுமை வைத்தசிகரப்புதுமை
சுத்தமுடனேயமைத்த பந்துநிலைக்கோபுரங்கள். (தி)

அந்தணர்வீதி யிதுதான் ஆகமஞ்சொல்லும்
விந்தையைநன்ருகப்பார் நீதான்
அருள்வடிவாய்நிறைந்த குருவாபெங்குஞ்சிறந்த
ஆதிமறையோதிவெகு நீதியுடன்வாழுகின்ற. (அ)

மன்னவர்கள்வீதி யிதுதான் மணிமேடையமைந்த
தென்னவிதமென்றுசொல்வேனுன்
மதகரியுஞ்சிறந்த வான்பரியும்நிறைந்த
மறமுறையின்படிக்கு தனுசாஸ்திரம்படிக்கும் (ம)

வைசியர்கள்வீதி தனைப்பார் மயிலேயெங்கும்
செய்குறார்வர்த்தகம் வெகுசீர்
வயிரம்பவளமுத்து மூயரும்ரத்தினம்வைத்து
மாணிக்கம்நிறைந்தபணி யாணிப்பொன்வர்த்தகஞ்செய்யும். ()

தாதியர்கள்வீதி யிதுதான் சந்திரமதியே
தேமுரைக்கிறு ரிதோதான்
சங்கராபரணந்தோடி யிங்கிதமாகவேபாடி
சரிகமபதநித சநிதவெனநடிக்கும் (தா)

சூத்திரர்கள்வீதி யிதுதான் தோகையேபயிர்
நேர்த்தியாகச்செய்வோரிவர்தான்
சோலையுமிகுத்தபயிர் சாலையும்வகுத்தவுயிர்
தொண்டுசெய்துபணியிடைக் குண்டுபண்ணிவைக்கும்பல. (சூ)

அரிச்சந்திரன் வசனம்.

கண்மணி இந்நகரத்தில் பிரமக்ஷத்திரிய வைசியர்சூத்திரர்யென்ற நான்கு வருணத்தார்க்கும் அவாளவாள் ஆசாரத்துக்குத் தக்கபடி வீதிகளமைந்திருக்கிற விநோதமும் அவாளவாள் செயக்கூடிய ஆசாரவொழுக்கங்களும்பார்த்தாயாவென்ன அற்புதம் இந்த காசிவிஸ்வநாதனுடைய செயல்தான் இந்நகரத்திற்கென்ன அந்தஸ்துபொருந்தியிருக்கிறது பெண்ணே.

நட்சேத்திரன் விருத்தம்.

மாசிலாதகிலமோச்ச மன்னனே தவத்தால்மிக்க
கோசிகமுனிவர்தந்த தவணைநாள்குறிதெற்றன்றே
காசிமாநகர்க்குவந்தாற் கடனைத்தீர்த்திடுவேனென்றாய்
பேசியபடிக்குச்செம்பொன் னளித்திடிற்பெருமைதானே.

மேற்படி வசனம்.

அரிச்சந்திரா காசிநகரம்வந்தவுடனே நேக்குபொன்கொடுக்கிறதாக அழைத்துக்கொண்டுவந்த யோக்கியன் அப்படிக்கி நேக்குப்பொருளைக்கொடுத் தனுப்பாமல் உன் ஆம்படையாளும் நீயும் ஸ்தானஞ்செய்கிறதும் சுவாமிதெரிசனைசெய்கிறதும் நகர்சிறப்புப் பார்க்கிறதாக விருந்தால் நேக்குபொருள் எப்படி கிடைக்கும் வெகுயோக்கியதை நன்றாயிருக்கின்றது உன்கையில் கிட்டிகட்டியிருக்கிறேன் பணத்தைக் கொடுத்துவிட்டு மறுஜோலி பாரடாதுஷ்டா.

உ

பரமபதிதுணை.

அரிச்சந்திரவிலாக்

கிட்டிப்போடுகிற பாகம்,

அரிச்சந்திரன் விருத்தம்.

அடியேன்மேற்கோபம்வேண்டா மையனே தவணை சொன்ன
முடிவுநாட்குள்ளேயந்த முனிவர்க்குக்கொடுக்குஞ்செம்பொன்
படிணமாய்ச்சேகரித்து பண்புடன்கொடுப்பேனிந்த
கடிணஞ்செய்யாநீர்கிட்டி கர்த்தனேவாங்குவீரே.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

கைநள்நோகுதென்னசெய்குவேன் அய்யோ
கர்த்தனேயென்மீதிலுன்றன் சித்தமிரங்காதோவென்றன் (கை)

அநுபல்லவி.

ஐயாமுனிவர்தூதா அரவிந்தமலர்பாதா
செய்யாதீரித்துயரம் சிந்தைநொந்துவாடுதென்றன். (கை)

சரணங்கள்.

கானகத்திலடைந்த கஷ்டமெல்லாந்தெரிந்த
தீனதயாளாகோபஞ் செய்குறீர்வைகுறீரென்றன். (கை)

காத்திற்கிட்டியைக்கட்டி கலங்கும்படிநீர்திட்டி
சிரத்தைசெய்யாவிடிற்பொன் றீரேனேதாரேனேவென்றன். ()

கங்கைநீராடினதும் கடவுளைப்பணிந்ததும்
சங்கையல்லவோகோபஞ் சாதிக்குறீர்பேதித்தென்றன். (கை)

தனவான்களிடஞ்சென்று கர்த்தனேயுமக்கின்று
தனம்வாங்கித்தருகிறேன் சங்கடஞ்செய்யாதீரென்ற (கை)



அரிச்சந்திரன் வசனம்.

சுவாமீ மாந்தர்களெவ்வளவு கேவலதிசை யடைந்தபோதி லுங் கடவுள் பக்தியை மறப்பாரோ அதுபோலடியேன் சென்ம சாபல்யந்தீரும்படியாக விஸ்வநாதனைத் தெரிசித்தேன் இன்ன காத்திலுள்ளகனவான்களிடஞ்சென்று எவ்விதத்திலாவது பொருள்சேகரித்துத் தருகிறேன் கிட்டியைவாங்குஞ்சுவாமி.

நட்சேத்திரன் வசனம்.

சந்திரா காசிதேயம் வந்து மாசாலஞ்செய்கின்றாய் உன்னை யறிவேன் பொன்னைக்கொட்டடா கொட்டு மூர்க்கா.

சந்திரமதி விருத்தம்

சொன்னசொற்கிடரதாகத் துரோகங்கள்செய்துவுங்கள்
பொன்னரிலையென்றுநாங்கள் புகன்றதுமுண்டோசாமி
மன்னவன்மனதுநோக வாதுநீர்செய்திரிந்த
அன்னீதம்வேண்டாங்கிட்டி யையமேயகற்றுவீரே.

இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

மறையவரே அய்யாவுன்றன் மனமுங்கருங்கல்லோசாமி
மன்னவன்படுந்துயரங்கண்டால் வையகமுமிரங்காதோ (ம)

குறைகளொன்றுஞ்செய்தறியோங் கோபஞ்செய்யலாமாவிந்த
குழந்தைபடுந்துயரங்கண்டாய் கொஞ்சமுமிரகாதேது (ம)

பெண்ணுடனேயாணுடனே பிறந்ததுமிலையோவிந்த
பேதைபடுந்துயரங்கண்டால் பேயுமிரங்காதோசாமி (ம)

உண்மையாய்ப்பொருள்கொடுக்க வோடிவந்தோம்நாங்களிங்கு
உத்தமாவுன்சித்தம்நோக வொருகுறைவுஞ்செய்ததில்லை (ம)

என்னைக்கொன்றுகோபந்தீரு மென்குருவேஅய்யாசாமி
என்றன்மன்னன்சிந்தைநோக ஏற்காதிந்தபார்க்குனேயோ (ம)

காசிநகர்தன்னிலுள்ள கனவான்களிடஞ்சென்று
கர்த்தனேயுமக்குச்செம்பொன்கண்டிப்பாய் பொடுப்போஞ்சாமி

செங்கரத்திலகுருதிவிம்ம செய்குதீர்கோபமதாக
சித்தம்வையுமுத்தமனே நீக்குகிட்டிவாங்குஞ்சுவாமி (ம)

சந்திரமதி வசனம்.

சுவாமி தங்களுக்குக் கோபமாயிருக்கும்பட்சத்தில் அடியாளையாவதுகொன்றுவிடுங்கள் யெண்பிராணேசரை இப்போர்க்கொத்த கஷ்டம்படுத்துவது நீதியாசுவாமி கிட்டியைஅவிழ்த்துவிடுங்கள்.

நட்சேத்திரன் வசனம்

சந்திரமதி பெண்ணுக்குப் பேயுமிரங்குமென்ற பழமொழிப்படி நோக்காகத்தான் அவிழ்த்துவிட்டேன் பொன்னைக்கொடுங்கள் பார்ப்போம்.

அரிச்சந்திரன் விருத்தம்.

கற்பதனிற்சிறந்தவென்றன் கண்ணேபெண்ணே
காசினியெலாமிழந்தோமேழையானோம்
அற்புதமாமுனிகடனைத்தீர்ப்போமென்ன
அழைத்துவந்ததரகர்நம்மை நெருக்குகின்றார்
சற்குருவையறியவென்றன்பாலில்வேறு
தனமுண்டாகியறியாத் தன்மையுண்டோ
சொற்பழுதாமிதற்குறுதி பொன்றுங்காணேன்
தோகையரேயிதற்கென்ன செய்வோம்நாமே.

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

என்னசெய்வோமிதற்கேதுசெய்வோம் பெண்ணேகண்ணே

அநுபல்லவி.

முன்னமேமுனிக்குரைத்த முடிவுநாளாகுதென்ற
வன்னமேநமக்குதவி யவனியிலாருமில்லை (எ)

சரணங்கள்.

எங்கேயினிசெல்வோ மெவரைத்துணைக்கொள்ளுவோம்
சங்கடந்தனக்குள்ளாகச் சமைத்தானயன்முன்னாக (எ)

ஆருந்துணை காணோமே யனாதிபோலானோமே
பாரமுனிநாதர்செய்யுங் கோரஞ்சகிக்காதினிமேல் (எ)

கையில்பொருளுமில்லை கடனோமிகுந்ததொல்லை
வையகத்தில்வேறுதவி தையலேகிடையாதினி (எ)

அரிச்சந்திரன் வசனம்.

கண்மணி முனிவர்க்குரைத்த வாயிதா சமீபத்துவிட்டதாக மக்கோ மேலுமே கெதியுங்கிடையாது நாம்யாரிடத்திற்சென்று பொருள் வாங்கிக்கொடுக்க போகிறோம் இதற்கென் செய்யலாம் பெண்மணி சந்திரமதி

சந்திரமதி விருத்தம்.

அன்னைபோலத்தன் போயிவ் வகிலத்தைப்பாதுகாத்த
பன்னவெனுயிரையொத்த வள்ளலேவிதிக்கென்செய்வோம்
பன்னைமேவுமுதவியுண்டோ பெண்டென்சேவைவிற்றே
அன்னவர்கடனைத்தீர்ப்ப தழகுண்டாஞ்சத்தியமாமே.

இராகம்-தேசிககமாஸ்-தாளம்-ரூபகம்

சரணங்கள்.

சாமீநீரென்னைவிற்று மாமுனிவர்கடன்தீரும்
தாமதஞ்செய்யாதிர் சற்குணர்கள்நாயகனே
தஞ்சமே தஞ்சமே தஞ்சமே தஞ்சமே. (சா)

வருந்துவதிலென்னசார மாமுனிவர்கடன்பாரும்
வெறுங்கைமுழமிடுமோ மெதினியில்நமக்கித்த
வேதனை வேதனை வேதனை வேதனை. (சா)

கையிற்பொருளுமில்லை கடன்கொடுப்பாருமில்லை
மெய்யைநிறுத்துவதன்றி வையகத்தோராசையினி
வேண்டுமோ வேண்டுமோ வேண்டுமோ வேண்டுமோ (சா)

என்னவில்லைசெய்வதற்கு மன்னவாகவலைவேண்டாம்
சொன்னமொழிதவறாத துரையரிச்சந்திரமன்னா
சுந்தரா சுந்தரா சுந்தரா சுந்தரா. (சா)

சந்திரமதி வசனம்.

பிராணேசா தாங்கள் கொஞ்சமேனும் கவலைப்படவேண்டியதில்லை அடியாளை யிந்தநகரத்திலுள்ள தனவான்களிடத்தில் கிரயஞ்செய்து முனிவர்கடனைக் கொடுத்து தாங்கள் சத்தியத்தைநிலைநிறுத்திக்கொள்ளவேண்டியது.

அரிச்சந்திரன் விருத்தம்.

முல்லையைப்பல்லென்றாலு முலைகளைவரையென்றாலும்
சொல்லலாம்பொருளொவ்வாத தோகைமாமயிலேயென்ன
தொல்லையீதுன்னைவிற்கத் துணிவனோதுணிந்துவிற்றால்
கல்லென்பாரெனதுநெஞ்சைக் கருதலாந்தகைமைத்துண்டோ.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ரூபகம்.

பல்லவி.

அன்னமேயுன்னைவிற்று யென்னமாயான்சகிப்பேன்
கன்னபுரிமன்னன்பெற்ற மின்னரசேயின்னகரில். (அ)

அநுபல்லவி.

கற்பினுயர்ந்தற்புதமே காதலுற்றரஞ்சிதமே
சொற்பனம்போலாச்சுதென்றன் தோகையரேயின்னகரில். (அ)

சரணங்கள்.

தேசாதிதேசர்பணி ராஜதவயோகமுனி
மோசமதால்வந்ததினி வாசமிகுமலரணி. (அ)

தீதுசெய்தபாவியிவன் தேவியையிழந்தானென்று
பூதலத்தோர்செல்வாரென்றன் பொற்கொடியேயின்னகரில். (அ)

அரிச்சந்திரன் வசனம்.

பிராணசகி யிச்சண்டாளன் உன்னைவிற்று யெப்படிசகித்திருப்பேன் என்னைப்போலொத்த அரசர்களிதைகேட்கும் பட்சத்தில் நகைப்பார்களே யென்செய்வேன் கண்மணி.

சந்திரமதி விருத்தம்.

மாதவத்தா லெனைமணந்த மன்னுகாசி
மாதவனைக்கண்டதினால் வினையைவிண்டோம்
பூதவஞ்செய்துமை யடைந்தாள்வளைவேத
போதகன்ற னக்களித்தாய் துயரங்கொண்டா
யாதரவாயானிருந்தும் கடனுக்காக
அவஸ்தையுற்றால் மனஞ்சகிக்காதடியாள்நெஞ்சிற்
பேதமில்லையென்னையிந்த நகரில்விற்று
பெருமானேமுனிகடனை யகற்றவாயே.

இராகம்-கல்யாணி-தாளம்-ரூபகம்.

பல்லவி:

கவலையைவிடுமென்று கவலையைவிடும்
கண்ணாளாமனம் புண்ணாகாமலே. (௧)

அநுபல்லவி.

தவிணையிற்செம்பொன் றவமுனிவாக்குத்
தந்திடவென்னை யிந்தநகரில்
அவசியம்விற்பீர் யென்னை அவசியம்விற்பீர்
ஆரைநோவோம் வேறேயினிமேல். (கவ)

சரணங்கள்.

மெய்தவருமை லையையோவிந்த
வேஷமாகினோங் காசியில்வந்தோம்
பொய்யல்லோவாழ்வு மன்னா பொய்யல்லோவாழ்வு
பூமியையாண்ட சாமியேயினி. (கவ)

மண்ணுள்ளவரை நிற்குங்கீர்த்தி
மன்னவாநமக் கதுவேநேர்த்தி
திண்ணமாயென்னு மதைத் திண்ணமாயென்னும்
சிந்தைமிகுந்து நொந்திடாதீர். (கவ)

விதியின்பயனை விலக்கொண்ணாது
மேதினிதனில் நமக்கிப்போது
அதியாசைவேண்டாம் நமக் கதியாசைவேண்டாம்
ஆவதேது காவலாவோதும். (கவ)

சந்திரமதி வசனம்.

பிராணேசா நாமடைய வேண்டிய சுகதுக்கத்தை இன்னொருவரடைவார்களா ஆகையால்வருத்தமின்றி அடியாளை விலைசெய்து முனிவருடைய இம்சையைத் தீர்த்துவிடவேண்டியது நாதா.

அரிச்சந்திரன் விருத்தம்.

மும்மையில்நான் செய்ததவ முயர்ச்சியாலோ
மூதாக்கள் புரிந்தபெருந் தவமதாலோ
இம்மையிலுன்றனை மணந்தித் தாணியாண்டேன்
இராச்சியத்துக் கிசைந்தமகன் றன்னைப்பெற்றேன்
செம்மையுள்ள குணமிகுந்த கண்மணேகாசி
தேசமதி லரியமுனி கடனுக்காக
உம்மைவிற்க வெப்படிநான் றுணிவேன்விற்றிவ்
வுலகமதிற் பிரிந்துதனி வாழ்குவேனே.

இராகம்-இந்துஸ்தான்தோடி-தாளம்-ஆதி
கண்ணிகள்.

என்னமாயுனைவிலைசெய்வே னுய்வேன்
எந்தனுக்குற்ற அந்தமேசுற்ற செந்திருவொற்ற
ஏகம் விவேகம் ஏந்திழை யாளே. (எ)

மதிதயன்றவத்தினில்வந்த எந்தன்
மாதுமிகுந்த சாதுதகுந்த கோதுகுழலாளே
மானே ஆதேனே வருந்துதென்மனம். (எ,

மாதைவிற்றபாதகனென்பா ரென்பார்
வஞ்சியேதுணை மிஞ்சியவப ரஞ்சியேபென்ன
வாது தீது வருமே யென்செய்வேன். (எ)

ஐயையோவிதென்காலமோ காலமோ
அஞ்சுதேதுயர் மிஞ்சுதேமனங் கெஞ்சுதேபாவி
யானே ஞானே யன்னமேயினிநான். (எ)

அரிச்சந்திரன் வசனம்.

பிராணசகி யென்னவிதமா வுன்னை விற்பேன் பூதலத்தி லுள்ளோர் மாதினைவிற்ற பாதகனென்று தூஷிப்பார்களே யா னென்செய்வேன்.

சந்திரமதி விருத்தம்.

ஆவதுந்தெய்வத்தாலே யழிவதுந்தெய்வத்தாலே
போவதுந்தெய்வத்தாலே புகழ்வதுந்தெய்வத்தாலே
காவலாவிதற்குநெஞ்சங் கலங்குவதென்னவின்னே
கேவலம்யாரைநோவோங் கீர்த்தியாயெனைவிற்பீரே.

இராகம்-முகாரி-தாளம்-ஆதி.
பல்லவி.

ஏனிந்தத்துயரமன்னவா யென்றனைவிலைசெய்ய. (ஏ)

அநுபல்லவி.

மானிலத்திற்கீர்த்திபெற்ற மகிபனேயுமக்கினி. (ஏ)

சரணங்கள்

அரசுபதியிழந்தோ மையோத்திநாடிழந்தோம்
பரதேசியாகநாமு மறுதேசம்வந்தபின்பு. (ஏ)

தவமுனிதூதர்கோரஞ் சகிக்கலாகாதின்னேரம்
அவசியமென்னைவிற்று அரசேபொன்னீந்திடாமல். (ஏ)

வையகம்நமக்கில்லை மனிதருதவியில்லை
மெய்தவருமலென்னை விலைசெய்வீர்மலையாமல். (எ)

மேற்படி வசனம்.

பிராணேசா உலகத்திலுள்ளோர் நம்மை நகைப்பார்களெ ன்று யோசிக்கும்பட்சத்தில் முனிவருடைய கடன்தீருகிறது யெவ்விதம் யோசிக்காமல் யென்னைவிற்று முனிவர்கடனைத் தீர்க்கவேண்டியது பிரபு.

அரிச்சந்திரன் விருத்தம்.

தவமருந்தவஞ்செய்தீன்ற சந்திரமதியேயெல்லாம்
புவனமுங்கீர்த்திமோங்க புரவலனாகவாழ்ந்தேன்
சிவன்செயலிதும்வாமுந்தத் தீவினைப்பயனோகாணேன்
அவமுனைவிற்றுறபெற்றேன் யாவருமேசத்தானே.

இராகம்-காப்பி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

கண்மணியேயுன்னைவிற்கக் கலங்குதெனதுமனம். (க)

அநுபல்லவி.

பண்ணவர்புகழுமாதி பரமனருளாவென்னை
மண்ணிலுள்ளோர்வசைபேச வந்ததையோவிந்தவிதி. (க)

சரணங்கள்.

தந்தைதாயைமறந்தாய் சதமென்றெனைநினைந்தாய்
செந்திருவைநிகர்த்த தெள்ளமுதேமுக்கனியே. (க)

வடியிட்டசெழுந்தேனே மைக்கண்ணுளமடமானே
கொடியபாதகனுமினன் கோவையிதழாளேயென்றன். (க)

பற்றுமேயெனதுவயிர் பதறுதையையோவுயிர்
நற்றவந்தனினுற்ற நாயகிகுணநிதியே. (க)

அரிச்சந்திரன் வசனம்.

சந்திரமதி நமக்கும் இப்பேர்க்கொத்த விதி யேற்படுமோ யெவ்விதமாக மனந்துணிந்துவிற்பேன் கண்மணி.

சந்திரமதி விருத்தம்.

மனையல்லான்மற்றோர்மாதைத் தாயெனமனத்திலெண்ணுங்
கனைகழற்காலோய்பெண்பால் கழறுவதொன்றுமூழின்
வினைநம்மைவிடுமோநந்தம் வீட்டிற்குவிருந்துவந்தாற்
பினையொருவகத்திற்கேகப் பேசவுஞாயமுண்டோ.

இராகம்-பியாகு-தாளம்-சாப்பு

பல்லவி.

மன்னவாவென்னைவிற்று மாமுனிகடன்றீரும்

அநுபல்லவி.

சொன்னமொழிதவறிடாத யென்றுரையே (ம)

சரணங்கள்.

சத்தியமேபெரிதென்றெண்ணி தானிங்குவந்தோம்
துரையே தானிங்குவந்தோம் நொந்தோமென். (ம)

வையகத்தோர்வாழ்வுபொய்யென்ற மார்கந்தெரியாதா
சாஸ்திர மார்கந்தெரியாதா பொற்பாதா. (ம)

தவமுனிவர்தனக்குரைத்ததோர் தவணையாச்சுதே
சமீபமாய்த் தவணையாச்சுதே ஏச்சல்லவோ. (ம)

சந்திரமதி வசனம்

பிராணேசா உலகத்தில் வசைபேசுவார்களென்று கிஞ்சிற்றுங்கவலையடையவேண்டா மென்னைவிற்றுக்கடனைக்கொடுப்பீர்களாகில் தங்களுக் கெப்பொழுதுங் கீர்த்தியேயொழிய வேறில்லைநாதா.

அரிச்சந்திரன் விருத்தம்.

வில்லொக்குநுதலினளே வேலொக்கும்விழியுனளே
அல்லொக்குங்குழலினளே யன்னொக்குங்கருணையாளே
கல்லொக்குமனததான்கோசி நம்முனிகடனைத்தீரக்கச்
சொல்லுக்கும்படிமாறுமற் றுணைசெய்வார்யாருங்காணேன்.

இராகம்-பியாகு-தாளம்-சாப்பு.

பல்லவி.

வஞ்சியேயுன்னைவிற்று என்னசெய்வேனினிமேல்

அநுபல்லவி.

பஞ்சைபோற்பரதவிக்கவோ புவிக்குள். (ம)

சரணங்கள்.

கஞ்சமலர்போன்றவதனஞ் சிறந்தகண்ணாட்டி
எந்தனுக்குச் சிறந்தகண்ணாட்டி சீமாட்டி. (வ)

தஞ்சமில்லாப்பாவிபோல்நின்று தயங்கிவாடவோ
வுன்னையெண்ணித் தயங்கிவாடவோ தேடவோ. (வ)

மன்னன்மதிதயன்பெற்ற வடிவுள்ளமாதே
யென்னுசை வடிவுள்ளமாதே யிப்போதே. (வ)

மாதைவிற்றபாதகனென்று வசைகள்பேசவோ
மாந்தர்வெகு வசைகள்பேசவோ ஏசவோ. (வ)

அரிச்சந்திரன் வசனம்

கண்மணி யென்னவிதமாக வென்மனதை யொருமைப்படுத்திக்கிரயஞ்செய்வேன் ஐயோ வெனக்கிப்படி அயனும்விதிப்பானோ வென்செய்வேன்குணரஞ்சிதமே.

சந்திரமதி விருத்தம்.

மன்னவாவென்றன்பிரான வல்லபாசொல்லக்கேளீர்
சொன்னசொற்றவரிடாமற்றேரகையாளென்னையிந்த
தன்னயமானகாசி நகரினில்விலையாய்விற்று
வன்னமாமுனிக்குச்செம்பொன் மகிழ்வுடன்செலுத்துவீரே.

இராகம்-புன்னாகவராளி-தாளம்-சாப்பு.

பல்லவி.

வருத்தமடையலாகுமா மன்னவாயினி (வரு)

அநுபல்ல .

கருத்தைத்திடப்படுத்துங் கவலைதனையகற்றும்
ஒருத்தருதவியில்லை யுலகத்தினமக்கினி. (வரு)

சரணங்கள்.

ஆசைமனைவியில்லையா அருமைலோக தாசனருகிலில்லையா
யோசியாமலெங்களை நேசமுடனேவிற்று
பேசியதவணைக்குள் கோசிகர்கடன்தீரும். (வரு)

தனம்படைத்தவரில்லையோகொடுத்துதவச்சாதுஒருவரில்லையோ
மனையில்விளக்கிருக்க வனல்தனக்கஞ்சலாமோ
கனவிற்கண்டபசும்பொன் கையிலகப்படுமோ (வரு)

உடலுமுயிருஞ்சொந்தமா வறிந்துமனத் திடம்விடுவதுவந்தமா
அடமாய்முனிவர்செய்த விடர்தனக்குள்ளாகினோம்
கடல்சூழ்புவியையாண்ட காவலரேயினிமேல் (வரு)

சந்திரமதி வசனம்.

பிராணேசாநாமிம்படிவருத்தமடைந்து கொண்டிருக்கிறதில்யென்னபிரயோசனம் அதரோ மகாகோபியின்னமென்ன கிப

ந்தனைசெய்கின்றாரோ தெரியவில்லை ஆகையால் தங்கள்மனதை த்திடப்படுத்தி யடியாளைக்கிரம்செய்யும் நாதா.

அரிச்சந்திரன் விருத்தம்,

வஞ்சியபாஞ்சிதமே மானேதேனே
மதிதயன்றனற்றவத்தி லுதித்தவென்றன்
மிஞ்சுகமேகிட்டாத மருந்தேபுன்னைக்
கேவலமாய்ப் பாவியிந்தாகரிற்றானே
பஞ்சைபோல்விலைகூறி விற்றாலென்னைப்
பார்த்தவர்கள்வசைபேசிநகைத்திட்டாரோ
என்செய்வேனையையோபிரமதேவ
னிப்படியுமென்றலையி லெழுதினானே.

இராகம்-புன்னாகவராளி-தாளம-சாப்பு.

பல்லவி.

என்னமாயுன்னைவிற்றுமனஞ்சகித்துயிருப்பேனென்னுயிர் தரித்

அநுபல்லவி.

அன்னமேசெழுந்தேனே யழகுள்ளமடமானே
கன்னல்மொழியழகி காலகெதியோவினி (எ)

சரணங்கள்.

அப்படியாகுமென்று காளிகாதேவி செப்பலாகாதாவன்று
தப்பிதமில்லமாதே யொப்புமோபுவிமீத
அம்பணிந்திடுமாதி யமலனருளோவினி (எ)

சொற்பனம்பலித்ததுவே முனிவர்செய்த சோதனைமிகுந்ததுவே
கற்பினுயர்ந்தபெண்ணே நற்குணமிகுங்கண்ணே
முற்பவத்தின்பயனோ வுற்பவித்ததெனக்கு. (எ)

வண்டாடுங்குழலழகி வரிவேலயில் கெண்டைபோல்விழியழகி
மண்டலத்தோர்களுட னண்டர்கூடுஞ்சபையில்
சண்டாளனுக்குமாலை தரித்தாயிப்பலன்காண. (எ)

அரிச்ந்திரன் வசனம்.

எனது ஆசைநாயகியானுன்னைமணம்புரியவருங் காலையில்கன்னமாபுரியில்அனேகதேசத்தரசர்களு மற்றதேவர்களும் நிறைந்த சபையில் அவர்கள்முனமானதுநானும்படி யென்கழுத்தி மாலை



தரித்தாய் கண்மணி யதற்குநீ யென்னசுகமடைந்தாய் நானெவ் விதத்தில் மனதைத்திடப்படுத்தப்போகிறேன் நல்லதுன்மனது போல் இந்நகரத்தில் விலைகூறுகிறேன் கண்மணி.

சந்திரமதி வசனம்.

பிராணேசா தங்கள்மனதுபோ லடியாள் மனதிருக்கிறது யோசிக்காமல் அடியாளை விலைகூறுங்கள் சுவாமி.

சந்திரமதியை விற்கிற பாகம்

விருத்தம்.

வலங்கிளர்திண்டோண்மன்னன் மனைவிசொற்கேட்டுநெஞ்சங்
கலங்கினான்மயங்கினின்றான் கண்ணீரருவிபாயத்
துலங்கியமங்கைபாகன் றுணைபடிதனதுட்கொண்டான்
கலங்கிடவைத்தாயீசா நடுவிலைக்கென்செய்வேனே.

அரிச்சந்திரன் விருத்தம்.

கலைமதிமுகத்தினாளை மைந்தனைக்கரத்திற்பற்றி
புலதனைச்சிரத்தில்வைத்து பொற்புறநடத்திமுன்றால்
தலைவிதிப்பயனாலென்றன் றாரணியிழந்துபோந்து
விலைமதியாதபெண்ணை விற்குறேன்வாங்குவீரே.

இராகம்-பியாகடை-தாளம்-சாப்பு.

பல்லவி.

வருவீர் வருவீர் வருவீர் மனமகிழ்ந்தென்
மனைவியை விலைகொள்ள வருவீர்

அநுபல்லவி.

வருவீர்வருவீரிந்த மாநகரின்மிகுந்த
பொருள்படைத்தோர்களெவ ராகிலும்புண்யமிண்டு. (வரு)

சரணங்கள்.

ஞாலமதிலேசெல்வ மேலாகவாழ்ந்திருந்தேன்
நண்மணிமகுடம் புனைந்தரசுபுரிந்தேன்
காலகெதியாலிந்த கோலமாகியேவந்தேன்
கவுசிகமுனிகட ஞேலமழுதுநொந்தேன்
கருதுவீ ரிதுவிபரங்களை யுறுதியாய்
அரிமையிவள் தனை யுறுதியாய்விற்பேன்
தருவீர்பசும்பொன்னைப் பிரியமுள்ளவர்கள். (வரு)

சந்திரகுலத்திலுற்ற தையலாணல்லகோத்திரம்
சற்குணமிகுமிவள் கற்புக்குகந்த பாத்திரம்
சுந்தரவதனஞ்சி ந்தாளிவளென் னேத்திரம்
தொலையாதகடனாலே விலைசெய்யவந்தே னுத்திரம்
சோதனை மனதுக்கடங்காத வாதனை
பேதகங்களிலை மாதைவிலைகொள்ள
சாதிகளெவ்வித பேதமாயினும். (வரு)

மறையோர்மன்னர்களல்ல வைசியர்சூத்திரர் வரும்
வருத்துகிறேனுயர்ந்த பசும்பொன்னெனக்கையிற் றரும்
குறைவுகளுண்டுமானா லெனக்குவிபரங் கூறும்
கொடியதுயரைநீக்கும் படிநீர்கடைக்கண் பாரும்
குலையது நிலைதவறியிதோ பதறுது
மலையாதீர்கள் வாரும் அலையாமலேயானும்
விலைசெய்வதில்வேறே தடையிராதுசொன்னேன். (வரு)

வட்டப்பாரையின்மீது மதகரியைநிறுத்தி
மனிதனொருவனையம் பாரியிட்ட.தி லேற்றி
திட்டமுடனேவெள்ளிக் கவணையவன்கைக் கீந்து
சிறியமாணிக்கக்கல்லைத் தெறியுமுயரஞ்செம்பொன்
செப்பினேன் முனிவராலேவந்த சற்பனை
தப்பிதங்கள்சொல் லொப்பாதென்றன்மனம்
சஞ்சலப்படுகிறேன் தஞ்சம்வேறில்லை. (வரு)

அரிச்சந்திரன் வசனம்.

பிராணசகி இந்நகரத்தில் வடபாரிசத்தெருவெலாம் விலை கூறினேன் ஒருவராவதுவந்து விலைகேட்கக்காணோம் இனியென் செய்வேன் பெண்ணே சந்திரமதி.

சந்திரமதி வசனம்.

பிராணநாதா இந்தத்தெருவில் வாங்கக்கூடிய புண்ணிய வான்களில்லாவிட்டால் இன்னொருதெருவிலாவது விலைகூறுங்கள் பிராணநாதா.

அரிச்சந்திரன் விருத்தம்.

அஞ்சனவிழியினளை யருந்தவம்புரிந்துபெற்ற
மஞ்சனைவிற்கின்றேனன் மாமுனிகடனுக்காக
வஞ்சனையில்லையென்றன் வல்வினையாலேவந்தேன்
தஞ்சமிற்பாவியென்றன் சத்தியங்காத்திடீரே.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

மனைவியைவிலைசெய்குவேனே வாங்கவருவீரென்முன்கனவானே
வருந்துரேனேயிருந்தானே வகையில்லாமற்றுனே யென்றன்.
கனங்குறைந்தேழையாய்ப்போக கவுசிகமுனிகடனுக்குள்ளாக.
கஷ்டந்தானே நஷ்டமானேன் கலங்குறேனேயனாதி போலே. ()

ஐயோத்தியாபுரிதேசம் ஐயா அரிச்சந்திரனானிந்தவேஷம்
ஆனேன்மோசம் அயன்றோஷம் ஆசைநேசமுள்ள யென்றன் ().

மதகரிமீதிலம்பாரி வைத்து வல்லவனொருவனங்கேறி
மனந்தேறி கவண்மிறி வாகாயெறியுந்தொலைசெம்பொன்னால். ()

அரிச்சந்திரன் வசனம்.

பிராணசகி யிந்தக்கீழ்பாரிசமுள்ள தெருமுற்றிலும் விலைகூறியும் ஒருவரேனும் வந்து விலைகேட்கக்காணோம் இதுகடவுள் செயலோ யென்செய்வேன்பெண்ணே சந்திரமதி.

சந்திரமதி வசனம்.

பிராணேசா நாமென்ன செய்வோம் இன்னுமொருதெருவில் விலைகூறுங்கள் யாதொருபுண்ணியவான்களாவது வாங்கமாட்டார்களா மனத்தைரியம்விடாமல் விலைகூறும் நாதா.

அரிச்சந்திரன் விருத்தம்.

மாதினைமகனைக்கொள்வார் மாநகர்காசியுள்ளோர்
சாதியிலெவரானாலும் வாங்கலாந்தடையொன்றில்லை
மேதினிமுழுதுங்காத்தேன் மெய்தவறாமல்வாழ்ந்தேன்
வேதனையடைந்துவந்தேன் விபத்தினையகற்றுவீரே.

இராகம்-கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

வாருமென்முன்னுகவே கனவானே
மனைவியைவிலைசெய்வேன் வாங்கப்பிரியமுள்ளோர். (வா)

அநுபல்லவி.

பாரும்நான்படுந்துயர் தீருமிப்போதேயோடி. (வா)

சரணங்கள்.

ஐயாநானிருப்பிட மையோத்திதேசம்
அருந்தவமுனிவரா லெனக்கிந்தவேஷம்
மெய்தவரேனொரு காலமுந்தோஷம்
வேண்டேன்பிறர்பொருளைத் தீண்டேனுனேசம். (வா)

சந்திரமதியாளென்றன் தையலின்பேரு
சாற்றினேன்விபரமாய்த் தமியேனென்னூரு
சிந்தைமிகக்கலங்கித் தியங்குறேன்பாரும்
செல்வமுடையோரெனைத் தீர்க்கமாய்காக்கவேயோடி. (வா)

வஞ்சகமெள்ளளவும் நினைக்கவொண்ணாது
மனுநீதிமுறைதவ றேன்வெகுசாது
தஞ்சமென்றுங்களிடஞ் சார்ந்தேனிப்போது
தருணந்தருணமிதோ வறுமைதவிழ்க்கவோடி. (வா)

அரிச்சந்திரன் வசனம்.

பிராணசகி யானிந்நகரில் தென்றிசைத் தெருமுற்றிலும் விலைகூறியும் ஒருவராவதுவந்து விலைகேட்கக்காணோம் யென் செய்வேன் பெண்ணே சந்திரமதி.

சந்திரமதி வசனம்.

பிராணநாதா இன்னமிருக்கப் பட்ட தெருக்களிற்சென்று விலைகூறுங்கள் யாரேனும் வாங்கப்பிரியமுள்ளவர்கள் வாங்குவார்கள் நாதா.

அரிச்சந்திரன் விருத்தம்.

மாமுனி கடனுக்காக மாநகர் காசிவந்தேன்
தேமென்பூங்குழலியென்றன் சேயினை விற்கின்றேன்யான்
கோமறையோர்கள்மற்ற குலத்துளோரெவரானுலும்
தாமதமின்றிக்கொண்டாற் சத்தியநிலைதப்பாதே.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

மனைவியைவிலைகொள்ள வாரும் கொள்ள வாரும்
வருந்தந்தவிழ்ப்பீரென்று வந்தேன்கண் பாரும். (ம)

தனம்படைத்தோரேபுண்ய வானே புண்ய வானே
தயங்குகிறேன்கெதியன்றி மயங்குறே னே. (ம)

ஐயோசத்தியாபுரி தேசம் என்றன் தேசம்
அயன்விதிப்பயனாலே யானேனிவ் வேஷம். (ம)

அருந்தவமுனிசதி யாலே சதி யாலே
அரசுபதியிழந்து வந்தேனிக் காலே. (ம)

தஞ்சமெனக்கொருவ ரில்லை பொருவ ரில்லை
தவிக்கிறேன்கடனதீக்கச் சதியொன்று மில்லை. (ம)

சந்திரகுலத்தினுற்ற பெண்ணா ளென்ற பெண்ணாள்
சந்திரமதியிவள்பே ரென்னிரு கண்ணாள். (ம)

தக்கபடிவேலைசெய் வாளே செய்கு வாளே
சற்குணமிகுமிவள் கற்புடை யாளே. (ம)

அரிச்சந்திரன் வசனம்.

பெண்ணே சந்திரமதி இந்தக் காசிப்பட்டணம் மேல்புற மிருக்கிற தெருக்கடோறும்போய் விலைகூறியும் ஒருவரேனும் வந்து விலைகேட்கக் காணோமே யென்செய்வென் பிராணசகி.

சந்திரமதி வசனம்.

பிராணேசா நாமென்செய்வோம் எவ்வளவோ தனம்படைத்த பாக்கியவான்களிருக்கப்பட்ட ஊரில் யாரேனும் வாங்கமாட்டார்களா இன்னம்பார்ப்போம் நாதா.

பொது வசனம்.

இப்படியாக அரிச்சந்திரன் தேவியை விலைகூறி ஒருவரேனும் வாங்காமல் மயங்கிநிற்கும்போது விஸ்வாமித்திர முனிவரானவர் அக்கினிபகவானையழைத்து சந்திரமதியை விலைக்குவாங்கும்படிசொல்ல மேற்படி அக்கினிபகவான் காலகண்டர்வேடம் தரித்துக்கொண்டு வருகிற விதங்காண்க.

காலகண்டன் விருத்தம்.

மருவலர்க்கசனியன்ன மன்னவன் கலங்கும்போது
திருமுனியேவலாலே தேயுவுமறையோனாகி
மருமலிசோலைசூழ்ந்த மாநகர்வீதிமார்க்கந்
தொறுமுளோரஞ்சக்கால கண்டனுந்தோற்றினனே.

இராகம்-மோகனம்-ஆதிதாளம்.

பல்லவி.

காசிநகதிற்கை வீசியுல்லாசமாய்
காலகண்டையர் வந்தார். (கா)

அநுபல்லவி.

மாசில்லாத்திருநாமம் நெற்றியில்தீட்டி
மார்பில்முன்னூறுந் துளபமாலைபூட்டி. (கா)

சரணங்கள்.

கோசிகன்செய்திடு மாய்கையினாலே
கோலமாறியக்கினி தேவனிக்காலே
பூசிதைபெற்ற புரோகிதனைப்போல
பொற்கொடியைவிற்ப தாரடாவென்றிதோ. (கா)

மெத்தச்சிவந்துபழுத்த பழம்போல
மிக்கத்தள்ளாடியே கூனிவில்லைப்போலே
வத்தலைப்போலுடல் வாயில்வெகுவாலே
வாய்நீருடன் கண்ணிற் பீளைவடிந்திட; (கா)

மாதவாகேசவா வைகுந்தவாசா
வாமனேருக்மணி லக்குமிநேசா
சீதாபிராமனே தீனசர்வேசா
திருவருள்செய்யென்று அரிகீர்த்தனம்பாடி. (கா)

காலகண்டனுக்கும் நட்சேத்திரப்பருக்கும்
நடக்கும் சம்பாஷணை.

கா-ன். ஆரடாவன் தாருக்குவந்த கோவணத்துணி திருடிபொட்டக்கன் நட்சேத்திரய்யன்.

ந-ன். ஆரடாவன் நாம்மிட நாமதேயத்தை முழுக்கச்சொல்லிக் கூப்பிடுகிறவன்.

கா-ன். நான்தான்டா பொட்டக்கண் தாயோழி.

ந-ன். அத்தானு வாரும் வாரும் வாரும்.

கா-ன். அம்மாஞ்சி வந்தேன் வந்தேன்.

ந-ன். அத்தான்மண்ணி சவுக்கியமாயிருக்குறாளா.

கா-ன். நான் மரப்போலிருக்க என்னை விசாரிக்காமல் அத்தான் மண்ணியை விசாரிக்கிறாய் என்னடா.

ந-ன். அவளுக்கும் எனக்கும் பாலியசிநேகமானதால்விசாரித் தேன்உமக்குத்தெரியாதா.

கா-ன். உன்னைக்கதவின் மறவிலிருந்து காலைமுறியாமல் போனால்என்பேர் காலகண்டனு.

ந-ன். கண்தெரிந்தால் தானே மயிரைப்பிடுங்குவாய்.

கா-ன். அடாசுக்கிராசாரியாரே யிதென்னவேஷம் ரொம்பநேர்த்தியாயிருக்கிறது.

ந-ன். ஆமாம் அக்கினிபகவானே எல்லாம் விசுவாமித்திரரால் ஏற்படுத்திய வேஷந்தான்.

கா-ன். அதிருக்கட்டும் நீர்வந்த சமாச்சாரமென்ன.

ந-ன். சரயுநதிக்கரைவிருந்து காசிப்பட்டணம் வரையில் பல விதமான துன்பப்படுத்தியும் அவன்பொய்சொல்லவில்லை முடிவில் மனைவியை விற்கத் துணிந்துவிட்டான் இனி நீர்தான் பொய்சொல்ல வைக்கவேணும்.

கா-ன். சரிதான் நான் ஆனமட்டும் பார்க்கிறேன் கிரயத்துக்கு வாங்கினவுடன் பணம்வந்ததாக ஒப்புக்கொள்ளும்.

ந-ன். சரி நான் அப்படியே வந்ததாகச்சொல்லிவிடுகிறேன்.

காலகண்டன் விருத்தம்.

பாரியைவிற்பேனென்று பகர்ந்தவனாரடாவுன்
பேரென்னவூர்தானென்ன பெண்டியைவிற்பேனென்ற
காரியமேதடாநீ கடன்படுவானேயிப்போ
சாரியாய்விபரமெல்லாந் தான்சொல்விராஜமன்னு.

மேற்படி வசனம்.

நீயாரப்பா ராஜனுகக்காணப்படுகிறது நீரெந்தவூர் யெதற்காக உன்மனைவியைவிற்பானேன் அதுவிபரம் சொல்லும்பிள்ளாய்.

அரிச்சந்திரன் வசனம்.

சுவாமி அடியேன் விபரமாகச்சொல்லுகிறேன் கேளுங்கள் நான் அயோத்தியா புரியையாண்டிருந்த அரிச்சந்திரனென் பேர் இவள்மனைவி இவன் யென்னுடையபாலகன் இவர் யென் மந்திரி சத்தியகீர்த்தி யான் விஸ்வாமித்திரருக்குக் கொடுக்க வேண்டிய கடனுக்காக பெண்டீரைவிற்குறேன் மேற்படி கடனை வாங்க வந்த நட்சேத்திரத் தாகரிவர் சுவாமி.

காலகண்டன் வசனம்.

சந்திரா இதென்ன பயித்தியம் யாராவது கடன்பட்டால் பெண்சாதிபிள்ளையை விற்பாருண்டோ இல்லையென்றுசொன் னால் போரான் இதற்காகவா மயங்குகிறாய் அரிச்சந்திரா.

அரிச்சந்திரன் விருத்தம்.

ஐயரேயென்றன்பெண்டீ ரிவையைக்கொள்வதற்கு
கைப்பொருளில்லாவிட்டால் கனத்தயோசனைசொல்வானேன்
மெய்யனேயுமதுயுதவி வேண்டிலேன்பொருளிருந்தால்
துய்யனேமனதுகந்தே தோகையைவாங்குவீரே.

இராகம்-தோடி-தாளம்-ரூபகம்.

அரிச்சந்திரன் சொல்.

கண்ணிகள்.

மறையோர்சிகாமணியே மனதுகந்திந்தச்சேதி
வழுத்தலாகுமோமண்ணில் மாந்தர்நகைக்கநீதி.

காலகண்டன்.

வழுத்தலாகுமோவென்ற மன்னனேகடனுக்கேதும்
வகையில்லையென்றாற்குற்றம் வருமோவென்றனக்கோதும்

அரிச்சந்திரன்.

இல்லையென்சொல்லமன மெப்படிவருமையனே
இதுவுஞ்சிவன்செயலோ யேற்காதிதுமெய்யனே

காலகண்டன்.

கடன்தீர்க்கப்பெண்டைவிற்றேன் காசினியிற்கண்டதில்லை
கவலைப்படாதேசும்மா கடத்திவிடுவீண்தொல்லை

அரிச்சந்திரன்.

பூவையரைவிலைகொள்ள பொருளுமக்கில்லையென்றால்
பூசுரரேயெனக்கிந்த போதனைசெய்ததுநன்று

காலகண்டன்.

இல்லாதவனென்றெனைநீ யிகழ்ந்துபேசாதேமன்னா
எவ்வளவுசெம்பொன்வேண்டு மியம்புவிபரம்நன்னா

காலகண்டன் விருத்தம்.

மன்னவன்கூறக்கேட்ட மறையவன்காலகண்டன்
அன்னதுசரியேயுன்ற னரிவைநின்மகனைவிற்கும்
பொன்னதையிவளவென்று பொருந்திநீயுரைப்பாயாகில்
சொன்னதோருரைதப்பாமற் றேகையைவிலைகொள்வேனே.

மேற்படி வசனம்.

அரிச்சந்திரா நீசொன்னது சரிதான் உன்னுடைய மனைவி விலையெவ்வளவு சொல்வாயானால் கொடுத்துவிட்டு வாங்கிக் கொள்கிறேன்.

அரிச்சந்திரன் விருத்தம்.

ஞானசிரோன் மணியான கௌசிகர்க்கு
நான்கொடுக்குங் கடனதனை நவிலக்கேளும்
ஆனையின்மே லாளேறிக் கவணைவாங்கி
யழகான மாணிக்கக் கல்லைவைத்து
தானெறிந்ததொலைதூரம் பசும்பொன்னையா
தந்திடுவோர் தங்களுக்கென் மனையாளான
மானனைகர் விழியுடைய சந்திரமாது
மங்கையரைப்பங்கமின்றி விற்பேன்சுவாமி.

மேற்படி வசனம்.

சுவாமி மட்டப்பாரையின்மீது ஒருபானையைநிறுத்தி அதின்மேல் ஆங்காரபுருஷனேறி வெள்ளிக்கவண்கொடுத்து மாணிக்

கல்வைத்து விட்டெறிந்தாலெவ்வளவு உயரம்போகுமோ அவ்வளவு உயரம்பசும்பொன்கொடுத்தால் கிரயஞ்செய்வேன்சுவாமி.

காலகண்டன் வசனம்.

நீ சொன்னபிரகாரங் கொடுக்குறேன் பெங்கே உன்பெண்சாதியைப் பார்ப்போம்.

அரிச்சந்திரன் வசனம்.

இதோ நிற்கிறுளையா சுவாமி.

காலகண்டன் விருத்தம்

சுந்தரம்போன்றவுள்றன் றோகையையிலக்குவாங்கி
எந்தனுக்கேவல்செய்ய வேற்குமோவழிவாய்மன்னு
சந்திரகிரணமேன்மை சமயத்திற்கதுவுண்டாமோ
விந்தையாயிருக்குதிந்த மெல்லியாள்நமக்கொண்ணுதே.

மேற்படி வசனம்.

சந்திரா நன்னுயிருக்கிறது இப்படி அழகு சவுந்தரியமுள்ள இந்தப்பெண் நம்மதூக்கில் என்னவேலை பார்க்கப்போகின்றுள் நானே யேழைப்பிராமணன் நமக்குத்தக்க ஆளல்லோபார்க்கவேணும் நானென்ன வெறுமனே யிவளைவைத்துப் பூசைபண்ணிக்கொண்டிருக்கிறதா.

அரிச்சந்திரன் விருத்தம்.

பூசுரர்குலத்திலுற்ற புண்யனேபுகலக்கேளும்
மாசிலாப்புனுகுபன்னீர் வாசனையாவுஞ்சேர்ப்பாள்
பேசியமொழியைமீருள் பின்னொருவிடத்திற்செல்லாள்
நேசமாயுமக்குந்தொண்டு நேர்மையாய்ச்செய்வாள்சாமி.

மேற்படி வசனம்.

சுவாமி அநேகவாசனைகள்சேர்ப்பாள் புஷ்பசாதிகளால் அநேகவிதமான மாலைகள் தொடுப்பால் இன்னம் அனேக அற்புதவேலைகளெல்லாஞ் செய்வாள் சுவாமி.

காலகண்டன் விருத்தம்.

கந்தவர்க்கங்கள் சேர்க்குங் கன்னியைவிற்கவந்தாய்
அந்தமோ நமக்குக்கொள்ள வடுக்குமோவடுக்காதென்றன்
சிந்தைபோலேற்றைபாகச் செப்பியவேலையாவும்
நிந்தையில்லாமற்செய்தால் யங்கொள்வேன்கண்டாய்

மேற்படி வசனம்.

சந்திரா அவள் பூத்தொடுக்கிற வேலைகளெல்லா மிருக்கட்டும் இவளைநான் கிரயத்துக்குவாங்கி யென்னசெய்கிறது நான் சொல்லிய வேலைகளைச் செய்வாளாகில் இப்பவே கிரயந்தருகிறேன் அரிச்சந்திரா.

அரிச்சந்திரன் விருத்தம்.

ராஜஸ்திரிக்குரியவேலை நாகரீகங்களாக
நேசமாய்ச்செய்வாளன்றி நிந்தனைவேலைசெய்யாள்
பூசுரர்குலத்திலுற்ற புண்யனேபொறுமையுள்ளான்
தோஷமேயில்லையேயிற சுவாமிநீர்விலைகொள்வீரே.

மேற்படி வசனம்.

சுவாமி இவள் தேசசாயிருக்கிறளே வேலைசெய்வாளோ செய்யமாட்டாளோவென்று யோசிக்கவேண்டாம் இராஜஸ்திரீகளுக்குரிய வேலையாவுஞ் செய்வாள் சுவாமி.

காலகண்டன் விருத்தம்.

மன்னவனே நமதாத்து வேலையெல்லாம்
வழுந்துகிறே னிருநூறு கூடைசாணம்
நின்னயமாய் நிதமெடுத்துத் தட்டவேணும்
நெற்களபதி னாறுகலங் குத்தவேணும்
இன்னமுங்கே ளெழுநூறு குடத்திற்றண்ணீ
ரெடுத்துவந்து தினந்தோறும் வைத்தப்பின்னும்
சொன்னபணி விடைகள்குறை யாமற்செய்தாற்
சுகமாக விவளைவிலை கொள்வேன்கண்டாய்.

மேற்படி வசனம்.

அரிச்சந்திரா அரிச்சந்திரா நமதாத்திலே தினந்தோறும் இருநூறுகூடை சாணந்தட்டவேணும் பதினாறுகல நெல்லுக் குத்தவேணும் மெழுநூறுகுடந் தண்ணீரெடுக்கவேணும இன்னம் நம்ப ஆத்துக்காரி வீட்டுக்குரித்தாகியவேலைகள் யென்னென்னசெய்யச் சொல்லுகிறளோ அதையெல்லாஞ் செய்ய வேணும் அப்படிசெய்வாளாகில் தடையின்றிக் கிரயத்துக்கு வாங்கிக்கொள்கிறேன்.

அரிச்சந்திரன் வசனம்.

கைலாசபதி யானென்ன செய்வேன் இப்பேர்க்கொத்த கொடிதான வேலைகளைச் செய்தறியாளே இனியென்செய் வேன் நாதா.

சந்திரமதி விருத்தம்.

பொருத்தமில்லாதவார்த்தை பூசுரர்புகலக்கேட்டு
வருத்தங்களடையவேண்டா மன்னவாமறையோரெண்ணுங்
கருத்தினுக்குகந்தவேலை கன்னியாள்செய்வேன்சிந்தை
திருத்தமாயென்னைவிற்றுச் சீக்கிரங்கடன்றீர்ப்பீரே.

சந்திரமதி வசனம்.

பிராணேசா இனிநாமிருந்த சுகத்தை உத்தேசிப்பதில் லென்னபிரயோஜனம் ஒன்றுமில்லை மறையோர் சொல்லக்கூடிய வேலைகளைத்தடையின்றி அடியாள் செய்கின்றேன் மனதுதிருப் தியாய் அடியாளைக் கிரயஞ்செய்து கடனைத்தீரும் நாதா.

அரிச்சந்திரன் வசனம்.

சுவாமி தங்கள் மனதுபோல் வேலைகளையெல்லாஞ் செய்குவாள் தடையின்றி வாங்குவீர்கள் சுவாமி.

காலகண்டன் வசனம்.

அடி ஆத்துக்காரி சந்திரமதி சொல்லுகிறதும் அரிச்சந்தி ரன் சொல்லுகிறதும் கேட்டாயோடி வீட்டிலுள்ள வேலையெல் லாஞ் சரிவரச்செய்கிறதாகச் சொல்லுகிறாளே செய்குவளா நன்று பார்த்துக்கொள்.

காலகண்டி வசனம்.

யேங்காணும் ஆத்துக்காரரே இவளாவது வேலைசெய்கிற தாவது பணத்தை வீணிற்கொண்டுபோய் கொடுக்கப்போகிறீ ரே ஒருக்காலும் வேலைசெய்யமாட்டாள் காணும்.

காலகண்டன் வசனம்.

போடிபோ நோக்குத்தெரியாது அவள் வேலையெல்லாஞ் செய்கிறேனென்று சொல்லுகிறாள் வாங்கிப்பார்த்தால் தெரி கிறது அரிச்சந்திரா உனக்கு வேலைசெய்வாளென்கிறது திருப்தி யாயிருந்தால் முறியெழுது அரிச்சந்திரா.

அரிச்சந்திரன்.

சந்திரமதியைக் கிரயஞ்செய்த அகவல்.

இராகம்-ஆரபி.

சீர்மிகுந்தோங்கித் திங்கண்மும்மாரி
மாறாதுபெய்து வளமிகுங்காசிப்
பதிதனி லுயர்ந்த பண்புள்ளவேத
விதிமுறைதவறா வேதியர்குலத்தில்
கருணையாயுதித்த காலகண்டையர்க்கு
மறுவிலாவயோத்தி மாநகராண்ட
திருச்சங்குதவத்திற் றீர்க்கமாயுதித்த
அரிச்சந்திரனென் னவசரநிமித்தியம்
திங்கடன்குலத்திற் செனித்தவளான
மங்கையென்சந்திர மதிதனைவிற்று
மதகரிமீது வல்லபனேறி
இதமுடன்கவண்கல் லெறிந்ததோருயரம்
செம்பொன்னையானுந் தேவரீரிடத்தில்
அன்புடன்வாங்கி யருந்தவமுனிக்குக்
கொடுத்துநான்விட்டேன் குறைவின்றியானும்
வடுப்படாதெழுதிய வகையுளமுறிக்கு
அத்திமாமுகவ னடியிணைசாட்சி
சந்திரசேகரன் றாளிணைசாட்சி
சந்திராள்சூரியாள் சகலருஞ்சாட்சி
சத்தியவாக்கரிச் சந்திரனென்னுஞ்
சுத்தவாளெழுதுஞ் சுசஸ்தலிகிதமே.

அரிச்சந்திரன் வசனம்.

சுவாமி காலகண்டபகவானே யிதோ கிரயசாசனம் பெற்றுக்கொள்ளுங்கள்.

காலகண்டன் வசனம்.

நல்லது பொன்னைத் தரகரிடத்திற் கொடுத்து விட்டேன் கேட்டுக்கொள் உன் பெண்சாதியும் பிள்ளையு மனுப்பும் பிள்ளாயரிச்சந்திரா.

அரிச்சந்திரன் வசனம்.

அப்படியே யனுப்பிவைக்கிறேனையா சுவாமி.

காலகண்டன் வசனம்.

சந்தி ஆத்துக்குப் போகவேணும் உன்னும்பிடையானிடத்தில் கேட்டுக்கொண்டுவா சீக்கிரம்.

சந்திரமதிபிறிகிறபாகம்.

சந்திரமதி விருத்தம்.

கன்றேறிமாககரைக் காவல்பூண்ட
காவலனு மதிதயனுஞ் சிவனைநோக்கி
மன்னியமா தவமியற்ற வீசன்றேன்றி
வரமருள வவ்வரத்தால் யானும்வந்தேன்
பொன்னகரும்மென்னகரு புகழத்தக்க
புண்ணியனே யெனைமணந்தா யருமையாக
இன்னகர்வந் தின்பமுட னிடைவிடாம
லிருந்திட்டே னுமைப்பிறிய வெழுதினனே.

இராகம்-முகாரி-தாளம்-ஆதி.

பல்லவி:

என்னமாய்ப் பிறிந்திருப்பேன் என்
னுதாவுமைவிட்டு நான். (என்)

அநுபல்லவி.

தன்னுயிர்போல மன்னுயிரைக்காத்து
இந்நிலத்தையாண்ட விறைவாதுரையே (என்)

சரணங்கள்

அன்னை தந்தைரே யருங்கிளைநீரே
ஆவியும்நீரே யாள்தெய்வம்நீரே. (என்)
முன்னைவினையாலே முதுமறையோர்க்கு
என்னவிலைசெய்தீ ரின்றுமைநான்விட்டு. (என்)

எப்பிரப்பிலபார்ப்பீட னென்றுயரைத்தீர்ப்பேன்
என்னுயிர்காப்பே னிவ்வுலகிலேற்பேன். (என்)

இப்படியாய்ப்பிரம னெழுதினுன்முன்னம்
தப்பிதங்களாகத் தையல்மனம்நோக. (என்)

கோவிலையிடித்துக் கொள்ளைகளடித்து
கூபம்நீர்ப்பந்தல் தீபத்தைக்கெடுத்து. (என்)

ஆவின்கன்றுக்குப்பா லறவேகறந்த
பாவமோவெனக்குப் பலித்ததிந்நாளில். (என்

அரிச்சந்திரன் விருத்தம்.

அன்னமென்னுடையினுளே யாரமுதனையபெண்ணே
என்னுயிர்க்குயிராயோங்கு மின்பமாமயிலேயென்றன்
கன்னல்சற்கண்டேதேனே கனியொடுகலந்தபாகே
உன்னைநான்பிறிந்துமிந்த வுயிர்வைத்துமிருக்கலாமோ.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-சாப்பு.

பல்லவி.

மாதரசேயுன்னையான்பிறிய மனம்வாடுதடிமட. (மா)

அநுபல்லவி.

ஆதவன்குலத்தரசிழந்ததற் கையோவருந்திலனே
அன்னமேயுன்னையா னிந்நகர்தன்னிலே. (மா)

சரணங்கள்

கொஞ்சங்கிளிமொழி வஞ்சியரேயென்ன
கோலமோ யானறியேன் முனி
வஞ்சமிதற் கென்செய்வேன் ஆரை
மைந்தனேடென்றனை யந்தணர்க்குவிற்றேன். (மா)

மன்னர்சபைமெய்க்க யுன்னை மணஞ்செய்த
தென்னபல னிதற்கோ வுயர்
கன்னமாபுரி தன்னிலேமிக்க
காவலனுவலாய் மேவித்தவமுற்ற. (மா)

ஆருமற்றபர தேசிகளாக்கி
அந்தணர் தன்னகத்தில்சென்று
கூறிடும்பணி நேர்மையாய்ச்செய
காதையேயுன்மனம் வாதைப்படவிட்டே. (மா)

சந்திரமதி விருத்தம்.

மாதவமுனிவர்க்கிந்த மண்டலமெல்லாந்தந்த
நீதனேநிலைதப்பாத நித்தனேயென்றன்னுளைக்
காதலாவரந்தப்பாத கருணையங்கடலேயிந்தப்
பேதகமெவர்செய்தாரோ பிறிந்துமையகலந்தானே.

இராகம்-தேசிகக்-கமாஸ்-தாளம்-சாப்பு.

பல்லவி.

என்னசெய்வே னையையோமன்னு வுமைபிரிந்து

அநுபல்லவி.

தன்னுயிர்போல்மன்னுயிரைத் தானினைக்குஞ்சற்குணரே
மன்னர்தினம்போற்றும்பாத நாதனேயினி. (என்)

சரணங்கள்.

எப்போதும்பிறியேனென்று வெண்ணியிருந்தேனென்று
இப்படியும்வந்தோவென்று ஏங்குறேனென்று. (என்)

பற்றியெரியுதேவயிர் பதறுதெனதுவுயிர்
கொற்வாவுமைப்பிறந்திடக் கூடுமோபாவி (என்)

தந்தைதாயையான்மறந்தேன் சதமென்றுமைநினைந்தேன்
சிந்தைநொந்துவாடவோவிட்டீர் தேவரீரினி. (என்)

அரிச்சந்திரன் விருத்தம்.

வண்டுவேல்கெண்டையாலம் வலியமான்மரைவாள்யாவுங்
கண்டுபின்னிடையுங்கண்ணாய் கண்டஞ்சுஞ்சொல்லாயென்னை
மண்டலமன்னரேச மாமுனிகடனுக்காக
பண்டயன்விதியால்விற்றேன் பாவியென்போல்வாருண்டோ.

இராகம்-தேசிகக்-கமாஸ்-தாளம்-சாப்பு.

பல்லவி

மாதேயுனையான்பிறியவே மனமிலையே

அநுபல்லவி.

சீதமதிகுடியருள் சிவனார்செயலிதுவோ
ஏதுவினையான்செய்தேனோமுன் வென்னருந்தவ. (ம)

சோடுலவுமன்றிலைநான் சோடுபிறியச்செய்தேனே
பேடைமயிலாளேயென்செய்வேன் பிரியமுள்ள. (மா)

மாதவர்செய்வஞ்சனையால் மறையோர்தனக்குவிற்ற
ப்ாதகனென்போலுண்டோவிந்தப் பார்தனிலென்றன். (மா)

சுந்தரமுடையமானே சொற்றவறுவென்றன்றேனே
எந்தக்காலம்வந்துகாண்பேனோ வினிமேலென்றன். (மா)

சந்திரமதி விருத்தம்.

திருவுறையு திருமார்புங் குன்றம் போலத்
திரண்டுயர்ந்த திண்டோளும் வரையா தியுந்
தருகஞ்சு கரதலமு மன்னர் மோலித்
தழும்பிருந்த விருபதமுங் கருணைக் கண்ணும்
மருவிநெஞ்சம் வாடாது மலர்ந்தி லங்கும்
வாரிசமா மலர்முகமு மாரன் வெள்கும்
உருவமுமென் னிருவிழியி னுகந்து வாழ
வுமைப்பிறிய மனதெவ்வா றமையுந் தானே.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி

பல்லவி.

சாமிநாதாவென்ன செய்குவேன்
சண்டாளியெவ் வண்ணமுய்வேன். (சா)

அநுபல்லவி.

தாமசிக்காதேயென்று சதுர்மறையவரின்று
தண்டிக்குமூர்வாடியென்று மண்டலத்தையாண்ட. (சா)

சரணங்கள்.

வெள்ளாட்டியென்றுசேதி வேதியர்சொல்லும்நீதி
வள்ளலேகேட்டவுட னுள்ளங்கலங்குதே. (சா)

பிடித்திழுக்கிறூர்கையைப் பேதிக்கும்படியையே
அடிக்குறூர்பிரம்பாலே துடிக்கும்படிக்குச்.(சா)

ஐயோவிப்படிக்கோல மானதேமுனிசாலம்
மெய்பதறுதேயென்றன் மேனியுஞ்சோருதே. (சா)

அரிச்சந்திரன் விருத்தம்.

அஞ்சனக்கிட்டிமேவல்போ லருளடைகிடந்தகண்ணும்
மஞ்சனக்குழலுங்கோதை மயிலன்னசாயலும்பொன்
கிஞ்சகமொழியும்வஞ்சிக் கேழ்கிளரிடையும்வாடாக்
கஞ்சமெல்முகமுமென்று காண்பேனோவிஸ்வநாதா.

இராகம்-நாதநாமக்கிரியை- ஆதி.

பல்லவி.

மாதுசிரோன் மணியே யினி
யேதுசெய்வேன் றனியே

அநுபல்லவி.

தீதுசெய்தேனோபாவி நியங்குதேயெனதாவி
சாதுவெனக்குவாய்த்த கோதுகுழலணங்கு (மா)

சரணங்கள்.

தந்தைதாயை யயர்ந்தாய் என்னைச்
சொந்தமென்றே துயர்ந்தாய்
சந்திரவதனமுள்ள டையலேயெனக்குள்ள
பந்தபாசமறந்தேன் சிந்தைமிகத்தளர்ந்தேன. (மா)

எப்போதுனைப் பார்ப்பேறு வென
தேக்கந்தனைத் தீர்ப்பேனோ
முப்பழத்தின்ரசமே யொப்பற்றசித்திரமே
சப்பரமஞ்சத்திருந்து செப்பமுத்தங்கொடுக்கு. (மா)

கன்னபுரியில் வந்து நா
னுன்னைமணம் புரிந்து
இந்நாள்வரையெனது சொன்னமேபிறியாது
அன்னமேநீயிருந்து என்னகதியடைந்தாய். (மா)

சந்திரமதி விருத்தம்.

குருமொழி தவறுநீதிக் கொற்றவாசெயத்தகாத
தருமன்செய்தேனோமுன் கண்மணிமகனும்யானும்
அருமறையவர்பின்போக வையைபோவின்றுகண்ட
திருமுகந்தன்னையென்று காண்பேனோசீர்த்திவேந்தே.

இராகம்-காப்பி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மன்றுவுமைப்பிரிய மலரயன்வகுத்தனனோ

அநுபல்லவி.

என்னுயிர்த்துணைவரே யெங்கும்பிரைக்காதிபரே
சொன்னமொழிதவறாத சுந்தரனையென்றனாசை. (ம)

சரணங்கள்.

இனியென்னசெய்குவே னெவ்வண்ணமுய்குவேன்
முனிவன்சதியோவிந்த மோசம்வந்ததாசையுள்ள. (ம)

எப்பிறப்பினில்பார்ப்பே னினிமென்றுபரைத்தீர்பபேன்
இப்படிநமக்குவிதி யிருந்ததைமையோகதி. (ம)

மடனுமிருழும்போலே மாநிலத்தனின்மேலே
உடனுமுயிரும்போலே யுகந்திருந்தோமிக்காலே. (ம)

அரிச்சந்திரன் விருத்தம்.

மாந்தளிரனையமேனி மங்கையேவடுவில்லாத
சாந்தமேதிரும்பவெந்தச் சன்மத்திலுனைக்காண்பேனோ
வாய்ந்தமாமறைக்குமெட்டாவள்ளல்தன்செயலென்னுமோ
காந்துதன்மேறகமுள்ளங் கலங்குதேபிறியத்தானே.

இராகம்-பரசு-தாளம்-ஆதி.

பல்லவி.

ஐயோநா னென்செய்குவே னென
தருமையிளமயிலைப் பிறியும்விதிவசத்தில். (கை)

அநுபல்லவி.

நையுதெனதுதேகம் நானென்செய்தேன்துரோகம்
தையலைவிற்றகொடுஞ் சண்டாளனென்பார்களினி. (ஐ)

சரணங்கள்

திங்களொளிவுகண்ட செந்தாமரைமலர்போல்
அங்கமிகவும்வாடி யழுகுறாளென்றன்தேவி. (ஐ)
காலகண்டையர்சொல்லாற் களிரசம்போன்றசொல்லாள்
வேல்போல்விழியழகி விசனித்தழுகுறாளே. (ஐ)

அரிச்சந்திரன் வசனம்.

என் ஞானசாகி கொடிய சண்டாள னிந்தக்காசிமா நகரில் உன்னை வேதியரிடத்தில் விலைசெய்யும்படியாக நேரிட்டதே யினியெந்தச்சன்மத்தி லுன்னுடைய முகாரவிந்தத்தை யான்பார்க்கப் போகிறேன் பெண்ணே.

சந்திரமதி வசனம்.

பிராணேசா இந்தச்சண்டாளி தங்களைவிட்டுப் பிரிந்திருக்கக்கூடியதவமாசெய்தேன் தங்களையினியெப்பக்காண்பேனுதா

காலகண்டன் வசனம்.

அடிசந்தி யென்னடி வெறுமனே பேசிக் கொண்டிருக்கிறுயேபோய்விட்டு வருகிறேனென்று ஒருவார்த்தைதானே சொல்லவேண்டும் அதிசீக்கிரம் வாடிவா.

சந்திரமதி விருத்தம்

கோசிகமுனிவர்மோசக் கொடுமையாலரசுசெய்த
தேசத்தையிழந்திட்டாலுஞ் செல்வத்தையிழந்திட்டாலும்
மாசிலாமணியைமன்னர் மன்னனேருயிர்க்குயிராய்
ஆசைநாயகனைநீக்க யானென்னபழிபூண்டேனே.

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி

கண்ணிகள்

ஆசைமன்னவாவும்மை யடியாள்பிறிந்தினிமேல்
ஐயையோநானென்னசெய்வேன் பிராணநாதா சுவாமி
ஈசனருளோநமக் கிந்தவிதிவந்ததையோ
எம்படிபிரிந்திருப்பேன் பிராணநாதாசுவாமி
சின்னவயதிலும்மை சேர்ந்துவாழ்ந்தசுகத்தையெண்ணி
தியங்கிமயக்கவிட்டீர் பிராணநாதா சுவாமி
பன்னகவாய்த்தேரைபோலே பரதவித்திடும்படி
பார்ப்பனற்கடிமைசெய்தீர் பிராணநாதா சுவாமி
தேவரீர்திருமுகத்தைச் சிந்தைமகிழ்ந்தினியெந்த
ஜென்மத்திற்காணப்போரேன் பிராணநநதா சுவாமி
ஆவிசோருதேயென்ற னங்கமும்வாடுதேயிந்த
அவதிக்கோபெண்பிறந்தேன் பிராணநாதா சுவாமி

தாயிழந்தபிள்ளைபோல தட்டழியவிட்டீரென்னை
தஞ்சமெங்கட்காரியிமேல் பிராணநாதாசுவாமி
அம்புபட்டமானதுபோ லடிக்கடியும்மையெண்ணி
அழுதுபுலம்பவிட்டீர் பிராணநாதாசுவாமி
ஜெகத்தோர்படாதகடன் செம்மலேநாம்பட்டமோதான்
தீவினைக்குள்ளாகிவிட்டோம் பிராணநாதாசுவாமி
மகனுடனென்னைக்கூவி மறையோர்மிகச்சினந்து
வாடியென்றழைக்குறார் பிராணநாதாசுவாமி

அரிச்சந்திரன் விருத்தம்.

அரஹரசிவனேசம்போ ஆதியேயொன்னார்வாழ்முப்
புரமெரிநகையாய்செய்ய புங்கவாமங்கைபங்கா
திரனெறிபிறழாதாண்டேன் றேவியைப்பிறியக்குற்றம்
புரிந்ததென்கண்டாயாரும் புகுந்தின்னங்காணுத்தேவே.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

மானேவருந் தாதேயென்செய்வோம் (மா)

அநுபல்ல

ஆனேனுமிக்கெதி யருந்தவமுனிசதி (மா)

சரணங்கள்.

கற்பினுயர்ந்தபெண்ணே கலங்காதிருவென்கண்ணே
சொற்பனம்பலித்தது சோதனைமிகுந்தது. (மா)

கொலைகளவுசெய்தமோ குருவைநாம்பழித்தமோ
தலையில்நமக்கிப்படி சபித்தானயனுமட (மா)

திருமூர்த்திகளானலுஞ் சித்தமுத்தரானலும்
வரும்விதியைவிலக்க வல்லமையுண்டோ. (மா)

சந்திரமதி விருத்தம்.

கற்றமாமுனிவர்க்காண்ட காசினிமுழுதுமீந்த
கொற்றவாவுமைமணந்து கொண்டநாள்முதலாயான
இற்றைநாள்வரைக்கும்நீங்கா திருந்துநான்வாழ்ந்தேனந்தோ
பிற்றைநாளென்றுகாண்பேன் பிஞ்ஞகன்செயலெவ்வாறே.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

துரையேயும்மைநா னெப்படிப்பிறிந்திருப்பேன். (து)

அனுபல்லவி.

திரைகடல்சூழ்புவியில் செங்கோல்புரிந்தவென்றன். (து)

சரணங்கள்.

முப்பிறப்பில் செய்ததோஷம் மூண்டதோ வெனக்கிவ்வேஷம்
சப்பிரமஞ்சமிதிருந்து செப்பமுத்தங்கொடுத்தவென். (து)

எரியுதையய்யோவயி றேங்குதெனதுவுயிர்
பரியாசஞ்செய்துமாந்தர் சிரியாரோவையகத்தில். (து)

நாடுநகரிழந்தோம் ராஜரீகந்துறந்தோம்
தேடும்பொருளிழந்தோஞ் செம்மலேநாஞ்சீர்குலைந்தோம். (து)

கனவிலும்பிறியாத கண்ணாளாவுமைப்பிறிந்து
இனம்பிறிந்தமான்போலே யிருந்தினிவாடுவேனோ. (து)

அரிச்சந்திரன் விருத்தம்.

நாட்டினிலுள்ளோரேச நாயகியுன்னைவிற்றேன்
ஏட்டினிலெழுத்துத்தானோ வென்றலைவிதியிதாமோ
நாட்டிகமழிந்தேனந்த தவமுனிமாய்கையால்கண்
ணாட்டியேயுன்னைநீங்க நான்முகன்விதித்திட்டானோ.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

கண்மணியினிமேல் கவலைப்படாதேயென்செய்வோம். (க)

அநுபல்லவி.

தண்மிகுமதிவதன சற்குணசிகாமணியென். (க)

சரணங்கள்.

வருந்தினாலாவதேது மலரயன்செய்தருது
அருந்தவர்தனிலுற்ற ஆசைநாயகியேயென்றன். (க)
மதிபோல்வதனமுள்ள மாதேநம்மளுக்குள்ள
விதிவசமென்றுநினை வேறேயொன்றும்நினையாதே. (க)

மகிழ்ந்திருந்ததையெண்ணி மயங்காதேமனங்குண்ணி
செகமிழந்திங்குவந்த தீவினையையினையாதே. (க)

கரும்பேகனிரசமே கற்பினுயர்ந்தற்புதமே
அரும்பேமலர்வாசமே யதிரூபமுள்ளமானே. (க)

சந்திரமதி விருத்தம்.

பொன்னனூரவரவர்தம் புண்ணியரோடும்வாழ
முன்னாற்றவஞ்செய்தற்றூர் மோசம்யானெவர்க்குச்செய்தேன்
மன்னவாவுமைப்பிறிந்து வாடவஞ்சகத்தோரேச
இன்னவாறிறைவரென்றன் தலையோட்டிலெழுதினூனே.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

பிராணநாயகா யென்னசெய்வேன் யென்னசெய்வேன்
ஐயையோ மன்னவா (பி)

தீராதசோபம் ஆறுதேதாபம்
பாராண்டகோர்மைப் பலனிதுவோவென்றன். (பி)

சித்தந்தேறுமோ வுந்தன்சிந்தை வுந்தன்சிந்தை
மாறுமோ மன்னவா (சி)

பத்தாவைப்பிறிந்த பாவியிவளென்று
குற்றஞ்சொல்வாரென்போல். கோதையரெல்லோரும். (பி)

அங்கம்வாடுதே யென்றனுவி
என்றனுவிசோருதே மன்னவா. (அ)

பங்கமில்லாத பத்தரைமாற்றுள்ள
தங்கமேமன்னர்க்குச் சிங்கமேயென்செய்வேன். (பி)

எப்போதுபார்ப்பேன் உம்மையினிமேல்
உம்மையினிமேலையய்யோ மன்னவா. (எ)

தப்பிதமில்லாத சற்குணசீலரே
முப்பிறப்பின்றோஷ மிப்படியானதோ. (பி)

புலம்பவிட்டீரே உம்மைநினைந்து
உம்மைநினைந்துவருந்தி மன்னவா. (பு)

தலம்புகழ்ந்திடுஞ் சக்கரவர்த்தியும்மை
கலந்தனைந்தசு கத்தையென்னியென்னி. (பி)

அரிச்சந்திரன் சொல்.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

மாதரசியே வருந்தாதே வருந்தாதே
யென்செய்வோ மென்னுசை. (மா)

மாதர்க்கரசியே மதிதயன்பெற்ற
நீதில்லாதசெழுஞ் சுடரோநற்றவ. (மா)

கண்ணேயென்செய்வோம் எந்தன்காதல்
எந்தன்காதற்கிசைந்த யென்னுசை. (க)

பெண்ணேயுன்றனைப் பிறிந்திடும்படி
அய்யனல்பரஞ்சோதி தன்னருளோவென்றன். (மா)

சண்டாளனுமேன் பிந்தத்தரணி
பிந்தத்தரணி மீதிலேகொடிய. (ச)

கொண்டபெண்ணைவிற்ற வண்டனிவனென்று
கண்டோர்நகைத்திட காலம்வந்ததென்றன். (மா)

மைவிழிமானே அதிமதுர
அதிமதுரச்செந்தேனே யென்னுசை. (மை)

மெய்பதறுதே மேனியும்சோருதே
ஐயய்யோநானென்ன செய்குவேனெய்குவேன். (மா)

சந்திரமதி விருத்தம்.

திருவணைமீதிற்பாதஞ் சேர்ந்திடில்வருந்துமென்றே
மருமலிகரத்திலேந்தி மடிதனில்வைத்துநோக்கும்
வரதனேபிரிவையெண்ணி வருந்திடுலாவதென்னும்
குருவடிமனத்துட்கொண்டால் குறைவெலாமகன்றுபோமே

இராகம்-காப்பி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

மன்னவாஎன்பிராணநாதா வந்தவினைக்கென்னசெய்வோம்
வந்தவினைக்கென்ன செய்வோமன்னவா
அந்தணர்க்கடிமையாகினேனையோ வின்னுள். (மா)

கொஞ்சவயதினிலும்மைக் கூடியணைந்திட்டவென்னை
கூடியணைந்திட்ட குணநிதியே
வாடியான்புலம்வந்தகெதியோ வின்னாள் (ம)

செப்புமொருதவருத செம்மலேயுன்னைப்பிரிய
பிரியவயிறு மெரியுதையையோ
சிரியாரோபரியாசமா யின்னாள். (ம)

வெள்ளாட்டிநீவாடியென்று வேதியரழைக்குகின்றார்
வேதியரழைக்க விட்டதேவிதி
வாதனைகேட்டிதோமபங்குறேன்மதி யின்னாள். (ம)

இராகம்-காப்பி-தாளம்-ஆதி.

அரிச்சந்திரன் தரு

கண்ணிகள்.

அன்னமேயுன்னைப்பிரிய வயன்வகுத்தவிதியோ
விதியோமுனிவர் சதியோஅறியேன்
பதியிழந்துசோம் பரதேசிபோலபெண்ணே (அ)

வஞ்சகன்கொடியதுஷ்டன் மாபாவியானேனையோ
மாபாவிமிகுந்த நீபாவியாகினேன்
ஆவிசோருதென்ற னரும்பொருளேபெண்ணே. (அ)

மதிதயனற்றவத்தில் வந்துதித்தகண்மணியே
கண்மணியென்மனம் பூண்ணுகுதையையோ
தண்மிகும்வதனத் தையலென்றன்பெண்ணே. (அ)

வஞ்சியேயென்காதலுற்ற ரஞ்சிதகுணநிதியே
ரஞ்சிதமிகுந்த கொஞ்சுங்கிளியே
தஞ்சமிலாப்பாவி நெஞ்சந்தேறுமோபெண்ணே. (அ)

சந்திரமதிசொல் தரு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

சாமியென்னுசைக்கிசைந்தமன்னு மனச்
சஞ்சலத்தைவிடும். (சா)

பூமிபுகழ்ந்திடும் புண்யனேகண்யனே
புத்தியிலு யர்ந்தமெருத்த உத்தமனே சத்யமுள்ள. (சா)

வேதனைமைத்தபடியிருக்க விளி
வேறென்றும்வாராது (வே)

வாதனைகொள்வது நீதமுண்டோசாது
மணவாளனே குலசீலனே துரைமன்னர்கள்பலிதாளனே: (சா)

வாழ்வதுநிச்சயமோகருது மாந்தர்
மன்னிலெங்ஙனேக்கும் (வா)

தாழ்வுவந்தால்மனந் தளர்வரோகனம்
ததியேகுறு நிதியேயுயர் பதியேயிதை மதியாமலே (சா)

பெண்டுபிள்ளையுறவோர்சதமோ வென்றன்
பிராணேசாவெப்போதும் (பெ)
கண்டிருந்து கவலைமிகுந்த
காரணமேன் றூர்புனைய மார்பழகா தீரமுள்ள. (சா)

அரிச்சந்திரன்சொல் தரு.

இராகம்-காப்பி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஐயையோபாவி யாகினேன்றேவி. (ஐ)

அநுபல்லவி.

கையுதென்மனந் தையலேயிந்நாள்
வையகமேச வந்ததையோகலாம். (ஐ)

சரணங்கள்.

கொஞ்சயகிளி ரஞ்சிதமொழி
என்செய்வோமினி யெப்பிறப்பிற்காண்பேன் (ஐ)

தந்தையேயெனறு மைந்தனழுக
வந்ததேவிதி · மாமுனிவன்சதி. (ஐ)

ஆரிடஞ்செல்வே னஃனிதஞ்சொல்வேன்
பாரினிலுள்ளோர் பழுத்திடுவாரே. (ஐ)

சந்திரமதிசொல் தரு.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

எப்படியுமைப்பிரிவே னென்றன்மணவாளா கண்ணாளா. (எ)

அநுபல்லவி.

இப்படியுமென்றலையி லெழுதினனோ பிர்மன்கர்மம். (எ)

சரணங்கள்.

பார்த்தோர்நகைத்திடாரோ பரியாசஞ்செய்திடாரோ
ஏற்குமோவிப்புவியி னென்னசெய்வேனோ குணவானே. (எ)

குலைபதருதேயின்பக் கொற்றவாவிதென்னதுன்பம்
கலைபிரிந்தமான்போலே கதறவோதே நின்றுவாடி. (எ)

கையிற்கிளிவளர்த்துக் கடம்பூனைக்கிரைதந்த
செய்கைபோலாக்கிவிட்டீர் தேவரீர்பொற்பாதா பிராணநாதா.

அரிச்சந்திரன் தரு.

இராகம்-காப்பி-தாளம்-சாப்பு.

பல்லவி.

கண்மணியுன்மனங் கலங்காதேயென்னசெய்வோம் (க)

அநுபல்லவி.

பண்ணவர்புகழுங்காசி பரமன்பதத்தைநேசி
பெண்ணேயெனக்குகந்த பேடைமயிலே. (க)

சரணங்கள்.

ஆரைவிடுஞ்சனிகோரம் ஐயோவிதிலென்னசாரம்
தாரைவிட்டழுகவேண்டாம் தங்கமேகேளங்கமுள்ள. (க)

இருந்தோம்சிலதுகாலம் ஏற்கையுடனிக்காலம்
வருந்தும்படிவிதிவந்தால் மாட்டேனென்றாலதுபோமோ. (க)

மறையவரோவெகுகோபி வாவென்றழைக்குறார்கூவி
பிறைபோல்நுதலழகிப் பேதிக்கலாமோவுன்னாவி. (க)

இராஜன் வசனம்.

கண்மணி யினிநாம்வருந்துவதில் பிரயோசனமில்லை மறையவரோ மகாகோபியாயிருக்கின்றார் அவர்மனம் நோகாமல் பின்சென்று அவர்சொல்லக்கூடிய வேலைகளைச் செய்துகொண்டுசத்தியத்துக்கு பங்கமில்லாமல் பாதுகாத்துக்கொண்டு வரவேண்டியது பெண்ணே சந்திரமதி.

சந்திரமதி வசனம்.

பிராணநாதா சண்டாளியாகிய யான்தங்களைவிட்டுப் பிறிந்து சகித்திருக்கவா போகிறேன் என்செய்வேன்.

காலகண்டன் வசனம்.

சந்தி யென்ன காலதாமதஞ்செய்கின்றாய் ஒருவார்த்தை சொல்லிக்கொண்டு வருகிறதற்கு புருஷனுடனேகொஞ்சிக்கொண்டே யிருக்கிறாய் வாடிவா.

அரிச்சந்திரனுக்கும் சந்திரமதிக்கும் தர்க்கம்.

இராகம்-சாமா-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

அன்னமேநான்தொட்ட சொர்ணமேயினிமெத்த
துன்பப்படப்போமோ அறமாமோ தாமமோ
ஆர்வனே மனந்தேர்வனே மனந்தேர்வனே
தேர்வனே தேர்வனே

சந்திரமதி சொல்.

ஆகமவேதயோகவசீகர போககுணநிதியே
அணிமதியே மணிரதியே
ஆசையே குயிலோசையே குயிலோசையே
ஓசையே ஓசையே

அரிச்சந்திரன் சொல்.

என்னைமணந்துமே யுன்னைப்பெற்றதந்தை
அன்னைதனைமறந்தாய் யெதுவறிந்தாய்மாதுதெரிந்தாய்
ஏத்துவாய்சிவம் போற்றுவாய்
சிவம்போற்றுவாய் போற்றுவாய் போற்றுவாய்

சந்திரமதிசொல்

அண்டமெலாம்புகழ் தண்டபராவென்னைக்
கொண்டமனோகரனே அதிபரனேமநிதரனே
ஆளனேமணவாளனே மணவாளனே
வாளனே வாளனே

அரிச்சந்திரன் சொல்.

பத்தினிமார்களில் முத்தியாவைபே
தித்திக்குந்தேன்மொழியே பதியளியேரதிக்கிளியே
பாவையே யென்றன்பாவையே யென்றன்பாவையே
பாவையே பாவையே

சந்திரமதி வசனம்.

பிராணநாதா யான்தங்களை விட்டு யென்னமாய் பிறிந்திருப்பேன் மன்னவா.

அரிச்சந்திரன் வசனம்.

சந்திரமதி உன்னையான் யெந்தகாலத்தில் பார்க்கப்போகிறேன் கொடியசண்டாளனுனேன் பிரணசகி.

காலகண்டன் வசனம்.

அடா கிச்சான் யென்னடா நீயும் சந்திகூடவே திரிகுறாய் நீவாடா கிச்சான்.

லோகிதன் விருத்தம்.

சிந்தைதான்கலங்கவென்னைச் சென்னியிற்கொட்டியிந்த
அந்தணரழைக்குகின்று ரகத்துக்குவரவேசொல்லி
எந்தனைவிற்றதுண்டோ வேந்தலேதாயாரோடு
தந்தையேவிபரமாகத் தயவுசெய்தருள்வீரையா.

இராகம்-தோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

எந்தனையும்விற்றதுண்டோ வெந்தாலேமறையவர்க்கு. (எ)

அநுபல்லவி.

சிந்தைகலங்கியென்னை சென்னிதனிற்கொட்டுகின்றார். (எ)

சரணங்கள்

அன்னையுடனென்னைக்கூவி யழைக்குறார்வெகுகோபி
சொன்னவேலைசெய்யாவிடில் தொந்திரவுசெய்வாரையோ. (எ)

காலனைப்போலவேநின்று கைதனில்பிரம்புங்கொண்டு
பாலனென்றெனைச்சற்றேனும் பாராமலடிக்குகின்றார். (எ)

பிள்ளையைவளர்த்துப்பூனைக் கிரைகொடுத்தபாவனைபோல்
வள்ளலேமறையோரிடம் மைந்தனைக்காட்டிக்கொடாதீர். (எ)

லோகிதன் வசனம்.

பிதா என்னையுங் காலகண்டையார் வரும்படியாக யிழுக்கி ன்றார் மாதாவுடன் என்னையும் விற்றதுண்டோ.

இராசன் வசனம்

கண்மணி உன்மாதாவை விற்றேனேதவிர உன்னையர்ங்கி ரயஞ்செய்யவில்லை யோசிக்காதடா பாதகா.

காலகண்டன் வசனம்.

அரிச்சந்திரா நன்றாயிருக்கின்றது வெகுயோக்கியதை செ ய்துவிட்டாய் ஒருஸ்திரீக்கிற்குபிள்ளையைவிற்கவில்லையென்று ல்ஙானேவந்துபெண்டீரை விற்கவில்லையென்று சொல்லுவாய் ஒ ருபசுவைக் கிரயத்துக்கு வாங்கினால் கன்றுக்கு வேறேகிரயமு ண்டோ யானையைவாங்கினா லங்குசத்துக்குகிரயமுண்டோ பல நேர்த்தி அப்பாபோறு முன் முறிச்சீட்டைப்பெற்றுக் கொண்டு திரவியத்தைக்கொடுத்துவிடு அரிச்சந்திரா.

அரிச்சந்திரன் வசனம்.

காலகாண்டதிருநேத்திரபகவானே தாங்கள்மனம்நோகவே ண்டாம்யென்னுடைய புத்திரனையும் கிரயத்தாலே சேர்த்துக் கொள்ளுங்கள்

காலகண்டன் வசனம்.

அடாகிச்சான்வாடா சும்மாவெருனே நின்றுகொண்டிருக் குறாய் சந்தி யென்ன சும்மாதானே சொல்லிக்கொள்ளுகிறதுநே க்குகாலதாமிதமாகிறது சந்திபாவந்தனஞ்செய்யபோகவேணும் வா.

லோகிதன் வசனம்.

பிதா வென்னைக்காண்பதற் கெவ்வளவுநாளோ தவஞ்செய்துபெற்று வளர்த்து மறையோர்கையி லொப்பிவிக்கவா பெற்றீர் நானிந்தக் கதியடையவாபிறந்தேன் மறையோரென்செய்வாரோ தெரியாது.

அரிச்சந்திரன் விருத்தம்.

ஐயையோபிரமதேவ னமைத்திட்டபடியேபாலா
வையகமாளவென்று வருந்திநானுன்னைப்பெற்றேன்
மெய்யதுபதறவின்று வேதியரிடத்தில்விற்றேன்
செய்தவக்குறையோவெந்தச் சென்மத்திலுனைக்காண்பேண்டா.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

கொடும்பாவியானேனடா குணநிதியேமணியே. (கொ)

அநுபல்லவி.

கடுஞ்சுனையுங் கடந்துவந்தாயென்கூட
அடிமையாகவேகாசி யந்தணர்க்குன்றனைவிற்ற. (கொ)

சரணங்கள்.

இக்கதிக்குள்ளாகவேதா னென்வயிற்றினீபிறந்தாய்
கைக்குள்வளர்கிளி கரும்பின்ரசமொழியே. (கொ)

திரைகடல்சூழ்புவியைச் செங்கோல்செலுத்துமுன்னை
மறையவரிடம்விற்க வளர்த்தேனோவிதுவரை. (கொ)

வருந்தியுன்றனைப்பெற்ற வயிறெரியுதேமெத்த
அருந்தவமுனிசதி யானதிப்படிக்கெதி. (கொ)

எப்பிறப்பிற்காண்பேனுனை யென்னருந்தவப்பயனே
செப்புமொழிதவறுத செல்வமேயுன்றனைவிற்று. (கொ)

லோகிதன் விருத்தம்.

தாலமன்னவர்கள்போற்றுந் தந்தையேயருமையாகப்
பாலனுமென்னைப்பெற்று பன்புடன்வளர்த்தெடுத்த
காலமோ விஸ்வாமித்திர கடனுக்காயொப்பிவித்தீர்
மேலினித்துன்பமுண்டோ விட்டதோவுமக்குப்பாரம்.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

தந்தையேவருந்தவேண்டாந் தலைவிதிக்கென்னசெய்வோம். ()

அநுபல்லவி.

கந்தனைப்பயின்றமுக்கண் கருணைநமக்கிப்படி
வந்ததேயினிமேற்சற்றும் வருந்தலாகுமோவென்றன். (தந்)

சரணங்கள்.

அவரவர்செய்தகர்ம மவரவரனுபவிக்கத்
தவறுமோவொருநாளுந் தரணிதனிலெந்நாளும் (தந்)

மாதாபிதாவின்றுன்ப மைந்தனடைவதேயின்பம்
வேதாகமத்திவீதி விளம்புவதல்லோகியாதி. (தந்)

காயம்நிலையிராது கர்மவினை தவறாது
தாயுடன்பிள்ளைக்கன்று தலைவிதிப்படியின்று. (தந்)

பேரிளமையோடின்பம் பிணிமூப்புடன்சாக்காடு
ஆருங்கருவிலய னமைத்தபடியேயாகும். (தந்)

லோகிதன் வசனம்.

பிதா இனிவிசனப்படுவதிலென்னபிரயோசனம் நான்பெற்றுவந்த தவப்பய னிதுவே யென் றுயாருக்குத்துணையாக யான் செல்கின்றேன் தாங்கள் மனத்தைத்திடப்படுத்துக் கொண்டிருக்கவேண்டியது.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

அருந்தவஞ்செய்துபெற்ற வடியன்போய்வருகிறே
னனுப்பும்விடைகொடுத்தே னையாவே
வருந்தவேண்டாமெனது மாதாவுடன்போய்வாறேன்
மலரடியைப்பணிந்தே னையாவே

தேவரீர்பொற்சரணத்தைச் சிறியேனினிமேலெந்தச்
சென்மத்திற்காணப்போகிறே னையாவே
பூவுலகமாளவென்னைப் புகழ்ச்சியுடன்வளர்த்துப்
பூசுரர்க்கடிமைசெய்தீ ரையாவே

விதிவசந்தன்னையாரும் விலக்கமுடியாதென்று
வேதம்புகழுமின் தறையாவே
மதியைத்திடப்படுத்தி மயங்காதிருக்கவேண்டும்
மறையவர்பின்னூர்போரே னையாவே

லோகிதன் வசனம்.

பிதா தங்களுடைய பாதாரவிந்தத்தைப் பணிந்தேன் போ)ய்வருகிறேன்.

அரிச்சந்திரன் வசனம்.

லோகிதா மகாராஜனுக யாதொரு குறைவன்றிப்போய்வருவாய் கண்மணி.

சந்திரமதி மகனைப்பார்த்துச் சொல்கிற தரு.

இராகம்-தோடி-தாளம்-ஆதி

பாலகனேலோகிதனே பரதேசியானேமடா
காலகண்டர்வீடுசென்று கஷ்டப்படப்போரோமடா. (பா)

சீலமுள்ளநாடுசெல்வஞ் சீமையரசுமிழந்து
ஞாலம்புகழன்றந்தையென் நாயகரையும்பிரிந்து. (பா)

பிடிபட்டபறவைபோலே பேதலித்துநாமண்மேலே
கடினமாய்வேலைசெய்ய கர்த்தனமைத்தானிக்காலே (பா)

வடியிட்டசெழுந்தனே மாதவத்திலுதித்தோனே
அடியற்றமரமானே மாறடுத்தகுளமானேம். (பா)

மதியில்லாவானமானேம் வாசமில்லாமலரானேம்
கெதியில்லாப்பாவியாகக் கிடைத்தவிதிநாம்நோக. (பா)

தாதியர்கள்பணிசெய்ய சந்தோஷமடைந்ததும்போய்
வேதியாகத்திற்சென்றுவேலைசெய்யப்போரோமின்று (பா)

இராகம்-காப்பி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

போய்வாரேன்பிராணநாதா பொங்குஞ்செந்தாமரைப்பாதா
மாயமுனிசோதனையால் தூயமறையோர்பின்னாலே (போ)

பூவுலகையாண்டமன்னா போரேன்பரதேசியாகி
காவலரேயும்மையினிக் காண்பேனோகொடியபாவி. (போ)

காலகெதியைநினைத்து கலங்கிமனதுநொந்து
பாலகனைக்கூட்டியிந்தா காலகண்டர்வீடுதேடிப். (போ)

முப்பிறப்பிற்செய்ததோஷ மூண்டதேநமக்கிவ்வேஷம்
எப்பிறப்பிற்காண்பேனையோ யிவ்விதிக்கோ பெண்பிறந்தேன்.

அரிச்சந்திரன் விருத்தம்.

மைவிழிமானேநன்றாய் வடியிட்டசெழுஞ்செந்தேனே
வையலர்க்கரசேயுன்னைத்தான்பிறிந்திடுவோமென்றால்
மெய்யதுவெவ்வேறாகி மேனியுஞ்சோருதென்ன
செய்குவேனையோவெந்தச் சென்மத்திலினிக்காண்பேனோ.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-சாப்பு.

பல்லவி.

போராயோபிறிந்து போராயோபிறிந்து
பொற்கொடியாளேயென்னைப் புலம்பும்படிவிட்டுப். (போ)

அநுபல்லவி.

நீராதெய்துசோபம் தேவியுன்பராதாபம்
பாராதோபரசிவம் பஞ்சைபோலானேனீ. (போ)

சரணங்கள்.

வடியிட்டசெழுந்தேனே மைவிழிமடமானே
பிடிப்பட்டபறவைபோல் பெண்ணேயென்னைவிட்டு. (போ).

நெஞ்சந்தேறுமோவுன்ற னினைவுமாறுமோவென்றன்
வஞ்சியேகிஞ்சுகமே கொஞ்சுங்கிளியேநீ. (போ)

அருந்தவமுனிசதி யானதிப்படிக்கெதி
வருந்தவென்றனைவிட்டு மறையோர்க்கடிமையாய் (போ)

அரிச்சந்திரன் வசனம்.

கண்மணி யென் ஐம்புலன்களையு மெவ்வளவோ திடப்படுத்தியும் துக்கமேலாக்கிக்கொண்டே யிருக்கிறது உன்னை யெவ்வண்ணம் பிறிந்திருப்பேன் பிராணசகி.

சந்திரமதி வசனம்.

பிராணேசா யான்சென்று வருகிறேன் நீவிடைகொடுக்க வேண்டும்.

அரிச்சந்திரன் வசனம்.

பிராணநாயகி நல்லது இப்படிவருமென்று அறியேன்.

இராகம்-சாமா-தாளம்-ரூபகம்:

சந்திரமதி சொல்கிற.

கண்ணிகள்.

இன்னமொருதர　　மன்னவுன்முகத்தை
கண்ணால்பார்த்துப்　　போரேன்
இனிவாரேன் கனிதேரேன்　　எந்தலேபறவா
எந்தலேமறவாஎந்தலே　　யேந்தலேயேந்தலே.

அரிச்சந்திரன் சொல்.

வாக்கு லேக்கவு　　யோக்கியனுக்கவும்
பாக்கியம்நீயளித்தாய் வரந்தரித்தாய் கரங்குவித்தாய்
வாழிநீ பிராணதோழிநீ　　பிராணதோழிநீ
பிராணதோழிநீ　　தோழிநீ தோழிநீ

சந்திரமதிசொல்.

சத்தியென்கரத்தைப்　　பற்றியகைக்கொரு
முத்தமிட்டுப்போவேன்　　நாடித்தர்வேன்கூடிப்போவேன்
நாதனேபொற்பாதனே　　பொற்பாதனே
பொற்பாதனே　　பாதனே பானே

அரிச்சந்திரன் சொல்.

சின்னகுமாரனே　　மன்னிச்சுகமாக
அன்னமேநீகாப்பாய்　　சுருசுருப்பாய்பேருசிறப்பாய்
செல்லுவாய்சுபம்　　செல்லுவாய்சுபம்
செல்லுவாய் செல்லுவாய்　　செல்லுவாய்.

சந்திரமதி சொல்.

ஆதுலர்மாதவர் வோதுமேவரேத்திடும்
பாதமதைப்பணிந்தேனடிபணிந்தேன் மிடிகுனிந்தேன்
அடியாள்போய்வாரேன் இதோபோய்வாரேன்
இதோபோய்வாரேன் போய்வாரேன் . போய்வாரேன்.

சந்திரமதி விருத்தம்.

பூவணைமிதிக்கப்பாதம் பொருந்திடமுடியாதென்று
ஆவலாய்க்கரத்திலேந்தி யழகுள்ளமார்பிற்சேர்த்த
பாவமோமகனேடென்னைப் பஞ்சைபோலலையவிட்டீர்
தேவரீர்பாதந்தன்னைத் தெரிசிப்பதெந்தநாளோ.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

மன்னவரேபோய்வாரேன் மலரடியைப்பணிந்தேனாதா
வருந்தாமல்விடைதாரும் மறையோர்பின்செல்லவேபொற்பாதா
இன்றுகண்டபாதத்தை யென்றுபூசிப்பேன்கொடும்பாவி
எப்படிசகித்தினி இருந்திடப்போரேனெனதாவி
அருமைத்துரையேயென்றன் னாசைக்கிசைந்தமணவாளா
அடியாள்நடக்கும்புத்தி யனுக்கிரகஞ்செய்யுங்குணசீலா
கட்டியணைந்தவென்றன் கண்மணியேபிராணநேசா
கர்மியான்போரேனென்று கலங்காதீர்மனஞ்சற்றும்ராசா
சத்தியமேபெரிது தரணிவாழ்வுபொய்யாகும்சாமி
கையலாள்போரேனென்று தயக்காதிருங்கள்குணநேமி
ஆதிபரமனரு ளானதிப்படிநமக்கையோ
அஞ்சவேண்டாமினிமே லடியாள்போகிறேனிதோமெய்யா

சந்திரமதி வசனம்.

பிராணேசா இதோ மறையவரழைக்குனென்றார் அடியாளுக்கு விடைகொடுக்கவேண்டும் நாதா.

அரிச்சந்திரன் விருத்தம்.

சத்தியமேபெரிதல்லா லுலகவாழ்க்கை
　சதமென்றேயென்றுவது தகுமோவென்றன்
புத்திதனக்கிசைந்தவெகு பொறுமையுள்ள
　பொற்கொடியேகற்பழகி புகழ்ச்சியோங்கும்
பத்தினியேவருந்தாதே யினிமேலாகப்
　பாலனுக்கோராதரவாய் வார்த்தைசொல்லி
சித்தமதைத்திடப்படுத்தி மறையோர்பின்னுல்
　செல்லுவாய்த் துயரமதைத் தள்ளுவாயே.

இராகம்-காப்பி-தாளம்-ஆதி.

பல்லவி.

மனம்வருந்தாமல்　　மானேபோய்வா

அநுபல்லவி.

தனமேயென்ற　　னனமேயுன்றன் (மன)

சரணங்கள்.

வாழ்வதுமிசமாமோ　　வருவினை தவறுமோ
தாழ்வுவந்தென்றெண்ணாதே　　யூழ்வினை தவறாதே (மன)

தாய்தந்தைசதமாமோ　　தமருறவோர்சதமோ
மாய்கையென்றஞாயந்தெரியாதோ வென்றன்சேயிழையுன் ()

பெண்டுபிள்ளையுறவோ　　பிராணனுக்குடலுறவோ
கண்டுந்துயர்கொண்டுநிற்பதுண்டோ விழிவண்டோவுன்றன் ()

ஜெகவாழ்வுபொய்யென்றெண்ணு　　சிந்தையைத்திடபண்ணு
அகநொந்துமிகவாடாதே　　சுகமாகநயமகளேடுவுன் (மன)

பரமன்செயலல்லாது　　பைங்கிளியேவேறேது
வருமோதுயர்தருவோயிது　　சருமவினை திருநேருன்றன் (மன)

பொது விருத்தம்.

மங்கைதன்கழுத்தைக்கட்டி மன்னவனழவுமந்த
நங்கையும்வாய்விட்டார்த்தாள் நானிலம்வாய்விட்டார்க்க
செங்கையைமறையோர்நீக்கித் திருவனுடன்னைப்பற்றி
அங்கசமிழுக்கவேங்கி அலறியேகீழ்வீழ்ந்தாளே.

அரிச்சந்திரன் வசனம்.

கண்மணி நீ விசனப்படுவது யென்னபிரயோசனம் நமதுசத்தியத்தைக் காப்பாற்றவேண்டியது முக்கியமானகடமை மறையவர்கருத்துச்சிசைந்த வேலைகளைசெய்து நமதுபாலகனுக் காதரவானவார்த்தைகளைச்சொல்லி காலங்கழித்து வாபெண்ணே.

சந்திரமதி வசனம்.

பிராணேசா போய்வருகின்றேன்.

அரிச்சந்திரன் வசனம்.

கண்மணி நல்லது போய்வா.

லோகிதன் வசனம்.

பிதா நமஸ்காரம் போய்வருகின்றேன்.

அரிச்சந்திரன் வசனம்.

அடாபாலகா நீ மகாராஜனுகப் போய்வரவேண்டியது.

சந்திரமதி இராஜனைவிட்டு பிறிந்துபோகும்போது
புலம்பிக்கொண்டு சொல்கிற

விருத்தம்.

பொற்புறுமயிலேமானே பூவையேகிளியேயென்று
கற்பனையிட்டழைத்துக் கனிவுடன்மடிமேல்வைத்த
அற்புதமறந்துமன்ன னந்தனர்க்கடிமைசெய்தார்
சற்பனைதானோவென்ன சதுர்மறையவர்பின்போரேன்.

இராகம்-புன்னகவராளி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

மதிபோல்முகமிலங்க மாதுயென்மனங்கலங்க
விதிவசத்தைஞனினைந்து வேதியர்பின்போரேனையோ

அந்தணரேசரணமையா வாற்றுக்குப்போவோவையா
தந்துவிடும்நீர்சுமையைச் சண்டாளிநான்கொண்டுவாரேன்

பதியுமாசிழந்தேன் பத்தாவையும்நான்பிறிந்தேன்
அதிபாவியாதுனனின்று அந்தணர்பின்போரேனையோ

மண்டலத்திற்கீர்த்தியாக வாழ்ந்திருந்தேன் கேர்த்தியாக
கொண்டகணவரைத்தோற்றுக் கொடும்பாவிபோரேனையா

வாரியெடுத்துமகனை மார்போடேதானணைத்து
சோரவிட்டகன்னிரோடுந் துன்பப்படப்போரேனையோ

வாடாவென்கண்மணியே மன்னன்பெற்றபொற்பணியே
நாடாள்வாயென்றிருந்தேன் நற்றவப்பலனிதுவோ

ஆருமில்லாப்பரதேசி யானுமிந்தக்காசிவந்து
சீருலைந்துமறையோரிடஞ் சிறுமைப்படப்போரோமடா

தொல்லுலகிலென்னைப்போலே துரோகியுண்டோபெண்களிலே
எல்லாஞ்சிவன்செயலென்றெண்ணிஏங்குறேன்மறையோர்பின்னே

பொது வசனம்.

இவ்விதமாகச் சந்திரமதியும் லோகிதாசனும் காலகண்டர் வீட்டுக்குப்போய் வேலைகளைச் செய்துகொண்டிருக்குங் காலையில் அரிச்சந்திரன் புலம்புகிறவிதங்காண்க.

அரிச் சந்திரன்

புலம்புகிறபாகம்

அரிச்சந்திரன் விருத்தம்

மாலையிட்டநாள்முதலா யொருநாளேனு
 மனைவியையான் பிரிந்ததில்லை மாதந்தோறுங்
காலபல னுள்மூன்றே யாகு மல்லாற்
 கனவிலும் பிறிந்ததில்லை ரந்தோ வந்தோ
பாலகனில் லாதபெரும்பாவி யானேன்
 பாருலகோர் நகைக்கவுடம் பெடுத்தே னென்றன்
ஆலமுண்ட கண்டாவுன் னருளு மீதோ
 ஐயையோ வென்றலையி லெழுதிட்டாயோ.

இராகம்-முகாரி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

கனவிலும்பிறியாத காதலியைப்பிறிந்தேன் சிவமே-யிந்தக்
காசினியாளவந்த தேவதாசனைவிற்றேன் சிவமே



இனம்பிரிந்தமான்போல ஏங்கிநான்வாடுறேன் சிவமே-அயன்
இப்படியென்றலையிலெழுதினவிதிதானோ சிவமே

கொண்டபெண்ணைவிற்றசண்டாளனென்பாரே சிவமே-இந்தக்
கொடுமைக்கினியென்செய்வேன்குலைகள்பதறுதே சிவமே

மண்டலமுழுதையுமகிழ்ச்சியுடனேயாண்டேன் சிவமே-என்னை
மாந்தர்கள்வசைபேசவந்ததெனக்கிவ்விதி சிவமே

நீதிதவறினன்கெட்டேரேஞ்செய்தேனோ சிவமே-இந்த
நிந்தனைக்குள்ளாகிநொந்துதவிக்கிறேன் சிவமே

அருதிகளைக்கண்டு அறம்செய்யாதிருந்தேனோ சிவமே-இந்த
ஆருமற்றபரதேசிபோலாகினேன் சிவமே

இராகம்-ஆனந்தபைரவி-ஆதி.

பல்லவி.

ஜெகதீசா யென்னசெய்குவேன். (ஜெ)

அநுபல்லவி.

இகபரந்தனி லுயிர்க்குயிராய்நிறைந்த (ஜெ)

சரணங்கள்.

தனியானேனையோ பாரும் தஞ்சமில்லையெந்தனைக்காரும்
அனியாயமென்னசெய்தே னடியேனிதுவரை
ஐயனேமெய்யனேமழுக் கையனைநையுதென்மனம் (ஜெ)

ஆசைமனவியுடன் தேவதாசனையுமிழந்தேன்
தேசமுடனரசு செல்வந்தனையிழந்து
திக்கில்லாதகொடும்பாவி யிக்கெதிக்குள்ளானேனையோ. (ஜெ)

எங்கேயினிச்செல்வேன்பாவி யெவ்வண்ணம்நானுய்குவேன்
பங்கப்படவோவிந்நாள் படைத்தானயனுக்குமுன்னாள்
பாபமோசாபமோமுனி கோபமோஅறியேயினினி. (ஜெ)

மந்திரி விருத்தம்

கதிர்வடிவேலான்சிந்தை கலங்கியநிலமைகண்டு
மதிமிகுமாசேயிந்த வகையுளந்தியங்கலாமோ
விதிவழிக்கென்னசெய்வோம் வேறுமோர்வழிதானுண்டோ
சதியிதுசனியன்செய்கை தனைவிலக்கிடவும்போமோ.

மேற்படி வசனம்.

அரசே யிவ்விதம் தாங்கள் மயங்குவது சரியல்ல யேதோ வேதனையைப்பு இப்படிமுடியவேண்டியதால் முடிந்துவிட்டது இனிமனந்தேறுதல் செய்யவேண்டும் அரசே.

அரிச்சந்திரன் விருத்தம்.

மன்னவன் மைச்சாற்றேறி மாமுனிநாதமேரகாம்
சொன்னதோர்கடனுக்குள்ளதொகைபெற்றுக்கொண்டீரன்றே
யின்னமும்பாக்கியுண்டோ விட்சணைமுனிபாற்சென்று
அவ்வளவுங்கடன்றந்தாலென் றறைகுவீரறைகுவீரே.

மேற்படி வசனம்.

சுவாமி நட்சேத்திரபகவானே விஸ்வாமித்திர சுவாமிகளுக்குச் செல்லவேண்டிய திரவியம் வந்துவிட்டதாகக் கொண்டு போய்க் கொடுத்துவிடுங்கள்.

நட்சேத்திரன் விருத்தம்.

மருவலர்க்கிடியேறன்ன மன்னனேமுனிக்குச்செம்பொன்
றருவதாய்ச்சொல்லிவந்த தவினைக்குட்தந்தாய்நன்றே
பெருவனந்தன்னிலுன்றன் பின்னிடரனேகம்பட்டு
வருந்தினாய்ந்தேன்கூலி வாங்கிப்பின்னகறுவேனே.

மேற்படி வசனம்.

சந்திரா நன்றாயிருக்கிறது உன்னுடன் காடுமலைவனம்வனாந்திரம் ஆறுகுளம் இதுகளிலெல்லாம் நாற்பத்தெட்டுநாள் திரிந்தேனல்லவா அதற்கு நீ கொடுத்தபொன் தாருசம்பளமாச்சுது விஸ்வாமித்திர சுவாமிகளுக்கு கொடுக்கவேண்டிய திரவியத்தைக்கொடடா.

அரிச்சந்திரன் விருத்தம்.

தனக்குநேரில்லாஞாயத் தவமுனிகடனைத்தீர்த்தேன்
எனக்குநீயுதவியாக விடர்பலவடைந்துவந்தாய்
உனக்கும்பொன்னிவேனஞ்சே னுண்மையாய்கையிலில்லை
வினைப்பயன்தானேவென்றன் வேதியாசரணஞ்செய்தேன்.

மேற்படி வசனம்.

சுவாமி நட்சேத்திரபுண்ணியவானே விஸ்வாமித்திருக்கு கொடுத்த திரவியத்தை தேவரீருக்கு வைத்துக்கொள்ளவேண்

டாம் இந்தத்திரவியத்தை முனிவருக்குக்கொண்டுபோய்க் கொடுத்துவிடுங்கள் தங்களுடைய தாருசம்பளத்தை மன்னிப்பு செய்யவேணும் வந்தனஞ்செய்கின்றேன் சுவாமி.

நட்சேத்திரன் வசனம்.

சந்திரா இந்தக்கள்ளக்கும்பிடெல்லாம் நேக்குத்தெரியும் இதினாலென்னுடைய திரவியத்தைவிடுவேனோ உன் ஜாலவித்தையெல்லாமறிவேன் பொன்கொடுக்கிறதாயிருந்தால்கொடு இல்லாவிடிலொருபொய் சொல்லிவிடடா அரிச்சந்திரா.

அரிச்சந்திரன் விருத்தம்

ஆழிசூழுலகமழிந்துவிட்டாலு மாரணமறைகள்பொய்த்தாலும்
ஏழுவாரிதியுமீரமில்லாம லெரிதழலுறவறண்டாலும்
ஊழிகாலத்திலொருமுதலான வுருத்திரபசுபதியருளால் [னே.
பாழிடலழிந்திட்டாலுஞ்சற்றேனும் பாவிநான்பொய்சொல்லிடே

இராகம்-கமாஸ்-தாளம்-சாப்பு.

பல்லவி.

என்மேலித்தனைகோபமா தாருக்காக. (எ)

அநுபல்லவி.

நின்னையந்தவறினா னெட்டேரஞ்செய்ததுண்டோ
உன்னடியிணைதஞ்ச முற்றகெதிவேறில்லை. (எ)

சரணங்கள்.

உள்ளபொருளனைத்தும் வள்ளல்முனிக்களித்தேன்
பிள்ளைமனைவிதன்னை பெருங்கடனாலேவிற்றேன். (எ.)

அடியேனையன்றிவேறே ஐயாபொருளிங்கேது
குடியாயென்றனைவிலை கொள்வீரையையோதுன்பம். (எ)

அரிச்சந்திரன் வசனம்.

சுவாமி தங்களையறியாமல் வேறேபொருளேது கட்டாயத் தாரு சம்பளம்வேணுமென்றால் என்னையாவது கிரயஞ்செய்து தருகிறேன்.

நட்சேத்திரன் வசனம்.

சந்திரா பெண்சாதியையும் பிள்ளையையும் விற்றுவிட்டாய் நீ மட்டுந் தனியாயிருப்பதி லென்னபிரயோசனம் நீயுமொருவனுக்கு விலையாகிவிட்டால் சுகமாயிருந்துக்கொள்வாய் நேக்குந்தாரகு சம்பளம் வந்துவிடும்.

அரிச்சந்திரன் விருத்தம்.

திரமுடன்பெண்டீர்விற்றுச்செலுத்தினேன்முனிக்குப்பொன்னை
தாசருந்தாருக்காகச் சங்கடப்படத்துகின்றார்
விரைவுடன்பொருள்களிங்கே வேண்டுமேவன்கயிலைமேவும்
அரஹரசிவனேநான்முன் னனீதங்கள்செய்திட்டேனே

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

அரஹரசிவனேநமசிவாயஓம் அப்பனிசடைநாதா
நாதாமலர்ப்பாதா வென்மேல்வாதா செகநீதா ஓம் (அர)

அநுபல்லவி.

உரகங்கணவரதசங்கர உமையாளிடப்பாகா
புரமூன்றெரித்தாய் கரியையுரித்தாய்
பூதநாதனேயுன் பாதம்நம்பிவந்தேன். (அர)

சரணங்கள்.

மாசில்லாத வாழ்வுந்தனமு மனைவிமைந்தனோடிழந்தேன்
கோசிகமுனி மோசமோவினிக்
கொடிய வினைக்கு ளடியேன்வருந்த. (அர)

தையல்மைந்தனைவிற்று பொருள்யாவுந்தவ முனிக்காச்சேயீசா
கைதவிலேபொன் னற்றபாவியானேன்
காரணனேபரி பூரணா ஆதரி. (அர)

வேதியர்தாரு சம்பளங்கேட்டென்னை வேதனைசெய்குறாரே
நீதிதவறிநான் நிஷ்டூரஞ்செய்தேனே
நிர்மலனேயிது தர்மமோவென்மீதில். (அர)

அரிச்சந்திரன் வசனம்.

கயிலைபங்கிரிவாசா விஸ்வேசா வென்செய்வேன் கையிலோர் காசுமில்லை முனிவருடைய கடனுக்காக பெண்சாதிபிள்ளை

யை விற்றுக்கொடுத்தேன் இனியாம் விலைப்பட்டாவது தாகரு க்கு பொன் கொடுக்கவேண்டும் மென்செய்வேன் நாதா.

அரிச்சந்திரன் விருத்தம்.

கலையெலாமுணர்ந்தசத்திய கீர்த்திகேழறக்கேளாய்
சிலைமுனிகடனுக்காகத் தேவியைமகனைவிற்றேன்
தலைவிதிக்கென்னசெய்வேன் சடையிலாதுளத்திலென்னை
விலைசெய்துதரகாகூலி கொடுத்திடில்விருப்பமாமே.

மேற்படி வசனம்.

மந்திரி யிந்த நட்சேத்திர புண்யவானுக்கு தாகுசம்பளத் துக்காக யென்னை யிந்நகரில் விலைகூறிவிற்று நட்சேத்திருக்குப் பொருளைக்கொடுத்துவிடும் சத்தியகீர்த்தி.

சத்தியகீர்த்தி விருத்தம்.

அன்னையாயப்பனுன வண்ணலேயுயிரையொத்த
உன்னையான்விற்கவுந்தா னேக்குமோவுடன்சகிக்கா
தென்னையிப்பதியில்யாவர்க் காயினும்விற்றுத்தூதர்
பொன்னைத்தந்தனுப்புச் சித்தம்பொருந்தினேன்விலைசெய்வீரே.

மேற்படி வசனம்.

அரசே அடியேனிருக்கத் தாங்கள் விலையாகிறது ஞாயமல் லஆனதாலென்னை இந்நகரில்விற்றுநட்சேத்திர புண்யவானுடை யதிரவியத்தைக் கொடுத்துவிடுங்கள்.

அரிச்சந்திரன் விருத்தம்.

மதியுந்தன்மதிக்குத்தக்க மதியலமதிநீயப்பா
சதிசெய்யும்விஸ்வாமித்திர தவமுனிக்குரைத்தவாக்கின்
விதிமுறைதவறியுன்னை விற்றிடிற்பவநீங்காது
ததியிதாமென்னைவிற்றுத் தாகரைநடத்துவாயே.

மேற்படி வசனம்.

மந்திரி யென்னவார்த்தை சொன்னீர் யான் விஸ்வாமித்தி ரருக்குச் சொன்ன வாக்கின்படியென்னை விற்றுமறை வருக்குப் பொன்செலுத்தவேணுமே தவிர உன்னைவிற்று செலுத்தலாமா இதுவுமென்ன தெரியாதா யென்னவிலை கூறுமபிள்ளாய்மந்திரி·



உ

பரமபதி துணை.

இராஜன்

விலையாகிறபாகம்.

மந்திரி விருத்தம்.

பாவமென்செய்தேன்யானும் பரமனேயீசாவிந்தக்
கேவலமடையத்தானேக் கிளர்புலைச்சிரத்தில்வைத்தே
காவலன்மனைதனைப்பற்றி கோவெனக்கதறியேங்கி
பாவனந்தோறுஞ்சென்றே விலைபகர்ந்தலைந்திட்டேனே.

மேற்படி விருத்தம்.

ஆதிநாயகனேயிந்த வவதிநாம்படவும்போமோ
நீதியிற்றிறம்பாமன்னன் நிலைதப்பாவரசர்கோமான்
வேதியரரசர்செட்டி மேன்மக்களுள்ளார்நான்காஞ்
சாதிகள்யாவரேனும் வாங்கலாந்தடையில்லாமல்.

இராகம்-பியாகு—தாளம்-ஆதி.

பல்லவி.

மன்னாவெனைவிலைகொள்வீரே   என்
மன்னனைவிலைகொள்   வீரே (மன்)

அநுபல்லவி.

சொன்னமொழிதவறாத   துரையரிச்சந்திரன்வெகு
சுந்தரமிகுந்தவென்றன்   சுந்தரமிகுந்தவென்றன் (மன்)

சரணங்கள்.

விதியால்விளைந்ததுன்பம்   பதினாயிரம்பசும்பொன்
நிதியால்மதிவாடுரோம்   நிதியால்மதிவாடுரோம் (மன்)

சாதியெவ்விதமாயினும்   தடையன்றிவிற்பேன்யானும்
வாதனைதீரவேயென்றன்   வாதனைதீரவேயென்றன் (மன்)

நாடுநகரிழந்து   ராஜரீகந்துறந்து
வாடுரோமிந்தவேளையில்   வாடுரோமிந்தவேளையில் (மன்)

மந்திரி வசனம்.

பிரபு இந்தக்காசிப்பட்டணம் நாலுதெருவிலும் விலை கூறியும் ஒருவரேனும்விலைகேட்கக்காணோம் இனியென் செய்வோம் அரசே.

நட்சேத்திரன் வசனம்.

சந்திரா யின்னம் நான் உன்பின்னாலே திரியவேணுமோநான் றயிருந்தது பொன்னைகொட்டடா கொட்டு.

அரிச்சந்திரன் விருத்தம்.

மறையவாநட்சேத்திரையா வாதனைசெய்யவேண்டாம்
விறைவுடனடியேன் றன்னை விலக்கிதோவிற்றுப்பொன்னைக்
குறைவறத்தாரேனிப்போ கோபிக்கவேண்டாமின்று
இறைவனருளால்யானு மிதோவிலைகூறுவேனே.

மேற்படி வசனம்.

பிரபு யென்னைக் கஸ்திபடுத்த வேண்டாம் இதோ பொன் தருகிறேன் நட்சேத்திர புண்யவானே.

அரிச்சந்திரன் விருத்தம்.

கோசிகர்கடனால்தேவி குழந்தையும்விலைசெய்தீந்தேன்
மாசில்லாத்தாகுகேட்டு வருத்துரார்மறையோரென்னை
காசிமாநகரில்வாழுங் கனதனம்படைத்தபேர்கள்
யோசியாதென்னைவாங்கி யுபத்திரந்தனைத்தீர்ப்பீரே.

இராகம்-தோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

என்னைவிலைகொள்ளவாரு மிந்நகரிலுள்ளவரே

அநுபல்லவி.

சொன்னமொழிதவறாமல் றெண்டுசெய்வேனுங்களுக்கு (எ)

சரணங்கள்.

மாமுனிகடன்றிரவே மனைவிமைந்தனைவிற்றேன்
தாமிதஞ்செய்யாதீர்னுதர் தாகுசம்பளத்திற்கு (எ)

கோசலைநாவென்றன்தேசம் கோசிகரால்வந்தமோசம்
பேசவினிஞாயமுண்டோ பிரபுகள்யாரேனும் (எ)

வையகத்தில்மெய்தவறு மன்னவரிச்சந்திரனென்பேர்
செய்ததவக்குறையாலென் சீமையிந்திங்குவந்தேன்.(எ)

அரசுபதியையன்பா யருந்தவமுனிக்கீந்து
பரதேசிபோலேயானு மறுதேசம்வந்தேனையா.(எ)

அரிச்சந்திரன்-வசனம்.

இந்நகரத்திலுள்ள கனவான்களே யான் படக்கூடியகஷ்டங்களைத்தீர்க்கும்படி என்னைக்கிரயத்துக்கு வாங்கிக்கொள்ளவேணும்பிரபுக்களே.

வீரவாகு பொது விருத்தம்.

கடியவனேவலாலே காலனும்வீரவாகு
வடிவமாய்க்காறள்ளாடமாலியைமாந்திக்கண்கள்
இடிவிழுந்தாற்போல்வாயி லீக்கள்மொய்த்திடமயங்கித்
தடிகொடுமாமிசத்தின் காவடியோடும்வந்தான்.

பொது வசனம்.

இவ்விதமாக அரிச்சந்திரன் விலைக்கூறிக்கொண்டிருக்குஞ் சமையத்தில் விஸ்வாமித்திரமுனி யேவலால் யெமதர்மராஜன் வீரவாகுவேடந்தரித்து மாமிசக்காவடியைத் தூக்கிக்கொண்டு அரிச்சந்திரனைக்கிரயத்துக்கு வாங்கவருகிறவிதங்காண்குக.

வீரவாகு விருத்தம்.

சோதியாம்பிரணவத்தின் சூட்சமுந்தெரிந்தேன்மிக்க
நீதியிற்றவறேன்சற்றும் நேர்மைசேர்காசியானும்
சாதியிற்புலையனையா சவஞ்சுடும்வீரவாகு
கோதிலாவிலைக்கோராளு கொள்ளவிங்குற்றேனுண்டே.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

வீரவாகும்நானே காசி
வெட்டியானுண்டேதிகிர்தங் கொட்டியேபறைமுழக்கும்.(வீ)

அநுபல்லவி.

தீரமுடனேருத்திர பூமிதனிலெந்நாளும்
வாரபிணத்தைச்சுட்டு நீறுக்குவதென்தொழில்.(வீ)

சரணங்கள்.

துரியந்துரியா தீதஞ் சுழிமுனையிருகலை
கருவிகரணஞ்சோரக் கண்டறிந்திடுந்திர(வீ)

செத்ததோர்மாடெடுப்பேன் தின்ஞ்சுடுகாடிருப்பேன்
அத்தனடியிணையை யனுதினமறவாத(வீ)

வேதமுடிவறிவேன் விமலன்னிலையறியேன்
நாதலங்கார வட்டம் ஞாயந்தெரிந்தேன்திட்டம்(வீ)

பணத்தைவெகுவாய்த்தேடி பாவலர்க்கீயாப்பேடி
பிணத்தையென்சுடுகோலால் பிரட்டியுருட்டிச்சுடும்(வீ)

தென்றிசையிலென்வீடு திரிவேனநேகங்காடு
நன்றிதயமேறனீதி ஞானவெட்டியானென்ற(வீ)

வீரவாகுவுக்கும் நட்சேத்திரையருக்கும். நடந்தசம்பாஷணை.

வீ-கு ஓகச்சி ஐயரே வாடலைகாறும் வாடலைகாறும் தும்புடுகிறேன்.

ந-ன் ஆரவன்விளாயைக்கோழி நம்ம நாமதேயத்தை முழுக்க வைத்துகூப்பிடுகிறவன்.

வீ-கு ஓபொட்டகண்ணுபார்ப்பான் ஊரைப்பாரென்றால் பறைச்சேரியைபாக்குறான்.

ந-ன் ஆரவன் பறையன்போலிருக்கிறது கிட்டப்பார்க்கிறேன்.

வீ-கு பாப்பானை தொட்டேனே தலையறுத்து முழுங்குவனுமே.

ந-ன் அறியாய்த்திட்டு பொறியாய்போச்சு அப்புறமென்னமசிரைப்பிடுங்குவாய் பறைப்பயல் மேலேவிழுந்து கண்டபடிஉளரியேசுகிறான்ஒதுங்கிப்போடா.

எ-ன் ஆரங்கே சுக்கிராசாரியாரா.

ந-ன் ஆமம் எமதருமராஜனே.

எ-ன் என்னவேஷம் என்னவேஷம்.

ந-ம் எல்லாம் விசுவாமித்திரர்க்குப்பயந்தவேஷந்தான்.

எ-ன் நீர்வந்தகாரியம் என்னசெய்தீர்.

ந-ன் நான் சரயுநதிக்கரையிலிருந்து காசிப்பட்டணம் வருவதற்குள் அரிச்சந்திரனைப் பலவிதத்துன்பங்கள்செய்தும் மனைவிமைந்தர்களை விற்கச்செய்தேன் இதுவரையிலும் பொய்சொல்ல வில்லை இனி யும்மால்தானாகவேணும்.

எ-ன் சரி சரி அவன் ஒருக்காலும் பொய்சொல்லமாட்டான் யென்னமோ பார்ப்போம் இவனைக்கிரயத்துக்கு வாங்குறேன் பணம் வந்ததாகச்சொல்லும்.

ந-ன் அப்படியே சொல்லிவிடுகிறேன்.

வீ-கு ஓ நக்கச்சூத்தரய்யரே.

ந-ன் ஏண்டா பறைப்பயலே எங்கேடா வந்தே.

வீ-கு நானிந்தராஜாவை விலைக்கிவாங்கினேன்.

ந-ன் பணத்தை யாருக்குகொடுக்கச்சொன்னான்.

வீ-கு பணத்தை உனக்குத்தான் கொடுக்கச்சொன்னான்.

ந-ன் அப்படியானால் ரொக்கத்தைக் கீழேகொட்டு.

வீ-கு பொறுபொறு எண்ணையில்விழுந்த பணியாரம்போல்குதிக்குறாய்சமயத்தில்வா இல்லையென்றுசொல்லிவிடுகிறேன்

ந-ன் அடேதாயோழி இதென்ன மோசமாயிருக்கிறது கொட்டடா கொட்டு.

வீ-கு நீசெத்துப்போனால்சுடுகூலிகொடுக்கவேணுமே கீழேவைச்சிவிடு.

ந-ன் செத்தாலல்லவோ கொடுக்கவேண்டும்.

வீ-கு கண்ணுள்ளபோதே காட்சியாய்க்கொடுத்துவிடு.

வீரவாகு விருத்தம்.

ஆரடாநயிங்தேயிங்கே யாள்தனைவிற்பேனென்றாய்
ஊரிலேசுடலைகாக்கு முத்தமத்தோட்டிவந்தேன்
பேரென்னஊர்தானென்ன பெருவிலைதானுமென்ன
கூரடாவுன்னையானுங் கொள்ளவேவந்தேன்கண்டாய்

மேற்படி வசனம்.

ஆரப்பாநயிங்தே யிந்தக் காசிப்பட்டணத்தில்தெருத்தெருவாயேதோ ஒரு ஆளைக்கிரயஞ்செய்கிறதாக விலைகூறி வந்தவர்கள்யார்.

சத்தியகீர்த்தி வசனம்.

ஆரப்பா நாங்கள் தான் விலைகூறிக்கொண்டுவந்தோம் உன்னுடைய குலத்தைச் சொல்லவேணும்.

வீரவாகு விருத்தம்.

மறையவனல்லேன்யானே மயானகாவலனுமாகும்
பறையனுமாகுமென்போ லவர்விலைகேட்கலாமோ
பொறையுடையோனேசெம்பொன் போதுமென்றளவுந்தால்
இறைவனைத்தருதியோசொல் லிலவென்றுலதுவுஞ்சொல்லே.

மேற்படி வசனம்.

யாரப்பாஎன்னுடைய குலத்தையாகேட்டாய் நான் விபரமாய்ச்சொல்லுகிறேன் யான்மயானங் காக்கும் பறையன் யெனக்கு துணைக்கு ஆளில்லாததினால் ஒரு ஆள் கிரயத்துக்கு வாங்கலாமென்று வந்தேனப்பா.

அரிச்சந்திரன் விருத்தம்.

ஈசனவ்வசனங்கூற நிருபனுங்கேட்டனந்தோ
ஈசனேமங்கைபங்கா விந்நகர்தன்னில்வேறு
பூசுராரிலையோவேறு புலையனோதனத்தின்மிக்கான்
பேசவுந்தருமோவென்ன பிழைசெய்தேன் குறைசெய்தாயே.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

பறையனோவிலைகேட்கவும் விதித்தாயென்னை. (ப)

அநுபல்லவி.

கறைமிடற்றண்ணலே கருணாநிதியேயென்னை. (ப)

சரணங்கள்.

தேவியுடனேமைந்தன் செல்வந்தனையிழந்து
பாவியானதுமன்றி பாராரிகழவென்னை. (ப)

தர்மம்செய்யாமல்வீணாய்க் கர்மம்செய்தேனோவென்மேல்
வர்மம்சாதித்தாயீசா மனம்பதறுதேஈச. (ப)

காசிவிடுயார்படாத கடன்பட்டதாலேயிந்த
வேசந்தனக்குள்ளாக விட்டதையையோகாலம். (ப)

இறக்கப்போனாலுமாந்தர் சிறக்கப்போவார்களென்ற
தாத்தையும்நானிழந்தேன் சதிசெய்திடுமுனியால். (ப

அரிச்சந்திரன் வசனம்.

ஜெகத்ரட்சகா யிந்தக் காசிபட்டணத்தில் பிராமணர் வைசிய வர்த்தகர்கள் . பணம்படைத்த பேர்களில்லையா பிணஞ்சுடுகிற நீசன்தானா பணம்படைத்தவன் நானென்செய்வேன்சிவமே.

வீரவாகு விருத்தம்.

மன்னனேயாரானாலும் மாதனம்படைத்தபேர்க்கு
முன்னமேவிலையுமாவே னென்றிதோமொழிந்தாய் தான்
உன்னதமாகச்சாதி யோசிப்பதென்னகாணும்
தன்னகர்தனிலேவேறே ஜாதிகளேதுஆண்டே.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி

பல்லவி.

ஜாதியேதுகாணும்ஆண்டே சைவமேதுகாணும்

அநுபல்லவி.

ஆதிமனுவன் ஒருவனாலுலகம்ஆனதுமிருக்கமேன்மைகள் பேசுநீர்

சரணங்கள்.

ஊர்வசிவயிற்றினில் வசிஷ்டரும்பிறந்தார்
உகந்துசக்கிலிச்சியை மணமிகமுடித்தார்
நாரதர்வண்ணான் வீட்டினிற்பிறந்தார்
நலமோவியாசர்மீன் வலைச்சிக்கிபிறந்தார் (சா)

அத்திரிமுனிவர் சக்கிலிச்சிக்குப்பிறந்தார்
இறிவீர்சௌகர்நால் வயிற்றினில்ஜெனித்தார்
சுத்தமோபராசரன் புலைச்சிக்கிப்பிறந்தார்
சொன்னேனசுவத்தமா குதிரையில்செனித்தா (சா)

கழுதைவயற்றிலல்லோ காக்கையர்ஜெனித்தார்
கௌதமர்காராம் பசுவினிலுதித்தார்
பழுதல்லோசாங்கர்சக் கிலிச்சிக்கிப்பிறந்தார்
பண்மையோகலைக்கோட்டார் மானுக்குப்பிறந்தார் (சா)

மாண்டவியர்தவளை வயிற்றினில்ஜெனித்தார்
மதங்கர்சக்கிலிச்சி மகனாகவுதித்தார்
ஆண்டேநான்சொல்லுவது பொய்யல்லபாரும்
ஆகமங்களைப்பார்த்தால் வெளியாகக்கூறும். (சா)

ஆத்தாமயிலே பிராயணக்குயிலே
ஆரியமாலையைக் கிறையெடுத்தவன்
கத்தாவென்கிற பறையனல்லவோ
காமாட்சியொரு பறைச்சியென்றறிகுவீர் (சா)

மாட்டிறைச்சிபெருங் காயங்கோரோசனை
வழுத்திமென்பூனை விதரினில்வாசனை
தாஷடிகரேவெள்ளை சர்க்கரையெனும்பாலே
ரமைந்திருக்கவேவெட்டிச் சமர்த்துகள்பேசுரீர் (சா)

மந்திரஞ்சொல்லியே யாடுகளறுத்து
மறையோர்கள்கூடியே யெக்கியம்வளர்த்து
தந்திரமாகவே யறுத்துக்கரிசமைத்து
சாம்பிட்டதுண்டுநீர் கூப்பிட்டுக்கேளும் (சா)

மேற்படி வசனம்.

ஆண்டே ஒவ்வொரு சங்கதிகளு மிப்படியிருக்க வருத்தப் படுகின்றீரே யென்னபிரயோசனம்.

அரிச்சந்திரன் வசனம்.

நீதிசேரமைச்சேயிந்த நெடுநகர்குள்ளுண்டான
வீதிகடோறுமென்னை விலைகூறிவந்தாயன்றோ
வேதியர்மற்றோர்சாதி விலைக்கேட்பாரொருவரில்லை
சாதியிலினன்கேட்டான் சரிவிலைசெயகுவாயே.

மேற்படி வசனம்.

மந்திரி சத்தியகீர்த்திபொன்கொடுக்கின்றவன் என்னசாதி யாயிருந்தாலும்வீரவாகுவுக்கேயென்னைவிக்கிரயஞ்செய்துபோ டுமேனென்றால்நாமும் வீதிவீதியாயலைந்தோமே வேறே ஒருசா திக்காரர்கள் யாராவது வந்துகேட்டாகளா இல்லையே யென் செயவோம் மந்திரி.

மந்திரி வசனம்.

அப்பா வீரவாகு யிங்கேவா நீ மகாராஜனைக் கிரயத்துக்கு வாங்கிக்கொள்ளுகிறுபா சொல்லப்பா.

வீரவாகு விருத்தம்.

பலவந்தமாகவிம்மைப் பற்றிவந்திழுத்தனோநான்
கலகலென்றிறைச்சல்போட்டுக் கடைத்தெருவெங்குங்கூறி

விலைசொல்லக்கேட்டுவந்தேன் விற்பாயோவென்றுசொல்லு
நலமுடன்சரிதானென்றால் நான்விலைகொள் வேனாண்டே.

வசனம்.

ஆண்டேயானுங்களைப் பலவந்தமா யெனக்குக்கிரயஞ் செய்யென்று வந்துகேட்டேனோ தெருத்தெருவா யெங்கும் விலைகூறினதால் நான் வந்து விலைகேட்டேன் இப்பவுஞ்சம்மதமானால் விலை சொல்லப்பா ஆண்டே.

அரிச்சந்திரன் வசனம்.

வாருமப்பா வீரவாகுவே யாரானாலுஞ்சரி கோரிய விலையைக் கொடுத்தால் கிரயமாகுறேன்.

வீரவாகு வசனம்.

அப்படியானால் விலை சொல்லுங்களாண்டே கிரயந்தருகிறேன்.

மந்திரி விருத்தம்.

உலகெலாமரசுசெய்த வுத்தமனுரைத்தமாற்றம்
கலைவலான்கேட்டுநெஞ்சங் கலங்கிப்பின்றேறிவந்த
புலையனேசொல்லக்கேளாய் பொன்பதினாயிரந்தான்
விலைதருவாயேயானால் விற்பதுவுறுதியாமே.

மேற்படி வசனம்.

வீரவாகுவே பொன்பதினாயிரங்கொடுத்தால் கிரயஞ்செய்கிறேன்

வீரவாகு வசனம்.

அப்படிக்கு விலைமுறி யெழுதிக்கொடுங்களாண்டே

அரிச்சந்திரன் வசனம்.

மந்திரி விலைமுறி யெழுதிக் கொடும் சீக்கிரம்.

மந்திரி வசனம்.

இதோ வெழுதுகிறேன் அரசே.

கிரயசசானம் யெழுதுகிற

விருத்தம்.

பூவளம்பொலிகாசிமாநகரமேவுமொரு
 புலையனுக்கிறைவனான
புகழ்வீரபாகுக்குமைப் படிந்துலவுநற்
 பொழில்சூழுநகர்கோசலங்

காவலனமைச்சர்பலரிற்சத்யகீர்த்தியான்
கடவுமுறியென்னவென்றாற்
காசினிக்குயர்வான திரிசங்குமாதவக்
கான்முளையரிச்சந்திரனை
மேவவரிதானபதினாயிரம்பொன்னுக்கு
விலைபேசியாங்கிவந்த
வேதியர்க்கிந்தனன் கூலியநசரியிந்த
வேந்தனுமதடிமையாளாய்க்
காவளஞ்செறிபூமிபொடைந்தநுபூமும்
கதிர்மதிகளுள்ளமட்டும்
கண்டூனவெனதுமகந்தி மன்னனைக்கைகொள்வைக்
காரியசுகஸ்தமிதுவே.

சத்தியகீர்த்தி வசனம்.

பிரபு இதோ கிரயசாதன மெழுதிவிட்டேன்.

அரிச்சந்திரன் வசனம்.

வீரவாகுவே யிந்தப்பொன்னை மறையவரிடம் கொடுத்துவிடு.

வீரவாகு வசனம்.

அப்படியே மறையோர்வசங் கொடுத்துவிட்டேன் ஆண்டே.

அரிச்சந்திரன் வசனம்.

சுவாமி நட்சேத்திரபகவானே தங்களுக்குச் செல்லவேண்டியதிரவியமெல்லாம் வாங்கிக்கொண்டீர்களா.

நட்சேத்திரன் வசனம்.

அரிச்சந்திரா வாங்கிக்கொண்டேன் யேதோ கொஞ்சம் துன்பப்படுத்தினேனென்று வருத்தம் வைக்கவேண்டாம் போய்வருகிறேன்.

அரிச்சந்திரன் வசனம்.

சுவாமி கோடிவந்தனம் விஸ்வாமித்திர சுவாமிகளுக்குநான் வந்தனஞ்சொன்னதாகச் சொல்லுங்கள்.

நட்சேத்திரன் வசனம்.

அப்படியே சொல்லுகிறேன் போய்வருகிறேன்.

அரிச்சந்திரன் வசனம்.

மந்திரி யென்னைப்புலையனுக்கு அடிமைசாதன மெழுதிக் கொடுத்துவிட்டாய் யானினிமேல் வீரவாகுசொன்னபடிகேட்க வேண்டும் இனியென்னுடன் நீ தொடர்ந்துவருவதில் யென்னபிரயோசனம் நீ எங்கேயாவது சென்றுகாலங்கழித்துக்கொள் அல்லது அயோத்திமாநகரஞ் செல் மந்திரி.

மந்திரி விருத்தம்

இதற்கோநான்கூடவந்தே னென்னையாள்மன்னாவுன்னை
பதைக்கவேபறையன்கையிற் பற்றறவில்லையாய்விற்றே
சுதித்தவாட்டிறைச்சியிந்தக் காவடிதோளிற்றூங்க
வதித்ததோதெய்வமிந்த விதஞ்செய்யலாமோமன்னா.

இராகம்-புன்னாகவராளி-தாளம்-ஆதி.

பல்லவி.

மன்னவாவும்மைவிட்டு மாபாவிபிறிந்திட
வருமோமனது யினிமேல். (மன்)

அநுபல்லவி.

என்னசெய்குவேனினி யிப்படியும்முனி
என்னமிருந்ததுவோ அன்னைதந்தைபோலாண்ட. (மன்)

தர்மமாவுங்களுக்கென் றன்மையெல்லாந்தெரிந்து
தள்ளிப்போவென்றீர் தகுமோ
கர்மமோயெனக்குற்ற காலகெதியிதுவோ
கண்டோர்நகைத்திடாரோசண்டாளனிவனென்று (மன்)

தாயுடன்பிள்ளைதனைச் சதுர்மறைபோக்குவிற்றீர்
தானிந்தக்கோல மாகினீர்
ஞாயமெல்லாம்மறிந்த நான்போம்வென்றால்மனம்
நாடுமோவேறெண்ணத்தைத் தேடுமோகூடுமோ. (மன்)

பிள்ளைமனைவிதன்னைப் பெரிதென்றுநினைந்தேனோ
பேதகஞ்சொன்னீர் நீர்தானே
வள்ளலேதடைசொல்ல வேண்டாமுங்கள்பின்னாக
வாரேனல்லாது தயர் தீரேன்பரமென்றனை. (மன)

மந்திரி வசனம்.

பிரபு யென்னுடைய மனைவிமைந்தனைச்சதமென்று நினைத்தேனாத் தங்களைப் பெரிதென்றெண்ணிவந்தேன் தங்களுடைய நிலைமையாவற்றையுமறிந்து இச்சண்டாளனினிப்போவதற்கு மனம்வருமா யானுங்கூடவே வருகிறேன் பிரபு.

அரிச்சந்திரன் வசனம்

மந்திரி யானேபறைச்சேறிக்கிச்செல்லுகின்றேன் யென்வார்த்தையைத்தட்டாதபடிமனதைத்திடப்படுத்திச்சொல்லுவாய்.

மந்திரி வசனம்.

பிரபு யான் கொடிய சண்டாளனாகிவிட்டேன் இதோ யாத்திரையாகச்செல்கிறேன் இதோ நமஸ்காரஞ்சென்றுவருகிறேன்.

வீரவாகு வசனம்.

டப்பா நயினாதே அரிச்சந்திரனென்று சொல்ல யெனக்கு சரிப்படாது மறந்துவிடுவேன் ஆகையால் சுருக்கமானபேர் வைத்துக்கூப்பிடுவேன் யேயென்றுசொல்லவேனும் கூப்பிடட்டா அட்டே அனிச்சத்தோட்டி.

அரிச்சந்திரன் வசனம்.

யேனப்பா வீரவாகுவே.

வீரவாகு வசனம்.

சரிஇப்பத்தான் யெனக்குநெல்லாத்தெரிகிறது இப்படித்தான் யெப்பவுங் கூப்பிடுவேன்ஞாபகம் வைத்துக்கொள் நல்லது நீயிருக்கிறமோடியால் உன்னைப்பார்க்கையில் திகிலடைகிறது ஆகையால்நான்செல்வதைகேளும் நயினாதே.

வீரவாகு தரு.

இராகம்-கானடா-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

வாடாபாஜாத்தோட்டிப்பையா பாங்குமுடனென்னிடத்தில்
தாடாவுன்றன்பணிகளைத் தடையின்றிகேழட்டித்தானே
உனக்குச்சொன்னேனே யறிகுவாய்கோனே

கையில்விரல்மோதிரமுங் கடுக்கன்பதக்கங்களும்
துய்யதலைப்பாகையுமிங் சுருக்காய்கழட்டிதாச்சொன்னேன்
எந்தனுக்குமுன்னே சீக்கிரதில்மன்னு

சாலுவைபீதாம்பரமும் சரிகையிட்டஅங்கியையும்
காலுச்சாரய்கழட்டி கணத்திலெனக்குகொடுகண்டாய்
சீக்கிரத்தில்கொண்டா மூட்டைகட்டித்துண்டாய்

சல்லடங்கம்பளிதந்தேன் தானணிந்துகொண்டுஎந்தன்
யில்லந்தனைச்சேர்வாயிந்த யிதலச்சிக்காவடிதன்னை தூக்கி
பாதைவழிநோக்கி போவாய்துயர்நீக்கி

மதுக்கடைபோய்வருவேன் வளவில்பறைச்சியிடம்
அதற்குள்வேயிக்கறிவை அழகாய்சமைத்திருக்க
சொல்லுட்டிலேபோய்கில்லு சீக்கிறத்திற்செல்லு

வீரபாகு வசனம்.

அரிச்சந்திரா நோட்டி. நான்சொன்னபிரகாரம் உன் ஆபரண ங்களைக் கழற்றிக்கொடுத்தது சரி இந்தக்கம்பளியைப் போர்த் திக்கொண்டு காவடியையெடுத்துச்செல் நமதுபறைச்சேரி கங் கைக்கரையோரத்தில் சீக்கிரத்தி லிந்தக்கறியைச்சமைக்கும்படி யென்பறைச்சியிடஞ் சொல்லு அவள்சொல்லக்கூடிய வேலை யைக்கேளு நானகள்ளுக்கடைசென்று வருகிறேன்சீக்கிரம்போ.

அரிச்சந்திரன் வசனம்.

அப்படியே சொல்லுகின்றேன் என்னை யடிமைகொண்ட வீரவாகுவே.

அரிச்சந்திரன் விருத்தம்.

ஆச்சியாமுமையாடன்னை யன்புடனணைத்தபாத
நீச்சனுக்கடிமைசெய்த நின்னருளதுபோதாதோ
தாழ்ச்சியாங்கோவிறைச்சி தாங்கியதாவுமின்று
வாயச்சுதோதூக்கியேக வைத்ததையோகாசிநாதா.

இராகம்-அசாவேரி-தாளம்-ஆதி.

பல்லவி.

எனக்கிப்படியென்றய னெழுதினனோதலையி
லென்னசெய்குவேன் சிவமே. (எ)

அநுபல்லவி.

மனதுமிகவேநொந்து வருந்துரேன்காசிவந்து
கனங்குறைந்துநீசன்போற் காவடிசுமக்கவிட்டாய். (எ)

சரணங்கள்.

மாசில்லாப்புனுகைமெய்யில் வாரியணிந்தகையில்
வீசுமாமிசத்தைத்தூக்க விதித்தாய்நின்மனமேற்க. (எ)

தேசமெல்லாம்புகழ்ந்த செங்கோல்செலுத்திவந்த
தோஷமோமுனிசெய்த மோசமோயானறியேன். (எ)

ஆவியுஞ்சோருதே அங்கமுந்தளருதே
கோவினிறைச்சிதூக்கக் குறைவென்னசெய்தேன்பார்க்குள்()

அரிச்சந்திரன் வசனம்.

விஸ்வேசா இதுவும் உனதருளா வென்னையிக்கெதிக்குள் ளாக்கிவிட்டா யிந்தக்காவடியைத்தூக்கிப் பறைச்சேரிபோகின் றேன்.



பரமபதி துணை.

அரிச்சந்திரன்.

பறைச்சேரி செல்கிற பாகம்.

அவிச்சத்தோட்டி விருத்தம்.

மேவலரெவரும்போற்ற மேதினிமுழுநுங்காத்தேன்
பாவமென்செய்தேன்காணென் பறையனுக்கடிமையானேன்
தேயவுன்கருணையிதோ நாதெரிகிலேனையோகன்றன்
காவடிதோளிற்றூக்கிக் கர்த்தனேநடக்கின்றேனே.

இராகம்-கீர்வாணி-தாளம்-சாப்பு.

பல்லவி.

அரனேகயிலாசவாசா அமலாவிஸ்வேசா
அடியேனுக்கிந்தவிதி அமைத்தாயோவீசா (அ)

அநுபல்லவி.

கரம்போகுதென்னசெய்வேன் கன்றின்காவடிதாங்கி
கடையன்கடையனானேன் கருணைசெய்நோக்கி (அ)

சரணங்கள்.

மன்னவர்க்குமேலென்னை வைத்தாண்டவனுநீயே
மானிலத்தோர்களேச வருத்தவநீயே (அ)

வடிவுற்றநவரத்தின முடிபுனைந்திட்டபாவி
மாமிசந்தன்னைத்தூக்கி வருந்துரேனுவி (அ)

உடுக்கையன்றிபென்தேகம் நடுக்கங்கொள்ளுதேபாவம்
ஒருகெதியுமில்லாத பரதேசியானேன்சோபம் (அ)

பொது வசனம்.

இந்தப்பிரகாரமாக அரிச்சந்திரன் மாமிசக் காவடியை தூக்கிக்கொண்டு பறைச்சேரிக்கிச்செல்லும்போது பறைச்சேரியிலிருந்த வீரவாகுபெண்சாதி சாமளா வீரபாகுவு இன்னேரம் வரையினும் பறைச்சேரிக்கி வரக்காணோமென்று தேடிவருகிற விதங்காண்குக.

இராகம்-தான்வரியாசி-தாளம்-ஆதி.

பல்லவி.

மணவாளன் தன்னைத்தேடி மார்க்கமுடனேகூடி
வந்தாள்தோட்டிச்சி யோடி (ம)

அநுபல்லவி.

பணம்வாங்கிச்சென்றானே பார்க்குமேறன் ஆளென்றானே
கணம்விட்டுப்பிரியானைக் காணேனேயின்னமென்று (ம)

சரணங்கள்.

கக்கத்தில்கூடைகொண்டு கனத்தபணிகள்பூண்டு
பக்கத்தார்களைக்கண்டு டாப்பிபசப்பிக்கொண்டு (ம)

சிமிழ்ப்போலேகொண்டையிட்டுச் செம்பாரப்பொட்டுமிட்டு
கமழாவிக்கைதொட்டுக கருத்தில்வெட்கத்தைவிட்டு (ம)

சிரித்துகண்ணைச்சிமிட்டி சிறுவர்களைப்பகட்டி
பெருத்தவுருவத்தைக்காட்டி பிர்மிக்கும்படிநீட்டி (ம)

வெவ்விர்பிரக்கப்பூசி ம்வடிக்கைவார்த்தைபேசி
யெண்ணம்போல்கையைவிசி யேரிட்டுப்பார்த்துக்கூசி (ம)

தோட்டிச்சி வசனம்

அடாபாவி பறப்பான்மகளே இன்னங்காணோமே அடா வீட்டுக்காரம்நாஞ்சான்மகனே பயலுக்குக கஞ்சிவாத்த மாட்டேனென்று சொல்லிவிட்டேன் பயமகளபயல் யெங்கேபோனானோ தெரியில்லையே.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி

பார்த்தீரோயென் பறையனைப்பார்த்தீரோ (பா)

அநுபல்லவி.

வேர்த்துமுகம்வாடி வெகுவிடங்களைத்தேடி
பிரார்த்திமேனுங்களையும் பிரபுகளேயவனை. (பா)

சரணங்கள்.

காசியிமயிருக்க காணிகாட்சியிருக்க
மாசில்லாப்பணந்துண்டு வாய்க்கரிசியிருக்க
கூசாதென்சிறுதேட்டில் கோடிரூபாயிருக்க
தோஷியவன்களுக்கென்று துலைத்துதுலைத்துவிட்டான். (பா)

கொப்புவித்தபணத்தில் கோடிரூபாய்கொடுத்தேன்
அன்பாகத்தோளுவித்த தைனூறுபொன்கொடுத்தேன்
தென்பாயெலும்பிவித்த நைனூறுபொன்கொடுத்தேன்
தம்பமில்லாதாயகள்ளுத் தண்ணிக்கேகொடுத்துவிட்டான்

நஞ்சைபிஞ்சையிருக்க நாலேருமாடிருக்க
அஞ்சுகளஞ்சியத்தில் ஆனைகொம்புநெல்லிருக்க
பஞ்சவர்ணப்பட்டுச்சேலை பலநகையுமிருக்க
வஞ்சகமாய்கள்ளுக்குகென்று வாங்கிக்கொடுத்தேங்கவிட்டான்

கங்கைக்கரைபார்த்தேன் கள்ளுக்கடைபார்த்தேன்
அங்காடிவீதியெங்கும் அணுவணுவாய்ப்பார்த்தேன்
சிங்காரதோப்பிலெங்குந் தேடிதேடிப்பார்த்தேன்
எங்கேதான்போனுனோ இன்னம்வரக்காணேமாண்டே

தோட்டிச்சி வசனம்.

ஆண்டமாரே யென் வீட்டுக்காரனைகண்டிருப்பீர்களா அவன்விடியபிரப்பட்டு வந்தான் இன்னம்காணேம்.

அவுட்டு இராமசாமி அய்யர்வசனம்.

என்னடிசூத்திரமுண்டேயெட்டப்போ மேலேவிழுகிறுய்பறைச்சிகளுக்கெல்லாம் பணமேறினல் மேல்குலமென்றுங் கீழ்க்குலமென்றுந் தெரியாதோ போடிபோ.

தோட்டிச்சிசொல்-நொண்டிச்சிந்து.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

ஜாதிவிபரஞ்சொல்வேன் ஆண்டமாரே
தயவுசெய்ததைகேளும் சபையோரே (ஜா)

அநுபல்லவி.

பேதங்கள்நாலுவகை யோனிகளில்
பிறக்கும்உருவமெல்லாம் எந்தன்பிள்ளையே
வேதனைச்சிறையிலிட்ட வேலன்
விநாயகனெனக்குத் தலைபிள்ளையே (ஜா)

சரணங்கள்

அயனைக்கண்டெடுத்தேன் ஆதி
அருமைப்பிரணவத்தால் கெற்பமடைந்தேன்
மயேஸ்வரனைக்கைபிடித்தேன் நடன
மாடதைத்தேனெனைத் தேடவைத்தேன் ா)

அரியென்கூடப்பிறந்தான் அவனியி
லாடுங்கருவிகளை யான்படைத்தேன்
தெரிவீரதெட்சணமிருப்பே னுவன்று
திருமுலைபடைத்தவள் நானுண்டே (ஜா).

வேதத்தின்முடிவானேன் பிணங்கள்
வெந்திடுஞ்சுடலைபி னிலையானேன்
சாதனையாவுமறிவேன் கொடிய
சண்டாளபிணங்களைத் தண்டித்தடிப்பேன் (ஜா)

வாக்குமனதறிவேன் மானிடர்கள்
மந்திரமுந்தந்திரமும் யானறிவேன்
தாக்கணங்குநாத்தி எனக்கு
சாமளாபேர்சாற்றி னேனுண்ட (ஜா)

தோட்டிச்சி வசனம்.

ஏ ஆண்டமாரே உங்காள்சாதிமட்டும் ஒசத்தியென்றுயெ ண்ணினீர்களோ வுலகத்தி லுள்ளோர்க் கெல்லாம் பிள்ளையல் லவா அப்படியிருக்க யென்னை யெட்டப்போவென்று சொல்லு கிறீர் எல்லாப் பண்டவாளமும்பார்த்தால் தெரியும் நல்லதிருக் கட்டும் யேனையா யென்புருஷனை பார்த்தீர்களா இங்கே யாரோ ஒரு ஆளைக் கிரயத்துக்கு வாங்கப் போறேனென்று வந்தான்கா ணோம்.

அரிச்சந்திரன் வசனம்

ஆம்மா நான்தான்வீரவாகுதேவர்க்கு அடிமையானயான வன்பென்பேர் அனிச்சத்தோட்டி யென்னைக் கிரயத்துக்கு வா ங்கினவுடன் இந்தமாமிசக்காவடியைத்தூக்கிக்கொண்டு வீட்டு க்குப்போகும் படியாகவும் தான் கள்ளுக்கடைக்குப் போய்விட் டு வருகிறதாகவுமிந்தமாமிசத்தைச்சீக்கிரம் தங்களைச்சமைக்கச் சொன்னார்.

தோட்டிச்சிவசனம்.

அடடா யிதென்ன அனியாயம் தெய்வத்துக்காவது பொ றுக்குமா நீயெந்ததேசத்து ராஜாவோ பெத்தனைதேசத்தையா ண்டீரோ யெவ்வளவும்மேன்மையாயிருந்தீரோ உன்னைப் பார்த் துவாங்கவந்தானே சண்டாளன் நல்லதிருக்கட்டும் யிதுதான் நம்மவீடு காவடியிறக்கும்.

அனிச்சத்தோட்டி வசனம்.

அம்மா யான் சும்மாயிருக்கக்கூடாதுயேதாவது ஒருவேலை சொன்னால்.செய்கிறேன்.

தோட்டிச்சி வசனம்.

அப்பா இதோ நிற்கின்ற கன்றுக்குட்டிக்கி புல்லறுத்துக் கொண்டுவந்து போடுமேப்பா ஆண்டே.

அனிச்சத்தோட்டி வசனம்.

இதோ புல்லறுத்து வந்துவிட்டேன் இனியென்ன வேலை செய்யவேணும் சொன்னால் செய்குறேன்.

தோட்டிச்சி வசனம்.

அப்பா யிந்தக்கன்றுக் குட்டியையேனும் உரித்துக் கொடு சமைக்க.

அனிச்சத்தோட்டி
கன்று அறுக்கிற பாகம்.

அனிச்சத்தோச்டி வசனம்.

கடவுளே! யுனதருளோ! யிது வுமையாகர்மமென்ன செய்தேன் முப்பிறப்பில்பானும் மடமயிலோடெனதருமை மகனை விற்றுமனம் வருந்திப் புலைபனுக்காளாகிப்பின்னும் அடைவிலாத் தொழிற்செய்ய லபித்தாயென்னை அவனிதனில் வசையாகப்பேசிடாரோ! திடமாயிக்கோவின் கன்றறுக்கச் தியங்கு தினியென்செய்வேன் தேவதேவே.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-சாப்பு.

பல்லவி.

பாவியாகினேனையோ பாமேபாமேபாமே. (பா)

அநுபல்லவி.

ஆவிசோருதேயெந்த னங்கம்பதருகிந்த
கோவின்கன்றையருக்குங் கொடுமைகொடுமைகொடுமை. (பா)

சரணங்கள்.

செய்யாதகொடுமைகள் செய்தேனேஉலகினில்
ஐயோபசுவின்கன்றையறுத்தேன் அறுத்தேன் அறுத்தேன்.(பா)

உடலைவருந்திதோ உரித்தேன்தொலியதனை
பிடரிமாங்கிசந்தன்னைப் பிளந்தேன்பிளந்தேன்பிளந்தேன்.(பா)



காலொதிக்கியிதோ வெடுத்தேன்மலிக்குடலே
காரையெலும்பைத்துண்டாய்க் கழித்தேன்கழித்தேன்கழித்தேன். (பா)

பின்முதுடை முன்சந்து பிரித்தேன்கல்செவிநாக்கு
என்செய்வேன்விலைப்பய னிதுவோவாயிதுவோவாயிதுவோ. (பா)

பட்டுமையையோசூரி பதறியறுத்தேன்மீறி
கொட்டுதென்கரமிசை குருதிகுருதிகுருதி. (பா).

அனிச்சத்தோட்டி வசனம்.

கைலாசபதேயிதுவும் உன்திருவருளா யான் செய்யத்தெரியாத தொழிலை செய்ததில் வாளானது யென்கரத்தில்பட்டு ரத்தம் பீரிடுகிறது என்செய்வேன்.

தோட்டிச்சி வசனம்.

ஆண்டே அழுகிறுயே! யென்ன சமாச்சாரம்.

அனிச்சத்தோட்டி வசனம்.

யான் கன்றை உரித்துக்கறியை யறுக்கும்போது காத்தில் வாள்பட்டு அறுத்து விட்டதினுல் ரத்தங்கொப்பளித்ததைப் பற்றி வருந்தினேன் வேறொன்று மில்லை.

வீரவாகு வசனம்.

அடியே! தோட்டிச்சி நம்மாள் அனிச்சத்தோட்டி வந்தானுசொல்லடி சொல்.

தோட்டிச்சி விருத்தம்.

நல்லதுபறையாகேளாய் நானிலமரசுசெய்யும்
வல்லவனிவரைநீயும் வாங்கவுமடிமைநன்றோ
சொல்லவும்தகுமோகையைச் சூரியாலறுத்துக்கொண்டார்
தொல்லையீதவரைவேறு தொழிற்செய்யக்கூறுவாயே.

மேற்படி வசனம்.

அடாசண்டாளா யிவரைக்கிரயத்துக்கு வாங்கவும் மனஞ்சம்மதித்ததா இவர் யெந்தவூர்ராஜாவோ இவரை வேலை செய்யும்படி அனுப்பிவிட்டாய் அவரை யிந்தக்கன்றையறுத்துக் கொடுக்கச்சொன்னேன் அவர்கைதனில் வாளாலறுத்துக் கொண்டாரடாபாவி.

வீரவாகு வசனம்.

அடிபோடி பயித்தியகாரி இவன் உன்னைப்பெண்பிள்ளையென்று யேச்சுவிட்டான் கையிலாவது அறுத்துக்கொண்டதாவது

வீரவாகு வசனம்.

அடடா அனிச்சத்தோட்டி யென்பெண்சாதி இந்தக்கன்றை யறுத்துக்கொடுக்கச் சொன்னால் அவளையேச்சுப்போட்டு சும்மா யிருப்பதற்காகவா கையிலறுத்துக்கொண்டாய் யிதோ உதைத்தேன் விட்டிலுள்ள வேலைகளை செய்யடா செய்.

இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

தாளிணைநோகாதா உந்தன் தாளிணை நோகாதா
தமியேன்றனையு தைத்த. (தா)

அநுபல்லவி.

ஏழைமீதிலுமக்கு யேது இந்தக்கோபமுந்தன். (தா)

சரணங்கள்.

என்னையடிமைகொண்ட யீமகாவலா உமது
சொன்னமொழிமாறியென்ன துரோகஞ்செய்தேனுமது (தா)

சண்டாளனாலுமக்கு தப்பிதஞ்செய்தாலுமதை
கொண்டுபொறுத் தென்னையாளும்கோவைக்கனிபோல்சிவந்து. ()

செய்யத்தெரியாததொழில் செய்ததில்மெய்பதரி
லையோயென்கைதனிலே அறுத்துக்கொண்டேன்வாளாலுந்தன்

அனிச்சத்தோட்டி வசனம்.

ஏனப்பா வீரவாகுவே நானென்ன குறைவு செய்தேன் தன்னுடையபாதம் நோகும்படி உதைத்தாய் யென்செய்வேன்.

வீரவாகு வசனம.

நயிந்தே நல்லது யென்கால் நோகாமலிருக்குமா இதோ சயனித்துக்கொண்டேன் யென்கால்வலி நீக்கும்பொருட்டு காற்பிடித்துவிடவேண்டுமப்பா நயிந்தே.

அரிச்சந்திரன் சொல்.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

கடையனுக்கடிமை யானதுமன்றிக்
காலும்பிடிக்க வைத்தாயீசா (க)

அநுபல்லவி.

நடனசபாபதி ஞாயமோயிதுசதி
யிடம்பொருளேவல்மூன்று மிழந்தோரென்னைப்போலுண்டே. (க

சரணங்கள்.

அன்னை தந்தை சற்குருதெய்வம்
தன்னையிகழ்ந்தறியே ஹன்
முன்னைசெய்தவினையோ என்னைவருந்தியிந்த
மோசமதாய்வேஷமாகி கூசுதையையோமனது. (௧)

மன்னனாகப்பிறந்து பாவி
என்னசுகமடைந்தேன் ஐயோ
கன்னலின்முத்துதிருங் காசினியையிழந்து
காதலியோடென்மகனை வேதியரிடத்தில்விற்று. (௧)

வீரவாகு விருத்தம்.

மஞ்சனையகாதலனே சொல்லக்கேளாய்
மயானமெந்தன்சொந்தமிந்த நகரிலுள்ளோர்
துஞ்சினவர்தமையெடுத்து வருவாய்கோடித்
துண்டிமுழம்பணங்கால்வாய்க் கரிசியீவார்
மஞ்சுமுழத்துண்டுகோல்ப் பணமுமெந்தன்
பாலளித்துவாய்க்கரிசி நீமட்டுண்டாய்
செஞ்சொல்மறைக்கம்பளமீ தாகுநெஞ்சந்
தேறுவாய்சுடலயகஞ் சேருவாயே.

வீரவாகு வசனம்.

அனிச்சத்தோட்டி இந்தவேலைபார்த்தற்கு அவனே யிவனேசிவனேயென்று உளறுகிறாய் பென்வீட்டுவேலைபார்க்க உனக்குச்சரிப்படாது இந்தக் காசிச்சுடலை யென்காணி யெனக்குச் சொந்தம் அதில் யானிருந்துவருங்காலையில் சவங்கொண்டு வருபவரிடத்தில் கால்பணம் முழத்துண்டு வாய்க்கரிசி வாங்கிவருகிற வழக்கம் இப்பொழுது நீ அந்தச்சுடலைக்குச்சென்று இரவுபகலில் ரெம்பவும் உசாராயிருந்து சவங்கொண்டு வருபவர்களிடம் வழக்கம்போல வாங்கி வாய்க்கரிசியைமட்டும் நீபுசித்துக் கொண்டுபண முழத்துண்டையும் நமக்கனுப்பிவிட்டுரொம்பவும் உசாராயிருக்கவேண்டியது இந்தச்சவஞ்சுடுங் கோல்பிடி கிக்கிரஞ்செல்.

அளிச்சத்தோட்டி விருத்தம்.

எண்டிசைமன்னர்போற்ற யாவருமேற்றவாழ்ந்தேன்
மண்டலமுனிக்கித்தந்தேன் வாங்கிடாக்கடனுக்காக
பெண்டுடன்பிள்ளைவிற்றேன் பெரும்பறைக்கடிமையானேன்
கண்டவர்நகைக்கவீமக் காத்திடத்தலைப்பட்டேன்.

இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

போரேனிதோசுடலை காக்கவே.(போ

அநுபல்லவி.

தாரணியிழந்தேன் தைரியந்தளர்ந்தேன்
தையலொடுமகனைப் பிறிந்தேன்துணிந்தேன்.(போ)

சரணங்கள்.

மான்மழுக்கரனே மவுனதற்பரனே
மறைதேடியகங்காதரனே அரனே(போ)

பறையனுக்கடிமை பட்டேனென்கொடுமை
பாரெங்குமிதை நகைத்திடுமே(போ)

சவத்தையுந்தூக்கி தணலிடைதாக்கி
தசையுமெலும்பையுநீ ருக்கிபோக்கிடப்(போ)

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்ஆதி.

கண்ணிகள்.

போரேனிதோசுட்லை போரேனுனிதோ
புலையனுக்கடிமைத் தலைவிதியாலே(போ)

நீராயோயெனதுதுயரம் தேவாஉன்பரமே
தேவிடப்பாகமதில் மேவியபரமே(போ)

மாநிலத்திலேசிறந்து மகிழ்ச்சியாய்வாழ்ந்தேன்
மாமுனிசதியாலெந்தன் மனமிகதாழ்ந்தேன்(போ)

பஞ்சைபோலேபரதவித்து நெஞ்சம்வாடினேன்
பறையன்போலேவேடமாகி யீமம்நாடினேன்(போ)

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

சரணங்கள்.

சம்மதமாவுந்தனுக்குந் தமியேன்படுந்துயரம்
தற்பரவடிவேமுடிவே குருவேயிது (ச)

செம்மலென்றுபேர்வகித்து செங்கோல்செலுத்தமென்னை
சிந்தைநொந்துவாடவிட்டாயே தேவாதிதேவா (ச

மண்டலத்துமன்னரென்னை வந்துபலிர்ந்ததும்போக
தொண்டுசெய்யவிட்டாய் நீசற்காய்சுடலைசென்று. (ச)

பெண்பிள்ளைதன்னைக்கால கண்டரிடங்கொண்டுவிற்று
பெண்டுவினையாலேவாடுரேன் பறையன்போலே. (ச)

காலத்தாலிக்கோலமாறி கம்பளிலையப்போர்த்திக்கொண்டு
வேலைசெய்யபோரேனையையோ வெட்டியான்போலே. (ச)

வெள்ளிக்காசுகேட்போர்க்கெல்லாம் அள்ளியீந்தகைகளாலே
கொள்ளிக்காசிவாங்கப்போரேனுன் மகானுபாவா. (ச)

பேய்க்குகந்தயீமங்கண்டு பிணத்துக்குரியதுண்டு
வாய்க்கரிசிவாங்கப்போரேனுன் கொடியபாவி. (ச)

அனிச்சத்தோட்டி-வசனம்.

விஸ்வேசா இந்த சண்டாளன்பேரில் இன்னம் உன்திருவருள் இரங்கவில்லையா யானிருக்கின்ற கோலத்தைப்பார்.

உ

பரமபதிதுணை.

அரிச்சந்திரன்.

மயானங்காக்கிறபாகம்.

அனிச்சத்தோட்டி-விருத்தம்.

சுடுகாட்டினருகடைந்து பாடைக்கம்பைத்
  தொட்டெடுத்துக்குடிலொன்றும்பந்தலொன்றும்
யிடுகாட்டினருகமைந்து வருவோர்க்கெல்லாம்
  யீவகாவலனடிமை யானென்ருேதி
கொடுங்காசுமுழத்துண்டும் வாங்கித்தங்கள்
  கோமானுக்கனுப்பி வாய்க்கரிசியோடு
கொடுங்காலகமக்குமிது வென்றேகண்ணீர்
  சோர்த்திட்டேன் சுடலைகாத்திட்டேனே.



இராகம்-தேசிகக்கமாஸ்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

விஸ்வேசாவுன்றன்பாதம் வேண்டினபலனிதுவோ
வெட்டியான்போல் வேடமானேன்
வெந்துயரால் நோகலானேன்
வேண்டினேன் வேண்டினேன் வேண்டினேன் வேண்டினேன் (வி)

மன்னவர்களென்னைவந்து வணங்கிநின்றதும்போக
என்னைச்சுற்றி லும்பேய்வந்தே
யிரைந்தகோரச் சத்தந்தந்தே
ஏகுதே ஏகுதே ஏகுதே ஏகுதே. (வி)

வாலடையாளுடன்மெலிந்து மனதுமிகநலிந்து
பாடைக்கொம்பா லியற்றிய
பரண்மீதி லுற்றேன்கண்ணால்
பாருமே பாருமே பாருமே பாருமே. (வி)

செங்கோல்பிடித்தவென்றன் திருக்கரத்தாலுன்மைந்தன்
சங்கையில்லா திவ்ருவந்து
சவஞ்சுடுங் கோல்பிடிக்கத்
தர்மமா தர்மமா தர்மமா தர்மமா. (வி)

இந்தநகரிலுள்ளோ ரெடுத்துவருஞ்சவத்தை
யெடுத்துத்தண லாக்கிடவும்
என்மேல்புகை தாக்கிடவும்
என்செய்வேன் என்செய்வேன் என்செய்வேன் என்செய்வேன். ()

இடுகாற்பணமுந்துண்டு மீயு வாய்க்கரிசிகொண்டு
சுடுகாடு காத்துவாரேன்
தொல்லுலகோர் வசைபேச
சோதனை சோதனை சோதனை சோதனை. (வி)

ஏழையாகினேன் காரு ணீசாகடைக்கண்பாரும்
தாளிணைப ணிந்தேன்வாரும்
தமியேனுக் கருள்தாரும்
தற்பரா தற்பரா தற்பரா தற்பரா. (வி)

அனிச்சத்தோட்டி விருத்தம்.

மண்டலத்தாசைநீக்கி மயானத்தைக்காக்கவைத்தாய்
பெண்டுடன்பிள்ளைநீக்கிப் பேய்நடுவிருக்கவைத்தாய்
கண்டவஸ்திரங்கணீக்கிக் கம்பளந்தரிக்கவைத்தாய்
எண்டலத்தோருக்கெட்டா வீசவென்கோலம்பாராய்.

இராகம்-தேசிகக்கமாஸ்-தாளம்-சாப்பு.

பல்லவி.

பாருமென்றன் கோலத்தைக்கண்ணால் பார்வதிமோகா

அநுபல்லவி.

நாரணனும்நான்முகனும் நாடியுங்காணுதபாதா
பூரணமதாய்நிறைந்தவா புலையனானேன். (பா)

சரணங்கள்.

சுந்தரமணிமகுடஞ் சூட்டியவெனதுசிரங்
சுந்தலைபலியமேவாவைத்தாய்க் கமலப்பாதா. (பா)
சம்ப்ரமமதாயுயர்ந்த சாலுவையணிந்ததேகம்
கம்பளியைப்போர்த்திடவைத்தாய் கருணாகரா. (பா)
மாடமலிமேடைமீதில் மகிழ்ந்திருந்ததும்போக
பாடைமரத்தாலமைத்திட்ட பாண்மேனுற்றேன். (பா)
தேசம்புகழ்ந்திடமேய செங்கோல்பிடித்தகையால்
வீசுமயிணமோசுடவைத்தாய் விமலாவின்று. (பா)

அனிச்சத்தோட்டி வசனம்

விஸ்வேசா வென்னை இக்கோலத்துக்காளாக்கி விட்டாயே யானென்செய்வேன்.

பாரிஸ் நடத்துகிறபாகம்.

பொது வசனம்.

இவ்விதம் அனிச்சத்தோட்டி மயானங்காத்துக்கொண்டிருக்குங்காலத்தில் அந்தக் காசிப்பட்டணத்தி லிறந்துபோன ஒரு பிரேதத்தைச் சிலர்கூடித் தூக்கக்கொண்டு மயானத்திற்கு வந்துகருமத்திற் குரியவர்கள் கருமஞ்செய்யவும் இறந்துபோனவனுடைய பெண்சாதி அவனுக்குச் 'செய்யவேண்டிய கருமஞ் செய்யும்போது அழுகிற விதங்காண்க.

இராகம்-காம்போதி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

மாலைதந்தலியாய்விட்டுமடிந்தீரோவென்றுசைமன்று மன்லில்
வாழ்ந்தாள்போதுமென்றுமறந்தீரோவடியாளையிந்நாள்.

அன்னமேவாடுயென் றழைப்பதுய்ஙீரினியெப்போ வெகு
அருமையுடனேயுந்த வரும்பாவிமனமிகவொப்ப.

பத்தாவில்லாதகொடும்பாதாகிபாதகியென்பார் சாமி இந்தப்
பலனுக்கோநரனிருந்தேன் பரியாசஞ்செய்யாதோபூமி.

மதனும்ரதியும்போல வாழ்ந்திருந்தோம்வெகுவாக இன்று
வருத்தமாயடியாளை மயங்கவிட்டீரேமனம்நோக.

பஞ்சவர்ணப்பட்டைப் பண்பாயணிந்ததும்போக வண்ணான்
கஞ்சிப்புடவையைக் கட்டவிட்டீரேவெகு வாக

பிரியமுடன்வளர்த்த பிள்ளைகளழுவதைப் பாரும் சற்றும்
பேசாமலிருப்பது சுகமென்றிருக்கின்றீரோநீரும்.

ஆரைச்சதமென்ன வடியாளுயிரினி தரிப்பேன் என்ற
ஞைமன்னவாமனங் கூசாமலெப்படியிருப்பேன்.

பாக்கியம் வசனம்.

என் கண்ணாளா நானெந்தக்காலத்திற் றங்களுடையமுகா ரவிந்தத்தைப் பார்க்கப்போகிறேன் தாங்க ளருந்தவஞ்செய்து பெற்றகுழந்தைகளையும் அடியாளையும் யார்பாதுகாப்பார் யா னென்னசெய்யப்போகிறேன் சண்டாளி.

உறைவின்முறையார் வசனம்.

அம்மா பாக்கியம் மயங்காதே யிருக்கட்டும் நீ கொடுத்து வைத்தபாக்கிய மிவ்வளவுதான் நாங்களெல்லாமிருக்கும்போது உன்னைக்கைதவறவிடுமோ ஆரடாகுடியகன்.

குடிமகன் வசனம்

சாமிகும்படுகிறேன் ஐயாவுங் காலத்தைக்கடத்திக்கொ ண்டுபோய்விட்டார்கள் இரண்டுமாச சம்பளங்கூடப் பாக்கியி ருக்கிறது அறம்மா இருக்கிறுங்கோ வாங்கிக்கொள்கிறேன்.

உறவினர் வசனம்.

அடா குடிமகனே நல்ல திருக்கட்டும் பேசிக்கொள்வோம் தம்பிக்குவேலைசெய்யடா.

குடிமகன் வசனம்.

இதோ செய்துவிட்டேன் அரிசி போடுகிறவர்களெல்லாம் போடுங்கள் சுவாமி.

உறவினர் வசனம்.

ஆராப்பாதோட்டி இந்தப்பிரேதத்தைத் தகனஞ்செய்.

அனிச்சத்தோட்டி வசனம்.

எனக்குள்ள சுவந்தரத்தைக்கொடுத்தாள் சுட்டுவிடுகிறேன்.

உறவினர் வசனம்

என்னப்பா அனியாயமாயிருக்கிறது வழக்கமில்லாவழக்கம் கேட்கிறாய் வீரபாகுவாயிருந்தால் நாங்கள்சும்மாதான் தகனஞ் செய்துபோவோம்.

அனிச்சத்தோட்டி வசனம்.

நல்லது இருக்கும் நாவவருக்கடிமை அவருத்திரவின்படி காற்பணம் வாய்க்கரிசிமுழத்துண்டு வாங்கிக்கொண்டுதான் தகனஞ் செய்வேன்.

உறவினர் வசனம்.

அப்பா காவலா அதுகளேழைகள் மனதுகந்து தகனஞ் செய் உனக்குபுண்ணியமுண்டு அப்படியில்லையானால் நாங்களாவது தமனஞ்செய்துவிடுகிறோம்.

அனிச்சத்தோட்டி வசனம்.

எனதுடைய காவலிலெனக்குச் சுவந்திரங்கொடாமல்நீங்களாகப் பிணத்தைச்சுட்டுக் கொள்வீர்களா பிரேதத்தைத்தூக்கியப்பார் செல்லுங்கள்.

உறவினர் வசனம்

என்னப்பா பயித்தியகாரனு யுளறுகிறாய் நீ யில்லாமற்போனால்தகனஞ்செய்யமுடியாதோ இதோதகனஞ் செய்கிறேன்பார் ஆரடாவிறகெடு எருவெடு மண்ணுயுங்கள் இவன் கண்முன்பாக நாம்சுடாமற்போனால் என்னயோக்கியதையாச்சுது.

அனிச்சத்தோட்டி சொல்.

இராகம்-கல்யாணி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

கொடுத்துத்தகனஞ்செய் காசைக் கொடுத்துத்தகனஞ்செய்
கூடாதேகுறம் பாடாதேகையில் (கொ.

அநுபல்லவி.

அடுக்காததேசி தொடுக்காதேநீதி
ஆகுமோபோடா யேகுவாய்மூடா
அப்புறஞ்செல்லு நிற்கா தப்புறஞ்செல்லு
அறிவேனுனதுசமர்த்து தெரிவேன்யாவுமிருத்து
விரியாதேகடையிங்கே மரியாதையுடனென்கை. (கொ.

சரணங்கள்.

ஏழையென்றுசாலம்பேசி ஏமாற்றிவிடவந்தீரோதோஷி
ஏற்காதுபோடா இது ஏற்காதுபோடா
எடுப்பாய்க்காற்பணந்துண்டு கொடுப்பாயரிசிவேறுண்டு
தடுக்காதேவிவகார மடுக்காதேயுன்றீரம். (கொ)
எஜமான்வீரபாகுவுக்குள்ள ஏற்கையானசுவந்தரந்தள்ள
ஏதொண்ணுதது தள்ள வேதொண்ணுதது
என்னலாகுமோநீக்குச் சொன்னுற்தெரியாதோவேற்க
இந்நகரில்லையோநீங்க ளன்னீதஞ்செய்குதீர்போங்கள். (கொ.

அனிச்சத்தோட்டி வசனம்.

சும்மா வாதாடுவதி லென்னபிரயோசனம் என் எஜமானுக்குரிய சுவந்தரங்கொடுத்தால் சுடுவேன் இல்லாவிடிற் பிரேதத்தைத் தூக்கிச்செல்லுங்கள்.

உறவினர் விருத்தம்

சுடுகாடுகாத்துவரும் புலையாநாங்கள்
சொன்னதையெல் லாந்தடுத்துச்சுவந்தரத்தைக்
கொடுவென்றுகோபமதாய்ப் பேசுகின்றாய்க்
கோலமோநாங்கள்வந்த காலமோதான்
இடுகாட்டுக்குரியவாய்க் கரிசிதுண்டு
ஏற்கையுள்ளகாற்பணத்தை யீந்துவிட்டோம்
வடுவின்றிபிணத்தைநீ சுடவேவேண்டும்
வழுத்தினேமனலையினிக் கொளுத்துவாயே.

உறவினர் வசனம்.

காவலாவேன்கோபிக்கின்று யிதோ கார்பணம் வாய்க்கரிசி முழத்துண்டு கொடுத்துவிட்டோம் இனிப் பிரேதத்தைச் சுத்த மாகத் தகனஞ்செய்யவேண்டியது நாங்க ளிதோபோகிறோம்.

அரிச்சந்தோட்டி வசனம்.

நல்லது இதோ தகனஞ்செய்துவிடுகிறேன் செல்லுங்கள்.

பொது வசனம்.

இவ்விதமாக அரிச்சந்திரன் மயானத்திற்கு வரக்கூடிய பிணங்களைத் தகனஞ்செய்து வாய்க்கரிசியைக் கோவுக்குவைத் துச் சாணங்கழுவிச் சமைத்துச் சாப்பிட்டுக்கொண்டு வந்தான் பின்பு சந்திரமதியும் லோகிதாசனும் காலகண்டர்வீட்டிலிருந்து வேலைசெய்து கொண்டு வருகிறவிதங்காண்க.

காசிகாண்டம் முற்றிற்று.

மயானகாண்டம்.

சந்திரமதி விருத்தம்.

விதிவசத்தாலேயந்த வேதியர்வீட்டிற்சந்திர
மதியுடன்மகனுமிந்த வாறுபோய்ச்சேர்ந்து இந்த
கதிவருமென்றுசற்றுங் கனவிலுமறியேன்இப்போ
சதிருடன்வேலைதன்னைச் சாற்றினாற்செயவேன்சாமி.

மேற்படி வசனம்.

சுவாமி காலகண்டபகவானே அடியாளுக் கேதேனும் வேலை சொன்னாற்செய்கின்றேன்.

காலகண்டன் விருத்தம்.

விடியவொருசாமமதி லெழுந்திருந்து
  வீட்டிலுள்ளபாத்திரங்கள் விளக்கல்வேணும்
குடமெடுத்துச்சலந்திரட்டி மாட்டுத்தொட்டிற்
  குறையாமல்நிரப்பியக மெழுகல்வேணும்
மடந்திண்ணைவெளிவாசல் மாடடுக்கொட்டம்
  வாருகோலாற்பெருக்கிக் கோலமிட்டு
விடியுமுன்னேபதிங்கலமெற் குத்தவேணும்
  விடிந்தபின்புபலவேலை யிருப்பதாலே.



காலகண்டன் வசனம்.

சந்தி நீ தினந்தோறுஞ் செய்யவேண்டியவேலை யாதென்றால் விடியவொரு சாமத்திலெழுந்திருந்து குடமெடுத்துச்சலந் திரட்டி மாட்டுத்தொட்டில்களை நிரப்பவேண்டும் வீடுவாசல்மெழுகிக் கோலமிடவேண்டும் விடிந்தபின் வீட்டின்வேலைசெய்து மைற்றின கூழுண்டு உறங்கல்வேண்டு மிவ்வளவுதான்.

சந்திரமதி விருத்தம்.

சந்தனம்பன்னீர்கரைத்த கையால்மாட்டின்
சாணமதைக்கரைத்திறைக்க லாச்சுதேடி
வந்தவர்கட்கன்னமிடுங் கையாலுத்தை
வாருகோல்கொண்டுபெருக் கிடவுமாச்சே
கந்தமிகுங்குழற்குச்சம் பங்கிநீங்கிக்
கடும்புழுதியடைந்துகற்றைச் சடையமாச்சே
முந்தவினைப்பயனிதுவோ வீசாவாசா
முடித்திட்டாயெனக்குவிதி படித்திட்டாயே.

இராகம்-முகாரி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

மாநிலத்திலுள்ள மாதர்க்கரசியாய் வாழ்ந்தேன் இப்ப
கானப்புலிச்சிபோற் கவுசிகர்மாயையாற் றாழ்ந்தேன்.

மலையில்வைத்ததீபம்போல்மாபாவியெங்குஞ் சிறந்தேன்வேடன்
வலைதனிற்சிக்கியமான் போலேமனமிகச் சோர்ந்தேன்.

கொண்டகணவன்றனைச் சண்டாளியான்பிறந் தேனே கால
கண்டர்க்கடிமையாகிக் கஷ்டப்படுகிறே னே

தாதியரேவல்செய்ய சப்ரமஞ்சத்திருந்த பாவி
வேதியர்வீட்டினில் வேலைசெய்தலுத்ததென் னாவி.

பட்டுப்பீதாம்பரம் பண்பாயுடுத்துமென் சிற்றிடை காஷி
யிட்டபழந்துணியைக் கட்டவிதித்த தெனக்குடை

வாசமிகுந்தமலர் வாரிமுடிக்கின்ற சென்னி யிப்ப
தேசிழந்துகுப்பை சிக்கிச்சடையாகப் பின்னி.

[illegible]ந்துசவ்வாதுபனி நீர்சேர்ந்தணிகின்ற கைகள் வீசுஞ்
சாணம்பிசைந்தெருத் தட்டலால்நோகுதென் மெய்கள்

இராகம்-தேசிக-கமாஸ்-ரூபகம்.

கண்ணிகள்.

பரமேடன்னடியிணை பணிந்தபலனோயென்னை
தரமில்லாவேலைசெய்யச் சபித்தாயய்யையோ-சிவ
சங்கராசங்கரா சங்கராசங்கரா. (பர)

சலந்திரட்டியேமுத்தந் தன்னைம்பெருக்கிசித்தம்
கலங்குதெனதுசித்தம் கர்த்தனேபிந்நெல்லுகுத்த
காலமோகாலமோ காலமோகாலமோ. (பர)

கொட்டத்துச்சாணந்திரட்டிக் குவித்தெருமுட்டைதட்டி
திட்டமுடனெங்குங்கோலந் தீட்டுறேனையையோகாலம்
தெய்வமேதெய்வமே தெய்வமேதெய்வமே (பர)

காட்டுவலைச்சியானேன் காலகண்டர்க்கையோநானே
வீட்டுப்புலைச்சியானேன் வெள்ளாட்டிபோல்வேஷமானேன்
விஸ்வேசாவிஸ்வேசா விஸ்வேசாவிஸ்வேசா. (பர)

ஆம்பலைநிகர்த்ததிரேகம் ஐயையோயிதென்னதுரோகம்
சாம்பனுமன்னும்பிரண்டு தங்கியவேர்வைதிரண்டு
சாருதேசாருதே சாருதேசாருதே. (பர)

மாணிக்கர க்கடிபன்னீர் மலரணிந்திட்டசென்னி
சானியுங்குப்பையும்பின்னி சடையாகுதையோகன்னி
தயங்குறேன்தயங்குறேன் தயங்குறேன்தயங்குறேன் (பர)

காலகண்டி வசனம்.

ஏன்காணும் ஆத்துக்காரரே சந்தியைபேதுக்காக கிரயத்துக்குவாங்கினீர் வெருனே உட்கார்ந்து அவனேயிவனே சிவனே யென்றிருக்கிறுள் நீகேட்டயிலேபோக வாங்கவேண்டாமென்றுனும்கேட்கிறுயா.

காலகண்டன் வசனம்.

அடி ஆத்துக்காரி இதோ வேலையெல்லாஞ் செய்யச்சொல்லுகிறேன் சந்தி யென்மனையாள்சொல்லுப்போல வேலைசெய்யடிசந்தி.

சந்திரமதி வசனம்.

சுவாமி வேலைகளெல்லாஞ் சரியாச்செய்கிறேன் காலகண்டபகவானே.

SPeV Valluvanar

காலகண்டன் வசனம்.

நாளையதினம் நம்மாத்தில் திதியாகையால் இன்று உன்மகனை வனத்திற்சென்று காறை பிரண்டை முன்னை முசுட்டை மாவிலை தெர்ப்பை சமித்து இதுகளெல்லாம் அதிசீக்கிரம்கொண்டுவரச்சொல்லடி சந்தி.

சந்திரமதி விருத்தம்.

மறையவாவென்றன்பிள்ளை மனந்துணிந்தனுப்பநீரும்
சிறியவனென்றுவுன்றன் சிந்தையிலிரக்கம்பாரீர்
வறுமமுமனதில்வேண்டாம் வனத்துக்குயேகியானும்
கறியிலைசமித்துங்கொண்டு சடுகியேவருவேன்சுவாமி.

இராகம்-காப்பி-தாளம்-ஆதி.

பல்லவி.

காலகண்டையா வனம்போய்வாரேன். (கால)

அநுபல்லவி.

சோலைவனஞ்சென்றறியான் சந்திரமிகுந்தமைந்தன். (கால)

சரணங்கள்.

சிறுவனையாகிருபைசெய்யும் வர்மம்வேண்டாம்தர்மமல்ல.(கால)
பல்விழுந்துமுளையாத பாலன்வனம்போகமாட்டான் (கால)
வேதியரேபேதமில்லை நீதமுடன்சென்றுவாரேன் (கால)
கஞ்சரவம்யானையைக்கண் டஞ்சிடுவானென்குழந்தை (கால)
பாரமிருகத்தினுர வாரக்கண்டுபயங்கொள்வான் (கால)
ஆலமுண்டகண்டசிவ ஞதிஞதித்தபாலனையா (கால)
தெர்ப்பைமுன்னைசமித்திதோ சேகரித்துயான்வருவேன். (கால)

சந்திரமதி வசனம்.

சுவாமி குழைந்தையெவ்விதம் போவான் யான் வனத்திற்சென்று காறை பிறண்டை முன்னை முசுட்டை மாவிலை தெர்ப்பை சமித்துக்கொண்டு வருகிறேன் சுவாமி.

காலகண்டன் வசனம்.

சந்தி கிச்சான்மட்டும் போகவழிதெரியாதுதான் அகலாத்துப்பிள்ளைகள் வனத்துக்குப்போகிறுர் அவர்களுடன் போய்வரச்சொல்லடி சந்தி.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-சாப்பு.

பல்லவி.

வனம்போய்வருகுறேனையா மறையவரே (வன)

அநுபல்லவி.

மனத்தைரியமில்லா மதலையல்லவோசாமி
சினத்தென்னைகோபிக்கவேண்டாம்சீக்கிரமிதோ (வன)

சரணங்கள்.

சிங்கம்புலியானைபன்றிகள் கரடிசென்னாய்
திரியும்வனம் கிருபைசெய்வீர்
எங்கினிம்கொடியவிடம் இருண்டகானிலதிகம்
அங்கம்நொந்துவாடுவனையோமறைவரே. (வன)

அஞ்சுவயதானபாலகன் அடியாருளங்
தவத்தில்வந்த அருமைலோகிதன்
கொஞ்சமேனுமிரக்கங் கொள்ளாததென்னவனீதம்
கஞ்சமலர்ப்பாதம்போற்றினேன் மறையவரே. (வன)

சந்திரமதி வசனம்.

சுவாமி குழந்தையானதினால் காட்டுக் நப்போவரத் தெரியாது அடியாள்போய் சமித்துமுதலானது கொண்டுவருகிறேன்.

காலகண்டன் வசனம்.

அடிசந்தி நீபேசுகிறது விசித்திர விசித்திரமாய் பேசுகிறாய் லோகிதன்தான் காட்டுக்குப்போய் வரவேண்டும் நீ வீட்டிலுள்ளவேலைகளை செய்யடி சந்தி.

சந்திரமதி வசனம்.

சுவாமி காலகண்டபகவானே ஒருவனாக அனுப்பாதபடிக்கி யாரையாவது துணைகூட்டி அனுப்புங்கள் சுவாமி.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

பல்லவி.

மறையவர்கள்சிறுவர்கள் வந்தார்வனத்திற்கே (மறை)

அநுபல்லவி.

குறைவில்வெண்ணீறுபூசி கூடிக்கூடிவார்த்தைபேசி
இறைவனைமனதிலெண்ணி யேகவேவிவேகமுள்ள. (மறை)

சரணங்கள்.

நாகுமடியிடையிலிட்டு நாகரீகப்பொட்டுமிட்டு
மார்பினில்முன் னூலணிந்து யாதாபிதாவைப்பணிந்து
கட்டுக்கொடியரிவாள்வாங்கி கட்டமுதுந்தோளிற்றூங்கி
திட்டமுடன்கீதம்பாடி சேகரமதாய்க்கூடி. (ம)

சேஷன் வசனம்.

அடா சுப்பு யென்னடா காட்டுக்குப்போகிறதற்கு சாதங் கொணடுவந்தாயோ.

சுப்பு வசனம்.

அடா சேஷா எங்களாத்தில் தத்தியோதனங்கட்டிக் கொண்டு வந்திருக்கிறேன் உங்களாத்தில் என்னகொண்டுவந்தாய்.

சேஷன் வசனம்.

எங்களாத்தில் சம்பாத்தனுகை கொண்டு வந்தேன் புளித் தொகையல்கொண்டு வந்திருக்கிறேன்.

சீனிவாசன் வசனம்.

ஆமடா சேஷா சுப்பா யென்னடாயெங்களாத்தில் விடமாட்டேனென்றார்கள் தத்தியோதனத்தை திருமுடி முடிந்துகொண்டு வந்துவிட்டேன்.

ராமாநுஜம் வசனம்.

ஆமடா சேஷாசுப்பா சீனிவாசா காட்டுக்குப்போகநேரமாகிறதல்லவா இவர் ஆத்தில் ஆர்வருகிறது கேளுங்கள்.

காலகண்டன் வசனம்.

அடா சேஷா நம்மாத்தில் நாளை திதியாகையால் இந்தகிச் சாஸ்வரச் சொல்லுகிறேன் கூட்டிக்கொண்டுபோய் நீங்கள் பரிக்கிறபடிக்கி அவனுக்குப் பரித்துக்கொடுத்துக் கூட்டிவாருங்கள்.

சேஷன் வசனம்.

தாத்தா நல்லது சிறுவன் சுமக்கமாட்டான் ஆத்துக்காரியை யனுப்பினுல் நாங்கள் பிடிக்கி கூடவேகூட்டிக்கொண்டு வருகிறோம்.

காலகண்டன் வசனம்.

அடா சேஷா ஆத்துக்காரிக்கு வேலையிருக்கிறது பிச்சா ணைக் கூட்டிக்கொண்டுபோய் ரொம்ப உசாராகக் கொண்டுவந்து சேருங்கள்.

சேஷன் வசனம்.

ஆகட்டும் தாத்தா பந்தோபஸ்தாய் கூட்டிக்கொண்டு வந்து சேர்க்கிறோம்.

காலகண்டன் வசனம்.

சந்தி இதோ அசலாத்துபிள்ளைகள் காட்டுக்குப் போகின்றார்கள் கூடப்போகச்சொல்லு உன்மகனை.

சந்திரமதி வசனம்.

அடா பாலகா இதோ மறையோர் பாலர்கள் காட்டுக்குச் செல்கின்றனர்கள் அவர்களுடன் காட்டுக்கேகி காறை பிறண்டை முன்னை முசுட்டை மாவிலை சமித்து தர்ப்பை கொண்டுவா கண்மணி.

லோகிதன் வசனம்.

அம்மா தங்களுடைய உத்தரவுப் பிரகாரஞ்செல்கின்றேன் மறையோரிடம் கொஞ்சம் சாதம் வாங்கிக்கொடுக்க வேணும் அம்மணி.

சந்திரமதி வசனம்.

சுவாமி காலகண்டபகவானே குழந்தையைக் காட்டுக்குப் போகச்சொன்னேன் பசிக்குதென்று சாதங்கேட்கிறான்.

காலகண்டன் வசனம்.

சந்தி நீயறியாமல் சாதமேது சும்மா வெறுமே போகச் சொல்லு சந்தி.

சந்திரமதி விருத்தம்.

வாயினில்முலைப்பாலின்னம் மாறவுமிலையேஐயா
பேய்நரிபூதம்யாளி பெரும்புலிநிறைந்தகாட்டில்
போயிவன்பசியால்வாடி புதல்வனுந்தெர்ப்பைகொய்ய
ஞாயமோசாதந்தந்து நலமுடனனுப்புவீரே.

இராகம்-காப்பி-தாளம்-ஆதி.

பல்லவி

பசித்தழுகிறான் பாலன் சாமி பாரும் (பசி)

அநுபல்லவி.

உசிதமுண்டுங்களுக்கு உத்தமனேசித்தம்வையும் (பசி)

சரணங்கள்.

வனமதுவெகுதூரம் மயங்குவானுந்தன்பாரம்
மனதிற்கிருபைகூறும் மதனைமுகத்தைப்பாரும். (பசி)

தஞ்சமெங்களுக்கேது தங்கள்கதியல்லாது
வஞ்சகமில்லிவர்மம் வைப்பதழகோதர்மம். (பசி)

பாங்காகப்பாலமூர்தம் பருகிவளர்ந்தபாலன்
மாங்காயவ்வளவன்னம் மறையோரேதரச்சொல்லும். (பசி)

தலம்புகழுவேமன்னன் தவத்தினுற்றபாலன்
கலங்குறுன்காடித்தண்ணீர் கர்த்தனேதந்தனுப்பும். (பசி)

சந்திரமதிக்கும் காலகண்டையருக்கும் தர்க்கவசனங்கள்.

ச-தி. சுவாமி தங்களுத்தரவின்படி குழந்தையை காட்டுக்குப் போகச்சொன்னேன் பசியென்று அழுகிறான் மாங்காயவ் வளவு அன்னங்கொடுக்கவேணுமையா சுவாமி.

கா-ன். அடிவாடிசந்தி நானன்னங்கண்டு ஐந்துநாளாச்சுது என் வயிற்றைப் பார்.

ச-தி. சுவாமி அன்னமில்லாமல் போனாலும் அன்ன ஜலமாகி லும் கொஞ்சங் கொடுக்கவேணும் சுவாமி.

கா-ன். அன்னமே அபாவாயிருக்கும்போது அன்னஜலம் ஏதடி கிடையாது சந்தி.

ச-தி. சுவாமி அன்னஜலம் இல்லாமற்போனாலும் ஒருகை தவு டாகிலும் கொடுக்கவேணும் சுவாமி.

கா-ன். சந்தி நான் எங்கேயாவது பிரயோஜனம் செய்யப்போவ தாயிருந்தால் காலகண்டி ஒருகை தவுட்டை தொட்டியில் போட்டு இடதுகாலால் கலக்கிவிடுவள் அதை நான் குடி த்துவிட்டு போகுறவழக்கம் அதைக்கெடுக்கப் பார்க்குறு ய என்ன.

ச-தி. சுவாமி தயவுசெய்து சுத்தத்தண்ணீராவது இரண்டு கை கொடுக்கவேணும் சுவாமி.

கா-ன். சந்தி இப்போது சொன்னது சரியான காரியம் இந்த வூருக்கு மேல்புரத்தில் ஒரு குட்டையிருக்கிறது அதில் எட்டயிருந்து ஒருகை தண்ணீர் அள்ளிக்குடித்து விட்டு போகச் சொல்லடி சந்தி.

சந்திரமதி வசனம்.

குழந்தை லோகிதா மறையோரிடம் சாதங்கேட்டேன் கிடையாதென்கிறார் என்செய்வேன் கண்மணி.

லோகிதன் விருத்தம்.

அன்னையேதோழரோடு அடவியிற்சென்றுதெர்ப்பை
முன்னையும்விறகுகொண்டு முடிகியேவருவாயென்று
சொன்னசொற்படியேயானுந் துடர்வனந்தன்னிற்செல்ல
யென்னமாய்க்கூடுந்தாயே யென்பசிதவிழ்க்கொண்ணுதோ.

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

மெத்தபசியாகுதம்மா
மெய்வருந்துதென்னசெய்வேன் (மெ)

அநுபல்லவி.

சித்தநொந்துவாடுவேனே தெர்ப்பைமுனையேதேடுவேனே
உத்தமவேதியரிடம் ஒருபிடிசாதம்வாங்கும் (மெ)

சந்திரமதிசொல்-தரு.

பல்லவி.

என்செய்வேன்மகனே இதற்கேதுங்கெதியில்லையடா (என்)

அநுபல்லவி.

வஞ்சமூற்றகாலகண்ட மறையோர்மிகச்சினந்து
தஞ்சமற்றயேழைகட்குச் சாதங்கிடையாதென்குறார் (எ)

லோகிதன் சரணம்.

தோசைலட்டுபூந்திவடை சுண்டல்சுய்யம்விறகுதம்மா
ஆசைதீரும்படிவாங்கி அருந்துவேன்காசுதாரும் (மெ)

சந்திரமதி சரணம்.

தேசிகருறாரிதியே செல்வமேஉந்தனைப்பெற்ற
தோசியர்தன்கையிலரைக் காசுங்கிடையாகையையோ

லோகிதன் சொல்லல்.

சுந்தரம்போலவேதான் தோழர்வந்துநிற்குறார்கள்
செந்தவுடாவதிலரி தெள்ளியெந்தன்கைக்கொடம்மா (என்)

திக்கோர்புகழெந்தன் தெள்ளமுதேமுக்கனியே
சர்க்கரைதின்கிறவாயால் தவிடுகேட்டாயேபாலா (என்)

லோகிதன் சொல்லல்.

காதையடைக்குதம்மா களைமிகவுண்டாகுதையோ
மாதாவேதண்ணீர்கொஞ்சம் வார்த்தருளசொல்லவேணும். ()

சந்திரமதி சொல்லல்.

தாகத்திற்கேதேனுங்கொஞ்சந் தண்ணீர்தரமெனுமென்றேன்
போகச்சொல்லுஆத்துக்குந்தன் புத்திரனையென்றுசொன்னார்()

சந்திரமதி வசனம்.

அடா கண்மணி கொஞ்சந்தண்ணீராவது கொடுங்களென்றுகேட்டதற்கு நீபோகும் பாதைமார்க்கத்தில் அள்ளிக்குடித்துவிட்டுப் போகச்சொல்லி விட்டாரடா பாலகா யென்னமாயுன்னைப்பசியாயனுப்பப்போகின்றேன்.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

சந்திரமதி கண்ணி.

கண்ணேயென்செய்வேனடா கட்டிக்கனியே இனிநான்
கர்ப்பனையோமுனிசர்ப்பனையோ யினிதற்பரமனருளிப்படிவந்ததே

லோகிதன் கண்ணி.

அம்மாயழுது தயங்காதே சும்மா அம்மா
ஆதியிறைவன் ஆக்கினையாவிந்த வேதியர்க்களாகி விட்டோமினிமேலே

சந்திரமதி சொல்.

சிங்கம்புலியானைபன்றிவேங்கைகூட்டம் வெருநாட்டம்
சீறுமரவங்கள்பாரமிருகங்கள் ஆரவாரஞ்செய்துபோராமேமே எந்த

லோகிதன் சொல்

தவறுதொருநாளும் நமக்குற்றவிதியே நீதியே
தந்தையின்பாதத்தைச் சிந்தையிலெண்ணியே
மைந்தருடன்கூடிச் சந்தோஷமாய்வாரேன்

சந்திரமதி சொல்.

பாரவனந்தனிலேசென்றறியாயே நீயே
பாலாஅதிகுணசீலாமறலியைகாலா லுதைத்தவனுலேயுதித்தவென்

லோகிதன் சொல்.

ஆதிசிவசங்கனைத்துதிபண்ணி நெஞ்சிலெண்ணி
ஐந்தெழுத்தானதைச் சிந்தையிலோதியே
வந்தமிருகத்தைப் வந்தனஞ்செய்குவேன்

சந்திரமதி சொல்.

காட்டில்தெற்பைதேடியலேவாயோ சீலா
காலகெதியாலே பாலாபசியாலே
கதறியுனதங்கம் பதறியழுவாயே

லோகிதன் சொல்.

அந்தணர்கள்பாலரென்கூடவேவாரார் சீராய்
அன்னமுடன்பல காரவகைதந்து
வென்னுடையபசி தன்னைத்தவிழ்ப்பாரே

லோகிதன் வசனம்.

அம்மா நீமயங்கவேண்டாம் யானிதோ மறையோர்பலருடன்சென்று தெற்பைசமித்து முதலானதுகொண்டுவருகிறேனம்மணி.

சந்திரமதி விருத்தம்

மைந்தனேவனத்துக்கேகும் பழிதனிற்சகுனம்பொல்லா
வந்தனநீயும்நீண்ட மரங்களிறேறவேண்டாம்
சிந்தனைபகற்றிப்பாலர் செல்வழிசென்றுமீள
வந்தகஞ்சேருநந்த மறையவன்மனதைப்போலே.



இராகம்-தோடி-தாளம்-சாப்பு.

பல்லவி.

கண்ணேயென்தன்கண்மணியே காலினுப்புறேனுன்னை

அநுபல்லவி.

தண்மிகுமதிதெனு சற்குணதயாநிதியே (கண்)

சரணங்கள்.

சொன்னசொல்லைமறவாதே தோழரைநீபிரியாதே
உன்னைநம்பியென்னுயிரை யுலகில்தரித்தேனிதுவரை (கண்)

செடியடர்ந்துகொடிபடர்ந்து சித்தர்மிகுந்தபுத்ததிகம்
கடியவிடங்குடியிருக்குங் கடம்புதனில்செல்லாதேநீ (கண்)

காசிவனந்தன்னில்நஞ்சு காஞ்சிரங்காய்மெத்தவுண்டு
தேசிக்காய்களிதுவென்று தின்னுதடாநீபறித்து (கண்)

சந்திரமதி வசனம்.

அடாபாலகா உன்னைக்காட்டுக்குப்போகச் சொல்லவுங்காலம்வந்ததேயினியென்செய்வேன் தோழர்களா என்னுடையபாலகன்உங்கள்பின் வருகிறபடியால் அவனுக்குக் கொஞ்சஞ் சாதமுதலானதுகொடுத்து முன்னைமுசுட்டைமுகலானதும் பறித்துக்கொடுத்து உங்களுடனே கூட்டிக்கொண்டுவந்து சேர்க்கவேணும் மறையோர் பாலர்காள்.

அசாலத்துப்பிள்ளைகள் வசனம்.

அப்படியே கூட்டிக்கொண்டுபோய்சாதமுங்கொடுத்துவேண்டிய சமித்துமுதலானதும் பறித்துக்கொடுத்துக்கூட்டிக்கொண்டு வந்து சேர்க்குறோம் அம்மணி

லோகிதன் காட்டுக்குப்போகிற

பாகம்

லோகிதன் விருத்தம்

சிவனருளாலேவேறு திபக்கங்கள்நினைக்கவேண்டாம்
இவர்கள்பின்வனத்துக்கேகி இலையுடன்விறகுதற்பை
நவையபருசுவையாக்கட்டி நான்கொண்டுவருவேனேதுங்
கவலைகளடையவேண்டாங் களிப்புடனிருப்பாயம்மா,

இராகம்-கல்யாணி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

சரணஞ்செய்கின்றேன் தாயே சரணஞ்செய்கின்றேன்
தயங்காதேநீமெத்த மயங்காதேயெனைப்பெற்ற
தருவேதிருவேயோடி வருவேனுனிதோகோடி (சர)

வேதனைமைத்திட்ட முனனம் வேதனைமைத்திட்ட
விதியால்வருவதல்லாது மதியால்வாழ்வதஎது
அதியாசைப்படலாமோ சதியானதிப்போமோ (சர)

தியங்காதேமனம் சற்றும் தியங்காதேமனம்
தேசிகனருள்போலிந்தக் காசிதனிலேயிருந்த
பூசுரர்பாலர்கள்வாரார் நேசமாய்வாரேன்கோடி (சர)

லோகிதன் வசனம்.

தாயேகோடிவந்தனஞ்செய்தேன் மயங்கவேண்டாம் யாதொருகுறைவன்னியில் முன்னேமுசட்டை காரைபிரண்டைதெர்ப்பைசமித்துமுதலானதும் தோழர்களுடனேபோய்ச்சேகரித்துக்கொண்டுவர்து சேருகிறேனம்மணி.

சந்திரமதி வசனம்.

அடாகண்மணி நீ மகாராஜனுசப் போய்வரவேண்டியது பாலகா.

இராகம்-காப்பி-தாளம்-சாப்பு.

பல்லவி.

வாருர்தோழரே போவோம் (வா)

அநுபல்லவி.

சிருள்ளமறையோர்பெற்ற சேயர்களேநேயமுடன் (வா)

சரணங்கள்.

தாமதஞ்செய்யாமலோடி தார்வனத்தில்தெற்பைதேடி
நேமமுடனகிலம்பாடி நிமிஷத்தில்வருவோங்கூடி (வா)

கதிரோன்மிகுந்தகோரங் கானகமோவெகுதூரம்
சதுர்மறையோன்பெற்றவெகுசற்குணரேநிற்கொண்றாது (வா)

லோகிதன் விருத்தம்.

என்னவென்றுரைப்பேனையா என்னுயிர்த்துணைவரான
பொன்புரிநூலிலங்கும் புனிதவந்தணரேபாரும்
முன்னமேதோற்றமிந்த மூர்க்கமாம்சகுனம்பார்க்க
அன்னிதமாகுதையோ வடவிற்போகொண்ணுதே.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஆகாதிந்தச்சகுனம் ஐயரேநமக் காகாதிந்தச்சகுனம். (ஆ)

அநுபல்லவி.

ஏகலாகாதுகாகம் யிடமாகுதையோபாவம். (ஆ)

சரணங்கள்.

செக்காநெதிராகவேஎண்ணெகொண்டுவாரான்என்மனநோகவே
முக்காடிட்டொருமங்கை முகத்திலறைந்தலறி
முன்னேவாராளென்னசெய்வோம் அன்னேசொன்னபடிநமக் ()

சர்ப்பம்குருக்காகுதே கெருடன் பூனை தானேவலமாகுதே
கற்பனைக்குளாவாயென்று கத்துதேபல்லிவலத்தில்
காலிடருதையோவென்ன கோலம்வருமோவறியேன். (ஆ)

காடையிடமாகுதே கரிக்குருவி கவுதாரிவலமாகுதே
கோடையிடபோலாந்தை குளருதேபலவிதம்
குற்றம்வருமோவறியேன் நற்றவத்திலுற்றவரே. (ஆ)

லோகிதன் வசனம்.

என்தோழர்களே இதோ கூடாத சகுனங்களைப் பார்த்தீர்களா யென்செய்வேன் போகாவிட்டாலும் சத்தியற்திற்குப் பங்கம்வருமே தோழர்களே.

அசலாத்துப்பிள்ளைகள் வசனம்.

அடா போடா இந்தச் சகுனங்களெல்லாம் என்னசெய்யும் நாங்கள் வருகிறோம் பயப்படவேண்டாம் உன்னுடைய ஊர்பேரும் இங்கேவந்த வரலாறும் சொல்லடா.

லோகிதன் விருத்தம்.

சொல்லவும்போமோவெங்கள் துயரத்தையினிமேலாக
வல்லபனருளால்நாங்கள் வாழ்வையுமிழந்துசத்பச்
சொல்லதையுறுதிகொண்டு சோதனைக்குள்ளதாகி
எல்லையுங்கடந்துவந்து யிவ்விதிதனக்குள்ளானோம்.

இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

என்னசொல்வேன்தோழரே எங்கள் காலகெதிதனைநான். (எ)

அநுபல்லவி.

சொன்மொழிதவறாத துரையரிச்சந்திரனை
மன்னனுமெனதுதந்தை அன்னைசந்திரமதிஐயா (எ)

சரணங்கள்.

அத்தனருளாளயோத்தி ஐம்பத்தாறுதேசமாண்டோம்
பித்திரமிரங்காதமுனி நீவினையால்நாடிழந்தோம். (எ)

கோசிகமுனிவருக்குக் கொடுக்குங்கடனைத்தீர்க்க
காசிநகர்தன்னில்வந்து காவலரெங்களைவிற்றார். (எ)

அன்னையுடனேயடியே னடிமைத்தொழிற்காளானேம்
மன்னவருமந்திரியு மென்னவிதமானரோதான். (எ)

அசலாத்துப்பிள்ளைகள் வசனம்.

அடா சேஷா சுப்பா இவாளுடைய வார்த்தைகேட்க நேக்கு விசனமாயிருக்கிறது நாமானால் காட்டுக்குச் சமீபமாய் வந்துவிட்டோம் பசிரொம்பவாகிவிட்டது இந்தத்தடாகத்தில் கட்டமுது சாப்பிட்டுபோவோம் வாங்கடா சுப்பா.

சுப்பு வசனம்.

அடா லோகிதா நாங்கள்கட்டமுது சாப்பிடப்போகிறோம் நீ வெருணேவந்திருக்குறாய் இந்தமரத்தடியில் சற்றேயிரு நாங்கள் சாப்பிட்டு மீதமிருந்தாலுனக்குஞ் சாப்பாடுபோடுகிறோம்.

லோகிதன் வசனம்.

அப்படியே யிருக்குறேன் கொஞ்சஞ் சாதங்கொடுக்கவேணும் தோழர்களே.

சேஷன் வசனம்.

அடா சுப்பா அடா சீனிவாசா உங்களாத்தில் என்ன கறியெங்களாத்தில் புளிக்கறி வெகுநேர்த்தியாயிருக்கிறது ஒரு பருக்கைகூடயில்லாமல் மறந்து சாப்பிட்டு விட்டேன்.

சீனுவாசன் வசனம்.

எங்களாத்தில் வெண்டக்கறி அதைவிட நேர்த்தி நானும் சாப்பிட்டு விட்டேன் இன்னங்கொஞ்சம் சாப்பிடுவேன் லோகிதனுக்குச் சாதங் கிடையாது.

லோகிதன் வசனம்.

தோழர்களா யெனக்குக் கொஞ்சஞ் சாதங்கொடுங்கள்.

அசலாத்துப்பிள்ளைகள் வசனம்.

அடே போடா பயித்தியக்காரா யெங்களுக்கே சாதம் பத்தவில்லை உனக்கெங்கடா கொடுக்கிறது வீட்டிற்போய் சாப்பிடலாம் வாடா லோகிதா.

லோகிதன் வசனம்.

நல்லது யெனக்கு சாதங்கொடுக்கா விட்டாலும் பரவாயில்லை யிதோ தாகத்துக்கு சாப்பிட்டுக்கொண்டேன் காட்டுக்குப் போவோம் வாருங்கள் தோழர்களே.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

போவோம்வேகமாய்வாரும் புத்தியுயர்ந்தவெகு
சுத்தமுள்ள தோழர்களே. (போ)

அநுபல்லவி.

காவுதனையேதேடி கடுகவேநாமுமோடி
ஆவலாய்ச்சமித்துமுன்னை அறுப்போம்தெற்பைகள்தன்னை
அண்ணமார்களேஉண்மையானபேர்களே பசிதீர்ந்தீர்தாங்களே
அந்தணர்குலத்துதித்த மைந்தரேசந்தோஷமாக. (போ)

சரணங்கள்.

கரிபுலியாசிங்கம் கரடிவேங்கையும்சங்கம்
திரியுதேகோரச்சத்தம் புரியுதுபாருமெத்த
சீக்கிரம்செல்வோம்தெற்பை பார்த்துமேகொய்வோம்
போதுபோனாலென் செய்வோம்
சிறுவரல்லோநாமெல்லோரும் பெருவனத்தைநோக்கியிதோ ()

லோகிதன் வசனம்.

மறையோர்கள் பாலர்களே அதிசீக்கிரம் காட்டுக்குள் செல்வோம்.

அசலாத்துப்பிள்ளைகள் வசனம்.

அடா சுப்பு சேஷா சீனிவாசா நாம் காட்டுக்கு வந்து விட்டோம் காறை பிரண்டை முன்னை முசுட்டை சமித்து தெற்பைகளை யிதோ நான்பறித்து விட்டேன்.

சுப்பு வசனம்.

இதோ நானும் பறித்துவிட்டேன்.

லோகிதன் வசனம்.

இதோ முன்னை முசுட்டை காறை பிரண்டை சமித்துகளெல்லாம் சேகரித்து விட்டேன் இந்தப் புதர்க்குள் சென்று தெற்பைமட்டும் பறித்து வருகிறேன் இந்த ஆலமரத்தின் கீழிருங்கள் தோழர்களே.

இராகம்-கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஆலமரத்தின்கீழிருந்திடுவீ ரிந்த. (ஆல)

அநுபல்லவி.

சீலமுடனேதெற்பை சீக்கிரம்கொய்துவாரேன் (ஆல)

சரணங்கள்.

சத்தியத்துக்குபங்கம் தான்வருமையாவிந்த (ஆ)
தெற்பைகிடையாதென்றால் தெண்டிப்பாரெங்களையர் (ஆ)
அடியேன்கையினாற்றெற்பை யறுத்துவருவேனிந்த (ஆ)
சரணஞ்சரணஞ்செய்தேன் சற்குணர்களேயிந்த (ஆ)

லோகிதன் வசனம்.

இதோ சென்று தெற்பை கொய்து வருகிறேன் வரும் வரையில் இந்த ஆலமரத்தின் கீழிருங்கள் தோழர்களே.

அசலாத்துப்பிள்ளைகள் வசனம்.

லோகிதா பொழுதாகுது சீக்கிரமாய் வருவாய்.

லோகிதன் விருத்தம்.

கடகரிவேங்கைசெந்நாய் கரடிகள்மிகுந்தவிந்த
தடர்வனந்தோறுஞ்சுற்றி சோபத்தாலெனக்குமெத்த
திடமதுவெவ்வேறாகச் சிதறுதேகாசிநாதா
இடறுதேகல்லுமுள்ளு மிதற்கினியென்னசெய்வேன்.

இராகம்-தேசிககமாஸ்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

இந்தவனத்திற்றெற்பை யெங்குசென்றுகொய்வேனையோ
வந்துவெகுநேரமாச்ச மனதுமிகப்பதறி
வாடுறேன் வாடுறேன் வாடுறேன் வாடுறேன். (இந்த)

மதகரியாளிசங்கம் வறிப்புலிபன்றிசிங்கம்
கதறுதிடிபோலெங்கும் கலங்குதேயெனதங்கம்
கர்த்தனே கர்த்தனே கர்த்தனே கர்த்தனே (இந்த)

மலையுங்குகைமிகுந்த மாமுசெடியடர்ந்த
துலையாவனம்நடந்து சோருதேபாதஞ்சிவந்து
சோதனே சோதனே சோதனே சோதனே (இந்த)

சீக்கிரத்தில்வாரேனென்று செப்புமொழிதவறினல்
ஆக்கினைகள்செய்வாரென்னை அடிமைகொண்டவேதியர்
ஐயையோ ஐயையோ ஐயையோ ஐயையோ (இந்த)

கூடிவந்ததோழரென்னைக் கோபிப்பார்கள்தெற்பைதன்னை
தேடியறுத்தென்னுவி தியங்குறேன்கொடும்பாவி
தெய்வமே தெய்வமே தெய்வமே தெய்வமே (இந்த)

லோகிதன் வசனம்.

ஜெகதீசா இந்த வனங்களில் என் கண்ணுக்குத் தெற்பையானது தோற்றவில்லை யென்செய்வேன்.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

இனியென்செய்குவேன்பாவிநானே தெற்பை
யெங்கெங்குந்தேடி நொந்தேனே
யெங்குந்தானே சிங்கம்யானைதங்கும்வனத்திலையையோ ()

பசியாலென்மனமிகவாடி தெர்ப்பை
பாரவனமெங்குந்தேடி
வதறியோடி புதரில்நாடி கதறிவாடுவேனையையோ. (இ)

தோழரைபிறிந்துவந்தேனே யிதோசூரியன்மேற்குகந்தானே
தொலைவந்தேனே அலைபலானேன்தலைபின் விதிபயனோதேவா()

பறையவரெனைக்கோவிப்பாரோ என்னவழுத்துவேனவருக்கேநேரே
வாதுமேவிறே ஓதுவாரோ பாதுகாக்கமாட்டாரையோ. (இ)

லோகிதன் வசனம்.

சிவபெருமானுடைய திருவருளால் இதோ தெற்பை புதரானது தோற்றுகிறது இதிற்சென்று தெற்பை கொய்கிறேன்.

லோகிதன்
தெற்பைகொய்கிறபாகம்

விருத்தம்.

என்னமோயிசாபுற்றி லிறைச்சலுஞ்சீற்றசத்தம்
அன்னிதமாகக்கேட்கு தையையோயெந்தனுள்ளம்
சின்னபின்னங்களாகச் சிதறுதேதுணைவேறில்லை
பன்னகாபரணவர்க்கு பாலனுக்கருள்செய்வாயே.


இராகம்-முகாரி-தாளம்-சாப்பு

கண்ணிகள்.

எல்லாமுனிரூதோ காசியீசாஉந்தனருளோ
இப்புதரில்தெற்பைகொய்ய விட்டாய்விதிச்செயலோ
பார்க்கப்பயமாகுதுள்ளம் பதறுதென்னபவமே
பற்றிக்கையால்தெற்பைகொய்யேன் பாதுகாவுஞ்சிவமே
பாவிதயவில்லாவென்னைப் பாலவென்றுமறிந்தே
பறித்துவாச்சொன்னார்தெற்பை பறிக்கிறேனென்பயந்தே
தணலின்பொறிசிதறத்தேகம் தடுமாறியேபதற
கணங்கொண்டொருயி ரச்சலெந்தன் காதிற்கேட்குதையோ.

லோகிதன் விருத்தம.

புதரினையடுத்துத்தெற்பைப் புல்லினைப்பற்றியிர்க்க
இதமுடன்முனிவனேவா லிருந்ததோசயஞ்சிறிப்
பதறிடப்படத்தைச்சாய்த்துப் பற்படத்தின்டலோடும்
கதரிக்கையுதரியோடி கலங்கிவீழ்ந்தெழுந்திட்டேனே.



இராகம்-இந்துஸ்தான்-காப்பி-தாளம் ஆதி.

கண்ணிகள்.

ஐயையோநானென்னாசெய்வேன் அரவந்தீண்டினதையோ
அரவாலெனதுகரம்சோகவே அமைத்தானயனுமுயிர்போகவே
மெய்தளருதென்னசெய்வேன் வேதனைக்கொப்படியுய்வேன்
வேதனைசகிக்கமாட்டேனீதனே சோதனையிதுவோகாசிநாதனே
சிரமீறுதையோவிடம் தியங்குதையோசடம் [னில
தியங்குறேன்பாவிமயங்குதென்னாவிகயம்நரிசூழ்ந்தகானகந்த
தெற்பைகொய்துவாடாவென்று செப்பினாளென்தாயாரின்று
செப்பினாள்மனதுஒப்பிலாமலே இப்படிமுடிந்தாலெப்படியுய்வாள்.

இராகம்-தேசிககமாஸ-தாளம்-சாப்பு.

பல்லவி.

தெய்வமேநானென்னசெய்குவேன் திக்குவேறில்லை (தெ)

அநுபல்லவி.

பையரவமிதோமீறிப் படமெடுத்தையோசீறி
கையலிதோதீண்டினதால் கலங்குகின்றேன் (தெ)

சரணங்கள்.

தந்தையையும்நானிழந்து தாயையும்பிரிந்துவந்து
இந்தவனந்தன்னில்மாளவோ யெனைப்படைத்தாய் (தெ)

மாதாயிதையறிந்தால் மடிவாள்மனந்துணிந்தே
பாதகத்திற்கென்னசெய்குவேன் பாரவனத்தில் (தெ)

லோகிதன் வசனம்.

ஈசாயெனக்கோவிடமீறி விட்டது யானெடுத்தடிவைக்கமுடியவில்லை மாதாவிதை யறிந்தால் சீவனைவிடுவள் தோழர்களைக் கண்டாலும் அவர்களிடம் சமாச்சாரமாவதுசொல்லிவிடலாம்.

சேஷன் வசனம்.

அடா சுப்பு சீனிவாசா லோகிதன் தெற்பைகொய்யப்போனவனை யின்னங்காணோம் பார்த்து வருவோம் வாங்கடா.

சுப்பு வசனம.

அடே சேஷா ஆதோ யிந்தப்பக்கத்தில் ஒருகூச்சல் கேட்கிறது போய் பார்த்து வருவோம் வாருங்கள்.

சேஷன் வசனம்.

ஆமடா இதோ கிடக்கிறான் அடா லோகிதா என்னடா சம்பவித்தது.

லோகிதன் வசனம்.

என்செய்வேன் தோழர்களே தெற்பை கொய்யும் பொழுது என் கரத்தில் நாகங் கடித்து விட்டது கையைப் பாருங்கள் தோழர்களே.

சேஷன் வசனம்.

லோகிதா பையப்பைய வீட்டுக்குப்போய்விடுவோம் வாடா.

இராகம்-காப்பி-தாளம்-ஆதி.

பல்லவி.

மெய்பதறுதே ஐயா தோழர்களே (மெ)

அநுபல்லவி.

ஐயையோ கரந்தனிலே பையரவந்தீண்டினதால் (மெ)

சரணங்கள்.

என்னமாய் நானுங்கள்பின்னே ஏகிவருகுவேனையா (மெ)
நெஞ்சையடைக்குதையோவிழி பஞ்சடைவதாலேஎந்தன் (மெ)
காலயர்ந்துமேலுகந்து ஆலவிடமீறுதலால் (மெ)
வேறுதவியாருமில்லை பார்வனத்திற்றுங்களன்றி (மெ)
தாயிழந்துகாவில்வந்து வாயுலர்ந்துமாளவோதான் (மெ)

சேஷன் வசனம்

லோகிதா நீ யழுவதைப்பார்த்தால் மனது வருத்தமடைகிறது இப்ப உனக்கென்னமாய் வருகிறது யேனழுகிறாய்.

லோகிதன் விருத்தம்.

மண்டலத்தைமுனிக்களித்த வருத்தமில்லை
மதிதயன்றன்னாட்டை மனநினைக்கவில்லை
கொண்டதிருமனைவியுடன் மகனைவிற்றுக்
கோவேந்தன்றுணிந்தகன்ற வருத்தமில்லை
பண்டையபொற்பணந்தேடியெம்மைமீட்டப்
பாராசன்வருவனென்ற வாசையில்லை
சண்டனெனுங்காலகண்ட னெமக்காய்த்தந்த
தனமிழந்தானெனக்கருதித் தவிக்கின்றேனே.

இராகம்-காப்பி-தாளம்-சாப்பு.

பல்லவி.

பார்தனிலேயான்கொடிய பாவியாகினேன் பரமே ()

அநுபல்லவி.

ஆரிட்டசாபமோ ஆனதென்றன்பாவமோ
நேரிட்டதையோவினி நிலைந்ததிலென்னசாரம். (பா)

சரணங்கள்.

வேதியர்பொருளிழந்து வீணானார்மனம்நொந்து
வாதனையடைவாரென்று மனம்பதறுதேயிந்தப் (பா)

வேண்டியபொருளையீந்து விலைகொண்டாரையோவென்றன்
ஆண்டவன்மனம்வெவ்வேறு யாகுமேபுண்ணாகுமிந்தப் (பா)

தந்தையையிழந்துவந்த சங்கடமெனக்கொன்றில்லை
அந்தணர்பொருளிழந்தா ரையையோகானென்னசெய்வேன் ()

அன்னைதந்தையைப்பிறிந்து அடவிதனிலேவந்து
பன்னகங்கடித்துமாளப் படைத்தானோ பிரமதேவன் (பா)

லோகிதன் விருத்தம். 1

என்னவிதநினைத்தழுது துயருற்றாலும்
எறுவிடமிறங்கியுயிர் பிழைப்பதில்லை
முன்னமுற்ற வினைப்பயனால் முடிந்ததாகும்
மொய்குழலி யென்னைப்பயந்தா டனக்குச்சொல்வீர்
நன்னயஞ்சேர் காலகண்டர் கிரியைக்கா க
நானெடுத்த சமித்துதெற்பை யாவுமீந்து
என்னுடைய நிலைமையெலா மவர்க்குரைத்து
எனதுசரண் புகலுமென வியம்பினானே.

மேற்படி வசனம்.

தோழர்களே விடமீறிவிட்டது என்னுடைய தாய்க்குச் சொல்லியும் இந்தச் சமித்துத் தெற்பைகளைக் காலகண்ட பகவானிடங் கொடுத்து விடுங்கள்.

அசலாத்துப்பிள்ளைகள் வசனம்.

அப்படியே கொண்டுபோய்க் கொடுத்துச்சொல்லுகிறோம்.

லோகிதன் விருத்தம்.

ஐயரேயண்ணமாரே யாவியோர்கிலையிவில்லை
மெய்யெலாம்விடம்பரந்து விட்டதேயினிப்பிழைக்கேன்
மையுறுவிழியாளென்றன் மாதாவினிடத்திற்சேர்ந்து
பையனெஞ்சயர்த்திடாமற் பதம்பெறவுரைசெய்வீரே.

மேற்படி விருத்தம்.

கயிலைதனில்வாழ்சிவனே யுமையும்வாழ்க
கனமுறைந்த தேவர்களும் வசிஷ்டர்வாழ்க
வயனமிகு கோசிகரெந் நாளும்வாழ்க
மாசிலா வயோத்திநகர் வளமும்வாழ்க
மயிலனையாள் சந்திரமதி கற்பும்வாழ்க
மன்னவனு மரிச்சந்திரன் சத்தியம்வாழ்க
செயலருளி யெனக்குமுத்தி தருவாயீசா
சிவாசிவா வென்றுமைந்தன் சீவித்தானே.

சேஷன் வசனம்.

அடா சுப்பு லோகித னிறந்துவிட்டான் நாமிவனைச் சும்மா போட்டுவிட்டுப்போனால் நாய் நரி யிழுத்துக்கொண்டு போய் விடும்ஆகையால் இவன்மேல் தழைகளைப்பிடுங்கிப்போட்டுவிட்டுப் போகவேணும்.

சுப்பு வசனம்.

அடா சேஷா இதோதழைகளைப்பிடுங்கிப் போட்டுவிட்டேன்ஒருவேளை சந்திரமதிவந்தாலும் வருவாள் அவளுக்குப்பாதைதெரியும்படி யிலைகளைப்பிடுங்கிப் பாதைவழியே போட்டுக் கொண்டுவருகிறேன்.

இராகம்-பூரிகல்யாணி-தாளம்.

கண்ணிகள்.

சேஷாசினிவாசாவென்ன செய்வோமினி யுய்வோம்
ஈசனுடவருளோகி தனையிழந்து தளர்ந்தோம்
போதுபோகுதினிநாம்நகர் போவோம்வேக மாக
ஏதுசெய்வோம்கதிரோன்மேற்கி லிறங்குன்முன் னாக
கழுகுவெகுநரிநாய்கூடுங் காவினி மேலே
அழுதுபுரண்டாலுமிவ னையோவரு வானோ

விறகுச்சுமைதூக்கிநகர் வேகமாக நோக்கி
தருகாமலேசெல்வோஞ்சந்திர மதிக்கிச்சேதி சொல்வோம்
காசிநகர்வந்தோம்நம்ம கவலையெல்லாம் விண்டோம்
மாசில்லாதசந்திரமதி மகனைத்தேடு வாளே

சந்திரமதி விருத்தம்.

வலியதோர்பசியால்வாடி வனத்தினிற்சென்றமைந்தன்
புலிபசிக்கிரையானானோ பொருந்தியதெதுவோகாணேன்
கலியதுகாலமெங்கட் காகவந்தடைந்ததோபொன்
மலிமுடிமைந்தர்கானோ மைந்தனும்வரவுங்காணோம்.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ரூபகம்.

பல்லவி.

இன்னங்காணோமே மகன்வர வின்னங்காணோமே
ஏங்கிப்பசியாலே நோங்கிச்சென்றபாலன். (இன்)

அநுபல்லவி.

சின்னவயதுள்ள செல்வருடன்கூடி
தெற்பைவிறகு சமித்துகளைத்தேடி
அன்னமில்லாம லலைகிறானோவாடி
யந்திநேரமாச்சே யென்றன்பாலன்வர. (இன்)

சரணங்கள்.

பாரமிருக மடர்ந்திடுங்காடாச்சே
பாலர்களுமதி யாதசிசுவாச்சே
தூரவழிதனிற் சென்றுவிட்டாற்றோசம்
துன்பமேயின்பம் நிறைந்தசிகாமணி. (இன்)

பாவியுடைய விடக்கண்துடிக்குதே
பல்லிகள்தீங்குரை சொல்லிப்படிக்குதே
கூவிபோராங்கையு மேவிக்குளறுதே
கொற்றவாகற்றவத் துற்றசிகாமணி. (இன்)

இராகம்-இந்துஸ்தான்தோடி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

பாலகனின்னம்வரக்காணோம் காணோம்
பதறுதேமனஞ் சிதறுதேநின்று கதறுறேனடா
பாலா சீலா பாரவனஞ்சென்ற (பால)

அஸ்தமானமெகிருனையோ வெய்யோன்
அலையுதேவிலே குலையுதேமன உலையுதையையோ
ஆகா வாகா அருந்தவத்துற்ற (பால)

ஆசையான்சதமென்று சொல்வேன் சொல்வேன்
அரும்பேமாசில்லாக்கரும்பே மிகவும்விரும்பினான்பெற்ற
ஐயா மெய்யா அருமைக்கண்மணி (பால)

சீக்கிரத்தில் வாரேனுனென்ருய் சென்ருய்
சேயனேகனி வாயனேவெகு ஞாயமாய்ச்செழும்
தேனே நானே தியங்குறேனையோ (பால)

பசியினல் வருத்தம்நீகொண்டாய் விண்டாய்
பாபமோயெவர்சாபமோமுனி கோபமோகாணேன்
பாவி கூவி பரதவிக்கின்றேன் (பால)

சந்திரமதி விருத்தம்.

அக்கரம்யாவுங்கற்ற வருமறையாளர்மைந்தர்
புக்கனரவரைக்கண்டாள் புதல்வனைக்காணுதோடி
மக்களாவுங்கள்பின்னே வந்தவென்மைந்தனெங்கே
பக்கெனவயிறிற்றீயும் பற்றிடாதுரைசெய்வீரே.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

பாலகனெங்கே காணேனையா (பா)

அநுபல்லவி.

சீலமுள்ளவேதகுலச் சேயரேயென்னுசைப் (பா)

சரணங்கள்.

தஞ்சமென்றெடுத்தேன் தங்கள்பின்விடுத்தேன்
அஞ்சுதேஎன்னெஞ்சமிக வஞ்சகஞ்செய்யாதீர் (பா)

தயங்குதென்னுவி தவிக்கின்றேன்பாவி
மயங்கிப்பசியாற்பின்னுல் வாரானேகூறவீர் (பா)

குசைதனைத்தேடி குழந்தையுமோடி
திசைமாறியெவ்விடத்திற் சென்றுனேனின்றுனே (பா)



சந்திரமதி வசனம்.

மறையோர்கள் பாலர்காள் உங்கள் பின் என்மகன் வரக் காணோமே யெங்கே பின்னால் வருகிறானோ அல்லது காட்டில் நின்று விட்டானோ சொல்லுங்கள் பாலர்களே.

சந்திரமதியிடம்

அசலாத்துப்பிள்ளைகள்

சொல்லுகிறபாகம்.

அசலாத்துப்பிள்ளைகள் விருத்தம்.

மருமலிகுழலியுன்றன் மைந்தனுமெங்களோடே
யருவனமதனில்வந்தா னடகுகள்கட்டிக்கொண்டான்
பரும்புதாருகிற்சென்று பரித்தனன்குசையைநாக
மிருந்தவன்காத்திற்றீண்ட விறநதனனென்செய்வோமே.

மேற்படி வசனம்.

அம்மா சந்திரமதி லோகிதனும் நாங்களும் காரை பிரண்டை முன்னை முசுட்டை யெல்லாம் பறித்தோம் தெற்பை கொய்து வாரேனென்றுபோய் தெற்பை கொய்தவிடத்தில் நாக சர்பங் கடித்து இறந்துபோய் விட்டான் அவன்மேல் இலைதழைகளைப் பிடுங்கிப் போட்டும் வரும் வழியில் நெடுக்கத்தழைகளைப் போட்டும் வந்திருக்கிறோம்.

சந்திரமதி விருத்தம.

அள்ளினுளரைந்தள்மார்பி லங்கமுந்தழும்பதாகத்
கொள்ளையோகொடுப்பேனென்று கோவெனக்கதறிவிம்மி
மெள்ளவென்றலையிற்பிர்மா விதித்ததிப்படியோவென்று
துள்ளியேமனதுநொந்து சோம்பியேதரையில் வீழ்ந்தாள்.

இராகம்-புன்னாகவராளி-தாளம்-ஆதி.

பல்லவி.

பாவிநானினியென்செய்குவேன் பாலாபாலாகொடும் (பா)

அநுபல்லவி.

ஆவிக்கினிகரான வையா வுனையிழந்து
கூவியழுதுமிநக் குலைபதறுதையையோ (பா)

வையகமுமிழந்து மன்னனையும்பிரிந்து
ஐயோவுந்தனைக்காட்டி லாவுக்கிரைகொடுத்து (பா)
உன்னையல்லாதுவிதி யுண்டோஉலகில்கெதி
என்னையிப்படிவிட்டு யிறந்துமறந்தாய்கொடும் (பா)
அருந்தவங்கள்புரிந்து வமலன்றனைநினைந்து
வருந்தியுந்தனைப்பெற்ற வயறெரியுதேபற்றி (பா)

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

பாலகானென்செய்வே னுன்னைப்
பந்துமாதஞ்சுமந்து பெற்றவயிறெரியுதே

அநுபல்லவி.

கோலமுனிவன்மனக் கோரிக்கைமுடிந்ததோ
கொல்லவிஷசர்ப்பந்தெற்பை புல்லுக்குள்ளிருந்ததே
காலாகலையுணர்ந்த சீலாயெனக்குகந்த
ரத்தினமேபொற்பணியே புத்திரசிகாமணியென் (பா)

சரணங்கள்.

மன்னனைப்பிரிந்திட்ட மனத்துயர்யாவு
மகனேயுன்றனைப்பார்த்தா லப்புறமேவு
என்னையிப்படிவிட்டுப் பன்னகத்தின்வாய்ப்பட்டு
யிறந்தாயென்றன்மேலாசை மறந்தாய்ஐயோவென்றன் (பா)

சந்திரமதி வசனம்.

அடா குழந்தாய் உன்னுடைய முகத்தைப் பார்த்துக்கொண்டு என் கவலைபை மறந்தேன் இப்படி மோசஞ்செய்து விட்டாயடா பாலா.

சந்திரமதிசொல் விருத்தம்.

மானிலமிழந்தேனென்றன் மன்னனையிழந்தேன்காசிக்
கானகமதனில்நின்ற கான்முளைதனையிழந்தேன்
மாவிருகரத்திலோங்கும் வள்ளலேமங்கைபங்கா
நானினியிருக்கலாமோ நானிலமேசத்தானே.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

ஐயோவென்செய்குவேன்பெற்ற பாலா சீலா
ஆருமோவென்னெஞ்சம் பாரினித்தஞ்சம்
வேறொருவரில்லை தீரமுனிவஞ்சம் (ஐ)

இனிமேலெந்த ஜென்மத்தில் நானுன்னைபார்ப்பேன்வளர்ப்பேன்
இப்படியும்விதி ஒப்பினதேசதி
யப்பாவுனையிழந் தெப்படிச்சகிப்பேன் (ஐ)

பத்தாவைப்பிரிந்த துயருன்னால் மறந்தேன் யிருந்தேன்
பற்றுதேவயிறு முற்றுதையோதுயர்
நத்துதேயுன்றனைப் பெற்றபலனிதோ. (ஐ)

அம்மாவென்றுன் னங்கமிகப்பறந்தாயோ விறந்தாயோ
ஆவிபோம்போதென்ன தாவிப்புரண்டாயோ
காவின்மண்ணைக்கவ்விக் கூவியுருண்டாயோ. (ஐ)

கதிரோன்குலமின்றோடேவே பொய்த்துப்போச்சேஎச்சே
காவலன்வந்துன்னை யாவலுடன்கேட்டால்
மாவதனுகொடும் பாவிநானென்சொல்வேன். (ஐ)

சந்திரமதிக்கும் காலகண்டனுக்கும் சம்பாஷணை.

ச-தி சரணஞ் சரணமையா சுவாமி காட்டுக்குப்போன வென் குழந்தை சர்ப்பந்தீண்டி யிறந்துபோனானும் அவனைப் போய்ப்பார்த்து அடக்கஞ்செய்துவர உத்தரவு செய்யவேணுமையா சுவாமி.

கா-ன் சந்தி நீயேன்தேம்பித்தேம்பியழுகிறாய் நீ சொல்லுவது ஒன்றுந்தெரியவில்லை உன்மகனெத்தனைகட்டுவிறகுகொண்டுவந்தான்சொல்லடி.

ச-தி ஐயையோ சுவாமி குழந்தை காட்டில்மாண்டுபோய்விட்டானும் பார்த்துவர உத்தரவுதரவேணுமையா.

கா-ன் சந்தி உன்மகன் காட்டிலென்னசாமானை மறந்துவிட்டு வந்தான் சொல்லடி.

ச-தி அரிஹரி குழந்தையைக் கிருஷ்ணசர்ப்பந்தீண்டி இறந்துபோனானும் சுவாமி.

கா-ன் சந்தி யுன்மகன் கிருஷ்ணசாமியைப்பிடிப்பானேன் அதுஅவன்கையில்கடிப்பானேன் இதுவென்ன துஷ்டத்தனமடிசந்தி.

ச-தி சுவாமி குழந்தை பாப்புகடித்திறந்துவிட்டதாமையா.

கா-ன் சந்தி துஷ்டப்பயலென்று எனக்குத்தெரியுமே மாம்பூவைப்பறித்துத்தின்பானே அதுநெஞ்சில் விக்கிகொள்வானேன் மாவடுவு பறித்துக்கொண்டு வந்தானென்று சொல்லுகிறாயா என்ன.

சு-தி சுவாமி குழந்தை பாம்புகடித்துச் செத்துப்போனானை யா மறையவரே.

கா-ன் சந்தி உன்மகன் செத்தையரித்துங்கொண்டுவந்தானா என்னுடைய கிழவனுதலால் குளிர்காயக் கொண்டு வந்தானுக்கு அதற்கென்ன.

சு-தி சுவாமி குழந்தைகாட்டில்தெற்பைகொய்யும்போது அதிலிருந்த பாம்புகடித்து இறந்துபோய்விட்டானும் பார்த்துவர உத்தரவுதாரும் சுவாமி.

கா-ன் சந்தி உன்மகன்பாம்புவடித்து செத்துப்போய் விட்டானையையோ பணம் போச்சே காலகண்டிமுண்டை யுதைப்பாளே என்னசெய்வேன்.

சு-தி பெற்றவயிறு பற்றுகிறதையா சுவாமி.

கா-ன் பணங்கொடுத்தவயிறு பத்திஎரியுதடி பாதகி.

காலகண்டன்வசனம்.

இப்போ ததற்கென்ன மோசம்போச்சுது வேலையைப்பாரடிசந்தி.

சந்திரமதி விருத்தம்.

அருமறையவன்றன்பாதத் தடிவிழுந்தலறிமோதி
இருவிழியருவிபாய வெழுந்துவாய் புதைத்துநின்றே
ஒருமகனெனக்குமந்த வுத்தமனரவால்மாண்டான்.
திருமகன்றனையடக்கஞ் செய்திடக்கருணைசெய்வீர்.

இராகம்-தோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

தயவுசெய்தெனையனுப்புஞ் சாமிகாலகண்டையா. (தய)

அநுபல்லவி.

கயமும்மன்றுகடுவாய்மிகும் கானகம்போய்வாரனிதோ. (தய)

சரணங்கள்.

கொடியரவுகடியாலேயோ குழந்தையுயிர்மாண்டானையா
அடியாளெடுத்தடக்கிவாரேன் அண்ணலேவிடைகொடுப்பீர் ()

நாய்நரிகள்புசியாமுன்னம் கானடக்கஞ்செய்துவாரேன்
நேயமுடனேயுத்தாரம் நீதாகொடுமலர்ப்பாதா. (தச)

எத்தனைதான்குற்றமிக யேழையான்செய்தபோதிலும்
அத்தனையும்நீர்பொறுத்து வனுக்கிரகஞ்செய்யுமையா (தய)

சந்திரமதி வசனம்.

சுவாமி தயவுசெய்ய வேண்டு மகா அருந்தவஞ்செய்து பெற்ற குழந்தையாச்சுதே போயெடுத்துத் தகனஞ்செய்து விட்டு வருகிறேன் உத்தரவு கொடுக்கவேண்டுஞ் சுவாமி.

காலகண்டன் வசனம்.

அடி ஆத்துக்காரி சந்தி ஓடிப்போகப் பார்க்கிறாள் நம்மாத்தி லிருக்கப்பட்ட விலங்கை சந்திகாலில் போடடி.

காலகண்டி வசனம்.

அடிசந்தி யிங்கே வாடி உன் காலிலே விலங்குபோட்டு யிருக்குறேன் எடுத்தடி சந்தி.

சந்திரமதி விருத்தம்.

மாதவமுகுந்தா கண்ணா மான்மழுதரித்தவீசா
வேதனேபிரமதேவா விதியிதுதானோபாவி
காதலாப்பெற்றபாலன் கானகத்திறந்துபோனான்
நீதமில்லாதவையர் நிமிடத்தில்விலங்கிட்டாரே.

இராகம்-எதுகுலக்காம்போதி-தாளம்-சாப்பு.

பல்லவி.

ஆதிப்பரம்பொருளே அமலாவிமலா ழ்வே
அன்பர்க்கிரங்கொண்ணாதா விஸ்வேசா
வாதனையடைகிறேன் மனிதருதவியில்லை
மனதுகந்தெனைக்காவா விஸ்வேசா
பாடகந்தண்டையிட்ட பாதநோகமறையோர்
பருவிலங்கைப்பூட்டினார் விஸ்வேசா
காடதனிலிறந்த கண்மணியைத்தேடாமுன்
காலில்விலங்கணிந்தார் விஸ்வேசா
முன்செய்ததீவினையோ முனிசெய்தமாய்கையிதோ
முடிந்ததிப்படியாக விஸ்வேசா

சந்திரமதி வசனம்.

சுவாமி காலிரண்டும்நோகிறது தேவரீர் உத்தரவு இல்லாமல் அடியாள் போவேனா விலங்கைவேட்டி விடவேண்டுஞ் சுவாமி.

காலகண்டன் வசனம்.

சந்தி விலங்கைவெட்டியாச்சுது நாளை நம்மவீட்டில் திதி யாகச்சே அதற்காக வேண்டிய வேலைகளெல்லாஞ் செய்துவிட் டும் போடி சந்தி.

சந்திரமதி வசனம்.

வேலைசெய்த பின்பாவது அனுப்பவேணுமையா சுவாமி.

காலகண்டன் வசனம்.

ஆத்துக்காரிசொல்லியபடி வேலைகளெல்லாஞ்செய்போடி சந்தி.

சந்திரமதி வசனம்.

அப்படியே செய்கிறேன் வேலைகளைச் சொல்லுங்கள்சுவாமி.

காலகண்டன் வசனம்.

சந்தி வீட்டுவேலைகளெல்லாஞ் செய்யவேணும் முதலாவது இந்தக்குடத்தை எடுத்துக்கொண்டு தண்ணீர்கொண்டுவாசந்தி.

சந்திரமதி

வேலைசெய்கிறபாகம்.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

பல்லவி.

தண்ணீர்கொண்டுவாரேனையையோ தாதியைப்போலே (த)

அநுபல்லவி.

பண்ணவர்புகழுநேசி பதிதனிலுயர்ந்தகாசி
அன்னலேபுனதருளோ ஆசைமகனையிழந்து (த)

சரணங்கள்.

வனத்திற்சர்ப்பங்கடித்திடவும் மைந்தனுயிர்விடுத்திடவும்
மனத்துயரடைந்துகாசி மறையவரகத்திற்கூசி (த)

சந்திரமதி வசனம்.

சுவாமி தண்ணீர்கொண்டுவந்துவிட்டேனையா சுவாமி.

காலகண்டன் வசனம்.

சந்தி தண்ணீரெடுத்ததுசரி முத்தம்பெருக்கிவையடி.



இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

முத்தம்பெருக்க வோவிதித்தாய்

அநுபல்லவி.

அத்தனேமறைபுகழின் கர்த்தனேயடியாள் (மு)

சரணங்கள்.

உற்றமகன்மடிய பெற்றவயிறெறிய
சித்தமிறங்காவேதியர் செப்பியபடிக்கி (மு)

வனந்தனிற்சென்று மகனையான்கண்டு
மனமாறவேயடக்க மாபாவிசெய்யலாம் (மு)

சந்திரமதி வசனம்.

சுவாமி முத்தம்பெருக்கிவைத்தேன் காலகண்டபகவானே.

காலகண்டன் வசனம்.

சந்தி முத்தம்பெருக்கினது சரி சாணந்தெளியடி.

இராகம்-மத்தியாமாவதி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

சாணந்தெளிக்கவிட்டாய் சிவமே
சந்தணம்புனுகு சவ்வாதுமிருந்த
பந்தபதாதி யணிந்திடுகையால் (சா)

மடிந்தமகனைத்தோடா முன்னம்
மறையவரகத்தினில் குறைவன்றிகாரத்தினுல்
முறையுடன்றெளித்திட இறைவாவுன்றனருளோ (சா)

சந்திரமதி வசனம்.

காலகண்ட திரிநேத்திரபகவானே சாணந்தெளித்தாய் விட்டது சுவாமி.

காலகண்டன் வசனம்.

சந்தி சாணந்தெளித்தது சரி வீடு வாசல்களெல்லாம் மெழுகடி சந்தி.

இராகம்-முகாரி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

மாணிக்கக்கணையாழி மாட்டிபவவன்கரம் நோக இப்ப
சாணிகரைத்திதோ தரைமெழுகுறேன்வெகு வாக

வாசமிகுபுனுகுவாரி யணையுங்கையாலே-இப்ப
வீசுஞ்சாணந்தட்ட வேதனமைத்தாளிக்காலே
பூதலமாளவந்த புத்திரன்காவினில்மாள-இங்கு
தாதிபோலெருமுட்டைதட்டுகிறேன் மனந்தாழ

சந்திரமதி வசனம்.

சுவாமி இதோ சாணங்கரைத்து மெழுகி மீதச்சாணியை யெருமுட்டையும் தட்டிவிட்டேன்.

காலகண்டன் வசனம்.

சந்தி வீடு கூடம் வகையராமெழுகினது சரி கோலமிடடி.

இராகம்-கல்லியாணி—தாளம்-ஆதி.

பல்லவி.

கோலமிட்டேனுனையனே குருவேதருவே திருமனைகளிலெங்கும்

அநுபல்லவி.

ஞாலமிடத்தினு லருமைமகனிறந்தான்
காலங்கடத்தவேண்டாங் கானகஞ்சென்றுவாறேன் ()

சரணங்கள்.

நரிநாய்கழுகுபேய்கள் நாடிப்புசியாமுன்னம்
துரிதமுடனடக்கஞ் சுவாமிசெய்துவருவேன்.(கோ)

சந்திரமதி வசனம்.

சுவாமி வீடுவாசல் முழுவதுங் கோலமிட்டுவைத்தேனையா சுவாமி.

காலகண்டன் வசனம்.

சந்தி மாளிகைவிட்டு கூடம்வகையராவில் திருவிளக்கேற்றடி.

இராகம்-மோகனம்-தாளம்-சாப்பு.

பல்லவி.

திருவிளக்கேற்றிவைத்தேனுன் தேவரீரெங்கும்

அநுபல்லவி.

அருமைமகனையிழந்து அடியாள்நொந்து (தி)

சரணங்கள்.

மாடம்பட்டகசாலையும் ரேழியுந்திருமாளிகையாகசாலையும்
கூடமிறைந்தகொட்டமும் குருவேதங்கள்கோரிக்கைப்படிதிட்டமாய்

சந்திரமதி வசனம்.

சுவாமி மாடகூடம் விடுயாவும் திருவிளக்கேற்றிவைத்து விட்டேன்.

காலகண்டன் வசனம்.

சந்தி திருவிளக்கேற்றினது சரி நெல்லுக்குத்தடி.

இராகம்-முகாரி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

பாதிமதிகொன்றையும்பையணிந்தபரம்பொருளே யீசா-இந்த
வேதியர்வீட்டினில்நெல்லதுகுத்தவிதித்தாயோ விஸ்வேசா
மன்னனையும்பிரிந்தென்னிருகண்மணியைமகனையிழந்தேன்-இப்
பன்னகம்வாய்ப்பட்டதேரைபோலாக பதறிமனந்தளர்ந்தேன்
மாந்தளிரபோன்றகரங்களிரண்டுவருந்துதிப்போ சிவந்து-யீசா
காந்துதுலக்கையைப்பற்றிபிடிக்கக்கடுக்குதையா மிகுந்து.
சண்டாளியென்போலமண்டலத்திற் பெண்களுண்டோ விலையேகால
கண்டற்குளன்மீதிற்சற்றேனுமைமையோ கருணைவர வில்லையே

இராகம்-புன்னாகவராளி-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

ஆதிபரம்பொருளே யுன்றனருளிதுவோ பரசிவமே
வேதியர்க்குநெல்லுக்குத்த விதித்தாயோ வென்பவமே
கஞ்சமலர்போன்ற கரங்கடுக்குதையோ சிவமே
பஞ்சைபோலேநெல்லுக் குத்தப்படைத்தாயே என்பவமே
பாலமுதம்வாரி யன்பாய்ப்பருகுமென்றன் கைநோக
காலவினைநெல்லுக் குத்தக்கற்பித்தாயோ வென்றலையில்

சந்திரமதி வசனம்.

சுவாமி நெல்லுகுத்தி விட்டேன் இனிபாவது உத்தரவு கொடுங்கள்.

காலகண்டன் வசனம்.

சந்தி நெல்லுக்குத்தினது சரி அதை புடைத்துக் கொழி த்து அரிசிவேறு உமிவேறு கவிடுவேறு குருணைவேறாகச் செய்

இராகம்-பூரிகல்யாணி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

அத்தர் புனுகுசவ்வாதுபன்னீர் பூசுங் கையால் இப்ப
குத்தியநெல்லைக்கொழித்து புடைக்கவுமானேன்
வல்லவரான வென்மன்னன் பிடிக்குங்கையாலே இந்த
சல்லடைகொண்டுசலித்துப் புடைக்கவுமானேன்
தவிடுகுருணை அரிசி வேறாக்கினே னையா இனி
அவசியங்கானகஞ் செல்ல விடைதாரு மையா.

சந்திரமதி வசனம்.

சுவாமி அரிசிவேறு உமிவேறு தவிடுவேறுகுருணை வேறாகப் பிரிந்துவிட்டேன் இனியாவது யென்னுடைய பாலகனைத்தகன ஞ்செய்ய விடைகொடுக்கவேணும்.

காலகண்டன் வசனம்

சந்தி வனத்துக்குப் போகவேணுமென்ற ஆத்திரமிருக்கே யொழிய ஆத்தில் என்னென்னவேலைகள் செய்துவிட்டாய் வேலையைப்பாரடி சந்தி போகலாம்.

சந்திரமதி விருத்தம்.

முறைமுறைபணிகள்யாவும் முடித்தனன் மீதமில்லை
குறையொன்றுமில்லையைபோ மெ[illegible]ம் பின்மனம்பொறுப்பாய்
மறையவவுடையோனில்லா மைந்தனைபரவந்தீண்டி
சிறைதனிலிறந்தான்றன்னைத் தேடக்கருணைசெய்யே.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

மாமறையோரேஜபாவனமபோக விடைதந்தருள்மெய்யா. (மா

அநுபல்லவி.

தாமதமன்றியே தண்ணீர்குடமெடுத்து
கோமகனைத்தேடாமுன் கொண்டுவந்தேனுனிதோ. (மா)

சரணங்கள்.

சித்தமிரங்கலையா பென்ன செய்வேனிதுதொல்லையா
புத்திரனையிழந்து பெற்றமனந்தளர்ந்து
உற்றதுணையில்லாமல் முதுதம்பெருக்கிவைத்தேன். (மா)

கஞ்சமலர்பாதனே கருணைசெய்வாய்நீதனே
அஞ்சலென்றேன்கண்பாரும் ஆதரவில்லையாரும்
தஞ்சமில்லாதபாவி சாணங்தெளித்துவிட்டேன். (மா)

காலகதிதநியோ கவுசிகமுனிசதியோ
ஆலமுண்டோன்மிருத்த சீலமுடனளித்த
பாலகனையிழந்து கோலமிட்டிதோவைத்தேன். (மா)

தருமமுண்டுமையனே என்மேல் வருமம்வேண்டாமெய்யனே
கருமங்களொழிந்திட அருமைமகனைச்சுட
திருவிளக்கேற்றிவைத்தேன் கிருபைசெய்திடுமினி. (மா)

வெய்யோன்மேற்றிசைசென்று விருளான என்செய்வனினிக்குளின்றால்
துய்யவெண்மையதாக ஐயோசொல்லுமிபோக
செய்யுந்தவிடுபோக செய்தேனரிசியாக. (மா)

சந்திரமதி வசனம்.

சுவாமி வீட்டுவேலைகளில் ஒன்றேனும் பாக்கியில்லை சரிவ ரச்செய்துவிட்டேன் விடைகொடுக்கவேணும்.

காலகண்டன் வசனம்.

சந்தி குழந்தையிறந்தது மெய்யானால் பெடுத்துச்செடியி லேளறிந்துவிட்டு நான்நித்திரைவிழிப்பதற்குள் வந்து சேரவே ணும்.

சந்திரமதி வசனம்

சுவாமி குழந்தையை யெடுத்துத் தகனஞ்செய்து போட்டு வருகிறேன்.


காலகண்டன் வசனம்.

சந்தி சீக்கிரம்போயிட்டுவா.

சந்திரமதி வனத்துக்குச் செல்லுகிற பாகம்.

சந்திரமதி விருத்தம்.

வனத்தினிசிறக்கமில்லா மறையவனுரைத்தமாற்றங்
கனக்குழலாளுங்கேட்டாள் கடவுளைவணக்கஞ்செய்தாள்
வனத்தினையறியேன்சென்று வழக்கமுமில்லையேவேறே
எனக்கருந்துணையுங்காணே னிருளிடையென்செய்வேனே.



இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஆ-யென்தனருமைக்கண்மணியே எனதங்கம்பதறுதடா (யெ)

அநுபல்லவி.

ஞாயமில்லாமறை யோர்விடைதந்திட
நடுராத்திரிமிகவானதேகொடும்பாவி யென்மனம்நோகுதடா ()

சரணங்கள்.

ஆலமரமெதுவோ அறியேன் நீயன்பாய்ப்பள்ளிகொண்ட-ஆ
பாலர்சொன்ன அடை யாளந்தனைவிட்டு
பாதகியான்வாரே னையோ திடுக்கிட்டு
கால்களயர்ந்துயென் மேனுந்தளாடுதே
கனியேநவமணியேபொற் பணியேநான்தனியாகினேன்டா (ஆ)

காரிருளோங்கியகானகத்தில் வழிகண்டெப்படிச்செல்வேன்-கா
ஆரெனக்குத்தஞ்ச மையோமுனிவஞ்சம்
ஆனதுயிப்படி. யாகவேயென்னெஞ்சம்
சோருதேசோபங்கள் மீறுதையோயென்
சோதனையோநான்முகன் செய் வாதனையோ நானறியேன்டா ()

நாய்நரிபேய்களுந்தின்றதுவோ உன்னை நாடியோடித்தேடி-நா
சேயனேநீயென்ன செயலடைந்தாயோர்
தெரியேனிக்கெதிக் காகப்பிறந்தாயோ
நாயகமேவுயிர் நீயாதெரியுதே
நானினிமேலென்னசெய்வேன்கானிலேயெவ்வண்ணமுய்வேன்()

சந்திரமதி விருத்தம்.

தடந்தனிற்செல்லும்போது தருவணத்துடயர்ந்த
வடமுன்டுவெதற்குச்சற்றே வடத்தினிற்குகையுமுண்டு
வடவியென்றுரைத்துப்போனா ரவ்வனமிதுவோவேறு
தடமதுதவற்றிற்றோதான் சங்கரவென்னசெய்வேன்.

இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

ஆ இதுதானுபெருங்காடு சுற்றி
அடர்ந்தசெடிகொடிகள் படர்ந்திருக்குதே யெங்கும் (ஆ)

அநுபல்லவி.

சோபமிகவுமே லாகுதுபாமே
துணையில்லையுனதிணை யடியல்லாற்பரமே. (ஆ)

சரணங்கள்.

ஆதவனொளியிந்த வனத்தில்வீசாதே
ஐயோபாவியெனக்கு வழிதெரியாதே
நாதனற்றபாவியெனக் காதரவொன்றுமிலையே
நடுங்குதெனதுதேக மொடுங்குதேபார்த்தவுடன். (ஆ)

வழிமறைந்திருக்குதே மலையடிவாரம்
மரங்கணிறைந்திருப்ப திறுவென்னகோரம்
வெளியாவதுமின்ன லொளியாவதுங்காணேன்
மேடுபள்ளங்கற்கறடு கூடுமோவிதில்நடக்க. (ஆ)

அண்டமிடிந்ததைபோற் கேட்குதேசத்த
மானைகரடிசிங்கம் புலிபன்றிமெத்த
சண்டைபோடுதொண்றோடொன்று வெண்டிசையதிரவிந்த
தண்டகாரண்யத்தைப்போலே கண்டதில்லையிதுவரை. (ஆ)

சந்திரமதி விருத்தம்.

தடத்தினிலடியைவைப்பா டடவுவாளெதிரேபோங்கும்
வடத்தினின்மோதிநின்று மயங்குவாளடித்துவீழ்வாள்
இடத்தினைக்காணேனென்பா ளேங்குவாடழுவாணீண்ட
கடத்தினிலோடித்தேடிக் கதறுவாள்பதறுவாளே.

ஸ்ரீ-இராகம்-தாளம்-ஆதி.

பல்லவி.

எங்கேகாண்பேண்டாபாலா வுனையான்
இந்தவனந்தன்னிற் கண்மணியே (எ)

அநுபல்லவி.

சிங்கம்புலிபன்றி செறிந்தகாட்டிலே
தேடித்தேடிக்கூவி திகைக்குதென்னாவி (எ)

சரணங்கள.

காடுமேடுபள்ளங் கலங்குதென்னுள்ளம்
போடுபோடயர்றிதோ போகுதொருபூதம் (எ)

ஆலமாமொன்றே யடையாளமென்றே
பாலருரைத்தாரே பாவியெனக்கின்றே (எ)

நிந்தைவேருகச் சிதறியானேக
வந்தனையோவிதி மாமுனிவர்சதி (எ)

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

கண்மணிநாயுன்னைத்தேடி இந்தக் கானகந்தனிலலைந்தோடி
களைமுடி அலமோட அவதிப்படுகிறண்டாளெந்தன் (கண்)

அலகைநாய்நரிசெய்யுங்கோரம் கேட்டுஅஞ்சுதே என்னமனந்நேரம்
அடவிதூரங்கடவுள்பாரம் புடவியாளவந்தஎன்றன் (கண்)

விடியுமுன்வாரேனென்றகாசி வேதியரிடத்தினில்நானே
வெருவாய்த்தானேதகுஞ்சிமானே அருகியானேண்டாளென்னிரு (கண்)

ஐயையோயிதுவென்னபாவம் அருந்தவமுனியால்வந்தசாபம்
ஆருச்சோபமமாருத்தாபம் பாராதேங்குறேனையோஉன் ()

இராகம்-காப்பி-தாளம்-சாப்பு.

பல்லவி.

கானகத்தில்நானலைந்து கலங்குரண்டாகண்மணி (கா)

அநுபல்லவி.

மான்மறைவேங்கைசிங்க மதகரிபன்றி சங்கம்
வளைந்தென்றன்மீதிற்பாய வருகுதடாநங்கமே (கா)

சரணங்கள்.

உன்னையோநானினைந்து உள்ளமிகவேநொந்து
பின்னுமேகாலயர்ந்து பேதையினியேதுசெல்வேன் (கா)

காரிருள்மிறதே கண்களிதோசோருதே
மாரிபிடிமின்னல்வாடை வருகுதடாமகனே (கா)

கத்துவதையோநாய்நரிகள் கதறுதெங்கினும்பேய்கள்
சித்தமிகநொந்துவாடித் தியங்குறேனுன்னைத்தேடி (கா)

சந்திரமதி விருத்தம்.

மயிலேபுறவேமானினங்காள் வானம்பாடிவானரங்காள்
குயிலேயனமேயஞ்சுகங்காள் கொம்மைச்சூட்டுவாரணங்காள்
அயலாரொருவர்துணையுமில்லே னடியாடனக்குவாய்திறந்தே
துயர்நீர்ந்திடவேவார்த்தைசொன்னாற்றொலையுங்கவலைவிலகிடுமே.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

பகர்வீரெனக்குறுதி எந்தன்பாலனிறந்தவிடம்

அநுபல்லவி.

சுகமாயிக்காவில்வாழுஞ் சொர்னவர்ணப்பட்சிகயே

சரணங்கள்.

மான்மறைபுள்ளினமே வரியரிக்குயிலன்னமே
கானமயிலே கவுதாரியன்றிலே பேடேகலையேஎன்றன்
குலைபதறிநிலைதவறி வாடுகின்றேன் (ப)

கடுவாய் மதகரியே காட்டுப்பன்றிகாளிகூளியே
படுபாவியென்றயர் பார்த்துப்பேசாதிருந்தால்
பாபம்வரும்சோபந்நீரும் கோபமில்லாமலெனக்கு (ப)

இராகம்-தன்யாசி-தாளம்-ஆதி.

பல்லவி.

மகனேநானென்ன செய்குவேன்இடி
மழைமின்னலுங்கூடி வளையுதென்றனைநாடி (மக)

அநுபல்லவி.

அகமெலிந்தொன்றியாய் யலைகிறேன்பாவி
அடிக்கடிசோப முண்டாகுதேகூவி
யுகப்பிரளையமிதிற் கொவ்வாதுகாவில்
ஓடுதேதண்ணீர்ரெங்கெங்கும் மூடுதேவாடுதேமனம் (மக)

சரணங்கள்.

வாடையினுனுட லாடுதேகாலம்
மாமுனியாலெனக்கு வந்ததிக்கோலம்
ஆடையுங்கஷ்டமென்று அமைத்தானோவால
மருந்துமானருளோ விருந்ததெனக்கிப்படி (மக)

படருதேமங்குல மடருதேகருத்துப்
பதறுதையோபுத்தி சிதறுதேமிகுத்து
சடையுதேகால்கள்ரெண்டுங் குடையுதேபொருத்து
தயங்குறோன்மயங்கியே பயங்கரமாக (மக)

சந்திரமதி விருத்தம்.

உருகினாளுள்ளமெல்லா முணர்வழிந்தோடித்தேடி
கருகினால்மேனியெல்லாங் கலங்கினாளிடைந்துவாடி
மருகினாள்கண்ணிர்சோர வழிதடுமாறிநின்றாள்
பெருவயினாமகனையென்னப் பின்னிடாதோடுவாளே.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

கண்ணேயெந்தன்கண்மணியே கற்கண்டேதேனே
கானகத்திலொன்றியாக கலங்குறேனானே
அங்கமிகவும்நொந்துவாடி யலைகிறேன்பாவி
அலறிமனதுபதறிமிகவும் அஞ்சுதேன்னாவி
கல்லுமுள்ளுமிடறியேயென்றன் கால்கள்சோருதே
கைகள்பதறிமெய்கள்சிதறி கவலைமீறுதே
வல்லபமிகுந்திடுந்தவ மாமுனிசதியோ
வந்ததுயர்தந்ததுபிரமன் வருத்திடும்விதியோ
தண்டகாரண்யந்தனிலகோர சத்தங்கேட்குதே
தடமுரியுற்றயிடமுந்தோணுமல் தாபமாக்குதே
காளிகூளிப்பேதப்பேயெங்கும் கத்துதேபாலா
கர்மமோஎவர்வர்மமோஉனைக் காண்கிலேன் சீலா

சந்திரமதி விருத்தம்.

தேடினாளிருட்டிலேதான் தெரியவுமில்லையென்று
வாடினாள்மயங்கிவீழ்ந்தாள் மயக்கந்தீர்ந்தெழுந்தாளங்கே
மூடியதெற்பைப்புற்கள் முதிர்ந்தபுத்தடியின்கீழே
சாடியேவிழுந்தாள்கையாற் றடவியேமகனைக்கண்டாள்.

பேய்கள் வந்து மறிக்கிற விருத்தம்.

தனியவள்காணும்போதே சதிகாரவிஸ்வாமித்திரன்
வினவியயேவலாலே வெருட்டியபூதப்பேய்கள்
இனியுனைவிடுவதில்லை யென்றுபற்கடித்துக்கூவி
அனிதமாக்கூட்டங்கூடி அதட்டியேமறித்ததன்றே.

இராகம்-தன்யாசி-தாளம்-ஏகம்.

பல்லவி.

வந்ததேபேய்கள் வனந்தனில் வந்ததேபேய்கள்

அநுபல்லவி.

கந்துகந்தாய்க்கூடிகொண்டு கடலொலிபோலிரைச்சல்விண்டு
சிந்தைநொந்துசந்திரமதியுந் தேடியேவருமார்க்கங்கண்டு (வ)

சரணங்கள்.

குலையைப்பிடுங்கிவாயிற்போடு குடலைபிடுங்கிமாலைசூடு
தலையுடைத்துமூளையெடுத்துசாப்பிடவென்று கூப்பிட்டுக்கொண்டு

இராகம்-மோகனம்-தாளம்.

கண்ணிகள்.

சமையபுரிமாரியம்மன் சன்னதிக்குபோகையிலே
தட்டாமல்பட்டுவாங்கி சாத்துகிறேமென்னியாளே

கொந்தகைவிராலூரு கொள்ளைகொண்டருக்கச்சிக்கி
குண்டுமெணிக்கண்டாங்கி வாங்கிவைகிகிறேமின்னியளே

மாரநாட்டுக்கருப்பனுக்கு மாறுதகையரிவாள்
தாராளமாகவாங்கி சாத்துகிறேமென்னியளே

மொட்டைநல்லகோபுரத்தை தொட்டலைத்தமாமுனிக்கி
மட்டடங்காதுட்டுதடி வாங்கிவைக்குறேமென்னியளே

அடங்காதசூரனெங்கள் அரியலூருவீரனுக்கு
குடங்குடமாய்ச்சாராயம் கொண்டுவைக்கிறேமென்னியளே

மானகிரிமதிச்சியத்து வம்பன்சேரனைமுத்தனுக்கு
பானையோடேகள்ளுவாங்கிப் படைக்கிறேமென்னியளே

பிசாசு வசனம்.

அடாமக்களா ஆண்காற்றடிக்குது பெண்காற்றடிக்குது ஓடிவாங்கடா மக்களா.

உ

பரமபதி துணை.

சந்திரமதியை

பிசாசுவிரட்டுகிறபாகம்,

சந்திரமதி விருத்தம்.

ஐயையோபிரமதேவ னமைத்திட்டவிதிகடானோ
பையவென்றுய்த்தகப்பன் பண்ணினதவங்கடானோ
வையவேபெண்பிறந்து நாய்களும்பேய்களென்றன்
கையதைத்தொட்டிழுக்கக் கன்மமென்செய்தேன்பாவி.

இராகம்-புன்னாகவராளி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

ஐயையோநானென்னசெய்வேன் மகனே இந்த
அவதிக்கோடாஉனைவளர்த்தேன் மகனே

சுந்தரனேகண்மணியே மகனே என்றன்
சொற்றவறுசற்குணனே மகனே

மையிருண்டவனத்திலெங்கும் மகனே எனை
மறிக்குதையோபேய்கள்வந்து மகனே

ஐயாவுனையானெடுத்து மகனே என்றன்
கவலைதீர்க்கஇடாரகவே மகனே

செய்யுதடாபேய்கள்துன்ப மகனே இந்தத்
தீவினைக்கோபெண்பிறந்தேன் மகனே

குடல்பிடுங்கித்தின்போமென்று மகனே பேய்கள்
குதிக்குதடாபந்தங்கொண்டு மகனே

கடலொலிபோலிரைச்சலிட்டு மகனே பேய்கள்
கத்துதென்னைவந்துசுற்றுதடா மகனே



சந்திரமதி விருத்தம்.

சண்டமாருதமோமைந்தா சாமரம்போடுநிப்போ
வண்டல்சந்தனமும்மாச்சோ மாந்தளிர்மேனியெல்லாம்
கொண்டல்சேர்புனுகுகந்தங் குளிர்ந்தவாசனைகடானோ
தண்டகாரண்யப்பேய்கள் சப்தமோநாதகீதம்.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

நானென்னசெய்வேண்டாலோகிதா ராஜாதிராஜனேலோகிதா
ரத்னசிகாமணியேலோகிதா நாட்டுக்குநாயகமேலோகிதா
கண்மணியைகனியேலோகிதா கற்கண்டேசற்கரையேலோகிதா
கலங்கித்தவிக்கிறண்டாலோகிதா கைநவறவிட்டாயேலோகிதா
எப்போதுனைக்காண்பேன்லோகிதா என்னுயிற்குயிரேலோகிதா
இக்கதிக்கோகான்வளர்த்தேன்லோகித எங்கித்தவிக்குரண்டாலோகிதா
பங்கயமலர்வதனாலோகிதா பரதேசியயானேண்டாலோகிதா

இராகம்-புன்னாகவராளி-தாளம்-ஏகம்.

பல்லவி.

இனியென்னசெய்வேண்டா லோகிதா உனை
எப்பிறப்பில்காண்பேண்டா லோகிதா

அநுப்பல்லவி.

மனிதருதவியில்லா மாபாவிபாகிவிட்டேன்

சரணங்கள்.

கஷ்டதிசைதீர்ந்துதன்னால் இஷ்டமாயயோத்திசென்று
அஷ்டதிசையாள்வாயென்று திட்டமாய்நினைந்திருந்தேன் (இ)

செங்கதிர்குலத்திலுற்ற பங்கயவதனசுத்தத்
தங்கமேமன்னவன்பெற்ற சிங்கமேயுனையிழந்து (இ)

யீசனடியைநினைந்து மாசிலாத்தவம்புரிந்து
காசினியையாள்வாயென்று ஆசையுடன்பெற்றபாலா (இ)

கரும்பேகனிரசமே யரும்பேமலர்வாசமே
விரும்பிவளர்த்துக்கடு விஷத்துக்கிரைகொடுத்தேன். (இ)

சாலமோமுனியால்வந்த கோலமோமன்னன்மகிழ்ந்த
பாலகாவுனையரவு காலனைப்போல்கடித்ததோ (இ)

இராகம்-அசாவேரி-தாளம்-ஆதி.

பல்லவி.

தெய்வமேயென்ன செய்குவேனையையோ (தெ)

அநுபல்லவி.

தையல்நானின்று தவிக்குறேனின்று
மெய்பதறவே செய்யுதேபேய்க்கோரம் (தெ)

சரணங்கள்.

சரிசரியாய் மீறுதேபேய்கள்
காரிருன்சூழ்ந்த பாரவனந்தன்னில் (தெ)

தலைதிருகிக்கொண்டு குலைபிடுங்கவென்று
மலைபோலேயிதோ வலகைவருதோடி (தெ)

குடல்வாவென்று அடமாய்நின்று
துடருதேபேய் யிடர்செய்யுதையோ (தெ)

சந்திரமதி விருத்தம்.


இப்படிபேய்கள்கூடி இடஞ்சல்கள்செய்யும்போது
சற்பனைதானுவென்று சந்திரமதியாடானும்
கற்பதுநிலையேயானுற் கணவன்பொய்யுரையாரானுல்
அற்புதமானபேய்க ளகன்றுமேவிலகிடாதோ:

பொது வசனம்.

விஸ்வேசா அடியாள் கற்புமெய்யானுல் என்பிராணநாயக ருடைய சத்தியம் நிசமேயானுல் இந்த பிசாசுகளெல்லாம் விலகிப்போகவேணும் நாதா.

மேற்படி வசனம்.

சந்திரமதி இவ்வாறு சொன்னவுடனே யிவளுடைய பதிவிரதாதர்மத்தினுல் அக்கினிசுவாலையாயிருக்கப் பேய்களெல்லாம்திரேகத்தில் தீப்பிடித்ததுபோ லெரிகுதென்று ஓடிப்போனபின்சந்திரமதி குழந்தையையெடுத்துப் புலம்புகிறவிதங்காண்க,



உ

பரமபதிதுணை.

சந்திரமதிலோகிதவனை
எடுத்துப் புலம்புகிற பாகம்.

சந்திரமதி விருத்தம்.

சண்டனள்கதறிவிழ்ந்தாள் கழுதெல்லாமலறிப்போக
கொண்டதோர்மகவினுசை ஆவியைக்கொள்ளைகொள்ள
முண்டகக்கரத்தாலேந்தி முருகனைமடிமேல்வைத்து
அண்டருமருகியேங்க வாய்திறந்தரற்றலுற்றாள்.

இராகம்-சோகவராளி-தாளம்-சாப்பு.

இன்னமும்நித்திரையோ கோபமோ	யெழுந்திரடாமகனே
பொன்னேநவமணியே அருந்தவப்	புத்திரசிகாமணியே
சோதிச்சுடரொளியே மகனே	தூண்டாமணிவிளக்கே
நீதிமுறைதவறு மன்னன்பெற்ற	நீதனேநித்திரையோ
பூவணைமெத்தையின்மேல் படுத்துன்	புகழ்ந்ததிருமேனி
காவனத்தில்படுக்க உனக்கயன்	கற்பித்தசற்பனையோ
தாதியர்தாலாட்டமஞ்சத்திற்	சயனித்திருந்ததும்போய்
பாதியிரவுதனில் வனத்திற்	படுக்கத்தலைவிதியோ
அன்னமிலாதுனையான் வனத்திற்	கனுப்பியகோபமோடா
கன்னல்மொழியழகா மகனே உன்	கண்திறந்துபாரடா
அத்தர்புனுகுபன்னீர்ஜவ்வாது	அணிந்ததிருமேனி
உத்தமனேபுழுதி புரளவும்	உந்தன்தலைவிதியோ
பாரடாகண்விழித்து உன்னைப்பெற்ற	பாவிபடுந்துயரை
தீரடாசோபமதை மகனேயென்	சிந்தைபுண்ணுகுதடா

சந்திரமதி விருத்தம்.

மார்த்தாண்டன்குலத்தில்வந்த மன்னவர்க்கணியேமுன்னோர்
சீர்த்தியேயருமையான செல்வமேபெற்றமாதா
கூர்த்திருள்வனத்தில்வந்த கொடுமையைக்கண்டுமின்னம்
வார்த்தையீயுரைத்திடாமல். மயங்கிநித்திரைசெய்தாயோ.

இராகம்-தேசிககமாஸ்-தாளம்-சாப்பு.

பல்லவி.

கண்மணியேயின்னந்தூக்கமா வெழுந்திரடா (கண்)

அநுபல்லவி.

திண்புயத்தரசனுன்னைத் தேடுவாரடாசுதனே
மண்மிசைபடுக்கலாகுமா வெழுந்திரடா. (கண்)

சரணங்கள்.

பெற்றதாய்வந்துநின்று பேசுவதெல்லாந்தெரிந்து
உற்றமொழிசொல்லலாகாதா வெழுந்திரடா. (கண்)

தெற்பைசமித்துமுன்னைச் சேகரித்துவாரேனென்று
செப்பியமொழிமறந்தாயோ வெழுந்திரடா. (கண்)

பசியாற்கனைத்துவந்து படுத்தாயோமனதுநொந்து
நிசிவேளையாகுதையோ வெழுந்திரடா. (கண்)

சந்திரமதி விருத்தம்.

காட்டினிலரசரெல்லாம் நகுபத்துபேரிடங்கா
கோட்டுடன்முழங்குநீலக் குரைகடலின்பமீங்கி
கூட்டியநரியும்பேயுங் கூளியுங்கழுகுஞ்சூழ்ந்த
சாட்டினிலிறக்கக்கண்ணாற் காணவும்விதித்திட்டானே.

இராகம்-பியாகு-தாளம்-சாப்பு.

பல்லவி.

ஐயோவென்செய்வே னருமைக்கண்மணியே
ஆறுமோமனந் தேறுமோவினிமேல் (ஐ)

அநுபல்லவி.

துய்யசெங்கனி வாயனேமுன்செய்த
தோஷமோமுனி மோசமோவறியேன். (ஐ)

சரணங்கள்.

கண்ணேசிநாடான் வாயென்றிருந்தேன்
கர்மிநான்வெகு வாகவேமகிழ்ந்தேன்
யென்னம்யாவையு மறந்திடச்செய்தாயே
யென்னையந்தர மாகவிட்டாயே. (ஐ)

பத்தரைமாற்றுப் பசும்பொன்மேனியனே
பண்புள்ளநீதி யுற்றபுண்ணியனே
அத்தனருளினு லையாநீபிறந்தாயோ
அரவினாலின்ற ஹுயிரிழந்தாயே (ஐ)

சந்திரமதி விருத்தம்.

அப்பனேமகனேயென்ற னுருயிரனையகண்ணே
சர்ப்பமுன்றன்னைத்தீண்டத் தான்மடிந்தாயோவின்று
எப்பநானுன்னைக்காண்பே னெப்படிப்பிறிந்திருப்பேன்
இப்புவிமீதிலுள்ளோ ரேசவுநிருமித்தானே.

இராகம்-கானடா-தாளம்-ஆதி.

பல்லவி.

யான்பெற்றமகனே யென்னசெய்யவண்டா (யா)

அநுபல்லவி.

தேன்மொழிந்தவாயனே செகம்புகழும்நேயனே
மேனாள்விதியோவென்றன் மெய்பதறுதையோ (யா)

சரணங்கள்.

மன்னவன்வந்துயென்றன்மகனெங்கேயென்றுகேட்டால்
என்னவிதமாயவர் கெடுத்துரைப்பேனையோ (யா)

ஆதரவாருன்னை யல்லாதினிப்புவியில்
பாதகின்றுமனம் பதறும்படிவிட்டாய் (யா)

சந்திரமதி விருத்தம்.

நாட்டினையிழந்துகாசி நகர்தனைநோக்கிநீண்ட
காட்டினில்வரும்போதுற்ற கனல்விழத்துணிந்தகண்ணே
மீட்டிடநம்மைவிற்ற வேந்தன்வந்தென்பாலுன்னைக்
கேட்டிடிலவர்க்குமாற்றங் கிளருவதியாதோகாணேன்.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

பாவியானேண்டா அடாபாலா அடாபாலா
ஐயையோ நான்கொடும் (பா)

பாவியிவளென்று பாரெங்குஞ்சொல்ல
ஆவியைநிகர்த்த அப்பாவுனைத்தோற்று (பா)

கற்பனையிதோ காலகெதியோ காலகெதியோ
ஐயையோ முனிசெய்த (பா)

தற்பான்மைத் திட்டவிதியிதோ
சர்ப்பங்கடித்துயி ரப்பனேமாண்டாயோ (பா)

செங்கோல்தரித்துச் செகமுழுதுஞ்
செகமுழுதும் அரசுசெய்யாமல் (பா)

சிங்கமேமண்மேலே வெங்சணரவாலே
தங்கமேமீமாண்டாய் சண்டாளிநான்கொடும் (பா)

பற்றுதேவயிறுபாதவித்து பாதவித்து
ஐயையோ தீயாக (பா)

நற்றவம்புரிந்து பெற்றேனுன்சுமந்து
அற்றதோவுன்னுசை ஐயையோநான்வெகு (பா)

சந்திரமதி விருத்தம்.

மன்னவன்றேசமெல்லா மாமுனிக்களித்திட்டாலுங்
கன்னலைச்செங்நெல்காட்டுங் கமுகினைகன்னல்காட்டும்
கன்னமாபுரியையாள்வா யென்றியான்காத்திருந்தேன்
இன்னகர்வனத்திற்பாம்பா லிறந்தனையினிசெய்வேன்.

இராகம்-யமுனுகல்யானி-தாளம்-ஆதி.

பல்லவி.

இதுவென்னகாலமடா யெனதருமைமகனே
அருந்தவப்பயனே யுனக்குவந்த (இ)

அநுபல்லவி.

சதுர்முகன்சோதனையோ தவமுனிவாதனையோ
விதிவசம் ஒத்ததுவோ
நமக்கிப்படியாகமனமிகநோக உன்னுயிர்போக (இ)

சரணங்கள்.

அன்னைதனைமறந்தா யரவாலுயிரிழந்தாய்
பொன்னவாமாமணியே யருட்பணியே
கனியேயென்னிருகண்மணியே யுனக்குவந்த (இ)

சிங்காசனத்திலிருந்து செம்பொன்முடிபுனைந்து
தங்கமேநீயரசு செய்வாயென்றெண்ணி
இருந்தேன் மனமிகமகிழ்ந்தேன் முனிசதியோ (இ)

சந்திரமதி விருத்தம்.

விதிமுதல்மூவருக்கு மேலவன்பதத்தைப்போற்றி
மதிதயனென்னைத்தந்தான் மைந்தாயானுன்னைபெற்றேன்
கதிரவன்குலம்விளங்கக் கண்மணியரவால்மாண்டாய்
மதிகதிர்குலங்களுக்கு மன்னவர்யாரோமைந்தா.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-சாப்பு.

பல்லவி.

வாய்திரந்துபேசடா மகனே மகனே (வா)

அநுபல்லவி.

தாயல்லவோநின்று தவிக்குறேன்றனியாக
தயவில்லர்திருப்பது தகுமோ தகுமோ தகுமோ. (வா)

சரணங்கள்.

ஆதரவெனக்காரு யப்பாவுன்றனையன்றிப்
பாதகிவருந்துறேன் பாலா பாலா பாலா. (வா)
மெய்யதுபதறுதே மேனியுஞ்சோருதே
ஐயாநீவர்மஞ்செய்வ தழகோ அழகோ அழகோ (வா)
என்மீதிற்கோபமோ எவர்செய்தசாபமோ
சொன்னமொழிதவறுச் சுதனேசுதனே சுதனே. (வா)

சந்திரமதி விருத்தம்.

தவமுருவாகவந்த தங்கமேமுத்தேபொன்னே
அவமதென்செய்தேன்மன்ன னுக்கினைதவறினேனே
புவனமெண்டிசையும்போற்றும் புத்திராவரவந்தீண்டப்
பவமுனமபுரிந்தபாவி யாகினேன்பாலாசீலா.

இராகம்-காப்பி-தாளம்-ஆதி

பல்லவி.

மகனேயினிநானென்செய்வேண்டா மடிந்தாயரவாலே. (மக)

அநுபல்லவி.

செகமீதரசுசெய்வாயென்று சிந்தைதனிலே நினைந்தேனினைந்தேன்

சரணங்கள்.

மன்னனைப்பிறிந்த மனத்துயர்யாவும்
உன்முகந்தனைப்பார்த் தொழிந்தேனொழிந்தேன் (மக)
ஆதரவாரு வவனியில்வேறு
பாதகியானேன் பாலா பாலா (மக)

சந்திரமதி விருத்தம்.

மன்னவன் றனக்குச்சொந்த வளநகர்முனிக்களித்து
இன்னகர் தன்னின்மைந்தன் மனவியையடிமைவிட்டான்
என்னினியிருந்தாற்செத்த பிரேதமென் றுரைப்பரொன்றே
யுன்னியிவ்வனத்திற்பாம்பா லுணங்கியிறந்திட்டாயோ.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

சிந்தைநொந்துவாரேண்டா செல்வமேயென்றன் (சி)

அநுபல்லவி.

அந்தரத்திலென்னைவிட்டாயோ ஐயையோபாவி

சரணங்கள்.

காவலரையும்பிரிந்து கண்மணியுனையிழந்து
பாவியிருந்தாவதென்னடா பார்வனந்தனில் (சி)
எப்பிறப்பில்காண்பேனுன்னை என்னருந்தவப்பயனே
தப்பிதமில்லாதசற்குரு சண்டாளியானேன் (சி)
தெற்பைகொய்துவாரேனென்று செப்பிநீவந்தாயேயின்று
கற்பனைபோசர்ப்பந்தீண்டிக் கானிலிறந்தாய் (சி)

சந்திரமதி விருத்தம்.

அப்பனேமகனேயென்ற ஞவியேயருமையான
செப்பருந்தவமேகிட்டாச் செல்வமேயாணிமுத்தே
எப்படியுனைப்பிரிந்திங் கிருந்துயான்வாழ்வேனென்ன
தப்பிதம்செய்தேன்செத்த சவமெனவிருந்திட்டேனே.

இராகம்-முகாரி-தாளம்-ஆதி.

பல்லவி.

இனியென்செய்குவேன் கண்மணிநான் (இ)

அநுபல்லவி.

அனியாயமாயரவுக் கையோஇரைகொடுத்தேன் (இ)

சரணங்கள்.

மன்னவன்வந்தென்னை மகனங்கேயென்றாலன்னை
என்னவிபரஞ்சொல்வேன் யெவ்வண்ணமாகவுய்வேன் (இ)
உந்தனைத்தஞ்சமென்று உகந்திருந்தேனானின்று
சிந்தைகலங்கவிட்டாய்த் தெருவிலலையவிட்டாய் (இ)

அஷ்டதிக்கும்புகழ்ந்து யிஷ்டமாய்மேமகிழ்ந்து
பட்டஞ்செலுத்தாமலே துஷ்டவராலால்மாண்டால் (இ)

தேடக்கிட்டாமருந்தே தேவர்கிட்டாவிருந்தே
வாடவிட்டாயிருந்து மனதுருகியாளுேந்து (இ)

இராகம்-கேதாரம்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

அருந்தவப்பாலகனேயென்ற னருமைக்கண்மணியானலோகிதனே
வருந்துரேனுனிருந்துயெற்ற மாபாவியானுமனதுநொந்து

ஆரைச்சதமென்பேண்டாமனம் ஆறவேண்டாஇனித்தேறவேண்டா
பாராயோவென்முகத்தைக் கொடும்பாவிபடுகிறபரிதாபத்தை

அப்பாவுன்வாய்திறந்து ஒரு ஆதரவுசொல்லுவாய்மனமகிழ்ந்து
எப்படிநான்சகிப்பேன் உன்றன் எண்ணத்தைமாறிஉயிர்தரிப்பேன்

தஞ்சமில்லாப்பாவியானே மகா சாதுகட்கியாதலோபியானேன்
வஞ்சகமுனிசதியோ முன்னாள் மலரயன்செய்ததலைவிதியோ

மன்னனையும்பிறிந்துஆசை மைந்தனையுமிழந்து
என்னவிதம்யான்சகித்துஇருப்பேனையையோயானுமுயிர்தரித்து

தாமரைமேல்நீர்போலநின்று தயங்குறேன்பாரடாகண்ணாலே
தேமாங்கனிரசமே திகட்டா தேவரமுர்தமேகற்பகமே.

இராகம்-காப்பி-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

ஐயோமகனேயென்ன செய்வேண்டா இந்த
அவனியிலெவ்வண்ண முய்வேண்டா

செய்தவத்தால்வந்த சீமானே நம்மள்
தேசமாளவந்த பூமானே

பெற்றாளுடனேயுன்னை விற்றாரே யிந்த
பேதைக்கித்துணையாக வைத்தாரே

வஞ்சகமுனிசெய்த வாதனையோ பாலா
மலரயன்செய்திடுஞ் சோதனையோ

ஆரைச்சதமென்றெண்ணி யிருப்பேண்டா இனி
ஐயையோயென்னுயிர் தரிப்பேண்டா

பெற்றவளிறுதியாய்ப் பற்றுதடா சோம்ப
பீதிக்கெனதுமனம் வாடுதடா
காலன்போல்பாம்புன்னை கடித்ததடா சட்டி.
கனிபோயுன்னுயிர்தன்னைக் கெடுத்ததடா

சந்திரமதி வசனம்

அடா பாலகா உன்னுடன் யாருமிறந்துவிட்டால் உன்னை வெடுத்துத் தகனஞ்செய்யக்கூடிய மனிதரில்லையோ கொடியசண்டாளியாய்விட்டேன் உன்னைத் தூக்கி இந்த மயானஞ் செல்கின்றேன் போவோம்வாடா கண்மணி.

சந்திரமதி, லோகிதனை

மயானங்கொண்டு

போகிறபாகம்.

சந்திரமதி விருத்தம்.

கனியிருந்துமனங்கலங்கித் தவித்துவாடித்
தனையனுடனுமிறக்கவோ மாதிலுற்றார்
இனியொருவரியவனையெடுத் தடக்கஞ்செய்ய
இல்லையெனமைந்தனையுத் தோள்மேலேற்றி
மனமுருகாவம்மையிலே கொண்டோன்கால
வங்கன்னன்விடியுமுனஞ் செல்வேனென்று
கலவிருளில்நாய்நரிகள் பேய்கள்சூழ்க்
கடந்திட்டாள்சுடலையில மடைந்திட்டாளே.

இராகம்-காப்பி-தாளம்-ஆதி.

பல்லவி.


போவோமெழுந்திரடா என்றன்புத்திரனே (போ)

அநுபல்லவி.

காலிலொன்றியாகநின்று கூவிபழுதாவதென்ன (போ)

சரணங்கள்.

ஜாமவேளையாகுதைபோ யிமமாதைநாடியினி (போ)
காடுமேடையுங்கடந்து போடுபோடெனத்தொடர்ந்து (போ)
அந்தணர்கினந்துளன்னை நிந்தனைபுரிந்திடுவார் (போ)



இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

போபோமயானமடா சுடுகாடு இனிப் (போ)

அநுபல்லவி.

ஆவலாயுகந்து அருந்தவம்புரிந்து
புலவர்களாளவந்த புத்திரசிகாமணியே (போ)

சரணங்கள்.

எத்தனைதூர மிருக்குதோயிம்மயானம்
சித்தமிரங்காதம்மா யுத்தமன்கண்டிப்பாரினி. (போ)

மகனையுனையெடுத்து மயானந்தனையெடுத்து
கவலைஞ்செய்திடப்பாதி ஜாமமாகுதையோயினி. (போ)

சந்திரமதி விருத்தம்.

மங்கையவள்வழிநடக்கப் பூதப்பேய்கள்
மறித்திடையில்போடுபோடென் றலறிநிற்கக்
கொங்குலவுங்குழல்களெல்லாஞ் செடிகளீர்க்கக்
குலைபதறநாய்நரிகள் மாடுதாவக்
கங்கைவளஞ்செறிந்திலங்கும் வனத்தைநீக்கிக்
கரும்புகைசெம்புகை கலந்துசுடலைவீசும்
செங்கனலும்வளர்ந்தெரியும் விளக்கத்தாலும்
சேர்ந்திட்டாள்சுடலையகஞ் சார்ந்திட்டாளே.

இராகம்-தோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

எந்தவழிதன்னைக்கண்டு யிமஞ்செல்வேனுன்னைக்கொண்டு. (எ)

அநுபல்லவி.

சிந்தைநொந்துவாடுரண்டா சேயாவழிதேடுரண்டா
இந்தவிதியோயெனக்கய னமைத்தானின்னாள். (எ)

சரணங்கள்.

எங்கினும்நரிநாய்கூளி சிங்கம்புலிபன்றிகாளி
கக்குகங்காய்கிற்குதையையோ காட்டிலினி. (எ)

எத்தனைதூரமிருக்கோ புத்திரனேசுடுகாடு
சத்தகாளமேகஞ்சூழவே மூடுதேயிருள். (எ)

போது வசனம்.

இவ்விதமாகச் சந்திரமதி குழந்தையையெடுத்துத் தோள் மீதுவைத்துக்கொண்டு வரும்பொழுது அரிச்சந்திரன் மயானங் காத்துக்கொண்டிருக்கிற விதங்காண்க.



உ

பரமபதிதுணை.

அரிச்சந்திரன்.

மயானங்காக்கிற பாகம்.

அரிச்சந்திரன் தோட்டி விருத்தம்.

தூய்யமேதோர் முனிவருக்குத் தொல்புவியரசுதந்தேன்
கைப்பொருள்தனையுந்தந்தேன் காதலிமகனைத்தோற்றேன்
பொய்யதுவுரைக்கவஞ்சிப்புலையர்க்கடிமையானேன்
வையகங்காத்துவிந்த மயானத்தைக்காக்கலானேன்.

யிராகம்-தேசிககமாஸ்-தாளம்-சாப்பு.

பல்லவி.

கயிலைவாசாவென்கோரத்தைக் கடைக்கண்ணுற்பாரும். (கயி)

சரணங்கள்.

மயிலனையமாதோடென்றன் மகனையும்விற்றேனுன்றன்
செயலிதோவறிகிலேன்மைந்தன் தேவாதிதேவா (கயி)

அநுபல்லவி.

தேசமெல்லாமோர்குடைக்கீழ் சேர்த்தியாண்டுகாசியில்வாழ்
நீசனுக்காளாகினேனின்னுள் நிர்மலசொரூபா. (கயி)

பாடைக்கொம்புகளினாலே பாணியற்றியதின்மேலே
நாடிநான்காவல்புரிகின்றேன் நான்மறைதேடும். (கயி)

வேதம்புகழும்பாதா வேண்டினேனின்னருள்தாதா
ஆதரவொருவருமில்லா வனாதியானேன். (கயி)

அரிச்சந்திரன் தோட்டி விருத்தம்.

அத்தனேவிஸ்வநாதா அடியேன்செய்குற்றமேதோ
சித்தமெப்படியோகானேன் தியங்கியேமயங்கவிட்டாய்
பித்தனேதுதர்மமா பிணஞ்சுடுகாடுகாக்க
வைத்தனையினியென்செய்வேன் மனமிரங்காதோவீசா.

இராகம்-நாதநாமக்கிரியை- தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஈசாயிருதர்மமா விசு
வேசாவென்மேல் வர்மமா. (ஈ)

ராஜங்கமாளதும்போய் இப்போ
நீசாங்கமாக வைத்தாய் (ஈ)

நாட்டைநான்காத்தும்போய் சுடு
காட்டைநீகாக்க வைத்தாய் (ஈ)

தார்வேந்தர்சூழ்ந்ததும்போய் இப்போ
வார்பேய்கள்சூழ வைத்தாய். (ஈ)

மண்டலீகம்புனைபோல் சிறு
துண்டும்புனைய வைத்தாய். (ஈ)

அம்புருத்துணியும்போய் கருங்
கம்பனிபோர்த்த வைத்தாய். (ஈ)

அம்புதொடுங்கைகையால் பாடைக்
கம்பும்பிடிக்க வைத்தாய். (ஈ)

செங்கோல்பிடித்ததும்போய்ச் சவஞ்சு
சங்கோல்பிடிக்க வைத்தாய். (ஈ)

சங்கீதங்கேட்டதும்போய் பேயின்
வெங்கீதங்கேட்க வைத்தாய். (ஈ)

அரிச்சந்திரன் வசனம்.

ஏ ஜெகதீசா அடியேன் ராச்சியத்திலிருந்து ராச்சிய பரிபாலனஞ்செய்து வந்ததும்போய் இப்பொழுது மயானத்தைக்காக்கும்படி செய்துவிட்டாய் என்செய்வேன் விஸ்வேசா.

பொது வசனம்.

இவ்விதமாக அரிச்சந்திரன் மயானங் காத்துக்கொண்டிருக்கும்பொழுது மந்திரியாத்திரைபோனவர்பின்புகாசிப்பட்டணம்வந்து அரிச்சந்திரனை விசாரித்து சுடலையிலிருப்பதாகத் தெரிந்து மயானத்திற்குவருகிற விதங்காண்க.

மாசிலா அயோத்தியாளு மன்னவன் றன்னையிந்தத்
தேசத்தில்விற்றுப்போனேன் திரும்பவுங்காணேனிந்த
காசியில்வந்துபார்த்துங் காண்கிலேனென்செய்வேனென்
வேதங்கள்மாறினுமோ வேறிடம்சென்றிட்டாரோ.

இராகம்-பாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

தேடியுங்காணேனே தேடியுங்காணேனே
செம்மலைநான்வெகு உண்மையுடனெங்குந். (தே)

அநுபல்லவி.

ஓடியென்காலயர்ந்து உள்ளமிகவும்நொந்து
வாடியேபுலம்புறேன் மன்னவனையெங்குந். (தே)

சரணங்கள்.

காசிநகரைப்பார்த்தேன் கடையர்சேரியைப்பார்த்தேன்
மாசில்லாதுயெனது மன்னனிருப்பிடம். (தே)

இனியெவ்விடத்திற்பார்ப்பேன்என்றுயிர்தனைத்தீர்ப்பேன்
அனிதமாயிருக்குதென் னாசனுற்றவிடந். (தே)

பெண்வகெதியடைந்து இருக்கின்றோமிருந்து
சின்னபின்னமாய் மனம் சிதறுதைதேபாலெங்கும். (தே)

அரிச்சந்திரன் தோட்டி விருத்தம்.

ஆரடாபயலேயிந்த அடாதவல்லிருளில்வந்த
காரடாசுடலைதன்னிற் றங்கியவாறுதன்னை
கூரடாவுன்றன்பேரைக் குறியடாபேசாவிட்டால்
பாரடாசுடுங்கோலாலே பதைத்திடமாட்டுவேனே.

மேற்படி வசனம்.

ஆரடா யின்னேரத்தில்வந்தவன் இந்துவந்தகாரணம் என்னவுன்பேரன்ன வதரிபச்சொல்லு இல்லாவிடில் இந்த சவஞ்சுகோலால் தண்டிப்பேன்.

சத்தியகீர்த்தி விருத்தம்

ஆரெனவுதட்டிக்கேட்ட வன்புள்ளகாவற்காரா
தீரனுமயோத்திமன்னன் றிருமுடிகாணவேண்டி
பாரெல்லாந்தேடியிங்கு பார்க்கலாமென்னவந்தேன்
வேறென்றுமில்லையப்பா வெறுத்தென்னைகோபிக்காதே.

மேற்படி வசனம்.

காவலா யானயோத்தியாண்ட அரிச்சந்திர மகாராஜனுடைய மந்திரிசத்தியகீர்த்தி யிவ்வூரில் மகாராஜா புலையனுக்கடிமையானார் அவரைத் தேடிவந்தேனப்பா காவலா.

அரிச்சந்தோட்டி விருத்தம்.

அப்பனேசத்தியகீர்த்தி யரிச்சந்திரனுனைகண்டாய்
இப்படியேயும்வாட வேற்குமோவென்றன்மந்திரி
செப்பமாய்நீசற்கென்னைத் தீர்க்கமாய்விற்றுச்சென்றாய்
அப்புரமீமங்காக்க வனுப்பியிங்குற்றேன்கண்டாய்.

மேற்படி வசனம்.

மந்திரி நான்றானரிச்சந்திரன் இக்கோலமாயிருக்கின்றேன் தாம் என்னை வீரபாகுவுக்குக் கிரயஞ்செய்தகன்றபின் வீரபாகு வீட்டிற்சென்று பசுக்கன்றையறுத்தேன் கையிலரிவாட்பட்டு வெகுவாகநொந்துகொண்டிருக்குங்காலையி லென்னை யிம்மயானத்திற்குபபோகும்படி யுத்தரவுபண்ணினானதன்பின் இங்கு வந்து பிணங்களைச்சுட்டுக்கொண்டிருக்கிறேன் மந்திரி.

சத்தியகீர்த்தி விருத்தம்.

ஐயையோவயோத்தியாண்ட வரிச்சந்திரமகிபாநீமுன்
செய்தமேதார்வினையோநான்முன் செய்திட்டபாவந்தானோ
தையலைமகனைவிற்றுஞ் சண்டாளர்கடிமையாகி
வெய்யதோசுடலைகார்க்க விதித்தானோபிரமதேவன்.

இராகம்-தன்யாசி-தாளம்-ஆதி.

பல்லவி.

அரசேயிந்த வேஷமாகும்படிக்கி அய
னமைத்தானையையோ மோசம்

அநுபல்லவி.

தாரணிமுழுதுமாண்ட சக்ரவர்த்திசிரேந்த
சவஞ்சுடும்படிவந்த தவப்பயனேதோகாணேன்; (அ)

சரணங்கள்.

முடிபுனைந்தசிரத்தில் முண்டணிந்தீர்கரத்தில்
பிடித்தசெங்கோலுநீங்கிப் பிணஞ்சுடுங்கோலேத்தாங்கி
வடிவமாறிசிரேந்த வடிவமாகியேநொந்த
வண்மையேதோதெரியேன் பண்மைதனிலுயர்ந்த (அ)

சத்தியகீர்த்தி வசனம்.

பிரபூ தாங்க ளிதற்குமுன்னிருந்த இயற்கையு மிப்போ திருக்கின்ற வேஷத்தையும் பார்க்க என்மனமாது சிரம்பவும் நோகின்றது என்செய்வேனரசே.

அரிச்சந்தோட்டி விருத்தம்.

தினைவிதைத்தவர்களெல்லாந் தினைகொய்வாரதனைப்போலே
வினைவிதைத்தவர்களெல்லாம் வினைகளேயனுபவிப்பார்
எனையடுத்துனக்குமிந்த வெழுத்துண்டோசுகமாய்நீபோய்
மனையில்வாழ்ந்திருப்பாய்மந்திரி வஞ்சனையல்லசொன்னேன்.

இராகம்-அசாவேரி-தாளம்-ஆதி.

பல்லவி.

மதியிலுபர்சத்ய கீர்த்திசிரேந்தமன
வருத்தமடையத் தகுமா

அநுபல்லவி.

அதியாசைப்படுவதா லாவதொன்றுமில்லைநம்
விதியின்பயனையாரும் விலக்கவொண்ணாதுபாரும் (ம)

சரணங்கள்.

அயனோர்சிரமிழந்து அவதிப்படவில்லையோ
அத்தனும்பித்தனாகி யலேந்துதிரியலேயோ
சுயமானசதிமதி துன்பப்படவில்லையோ
சொன்னேனமக்குமுன்னோர் சுகதுக்கமெய்தலேயோ. (ம)

அரிச்சந்தோட்டி வசனம்.

சத்தியகீர்த்தி சகல ஆகமங்களையுந் தெரிந்திருந்தும் நமக் கேற்பட்ட கோலத்தைபபற்றி சிரப்பவும்விசனித்தாய் திரிமூர்

த்திகளானபோதிலும் விதிவிடாதும்மிம்காவேயாத்தியிற் சென்றி ருவென்றுயெவ்வளவோ சொல்லியும்கேட்கவில்லை நல்லது இ ம்மயானத்தில் வரப்பட்ட வாய்க்கரிசியைக் கோவுக்கிட்டு அ தையெடுத்துச்சமையல்செய்து சாப்பிட்டுவருவோம் மந்திரி.

மந்திரி வசனம்.

பிரபு தங்களுத்தரவுபோல் வாய்க்கரிசியை கோவிக்கிட்டு பின்பு சமையல்செய்து சாப்பிட்டுக்கொண்டிருப்போம் அரசே.

பொது வசனம்.

இவ்விதமாக அரிச்சந்திரனு மந்திரியும் மயானத்திலிருக்கு ம்போது சந்திரமதிகுழந்தையை எடுத்துக்கொண்டு மயானத்தி ற்குவந்து குழந்தையைவைத்துத் தகனஞ்செய்கிறவிதங் காண் குக.

சந்திரமதி மயானத்திற் குழந்தையைவைத்து தகனஞ்செய்கிறபாகம்.

சந்திரமதி விருத்தம்.

இந்தவீமத்தில்யானு மென்செய்வேனேயோபாலா
உந்தனைக்கொளுத்துதற்கு வொருநெருப்பில்லையேயிங்கு
வெந்ததோர்கொள்ளிக்கட்டை விரைந்தோடிப்பொறுக்கிவாரே
சிந்தனையாகவீசா செல்வனைவைந்தேன்காரும்.

இராகம்-தேசிககமாஸ்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

தற்பரசுகவடிவே சதுர்மறையின்முடிவே
சிற்பராவுன்காவலிலென் சேயனைவைத்திதோசுள்ளி
தேடுரேன் தேடுரேன் தேடுரேன் தேடுரேன் (௪)
காவலெனமகிழ்ந்த கண்மணியைச்சுடவிந்த
பாவிவானீமத்தைச்சுற்றிப் பண்டெறிந்தகுறைக்கட்டை
பார்க்குறேன் பார்க்குறேன் பார்க்குறேன் பார்க்குறேன் (௫)



பத்தியெரியுதேவயிர் பதறுதையையேவுயிர்
புத்திரனைத்தகனிக்கப் புலம்பிக்கொண்டெருமுட்டை
பொருக்குறேன்பொருக்குறேன்பொருக்குறேன்பொருக்குறேன்

அர்த்தராத்திரிநேரத்தில் அலைந்துவெகுதூரத்தில்
சித்தம்நொந்துகட்டைமுட்டை சேகரிக்கவிட்டாயுந்தன்
செயலிதோ செயலிதோ செயலிதோ செயலிதோ (த)

சந்திரமதி வசனம்

விஸ்வநாதா இந்த அர்த்தராத்திரியில் இந்த மயானத்தைச்சுற்றிபண்டெறிந்த கட்டைமுட்டை சுப்பல்களைப் பொருக்கிக் கொண்டுவந்தேன் யீசா இதுவும் உன்செயலாயென்செய்வேன்.

சந்திரமதி விருத்தம்.

இப்புவியாள்வாயென்று யெண்ணியானிருந்தேன்பாவா
சர்ப்பனையாமேலநீயுஞ் சற்பத்திற்கிரையாய்விட்டாய்
அப்பனேசுள்ளிமுட்டை அடைவுடன்பொருக்கவந்தேன்
செப்பமாய்காஷ்டமேற்றி செல்வனேவுனைவைத்தேண்டா.

இராகம்-கமாஸ்-தாளம்-ரூபகர்.

பல்லவி.

காஷ்டத்தில் நீபடுத்திடாப் கண்மணியிந்த (கா)

அநுபல்லவி.

தாஷ்டிகர்தவத்திலுற்ற சற்குணசிகாமணியே (கா)

சரணங்கள்.

கட்டைமுட்டைகளைப்பார்த்து கனத்திலையையோசேர்த்து
திட்டமுடனடிக்கினேன் செல்வமேமனமகிழ்ந்து (கா)

கல்லிதோவைத்தேனுந்தன் நல்லொளிவாய்க்குமிகுந்த
செல்வியமணலேடானும் தெள்ளுறேனரிசிக்காக (கா)

தந்தைதாய்க்குரியதொரு சாஸ்திரம்நீசெய்வாயென்று
சிந்தையில்மகிழ்ந்ததெல்லாம்தீர்ந்துதோயின்றேடேபாலா (கா)



சந்திரமதி விருத்தம்.

பைங்கொடியெழுந்தன்கண்ணே பாலகாவென்னாமார்பில்
கைந்திடவடித்துமோதி காணரும்பாவியானேன்
எந்தனுக்கிடுவாய்கொள்ளி யென்றுநானிருந்தேனப்பா
உந்தனக்கிடவுமீச னுன்சிரத்தெழுதினானோ.

இராகம்-மத்தியமாவதி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

கொள்ளி யுன்மீதில்வைத்தேன்பாலா இதோ
கொற்றவனுமகிழ்ந்து நற்றவங்கள்புரிந்து
பெற்றபாலனின்றோடே யற்றதையோபாவி (கொ)

பற்றுதடாவனல்களெங்கும் பாலா
பக்குமேதசிந்தைகள் சிதறுதேவிந்தையோ
சகமில்லாமலேபாவிக் கதறியையோகூவி (கொ)

எரியுதையோவயிறுதீயாய் பற்றி
இப்படியுமுனி சற்பனேயோவினி
எப்படிமனஞ்சகித் திருப்பேனேயோபாவி (கொ)

போன்றதோவுங்கொடுமையின்று புதல்வனே
பொற்பணியேமணியே யற்புதமேகனியே
முற்பவத்தின்பயனோ கற்பனேயானதிது (கொ)

சந்திரமதி காஷ்டமூட்டினவுடன்
அரிச்சந் தோட்டி
தர்க்கஞ்செய்கிறபாடம்.

அரிச்சந்தோட்டி விருத்தம்.

என்னமோபுதுமையாக விருகுதுமந்திரிபாராய்
மன்னிருடனிலேயிந்த மயானத்திலாரோகாணேன்
திண்ணமாய்க்காஷ்டமேற்றித் தீயதுமூட்டுகின்றார்
உன்னிதானவடஞ்சென்று உருபார்த்துவாரேன்மந்திரி.

அனிச்சத்தோட்டி வசனம்.

மந்திரி கமக்கறிக்கை செய்யாமலாரோ காஷ்டமேற்றித் தீ மூட்டுகின்றார் அதை யாங்போ யறிந்து வருகின்றேன் நீ யிவ்விடத்தி லுசாரா யிருப்பாய்.

மந்திரி வசனம்.

அப்படியே யிருக்கின்றேன் அறிந்துவாருங்கள் பிரபு.

அனிச்சத்தோட்டி விருத்தம்

கொடிதொரு பாதகிசண் டாளிநீயுங்
  கொஞ்சமா வதுநெஞ்ச மஞ்சிடாமல்
இடியிடித்த மாரிதிரான் டோங்கிப்பேயும்
  இந்தராத் திரிதனிலே தனியதாகக்
கடினமாய்ச் சவங்கொண்டு நீமங்கண்ணி
  காஷ்டமிக வேற்றிவிட்டாய்க் கபடியுன்றன்
முடியறிவே னென்றனக்குத் தெரிவிக்காமற்
  சுடத்துணிந்தா யிணிப்பிணத்தைச் சுடவொட்டேனே.

ராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

அனிச்சத்தோட்டி சொல்லல்.

காவல்தனைநாடி மேவலாமோபோடி
பாவைதனியாய் கூவியழுதென்றன் (கா)

சந்திரமதி சொல்லல்.

இதுவென்னகால மெனக்கலங்கோலம்
சதுர்மறைதேடுஞ் சங்கராலிங்கனம் (இது)

அனிச்சத்தோட்டி சொல்லல்.

சாமவேளைகண்டு சவந்தனைக்கொண்டு
சமர்த்தனைநாடி யிங்குவந்தாய்போடி (கா)

சந்திரமதி சொல்லல்.

ஆவிசோருதென்னைக் கோவியாதேயுன்னைக்
காவலவனென்று பாவிகாணேனின்று (இது)

அனிச்சத்தோட்டி சொல்லல்.

தந்திரமோவுந்தன் சாதனையோவிந்த
இந்திரசாலங்கற்று யிங்குநீவந்துற்றாய் (க)

சந்திரமதி சொல்.

பந்துஜெனமில்லை வந்ததிந்ததொல்லை
மைந்தனையான்றூக்கி வந்தேனீமம்நோக்கி (இது)

அனிச்சத்தோட்டி சொல்.

என்னைவிலைகொண்ட எஜமானுங்கண்டால்
உன்னையுந்தண்டிப்பா ரென்னையுங்கண்டிப்பார் (கா)

சந்திரமதி சொல்.

கொஞ்சமேனுமனம் அஞ்சாமலேசினம்
மிஞ்சியேபேசுரான் பஞ்சமனேசுரான் (இது)

அனிச்சத்தோட்டி வசனம்.

அடிதவ்டி யென்காவ்லுக்குள் காஷ்டமேற்றித் தனல்மூட்டி பிணஞ்சுடத்துணிந்தாய் யெனக்கறிவிக்காமல் எப்படித்தகனஞ்செய்யலாம் அப்புறஞ்செல்.

சந்திரமதி வசனம்.


காவலா யானோ தெரியாத பேதையானையால் தனல்மூட்டி விட்டேன் கிருபைசெய்து தகனிக்கும்படி செய்வாய்.

காஷ்டத்தை

காலாலுதைக்கிறபாகம்.

அனிச்சந்தோட்டி விருத்தம்.

மங்கையுருவானதினல் விட்டேனுன்னை
மற்றவரானூற்பிடித்துக் கட்டிக்கொண்டே,
எங்களெசமானிடத்தில் விட்டுத்தண்ட
மெவ்வளவோசெய்துகிப்பே னறிவாய்கள்ளி
செங்கைதனில்மைந்தனையுந் தூக்கிச்சாமம்
செல்லவில்லை யிவ்விருளிலரக்கிபோல
விங்குவந்தாயடாதடியாய் ஞாயமல்ல
யேகுவாய்சுடலைவிட்டோடுவாயே,



இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

அனிச்சத்தோட்டி சொல் கண்ணிகள்.

இந்தாவி லென்மையானம் வந்ததாடி அடிகள்ளி வந்த
என்னுத்தாவின்றிப்பிணஞ் சுடிவதேதடி. (இ)

சந்திரமதிசொல் கண்ணிகள்.

வாடிபோடி யென்றுநீசன் வார்த்தைபேசவும் யெனையிந்த
வார்த்தைபேசவும் இன்று
வந்ததைப்போ காலகெதி மனதுகூசவும். (வா)

அனிச்சத் தோட்டிசொல்

சொந்தமாகவென்மையானம் வந்தபேரெல்லாம்அத்துஷ்டி
வந்தபேரெல்லாம் சும்மா
சுடுவதென் றுனக்குநன்றாய்ச் சொன்னதாரடி. (இ)

சந்திரமதி சொல்.

நாதனற்றபாவியான தாலிந்துவந்தேன் தனிபதாயிங்கு நீ
ஞாயமில்லாவார்த்தைதன்னை நவிலாதேநொந்தேன். (வா)

அனிச்சத்தோட்டி சொல்.

மாயமோகினியோவஞ்சா டாகினியோடி பிணந்தின்னும்
டாகினியோடி டாகினி நீ
வாதுசெய்ய வந்தாயென்றன் சேதிதோணமல் (இ)

சந்திரமதி சொல்

பிணந்தின்னும் பேற்சிபென்றுதாழ்ச்சிபேசாதே எனையிந்த
தாழ்ச்சிபேசாதே நான்
பெண்ணிலொருபாவிபெண்ணைப் பேதமெண்ணாதே (வா)

அனிச்சத்தோட்டி சொல்

துஷ்டிநீயென்க்குரியசுதந்தாந்தாடியெனக்குள்ளசுதமுழத்
துண்டுபணம்வாய்க்கரிசி யுண்டுதோடி. (இ)

சந்திரமதி சொல்.

காற்பணந்துண் டரிசியென்று காதிற்கேட்டிலேன்
ஐயையோவென் காதிற்கேட்டிலேன் இது
கர்மமோதர்மமோவிந்தக் காசிநாட்டிலே. (வா)

அனிச்சத்தோட்டி சொல்.

போப்போ மயானம்விட்டப் புறத்தினிலோடி சண்டாளியப்
புறத்தினிலோடி இனிப்
போகாவிடி லாக்கினைகள் புரிவேன்பாரடி

சந்திரமதி சொல்

திக்கில்லாதபாவியெனக்கோர்கதியில்லை காவலாஓர்கதிஉன்
சித்தம்வைத்துச்செய்வாய் தகனஞ் செவிதுதொல்லை. (வா)

அனிக்சத்தோட்டி சொல்.

இன்னேரம்யான் சொன்னதெல்லா மேற்கவேபோடிப்டிகள்ளி
பேற்கவேயோடி இதோ
எத்தினேன்பிணத்தையெடுத் தப்புறம்போடி (இ)

மேற்படி வசனம்.

அடி கொடியசண்டாளி யென்னுத்தரவன்னியில் நீஉன்பா லனைத்தகனஞ் செய்ததால் இதோ வெத்திவிட்டேன் உன்பால னையெடுத்து அப்புறஞ்செல்.

சந்திரமதி விருத்தம்

ஐயையோபிரமதேவ னமைந்திடும்விதியிதாமோ
னபயவென்ருய்தகப்பன் பண்ணினதவங்கடானே.
துய்யவென்மகனையுன்னைக் சுடலைகாக்கின்றநீசன்
மெய்யதுநோகக்காலால் மிதித்துன்னையெழுத்தினனே.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

பாலாவுனைப் புலையன்காலாலுதைக்கப் பாவிதவப்பயனே
ஞாலமுழுதுமர சாள்வாயென்று மகிழ்ந்தேன்
மேலானதவத்திலுற்ற சிலனேயென்றன் குற்ற. (பா)
ஆருந்துணையில்லடா என்ற னங்கம்பதறுதடா
சோருதுதயாவியும் பாரிதோகூவியும்
துன்பமடைந்திடவைத்த வின்பாஞ்சிதமிகுந்த. (பா)
இத்துயரங்கானவோ பாலா வென்வயிற்றிற்பிறந்தாய்
பத்தரைமாற்றுள்ள பசும்பொன்மேனிலயயா
பாவிமடியாதின்ன மாவிவைத்திருக்குறேண்டா (பா)

சந்திரமதி வசனம்.

என்னருந்தவத்திலுற்ற கண்மணி நீயிந்தவயதி லாவுகடித் திறக்கவும் யான்பாவி தனியாக யிமங்கொண்டுவாவும்பஞ்சமன் காலாலெத்தவும்|உன் தலையில் பிரமதேவனெழுதினனோ பாலகா.

இராகம்-கமாஸ்-தாளம்-ரூபகம்

சந்திரமதி சொல்லுகிற.

பல்லவி.

புலையாவுனக்கிதுவும் சம்மதமா-எந்தன்
புத்திரனைக்காலாலே எத்திடவுன்மேலே
மெத்தமயங்குகென்னவி சித்தமிரங்காமல்பாவி

அநுபல்லவி.

குலையானது பதருதையோவுந்தன்
கோபமோபாவமோவறியேன் தாபதன்சாபமோதெரியேன்

அனிச்சத்தோட்டி சொல்கிற

பல்லவி.

சிச்சியேன்னவார்த்தை பேசுராய்-உந்தன்
சேயனைநேயமதாக மாயமதாகவேவேக
தீயிலிடும்படிவந்த பேயேஉனையறிவேண்டி (சி)

அநுபல்லவி.

ஆச்சரியம்வுன்பேர் லவனியிலெங்கும்
அறியேனடிகுலைபதாக மரியாதையோவெகுசாதகி (சி)

சந்திரமதி சரணங்கள்.

நீலையாதுன்றன் கோடொருக்காலமும்
நிதமில்லாப்பெரும் பாதகஞ்செய்தாயே
தலையெழுத்தின் பயனிதுவோசிசு
தன்னை உதைக்கநீ யென்னமனங்கொண்டாய். (பு)

அனிச்சத்தோட்டி சரணங்கள்.

தாழ்ச்சியன்றிவார்த்தை பேசப்படித்தவள்
தக்கநெறிமுறை தன்னைத்தெரிந்தவள்
ஆட்சேபிக்காதேடி பேச்சியப்பால்போடீ
அடிப்பேன்சவுஞ்சுடுங்கோலா லிடிப்பேனனிதோகாலால். (சி)

